# பிரியாத வரம் வேண்டும்...!

பிரேமலதா பாலசுப்ரமணியம்



## ஆசிரியரின் பிற நூல்கள்

கண்ணுக்குள் உன்னை வைத்தேன் ரூ.90.00

உயிரென நீ வந்தாய்..! ரூ.120.00

பாயும் ஒளி நீ எனக்கு..! ரூ.150.00

# பிரியாத வரம் வேண்டும்!

## 1

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே!

முதற்கடவுளாம் விநாயகரைத் துதித்த தன் தாத்தாவின் கணீர் குரல், எப்போதும் போல மதியழகனுக்குப் புது உற்சாகத்தை வரவழைத்தது.

அவர் பூஜையை முடித்ததும், அவரது காலில் விழுந்து வணங்கி எழுந்த மதியழகன், ''பிறந்த நாள் வாழ்த்துக்கள் தாத்தா!'' என்று வாழ்த்தியபடி அவரை அணைத்துக் கொண்டான்.

''நன்றிடா ராஜா!'' என்றவரின் கையில், ஒரு பரிசுப் பெட்டியைக் கொடுத்தான் மதியழகன்.

''இந்த வருஷமாவது நீ கல்யாணம் செஞ்சுகிட்டு, எனக்கு கம்பெனிக்கு ஒரு கோள் பிரண்டை கொடுப்

பாய் என்று நினைச்சேண்டா!'' என்று அலுத்துக் கொண்ட வரிடம்,

''தாத்தா... ப்ளீஸ்! அம்மா காதில விழப் போகுது!'' என்று எச்சரித்தவன், அவரை அழைத்துக் கொண்டு உணவருந்த வந்தான்.

மதியழகன்!

தமிழ்த் திரைப்படத் துறையில், முன்னணியில் இருக்கும் இளம் இயக்குநர்!

திரைப்படத் துறைக்கு வந்த ஏழு வருடத்தில், ஆறு படங்களை இயக்கி, தயாரிப்பாளர்களுக்கு லாபத்தைக் கொடுத்ததோடு, மக்களின் மனதிலும் நல்ல இயக்குநர் என்ற பெயரை எடுத்திருப்புவன்!

உணவு மேஜையில் காஞ்சனா தன் மாமனார் அன்பழகன், கணவர் அறிவழகன், மகன் மதியழகன் மூவருக்கும் உணவு பரிமாறினார்.

''நீங்களும் உட்காருங்களேன் அம்மா! நாம எல்லாரும் சேர்ந்து சாப்பிடற நேரமே குறைவு... அப்பவும் நீங்க எங்களோட உட்கார்ந்து சாப்பிட மாட்டேங்கறீங்க...'' என்று மகன் குறைபட்டான்.

''அதையேதான் நானும் சொல்றேன்... நீங்க மூணு பேரும் அதிசயமா ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடும் போதாவது, பார்த்து பரிமாறணும் என்பது என் ஆசை!'' என்று சொல்லி விட்டு அவர் வேலையைத் தொடர்ந்தார்.

''என்ன ஆசையோ? எல்லாமே மேஜையில் இருக்கு... தேவையானதை எடுத்துப் போட்டுக் கொள்ளப் போகிறோம்! அவ்வளவுதானே!'' மகன் அழுத்தமாக மொழிய,



''போடா! என்னோட ஆசை எதுதான் உனக்குப் புரிஞ்சிருக்கு?'' என்று காஞ்சனா அலுத்துக் கொள்ள, அன்னையின் பேச்சு எதைப் பற்றித் திரும்புகிறது என்பதை உணர்ந்த மதியழகன் அமைதியானான்.

''பாருங்க... இவ்வளவு நேரம் வாய் கிழியப் பேசினவன், இப்போ அமைதியா ஆயிட்டான்! நான் மட்டும் சொல்லிக்கிட்டு இருந்தால் போதுமா? நீங்களும் சொன்னால்தான் என்ன?''

காஞ்சனாவின் கேள்வி கணவரையும் மாமனாரையும் நோக்கிப் பாய, மதி உள்ளுக்குள் சிரித்தபடி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

எப்போதும் அதிகம் பேசாத மதியின் தந்தை அறிவழகன் வாயைத் திறந்தார்.

''அம்மா சொல்றது சரிதானே மதி? உனக்கும் வயசு ஏறிகிட்டே போகுது! கல்யாணம் என்பது அந்த அந்த வயதில் நடந்தால்தான் நல்லது!''

''நான் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லலையே அப்பா... மனசுக்குப் பிடிச்ச மாதிரி...'' என்று அவன் ஆரம்பிக்கும்போதே, அவனது தாத்தா அன்பழகன் குறுக்கிட்டார்.

''இதையேதாண்டா நீயும் ரெண்டு வருஷமா சொல்லிட்டு இருக்கே... நானும் நீ ஒரு நடிகையை காதலிச்சுக் கல்யாணம் செஞ்சுப்பே... எனக்கும் ஒரு நல்ல கம்பெனி கிடைக்கும் என்று பகல் கனவு கண்டதுதான் மிச்சம்!''

போலி அலுப்புடன் கண் சிமிட்டிய தாத்தாவைப் பார்த்து முறைத்த மதி, உடனே தழைந்து, பார்வையாலேயே அவரை உதவிக்கு அழைத்தான்.

''ம்ஹூம்! இன்னைக்கு நான் உதவிக்கு வருதாயில்லை! உனக்கு நிறையவே டைம் கொடுத்தாச்சு! இனிமேலும்

[illegible] சென்றால், நாளையில் இருந்து நான் உனக்கு சாப்பாடு கிடைக்காது!"

கேலியாகச் சொல்வது போல் சொன்னாலுமே, அவரது குரலில் இருந்த அழுத்தம் அவரது சொல்லைப் புரியவே செய்தது.

[illegible] மதிக்கும் புரியவே செய்தது. இன்று, மூவரும் தன்னை விடப் போவதில்லை என்று மதிக்குத் தோன்றியது.

"ஓகே... நீங்க எல்லாரும் சேர்ந்துட்டால் என்னால் எதுவும் செய்ய முடியாது! இவ்வளவு நாள் டைம் கொடுத்த நீங்க இன்னும் கொஞ்சம் டைம் கொடுங்க!" என்று மதி சொல்ல ஆரம்பித்ததும், காஞ்சனா இடைவெட்டினாள்.

"இந்த கொஞ்ச நஞ்சம் எல்லாம் வேண்டாம்! ஒரு குறிப்பிட்ட டைம் சொல்லு!"

தாயின் குரல் மட்டும் அல்லாது முகமும் அழுத்தத்தைக் காண்பிக்க, "ஒரு வருஷம்...!" என்று அவன் சொல்லும் போதே, காஞ்சனாவின் முகம் மறுப்பை அப்பட்டமாய்த் தெரிவித்தது.

"சரி... ஆறு மாசம்...!" என்றவன், தாயின் முகத்தில் அதிருப்தி தெரியவும், "என்னம்மா இது? ஒரு பெண்ணைப் பார்த்து மனசுக்கும் பிடிக்க வேண்டாமா?" என்று வினவ,

"போடா... கல்யாணம் என்று பேச ஆரம்பித்து, இத்தனை வருஷமா வராத காதல், இந்த ஆறு மாசத்தில் மட்டும் வந்துடுமா?" என்ற தாயை சந்தேகமாகப் பார்த்தவன்,

"நீங்க எனக்கு டைம் கொடுக்கவே நினைக்கலை போல! ஏதோ முடிவெடுத்த மாதிரியே இருக்கே?" என்றான்.





"அதெல்லாம் ஒன்றுமில்லை! உன்னைக் கேட்காமல் எதுவும் செய்ய மாட்டோம் என்று தெரியாதா? நீதான் எங்களைப் பற்றி நினைப்பதில்லை!" என்று சமயம் கிடைத்தது என்று அன்னை குட்டு வைக்க,

"சரிம்மா... இதுதான் கடைசி... எனக்கு மூணு மாசம் டைம் கொடுங்க! அதுக்குள்ள நான் நினைக்கிற மாதிரி நடக்கலைன்னா... நீங்க பார்க்கிற பெண்ணையே கல்யாணம் செய்துக்கறேன்!"

மதி சொன்னதும், அனைவரின் முகங்களும் மலர்ந்தன.

"சரி... நான் இப்பவே பொண்ணு பார்க்க ஆரம்பிச்சுடறேன்!" என்ற அன்னையை முறைத்தவனிடம்,

"இல்லைடா... இப்போ பார்க்க ஆரம்பித்தால்தான் மூன்று மாசத்துக்குள்ள ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்க முடியும்...!" என்று காஞ்சனா இழுக்க,

"என்னம்மா இது? என் மனசுக்கேத்த பெண்ணா கிடைக்கணும் என்று வாழ்த்தாமல், கிடைக்காது என்பது போலவே பேசறீங்க!"

பாவமாய் சொன்ன மகனின் வாட்டத்தைப் பொறுக்க முடியாமல், மகனின் தலையைப் பரிவுடன் வருடிய காஞ்சனா, "அப்படி இல்லை மதி! உனக்குப் பிடிச்ச மாதிரி ஒரு பொண்ணு உனக்கு மனைவியாய் வரணும் என்பதுதான் எங்களோட ஆசையும்!" என்று கனிவுடன் சொல்ல,

"அப்போ இந்த மூணு மாசம் அமைதியா இருங்க! அப்பவும் நான் நினைச்சது நடக்கலைன்னா, எல்லாம் உங்க இஷ்டம்தான்!" என்று திருமணப் பேச்சுக்குத் தற்காலிகமாக முற்றுப் புள்ளி வைத்த மதியழகன் உணவை முடித்துவிட்டு எழுந்தான்.

காஞ்சனா உண்ண அமர்ந்ததும், அருகில் வந்தவன், தாய்க்குப் பரிமாற ஆரம்பிக்க, ''இருக்கட்டும் கண்ணா! நானே எடுத்துப்பேன்!'' என்று மறுத்த தாயைப் பார்த்து கண் சிமிட்டியவன்,

''உங்களுக்கு மட்டும்தான் எங்களுக்குப் பார்த்து பார்த்துப் பரிமாற வேண்டும் என்ற ஆசை இருக்க ணுமா?'' என்று சொல்லி விட்டு பரிமாற,

''இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான் இந்த சலுகை எல்லாம்! அனுபவிச்சுக்கோ காஞ்சனாம்மா! அப்புறம் அவன் பொண்டாட்டி வந்தவுடன், உன்னை எல்லாம் கண்டுக்க அவனுக்கு நேரம் இருக்காது!''

பேரனை கேலி செய்த தாத்தாவை, ''பின்னே? தாத் தாவைப் போலத்தானே பேரனும் இருப்பேன்?'' என்று பேரன் வார, அறிவழகனும் காஞ்சனாவும் புன்னகை யுடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கேலி பேசினாலும் பேரனின் முகத்தில் இருந்த வாட்டத்தை உணர முடிந்ததால், காஞ்சனா உணவருந் தியதும், ''இன்னும் ரெண்டு மணி நேரம் கழித்துதானே குழந்தைகள் இல்லத்துக்கு போகணும்? நீ பரிசா கொடுத்த இந்த போனை எப்படி ஆபரேட் செய்யணும் என்று சொல் லிக் கொடு!'' என்று அழைத்த அன்பழகன், பேரனைத் தன் அறைக்குள் கூட்டிச் சென்றார்.

''என்னடா கண்ணா! ஏன் முகம் இப்படி வாடி இருக்கு? அம்மா இன்னைக்கு கல்யாண விஷயத்தை கண்டிப்பா பேசியதாலா?''

பரிவுடன் விசாரித்தவரின் கையைப் பற்றியவன், ''அதெல்லாம் இல்லை தாத்தா!'' என்று மறுத்தான்.

''உன்னோட எண்ணம் எனக்குப் புரியுது! யாரோ ஒரு முகம் தெரியாத பெண்ணைப் பார்த்து கல்யாணம்



செஞ்சுக்கறதை விட, காதலிச்சு கல்யாணம் செய்யணும் என்று நினைக்கிறாய்! தப்பில்லை! பட், இப்பவே உனக்கு முப்பது வயசாச்சுன்னு உங்க அம்மாவுக்கு கவலை! அதுவும் நியாயம்தானே கண்ணா?''

ஆறுதலாகப் பேசிய தாத்தாவைப் பார்த்து புன்ன கைத்த மதி, ''என்னோட வேலை பற்றி உங்களுக்குத் தெரியும் தாத்தா! என் மேல் முழு நம்பிக்கை வைக்கிற ஒருத்திதான் எனக்கு மனைவியா வரணும் என்று எதிர்பார்க்கிறேன்! முன் பின் தெரியாத ஒரு பெண் கிட்ட அதை எதிர்பார்க்க முடியுமா? அதனால்தான் காதல் கல்யாணம் செஞ்சுக்கணும் என்று நினைக்கிறேன்!'' என்று தன் பக்கத்தை எடுத்துரைத்தான்.

''நான் ஒண்ணு சொல்லட்டுமா கண்ணா? காதல் கல் யாணமோ, பெற்றவர்கள் பார்த்துச் செய்யும் கல்யாணமோ! எதுவா இருந்தாலும் அவங்க அவங்க வாழ்க்கையை எதிர்கொள்ற விதத்தில்தான் அது சந்தோஷமா அமை யும்!'' என்றவர், மதி அமைதியாக இருக்கவும்,

''நம்ம குடும்பத்துக்கும் கல்யாணத்துக்கும் எப்போதுமே நல்ல ராசி இருக்கு கண்ணா! எனக்கு உன் பாட்டி கிடைச்ச மாதிரி, உங்க அப்பாவுக்கு உங்க அம்மா கிடைச்ச மாதிரி, உனக்கும் ஒரு நல்ல பொண்ணு கிடைப்பா!''

பேரனை உற்சாகப்படுத்திப் பேசியவர், அவன் அமைதி தொடரவும்,

''வாழ்க்கையில எல்லாரும் நம்பிக்கையோட எடுக்கிற ரிஸ்க் ஒண்ணே ஒண்ணுதான்! அது என்ன தெரியுமா?'' என்று கண்ணைச் சிமிட்ட,

''நீங்களே சொல்லிடுங்க!'' என்று புன்னகையுடன் சொன்ன பேரனிடம்,

''கல்யாணம்தான்!'' என்று சொல்லிவிட்டு அவர் சிரிக்க,

''யூ ஆர் இம்பாசிபில் தாத்தா!'' என்ற மதியும், அவருடன் இணைந்து சிரித்தான்.

கொஞ்ச நேரத்தில் மதியழகனின் குடும்பம், சிறப்பு குழந்தைகள் (Special Children) காப்பகத்துக்குச் சென்றது.

மதியின் குடும்பத்தில் எந்த விசேஷம் என்றாலும், அந்தக் குழந்தைகள் காப்பகத்துக்கு சென்று, அவர்களுடன் நேரம் செலவழிப்பது, அவர்களுக்குத் தேவையான விளையாட்டு சாமான்களை அளிப்பது மற்றும் அந்த காப்பகத்தின் நிதி தேவைக்கு உதவி செய்வது போன்ற காரியங்களை செய்வதன் மூலம் அந்த நாளை மகிழ்ச்சிகரமாக மாற்றிக் கொள்வது, அவர்களது பத்து வருட வழக்கம்.

உயர் மத்திய வகுப்பில் பிறந்து வளர்ந்த மதியழகன், திரைப்படக் கல்லூரியில் சேர வேண்டும் என்ற தன் விருப்பத்தை வெளியிட்ட போது, வங்கியில் மேலாளராக பணி புரிந்து கொண்டிருந்த அவனது தந்தை அறிவழகனுக்கு அவனது விருப்பம் அந்த அளவுக்கு உவப்பாக இல்லை!

நிரந்தர வருமானம் இருக்காது, நடந்ததை மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கும் துறை என்று அறிவழகன் தன் மறுப்பை வெளியிட, தனது முடிவில் உறுதியாய் இருந்த மதிக்கு, எப்போதும் போல் அவனது தாத்தா துணையாக நின்றார்.

தாத்தா அன்பழகன்தான் தன் செல்லப் பேரனுக்காக, தன் மகனிடம் சிபாரிசு செய்தார்.



திரைப்படக் கல்லூரியில் படிப்பை முடித்து விட்டு, தான் பெரிதும் மதிக்கும், மானசீக குருவாக நினைக்கும் ஒரு இயக்குநரிடம் உதவி இயக்குநராக சேரப் போனவனை, கல்லூரியில் அவன் எடுத்திருந்த குறும்படங்களைப் பார்த்த அந்த இயக்குநரும் சந்தோஷமாக சேர்த்துக் கொண்டார்.

அவரிடம் சேர்ந்த ஒரு வருடத்துக்குள் தனியாக ஒரு படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்த போதும், அவன் தயங்க, ''சரியான வாய்ப்பு வரும்போது அதை பயன்படுத்திக்கறதுதான் புத்திசாலித்தனம்!'' என்று அவரது குரு வாழ்த்தி விடை கொடுத்தார்.

அவனது முதல் படம் அமோக வெற்றி அடைய, பெரிய நடிகர்களும், பெரிய தயாரிப்பாளர்களும் அவனை ஒப்பந்தம் செய்ய வரிசையில் நின்றனர்.

பணம் வருகிறதே என்று வந்த வாய்ப்புகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளாமல், வருடத்துக்கு ஒரு படம் தந்தாலும் தரமானதாக இருக்க வேண்டும் என்ற அவன் கொள்கைப் படி, தன் விருப்பப்படியே அவன் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான்.

மதியழகன் பார்ப்பதற்கு மென்மையானவனாக தோற்றமளித்தாலும், தனக்கென்று சில கொள்கைகளைக் கொண்டிருப்பவன்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சுய ஒழுக்கம் முக்கியமானது என்று நினைப்பவன்!

ஒருவர் மீது நம்பிக்கை வைத்து பழகி விட்டால், அவர்களும் அவன் மீது அதே அளவு நம்பிக்கையை வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவன்!

தான் நம்பிக்கை வைத்த நபர், அதற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டால், அவர்கள்

தொடர்பை முற்றிலுமாகத் துண்டித்து கொள்ள நினைப்பவன்!

அந்த மாதிரி சமயங்களில், மதியின் அன்னை கூட, ''குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை, கண்ணா! உன்னை மாதிரியே அடுத்தவரும் இருக்கணும் என்று எதிர்பார்க்கக் கூடாது!'' என்று சொல்லுவதுண்டு.

''நானும் நிறை குறைகள் நிறைந்த மனுஷன்தாம்மா! மேலோட்டமான உறவுக்கு அப்பாற்பட்டு, ஒரு நெருக்கமான உறவு இருக்கிறவங்க கிட்ட, உள்ளே ஒண்ணு வைத்து, வெளியே ஒண்ணு பேச என்னால் முடியாதும்மா! அப்படிப் பேசினால், அது உண்மையான நட்பாகவோ, உறவாகவோ இருக்காது! அப்படி போலித் தன்மையோடு இருக்கறதைவிட, அந்த உறவே இல்லாமல் இருக்கறதே பெட்டர்!'' என்று அவனும் முடித்து விடுவான்.

இந்த விஷயத்தில் அவனது பிடிவாதத்தை மாற்ற முடியாமல், காஞ்சனாவும் அவ்வப்போது புலம்புவதோடு நிறுத்திக் கொள்வார்.

நீக்கு போக்குடன் செயல்பட வேண்டிய துறையில் இருந்தாலுமே, தன் கொள்கைகளுக்கு மாறுபட்ட எந்தச் செயலையும் அவன் செய்வதில்லை.

முன்னே ஒன்று பேசி, பின்னே ஒன்று பேசும் மக்கள் எல்லா துறையிலும் இருக்கிறார்கள் என்றாலுமே, திரைப் படத் துறையில் அந்த மாதிரி மக்களின் எண்ணிக்கை அதிகம்தான்!

மனதில் பட்டதைப் பளிச்சென்று வெளிப்படையாகப் பேசி விடும் குணம் கொண்ட மதியழகனுக்கு, திரைப் படத் துறையில் நண்பர்கள் என்று பெரிதாக இல்லை!



அதே சமயம், எதிரிகள் என்று யாரையும் அவன் நினைப்பதுமில்லை!

தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு ஒழுங்காக இருந்தால், தங்கள் பெயர் கெடாது என்று கருத்து மற்ற துறையில் வேலை பார்ப்பவர்களுக்கு வேண்டுமானால் பொருந்தலாம்! ஆனால், திரைப்படத் துறைக்கு அது பொருந்தாது!

பிரபலங்கள் என்றாலே பிரச்சனைகளும் அவர்களுக்கு அதிகமாகவே இருக்கும்!

தன் வெளிப்படையான பேச்சு, சில பேருக்கு பிடிப்பதில்லை என்பதாலேயே அவன் அதிகம் பேசுவதுமில்லை, அழைக்கும் எல்லா விழாக்களிலும் கலந்து கொள்வதுமில்லை!

அவனது இந்த ஒதுக்கத்தால், திமிர் பிடித்தவன் என்ற பட்டப்பெயர் ஒரு சிலரால் வழங்கப்பட்டிருந்தது. அவனிடம் நெருக்கமாகப் பழகுபவர்களுக்கு, அது உண்மை இல்லை என்பது தெரியும் என்ற காரணத்தால், அவன் அதை பெரிதுபடுத்துவதும் இல்லை!

இது ஒரு புறம் இருக்க, வேலையைத் தவிர, தன் படங்களில் நடிக்கும் நடிகைகளிடம் அதிகம் பேசாத மதியழகனைப் பற்றியே வதந்திகள் வருவதுண்டு!

முதலில் அந்த வதந்திகளைக் கண்டு அவனும், அவனது வீட்டினரும் வருத்தப்பட்டாலும், பின்பு அதையெல்லாம் ஒதுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பழகிக் கொண்டனர்.

தனக்கு மனைவி என்று வரும் பெண், இவற்றை ஒதுக்கக் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது! தன்னிடம் முழு நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது

அவனுடைய எதிர்பார்ப்பு! தான் அவளுக்கு நேர்மையாக நடந்து கொள்ளப் போவதால், தன் எதிர்பார்ப்பில் எந்தத் தவறும் இல்லை என்பது அவனது எண்ணம்!

நம்பிக்கை என்பது புரிதல் இருந்தால்தானே வரும்? திருமணம் முடிந்து புரிந்து கொள்வதைவிட, புரிந்து கொண்ட ஒரு பெண்ணைத் திருமணம் செய்தால், தான் திருமணம் இரு மனம் கலந்த திருமணமாக இருக்கும் என்பதால்தான், அவன் காதல் கனியும் வரை காத்திருக்க எண்ணினான்!

இப்போது அவனது அன்னை மூன்று மாதம் கெடு விதித்திருக்கிறார்கள்!

வாழ்க்கை, திரைப்படமா என்ன? இந்த காட்சியில் நாயகனும் நாயகியும் சந்தித்து, காதல் கொள்வார்கள் என்று திரைக்கதை எழுதி அது படி நடக்க? என்று எண்ணியவனின் முகத்தில் முறுவல் மலர்ந்தது.

நம் வாழ்க்கையே, மேலே இருந்து கடவுள் எழுதும் திரைக்கதைக்கு ஏற்ப நடப்பதுதான், என்பதை அவன் உணரும் நேரமும் வரத்தானே போகிறது!

அவர்கள் வந்து சேர வேண்டிய இடம் வந்ததும், மதியழகனின் சிந்தனையும் தடைபட்டது.

உள்ளே சென்று எப்போதும் போலக் குழந்தைகளிடம் விளையாடி விட்டு, அந்த காப்பகத்தின் தலைவரான சுவாமிநாதனைப் பார்க்கச் சென்றவனை, வெளியே சென்று விட்டு அப்போதுதான் வந்தவர், உற்சாகமாக வரவேற்றார்.

''வாங்க மதி! நீங்க இந்த காப்பகத்துக்கு எவ்வளவு உதவிகள் செஞ்சு இருக்கீங்க... ஆனால், இந்த குழந்தைகளை மையமா வைச்சு நீங்க எடுத்த படம்தான் அந்த



உதவிலேயே பெரிய உதவி மதி. நீங்க எடுத்த திரைப் படத்துக்கு பிறகு இங்கே குழந்தைகளைப் பார்க்க, பழக வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிச்சு இருக்கு! தங்கள் குழந்தைகளை இந்த குழந்தைகளுடன் விளையாட கூட கூட்டிட்டு வராங்க என்றால் பார்த்துக்கோங்க! போன வாரம் அந்தப் படத்தைத் தொலைக்காட்சியில் பார்த்து விட்டு, ஒரு குடும்பம், தங்களால் பார்த்துக் கொள்ள முடியாது என்று இங்கே விட்டு விட்டு போன குழந்தையைத் திரும்பவும் கூட்டிக் கொண்டு போய் இருக்காங்க!''

சுவாமிநாதன் மகிழ்ச்சியுடன் சொல்ல, மதியழகனின் அகமும் புறமும் மலர்ந்தது!

தன் திரைப்படங்கள் சமூகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படக் காரணமாக இருக்கிறதோ இல்லையோ, நிச்சயம் எந்த தீங்கையும் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணம் கொண்டிருப்பவனுக்கு, சுவாமிநாதன் சொன்ன விஷயம் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

தன்னுடைய இயக்கத்தில் வெளிவந்த ஒரு படம், சமூகத்தில் ஒரு சிலருக்காவது விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கிறது என்பது அவனுக்கு நிறைவைத் தர, கண் மூடி அந்த சுகத்தை அனுபவித்தவனுக்கு தொலைபேசியில் வந்த செய்தி மேலும் மகிழ்ச்சியைத் தந்தது.

சிறப்பு குழந்தைகளை மையமாக வைத்து அவன் எடுத்திருந்த ''தெய்வம் தந்த பூவே!'' திரைப்படத்துக்கு, சிறந்த படத்துக்கான தேசிய விருது கிடைத்திருக்கிறது என்ற செய்தியே அது!

செய்தி தெரிந்ததும் தாத்தாவும் பெற்றோரும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

முக்கியம் என்று இல்லாமல்

''பணம் மட்டும்தான் முக்கியம் என்று இல்லாமல் இந்த மாதிரி நல்ல படங்களைக் கொடுக்கும் நீங்கள் இந்த கவுரவுத்துக்கு தகுதியானவர்!'' என்று சுவாமிநாதன் பாராட்டினார்.

''ஒரு பவர்புல் மீடியம் கையில் இருக்கும்போது, இந்த மாதிரி விஷயங்களை செய்யாமல் இருந்தால்தான் தப்பு சார்! ஆனால், நடைமுறையிலும் இந்த மாதிரி ஒரு பொறுப்பை சரி வரச் செய்யும் நீங்கள்தான் உண்மையி லேயே உயர்ந்தவர்!'' என்று அவரைப் பாராட்டியவன் குழந்தைகளிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பி னான்.

காரில் வரும்போது, அவனது தொலைபேசியில் வாழ்த்துச் செய்திகள் குவிந்த வண்ணம் இருந்தன!

காலையில் இருந்து அன்னை கொடுத்திருந்த மூன்று மாத கெடுவுக்குள் காதல் கனியுமா? என்ற கேள்வியில் வாட்டமடைந்திருந்த நெஞ்சம், இப்போது சந்தோஷத் தில் நிறைந்திருந்தது.

கார் ஓட்டும்போது கைப்பேசியில் பேசக்கூடாது என்ப தாலும், அழைப்புகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்த தாலும், மதியின் தந்தைதான் வண்டியை ஓட்டினார்.

கடைசியாக வந்த ஒரு அழைப்புக்குப் பதில் சொல்லி விட்டு நிமிர்ந்தவன் கண்களில், தாறுமாறாக எதிரே வந்து கொண்டிருந்த கார் பட்டது.

"அப்பா! பார்த்துப்பா!" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் இரண்டு கார்களும் பெரும் சத்தத்துடன் மோதி நின்றன!

## 2

''நான் கடைசியா ஒரு விஷயம் சொல்ல விரும்பறேன்! இந்த மாதிரி



சிறப்பு கவனிப்பு தேவைப்படுகிற குழந்தை உங்களில் யாருக்காவது பிறந்தால், எந்த பாவத்துக்கு இந்த தண்டனையோ என்ற தன்னிரக்கம் மட்டும் வேண்டவே வேண்டாம்! அந்த தன்னிரக்கம், நம்ம வாழ்க்கையை மட்டுமில்லை, நம்மை நம்பி இருக்கிற அந்த குழந்தை யின் வாழ்க்கையையும் பாழடிச்சிடும்! அந்த குழந்தை களை நல்லபடியா நாம் கவனித்துக் கொள்வோம் என்ற நம்பிக்கையில், கடவுள் நமக்கு கொடுத்த பரிசா நினைச்சால், நம்ம துன்பமும் குறையும், நம்மால் அந்த குழந்தைக்கு ஒரு நல்ல வாழ்க்கையையும் தர முடியும்! இது நான் அனுபவத்தில் கண்ட உண்மை! மாநில அளவில் நடந்த இந்த செஸ் போட்டியில் என் குழந்தை வெற்றி பெற்ற மாதிரி, உங்கள் குழந்தையையும் உண்மை யிலேயே ஒரு சிறப்பான குழந்தையா உங்களாலும் உருவாக்க முடியும்!''

நம்பிக்கையுடன் பேசிய பெண்மணியின் பேச்சைக் கேட்டு, கூடி இருந்தவர்கள் ஆரவாரத்துடன் கை தட்ட, அந்தக் குழந்தையும், பெற்றோரும் திரையில் புன்னகை யுடன் உறைந்தனர்!

''அக்கா! இந்த படம் நல்ல படம்தான்! இல்லைன்னு சொல்லலை! அதுக்காக எத்தனை முறை பார்ப்பாய்?''

அப்போதுதான் உள்ளே நுழைந்த தம்பி அகிலன், கொஞ்சம் எரிச்சலுடன் தமக்கையை விசாரிக்க, அவனைப் புன்னகையுடன் நோக்கிய சம்யுக்தா, ''அகில்! இந்த படத் துக்கு சிறந்த படத்துக்கான தேசிய விருது கிடைச் சிருக்குடா!'' என்று மகிழ்ச்சியுடன் சொல்ல, அவன் முகமும் மலர்ந்தது!

"வாவ்! சூப்பர் அக்கா! பட், மதியழகனுக்கு இந்த படத்துக் கான பெஸ்ட் டைரக்டர் அவார்ட் கிடைக்கும் என்று ஒரே பேச்சா இருந்ததே?''

அகிலன் கேட்டதும், சம்யுக்தாவின் முகம் கொஞ்சம் சோர்ந்தது!

''ஆமாண்டா! நான் கூட அப்படித்தான் நினைச்சேன்! பரவாயில்லை... படத்துக்காவது சரியான அங்கீகாரம் கிடைச்சுதே!''

தனக்கே ஆறுதல் சொல்வது போல சொல்லிக் கொண்டவள், ''நல்ல முயற்சி இல்லை அகில்? ஏற்கனவே இந்த மாதிரி படங்கள் ஒண்ணு ரெண்டு வந்திருந்தாலும், அதெல்லாம் அந்தக் குடும்பத்தை மட்டும் போகஸ் செய்யற மாதிரிதான் இருக்கும்! இந்தப் படம் கொடுத்த மாதிரி ஒரு விழிப்புணர்ச்சியோ, இல்லை இந்த மாதிரி ஒரு பாசிடிவ் வைப்ரேஷனோ கொடுக்கலை என்றுதான் சொல்லணும்!'' என்றாள்.

''உண்மைதான் யுகி!'' என்று அகிலன் ஆமோதிக்க, சம்யுவின் முகத்தில் யோசனை படிந்தது.

''என்ன அக்கா ஒரே யோசனை?''

யோசனை படிந்த சம்யுக்தாவின் முகத்தைப் பார்த்தபடி அகிலன் வினவ, தன் யோசனையில் இருந்து மீண்ட சம்யுக்தா, ''டேய்! அதென்ன ஒரு தரம் அக்கான்னு சொல்றே! இன்னொரு முறை என் பேரையே விதம் விதமா கூப்பிடறே?'' எப்போதும் கேட்கும் கேள்வி என்றாலும், தம்பியின் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாய் இருக்கும் என்பதால் மீண்டும் வினவினாள்.

''எப்பவாவது அய்யாவுக்கு மூடு வரும்போது மரியாதையா அக்கான்னு கூப்பிடறேன்! மரியாதை கொடுத்த அனுபவிக்கணும்! ஆராயக் கூடாது!'' கெத்தாக சொன்ன தம்பியின் முதுகில் செல்லமாக ஒரு அடி வைத்து, சம்யு சிரித்தாள்.



''டாபிக் டைவர்ட் பண்ணாதே! என்ன ரொம்ப தீவிரமா யோசிச்சிட்டு இருந்தே?''

''இல்லைடா! எடிட்டர் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கால் செஞ்சிருந்தார்! நாளைக்கு காலையில் டைரக்டர் மதியழகனை பேட்டி எடுக்க அப்பாயின்மெண்ட் வாங்கி இருக்காராம்! என்னை பேட்டி எடுக்கப் போகச் சொல்றார்!''

''ஹே! சூப்பர்! உனக்கு பிடிச்ச டைரக்டர்! அவரை பேட்டி எடுக்கப் போறே என்றால் சந்தோஷம்தானே படணும்! நீ ஏன் இப்படி டல் அடிக்கிறே சம்யு?''

ஆச்சரியமாக விசாரித்த தம்பியைப் பார்த்த சம்யுக்தா, ''எனக்கு அவரை ரொம்பப் பிடிக்கும்! பட், அதுதாண்டா பிரச்சனையே!'' என்றாள்.

''ஊப்ஸ்! நீ ரொம்ப குழப்புகிறாய்! ஒழுங்கா விஷயத்தைச் சொல்லு!''

''உனக்கே தெரியும்! இந்த வேலையில் சேர்ந்து ஒரு வருஷம் கழிச்சுதான் எனக்கு முக்கியமான ஆட்களை பேட்டி எடுக்கும் வாய்ப்பு கிடைச்சுது! அப்போ எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருந்தது தெரியுமா? நாம ரசிக்கும், மதிக்கும் ஒருத்தரை நேரில் பார்த்து பேசும் வாய்ப்பு என்று ரொம்ப சந்தோஷப்பட்டேன்!''

தமக்கை சொல்ல வருவது அகிலனுக்குப் புரிந்தது.

இதற்கு முன் இரண்டு முறை, சம்யுக்தாவுக்குப் பிடித்த இருவரை பேட்டி எடுத்த சந்தர்ப்பங்களைப் பற்றி, தமக்கை பகிர்ந்து கொண்டது நினைவுக்கு வந்தது.

ஆறு மாசத்துக்கு முன்பு இப்படித்தான் சம்யுக்தா தான் மிகவும் மதிக்கும் ஒரு சமூக ஆர்வலரை பேட்டி காணச் சென்றாள்.

குழந்தைத் தொழிலாளர் நிலையை எதிர்த்து மேடை யில் ஆவேசமாகப் பேசும், அந்த மனிதரின் தொழிற்சாலை யிலேயே பதினைந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் வேலை செய்வதைப் பார்த்து நொந்து போனது சம்யுக் தாவின் உள்ளம்!

இதே போல, மேலும் ஒன்றிரண்டு சம்பவங்கள் நடக்க, தான் மதிக்கும் நிலையில் இருக்கும் ஆட்களைப் பேட்டி காண வேண்டும் என்றாலே அவளுக்கு கொஞ்சம் அலர்ஜியாகிப் போனது.

சில பேரை தூரத்தில் இருந்து ரசிப்பதோடு நிறுத்திக் கொள்வதுதான் நல்லது, என்று அவள் புலம்பியதும் நினைவுக்கு வர, ''ஹே சிஸ்! எல்லா விஷயத்தையும் ஓபன் மைண்டோடு அணுகணும் என்று மற்றவங்களுக்கு அட்வைஸ் செஞ்சால் மட்டும் போதாது! நீயும் கடை பிடிக்க கத்துக்கோ!'' என்று வாரினான்.

''போடா!'' என்று சம்யுக்தா சலித்துக் கொள்ள,

''அதே மாதிரி இப்பவும் நடக்கணும் என்று கட்டாய மில்லை சம்யு! இவரை சந்தித்த பிறகு இன்னுமே அவர் மேல் மரியாதை அதிகமாகிற மாதிரி கூட நடக்கலாம்!'' என்றான் தம்பி.

''இல்லைடா! ஏற்கனவே அவருக்கும் மீடியா ஆளுங் களுக்கும் டெர்ம்ஸ் சரி இல்லை என்று பேச்சு! அதனால் தான் அதிகம் பேட்டி கூட கொடுப்பதில்லையாம்! பட், எங்க எடிட்டர், அவர் படத்துக்கு அவார்ட் கிடைச்ச பிறகு வர முதல் பேட்டி நம்ம பத்திரிகையில்தான் இருக்கணும் என்று அவசர அவசரமா அவர்கிட்ட அப்பாயின்மெண்ட் வாங்கி இருக்கார்!''



மதியழகனின் படங்கள் வாயிலாக, மதியழகன் சமுதாயத்தின் மேல் அக்கறை இருக்கும் ஒரு இளைஞன் என்ற பிம்பம்தான் சம்யுக்தாவின் மனதில் இருந்தது.

மதியழகனை சந்திக்கும் ஆவல் அதிகமாகவே இருந்த போதும், கூடவே தயக்கமும் எட்டிப் பார்த்தது. எடிட்டர் இவள்தான் போக வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தது வேறு, எரிச்சலைக் கிளப்பி இருந்தது.

''அடடா! நீ கேள்வி கேட்கப் போகிறாய்! அதற்கு அவர் பதில் சொல்லப் போகிறார்! அவ்வளவுதானே சம்யு? எப்போதும் போல் ஏடாகூடமான கேள்வி எதுவும் கேட் காமல் விட்டுடு! பிரச்சனை எதுவும் இருக்காது!''

கண்ணைச் சிமிட்டி கேலியாக சொன்ன தம்பியை முறைத்துப் பார்த்துவிட்டு, ''சோ... நான் கேட்கிற நியாய மான கேள்விகளால்தான் பிரச்சனை என்று சொல் கிறாயா?'' என்று கோபத்துடன் கேட்ட தமக்கையின் கைகளைப் பற்றிக் கொண்டான் அகிலன்.

''கூல்! கூல்! இப்போ எதுக்கு அப்பளம் மாதிரி பொரிகிறாய் சம்யு? எனக்குள் ஒரு பட்சி சொல்கிறது! இந்த பேட்டிக்கு பிறகு உனக்கு மதியழகனை இன்னுமே பிடித்துப் போக போகிறது!'' என்ற அகிலன், நிமிர்ந்து நின்று ஆசீர்வதிப்பதைப் போல கையைக் காட்டி,

''எப்போதும் இந்த அகிலானந்தா சொல்வதில் பிழை இருக்காது என்று, உனக்குத் தெரியாதா குழந்தாய்?'' என்று கேலியான குரலில் சொல்ல, சம்யுக்தா வாய் விட்டுச் சிரித்தாள்.

''ம்ம்ம்... இதுதான் அழகா இருக்கு சிஸ்! இப்படியே இரு!'' என்று அகிலன் தமக்கையின் கன்னத்தைப் பற்றிக் கிள்ள,

''சந்தடி சாக்கில் வலிக்கிற மாதிரி கிள்ளறான் பாரு!'' என்று அவன் கையைத் தட்டி விட்ட சம்யுக்தா,

''அம்மா தூங்கிட்டாங்க! சீக்கிரம் வா... நான் உனக்கு சாப்பாடு எடுத்து வைக்கிறேன்! எனக்கு நாளைக்கு பேட்டிக்குத் தேவையானதை எடுத்து வைக்கும் வேலை இருக்கிறது!'' என்று சொல்ல,

''நீ போ சம்யு! நான் பார்த்துக்கிறேன்!'' என்று உணவு மேஜைக்குச் சென்ற அகிலனுடன் வந்தவள், ''பரவா யில்லைடா... அம்மாவுக்கு இன்னைக்கு கொஞ்சம் உடம்பு முடியலை என்று நான்தான் சமைச்சேன்! சாப் பிட்டுட்டு எப்படி இருக்கு என்று சொல்லு!'' என்றபடி, உணவைப் பரிமாறினாள்.

''ஓ மை காட்! முன்னாடியே ஒரு ஹின்ட் கொடுத் திருக்கக் கூடாது? நான் என் பிரண்ட் வீட்டிலேயே சாப்பிட்டு வந்திருப்பேனே!'' என்று போலி பயத்துடன் அகிலன் அலற,

''உதை படுவே படவா! போன முறை நான் செஞ்ச பனீர் புலவ்வை யாருக்குமே மிச்சம் வைக்காமல் சாப்பிட்டவன் பேசுற பேச்சைப் பாரு!'' என்று அவன் தோளில் தட்டினாள் சம்யுக்தா.

அசடு வழிந்தாலும், ''அது... என்னோட நல்ல மனசு சிஸ்! நீ செஞ்சு வைச்ச சாப்பாட்டால் என்ன ஆனாலும் எனக்கே ஆகட்டும் என்று நான் செய்த தியாகம்!'' என்று வசனம் பேசியவன், தமக்கை செய்து வைத்த உணவை ரசித்து உண்டான்.

''குப்புற விழுந்தாலும் மீசையில மண் ஒட்டலை என்று சாதிப்பவனாச்சேடா நீ!'' என்று தம்பியை வாரி னாலும், ''எப்படிடா இருக்கு?'' என்று ஆர்வத்துடன் தம்பியை விசாரித்தாள்.



''சும்மா சொல்லக் கூடாதுக்கா! நான் கொடுத்த ட்ரை னிங்ல நீயும் ஓரளவுக்கு நல்லாத்தான் சமைக்கிறாய்!'' என்று பாராட்டியவன் தலையைக் கலைத்து,

''வாய் திறந்து பாராட்ட மனசு வருதா பாரு!'' என்ற சம்யுக்தா, அவன் உண்டு முடித்ததும்,

''அகில்! ரொம்ப நேரம் விழிச்சு படிக்காதேடா! கொஞ் சம் நேரத்தோடு படுத்துத் தூங்கு!'' என்று சொல்லி விட்டு தன் அறைக்குச் சென்றாள்.

சம்யுக்தா ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் நிருபராக வேலை செய்பவள்!

தன்னுடைய உழைப்பாலும், திறமையாலும் அலுவல கத்தில் தனக்கென்று ஒரு நல்ல இடத்தைப் பெற்று இருந்தாள். அவள் எழுதும் கட்டுரைகளும், பேட்டிகளும் அவளுக்கென்று ஒரு கவுரவத்தைக் கொடுத்திருந்தன.

பிரபல கண் மருத்துவராக இருக்கும் அவளது தந்தை ராஜசேகருக்கு, தன் குழந்தைகளும் தன்னைப் போலவே மருத்துவர்கள் ஆக வேண்டும் என்ற ஆசை இருந்தது.

சம்யுக்தா ஜர்னலிசம் படிக்க விருப்பம் என்று சொன்ன போது அவருக்கு ஏமாற்றமாக இருந்தாலும், தங்கள் விருப்பத்தைக் குழந்தைகள் மேல் திணிக்கக் கூடாது என்று கருத்தில் உறுதியாக இருப்பவராக இருந்ததால், மகளின் விருப்பப்படியே படிக்க வைத்தார்.

அவள் இப்போது அடைந்திருக்கும் முன்னேற்றம், அவரை ஒரு தந்தையாய் பெருமை கொள்ள வைத்திருப் பதில் சந்தேகமே இல்லை!

மகள் படிப்பு விஷயத்தில் எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்ததால், தன் மகன் விஷயத்தில் அவர் எதையும்

எதிர்பாராமல் இருக்க, அகிலனோ மருத்துவப் படிப்பை விரும்பியே ஏற்றான்.

தன் விருப்பப்படி ஜர்னலிசம் படித்து விட்டு இரண்டு வருடங்களாக ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் வேலை செய்யும் சம்யுக்தாவும், மருத்துவப் படிப்பு நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் அகிலனும், அக்கா தம்பி என்பதைவிட நண்பர்கள் போலத்தான் பழகுவார்கள்.

தாய் ராஜேஸ்வரி, அக்குடும்பத்தின் தலைவி. அன்பான, அழகான குடும்பம்!

சம்யுக்தாவின் பெற்றோர் இருவருமே, தங்கள் குழந்தைகள் விஷயத்தில் தேவையற்ற கண்டிப்பு காட்டுவதில்லை!

பிள்ளைகளும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத் தைத் தவறான விஷயங்களுக்குப் பயன்படுத்துவ தில்லை!

தன் அறைக்கு வந்த சம்யுக்தா நாளை பேட்டியின் போது கேட்க வேண்டிய கேள்விகளை எழுதி வைத்து விட்டு, நாளைய பேட்டி எல்லா விதத்திலும் நல்ல படி யாக அமைய வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு உறங்கச் சென்றாள்.

காலையில் எழும்போதே மனம் பரபரப்புற்று இருப்பதை சம்யுவால் உணர முடிந்தது.

'என்ன இது? இப்போதுதான் முதல் முறையாக பேட்டி எடுக்கச் செல்வதைப் போல!' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டவள், மூச்சுப் பயிற்சி செய்து மனதை சமனப் படுத்த முயன்றாள்.

அவள் செய்த முயற்சிக்குப் பலன் இருந்தது. கொஞ்ச நேரத்திலேயே மனம் லேசாக, குளித்து விட்டு அவள்



சமையலறைக்கு வந்தபோது ராஜேஸ்வரி காலை உணவை சமைத்துக் கொண்டிருந்தார்.

''குட் மார்னிங்மா! இன்னைக்கு ஒரு நாள் ரெஸ்ட் எடுத்துக்கலாமே? நான் செய்யறேனே?'' என்றபடி அன் னையின் கை பிடித்து சமையலறையில் இருந்து வெளியே அனுப்ப முயன்றாள்.

''இல்லைடா சம்மு! எனக்கு ஜுரம் சரியா போச்சு! நீயும் ஆபீஸ் போகணும் இல்லை? நீ போய் கிளம்பு! நான் பார்த்துக்கறேன்!'' என்றபடி ராஜேஸ்வரி வேலையைத் தொடர,

''சரி! நான் உங்களுக்கு ஹெல்ப் செய்யறேன்! சமையல் செய்யணும் என்று சீக்கிரமாகவே எழுந்துட் டேன்! சோ, பெரிசா வேலை ஏதும் இல்லை!'' என்றவள், அன்னையுடன் சேர்ந்து வேலை செய்த படியே, தான் இன்று எடுக்கப் போகும் பேட்டியின் விவரத்தைப் பகிர்ந்தாள்.

''நல்ல விஷயம்டா சம்மு! அந்த டைரக்டர் சின்ன வயசிலேயே நல்ல நல்ல படங்கள் எடுக்கிறார்! உனக் கும் ரொம்ப பிடிச்ச டைரக்டர் இல்லை?'' என்று அன்னை சந்தோஷப் பட, ஆமோதிப்பாய் தலையாட்டினாள் மகள்.

உள்ளே எட்டிப் பார்த்த அகிலன், ''ஹாய் சம்ஸ்! என்ன ஃபேஸ் ஒரே டாலடிக்குது? பேட்டி பற்றின குழப்பம் எல்லாம் போயாச்சா?'' என்று விசாரித்தான்.

''ம்...'' புன்னகையுடனே சம்யுக்தா பதிலளிக்க, ''தட்ஸ் குட்!'' என்றவன் அருகில் வந்து, ''அப்பா உன்கிட்ட ஏதோ பேசணுமாம்! வரச் சொல்றார்!'' என்றான்.

''என்ன விஷயம்டா?'' ஆச்சரியத்துடன் வினவ, ''எல்லாம் நல்ல விஷயமாத்தான் இருக்கும்!'' என்று

அவன் சென்றுவிட, குழப்பத்துடன் கண் சிமிட்டியபடி அவன் சென்றுவிட, குழப்பத்துடன் கண் சிமிட்டியபடி

''குட் மார்னிங் சம்யு!'' என்று புன்னகையோடு வந்தவளை,

தந்தை வரவேற்றார்.

''வெரி குட் மார்னிங் பா!'' என்றவளைப் பின் தொடர்ந்து வந்த ராஜேஸ்வரியும் சோபாவில் அமர, சம்யுவின் ஆச்சரியம் மேலும் அதிகமானது!

''என்னப்பா விஷயம்?'' ஆர்வக் குறுகுறுப்போடு கேட்டவளிடம், ''உன் கல்யாண விஷயம்தான் சம்யு!'' என்றார் ராஜசேகர்.

''கல்யாணமா!?''

அவளின் முகத்தில் தெரிந்த திகைப்பைப் பார்த்து வியந்தபடியே, ''போன வருஷமே ஆரம்பித்த பேச்சு தானே சம்யு! இன்னும் ஒரு வருஷம் போகட்டும் என்று நீ சொன்னதால்தான் தள்ளிப் போட்டோம்! இப்போ என்ன இவ்வளவு ஆச்சரியம்?'' ஆராய்ச்சிப் பார்வை யோடு வினவிய தந்தையைப் பார்த்த சம்யுக்தா,

''இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமேப்பா!'' என் றாள்.

''நோ சம்யு! போன முறை, வேலையில் சேர்ந்து ஒரு வருஷம்தான் ஆச்சு! இன்னும் கொஞ்சம் முன்னேறணும் என்று சொன்னாய்! அதில் ஒரு அர்த்தம் இருக்கவே நாங்களும் ஒப்புக் கொண்டோம்! இப்போ இன்னும் கொஞ்ச நாள் என்றால் என்ன அர்த்தம்? உன் மனசில ஏதாவது விருப்பம் இருந்தால் சொல்லிடு சம்யு!'' என்றார் தந்தை.

''ப்ச்! அதெல்லாம் ஒண்ணுமில்லைப்பா! ஏனோ முன் பின் தெரியாத யாரையோ கல்யாணம் செஞ்சுக்



கணும் என்று நினைச்சாலே என்னவோ போல இருக்கு! அவங்க வந்து பார்த்துட்டு, நல்லா சாப்பிட்டு விட்டு பெண்ணைப் பிடிக்கலை, பிடிச்சிருக்கு என்று சொல்ற சிஸ்டமே எனக்கு பிடிக்கலைப்பா!''

அலுப்புடன் சொன்ன தமக்கையின் அருகில் வந்து அமர்ந்து கொண்டு, ''வேணும்னா, நாம போய் மாப் பிள்ளை வீட்டில் சாப்பிட்டு விட்டு பையனை பிடிச் சிருக்கு, பிடிக்கலை என்று சொல்லலாமா சம்மு?'' என் றான் அகிலன்.

''போடா! நீ வேற?'' என்று சம்யு அவன் முதுகில் ஒன்று போட, பிள்ளையின் குறும்பில் சிரித்த ராஜேஸ்வரி,

''வேறென்ன செய்யறது சம்மு? அதுதானே நடை முறை! அப்பா ஒண்ணும் நமக்கு பழக்கமில்லாத இடத் தில மாப்பிள்ளை பார்க்கப் போறதில்லையே!'' என்று மகளின் தயக்கம் புரிந்து பேசினார்.

''ஆமாம் சம்யு! நம்ம டாக்டர் சாரங்கனை உனக்குத் தெரியுமில்லை? அவரோட பேரனுக்குத்தான் கேட்டிருக் கார்! பையனும் டாக்டர்தான்... நானும் பார்த்திருக்கேன்! ரொம்ப நல்ல மாதிரி! நல்ல குடும்பமும் கூட! இரண்டு குடும்பமும் பார்த்துப் பேசலாம்! உனக்குப் பிடிச்சிருந் தால் மட்டுமே மேலே ப்ரொசீட் செய்யலாம்! சரியா?''

பரிவுடன் தந்தை சொன்னதும், சம்யு சரி என்பதாய் தலையாட்டினாள்.

''எப்போ மீட் பண்ணலாம் என்று அவர்களிடம் சொல்ல?'' என்று தந்தை கேட்டதும், தந்தை இந்த சம்மந் தத்தில் ரொம்பவும் விருப்பமாக இருக்கிறாரோ என்று தோன்ற, ஏனோ நெஞ்சில் ஒரு இனம் புரியாத கலக்கம் எழுந்தது.

'ப்ச்... அப்பா இப்போதானே சொன்னார்! அவளுக்குப் பிடித்திருந்தால்தான் மேற்கொண்டு எதுவும் செய்யப் போவதாக!' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட சம்யுக்தா.

''இன்னும் பதினைந்து நாட்களில் எங்க பத்திரிகையின் ஆண்டு விழாப்பா! அதுவரை நேரம் காலம் இல்லாமல் வேலை பார்க்க வேண்டி இருக்கும்! விழா முடிஞ்சதும் இதைப் பார்த்துக்கலாமே?''

தயக்கத்துடன் சம்யுக்தா இழுக்க, ஏதோ சொல்ல வந்த ராஜசேகர், மனைவியின் பார்வையில் ''சரிடா!'' என்று ஒப்புக் கொண்டார்.

''தேங்க்ஸ்ப்பா! நான் போய் சாப்பாடு எடுத்து வைக்கிறேன்!'' என்று சம்யுக்தா அங்கிருந்து நகர்ந்தாள்.

''என்னம்மா இது? ரொம்ப நாளாவே டாக்டர். சாரங்கன் கேட்டுட்டு இருக்காரே! உனக்கும் தெரியும் தானே?''

மனைவியிடம் ராஜசேகர் வினவ, ''அவளுக்கு கல்யாணம் என்றாலே ஏதோ ஒரு தயக்கம்! எல்லா பெண்களுக்கும் இருக்கிறதுதான்! கல்யாண ஏற்பாடு பேசும்போது அவள் சந்தோஷமா கலந்துக்கிறது நல்லதில்லையா?'' என்று ராஜேஸ்வரி மகளுக்குப் பரிந்து வர, மக்களின் சந்தோஷத்தையே பிரதானமாகக் கருதும் ராஜசேகரும் ஒப்புதலாக தலை அசைத்தார்.

அதற்கு மேல் திருமணத்தைப் பற்றிப் பேசாமல் அனைவரும் காலை உணவை உண்ட பிறகு, சம்யுக்தா மதியழகனைப் பேட்டி காணச் சென்றாள்.

* * *



''இந்த பேட்டி எல்லாம் இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு வைச்சுக்கக் கூடாதா? ஊர் கண்ணெல்லாம் உன் மேலே தான் இருக்கு! கடவுள் புண்ணியத்தில, நேற்று யாருக்கும் எதுவும் ஆகலை! ஏதோ, வண்டிக்கு வந்த டேமேஜோடு போச்சு! ஏற்கனவே, யாராவது பேட்டி எடுத்துட்டுப் போனாலே வில்லங்கம்தான் ஆகுது!''

புலம்பிக் கொண்டிருந்த அன்னையின் அருகில் வந்த மதி, ''அம்மா! அதான் யாருக்கும் எதுவும் ஆகலை இல்லை? அப்புறம் ஏன் நேற்றில் இருந்து புலம்பிகிட்டே இருக்கீங்க? நான் இயக்கிய படத்துக்கு அவார்ட் வந்ததுக்காக ஸ்பெஷல் பேட்டி என்று கேட்டிருக்காங்க! கொடுக்கலை என்றால் அதுக்கும் ஏதாவது எழுதுவாங்க! அதுவும் இல்லாமல் இந்த பத்திரிகை நியாயமான பத்திரிகை! சோ, நான் சொல்றதையே எதுவும் மாற்றாமல் எழுதுவாங்கன்னுதான் ஒத்துகிட்டேன்! இப்போ போய் வேண்டாம் என்று சொல்ல முடியாது! நீங்க டென்ஷன் ஆகாமல் கொஞ்சம் அமைதியா இருங்க!'' என்றான்.

மகனின் பேச்சு காஞ்சனாவைக் கொஞ்சம் அமைதிப் படுத்தியது.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் பத்திரிகை ஆட்கள் வந்திடுவாங்க! நான் சொல்லும்போது குடிக்க ஏதாவது கொடுத்து அனுப்புங்க!'' என்று சொல்லிவிட்டு, வீட்டோடு இணைந்திருந்தாலும், தனி வழி வைத்து கட்டப்பட்டிருந்த தன் அலுவலக அறையை நோக்கிச் சென்றான்.

## 3

தோட்டத்தில் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த அன்பழகன், வாசலில் வந்து நின்ற ஹோண்டா

ஆக்டிவாவில் இருந்து இறங்கிய பெண்ணை... இன்னொரு வண்டியில் கேமராவோடு வந்து இறங்... ஆடவனையும் கண்டதும், பேட்டி எடுக்க வந்த... டார்கள் போல என்று எண்ணியபடி தன் வேலை... தொடர்ந்தார்.

வந்தவர்கள் இருவரும் காவலாளியிடம் விஷயத்... சொல்லி விட்டு, மதியின் அலுவலக அறைக்... நுழையப் போகும் நேரத்தில், சம்யுக்தா அன்பழக... கண்ணில் பட்டாள்.

அவளைப் பார்த்ததுமே நேற்று தன் போஸ்... 'உனக்கும் ஒரு நல்ல பெண் கிடைப்பாள்!' என்று... சொன்னது ஏனோ அன்பழகனுக்கு நினைவு வந்தது... கூடவே சிரிப்பும் வந்தது.

மதியழகன் பேட்டி என்று அதிகம் கொடுப்பதில்லை... அப்படியே கொடுத்தாலும், தான் சொன்ன கருத்... அவர்கள் இஷ்டத்துக்கு மாற்றி எழுதியதில் பிரச்... எழுவது உண்டு. எதற்கு பிரச்சனை என்று அவன் பே... கொடுப்பதில்லை.

இந்த அழகில் தான் இந்தப் பெண்ணைப் பார்த்... அவனது திருமணத்தைப் பற்றி ஏன் நினைத்... என்று யோசித்தபடியே வேலையைத் தொடர்ந்தவ... ஏனோ இருப்பு கொள்ளவில்லை.

உள்ளே சென்றவர் மருமகளிடம், ''காஞ்சனா! பே... எடுக்க ஒரு பெண் வந்திருக்காள்! பார்க்க ரொ... லட்சணமா இருக்காள்!'' என்றதும்,

''அப்படியா மாமா? ஏதாவது குடிக்க கொண்டு... சொல்லுவானே! நான் போய் பார்க்கட்டுமா?''

ஆர்வத்துடன் கேட்ட மருமகளைப் பார்த்து சிரித்... பெரியவர்.



''நான் கோடு போட்டால், நீ ரோடே போட்டு விடு வாயே!'' என்று கேலி செய்தவர்,

''நாம என்ன நினைச்சாலும் உன் பையன்தானே முடிவெடுப்பான்!'' என்று சொல்லி விட்டு நகர, எப்போ மகன் கூப்பிடுவான் என்று காத்திருக்க ஆரம்பித்தார் காஞ்சனா.

மாமனாரும் மருமகளும் யாரைப் பற்றி பேசிக் கொண் டிருந்தார்களோ, அவர்கள் இருவரும் எந்தவித பாதிப்பும் இன்றி, அங்கே முகமன் தெரிவித்து விட்டு வேலையைப் பார்க்க ஆரம்பித்திருந்தனர்.

அவள் தன் பெயர் சொல்லி அறிமுகம் செய்து கொண் டதும், ''ஓ! நீங்கதானா அந்த சம்யுக்தா? உங்களை சந் தித்ததில் ரொம்ப சந்தோசம்! உங்க கட்டுரைகள் நிறைய நான் படிச்சிருக்கேன்! ரொம்ப எபக்டிவா எழுதறீங்க! வாழ்த்துக்கள்!'' என்று மதியழகன் வாழ்த்தியதும் சம்யுக் தாவின் முகம் மலர்ந்தது.

''தேங்க் யூ சார்!'' என்று புன்னகையுடன் நன்றி சொன் னவள்,

''நீங்கள் இயக்கிய 'தெய்வம் தந்த பூவே' படம், சிறந்த படத்துக்கான தேசிய விருது பெற்றதுக்கு, எங்கள் பத்திரிகையின் சார்பில், எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள் சார்!'' என்றபடி ஒரு மலர்செண்டை நீட்ட, நன்றி சொல்லி பெற்றுக் கொண்டான் மதியழகன்.

''நீங்க ரெண்டு பேரும் என்ன சாப்பிடறீங்க? காபி ஆர் ஜூஸ்?''

மதியழகன் சம்யுக்தாவையும், புகைப்படம் எடுக்க வந்த ஏழுமலையையும் கேட்க, இருவரும் தங்களது விருப்பத்தை சொல்ல, இன்டர்காமில் தன் அன்னை

ஆக்டிவாவில் இருந்து இறங்கிய பெண்ணையும், இன்னொரு வண்டியில் கேமராவோடு வந்து இறங்கிய ஆடவனையும் கண்டதும், பேட்டி எடுக்க வந்து விட்டார்கள் போல என்று எண்ணியபடி தன் வேலையைத் தொடர்ந்தார்.

வந்தவர்கள் இருவரும் காவலாளியிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு, மதியின் அலுவலக அறைக்குள் நுழையப் போகும் நேரத்தில், சம்யுக்தா அன்பழகனின் கண்ணில் பட்டாள்.

அவளைப் பார்த்ததுமே நேற்று தன் பேரனிடம் 'உனக்கும் ஒரு நல்ல பெண் கிடைப்பாள்!' என்று, தான் சொன்னது ஏனோ அன்பழகனுக்கு நினைவு வந்ததோடு, கூடவே சிரிப்பும் வந்தது.

மதியழகன் பேட்டி என்று அதிகம் கொடுப்பதில்லை. அப்படியே கொடுத்தாலும், தான் சொன்ன கருத்தை அவர்கள் இஷ்டத்துக்கு மாற்றி எழுதியதில் பிரச்சனை எழுவது உண்டு. எதற்கு பிரச்சனை என்று அவன் பேட்டி கொடுப்பதில்லை.

இந்த அழகில் தான் இந்தப் பெண்ணைப் பார்த்ததும், அவனது திருமணத்தைப் பற்றி ஏன் நினைத்தோம் என்று யோசித்தபடியே வேலையைத் தொடர்ந்தவருக்கு ஏனோ இருப்பு கொள்ளவில்லை.

உள்ளே சென்றவர் மருமகளிடம், ''காஞ்சனா! பேட்டி எடுக்க ஒரு பெண் வந்திருக்காள்! பார்க்க ரொம்ப லட்சணமா இருக்காள்!'' என்றதும்,

''அப்படியா மாமா? ஏதாவது குடிக்க கொண்டு வரச் சொல்லுவானே! நான் போய் பார்க்கட்டுமா?''

ஆர்வத்துடன் கேட்ட மருமகளைப் பார்த்து சிரித்தார் பெரியவர்.



''நான் கோடு போட்டால், நீ ரோடே போட்டு விடுவாயே!'' என்று கேலி செய்தவர்,

''நாம என்ன நினைச்சாலும் உன் பையன்தானே முடிவெடுப்பான்!'' என்று சொல்லி விட்டு நகர, எப்போ மகன் கூப்பிடுவான் என்று காத்திருக்க ஆரம்பித்தார் காஞ்சனா.

மாமனாரும் மருமகளும் யாரைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்களோ, அவர்கள் இருவரும் எந்தவித பாதிப்பும் இன்றி, அங்கே முகமன் தெரிவித்து விட்டு வேலையைப் பார்க்க ஆரம்பித்திருந்தனர்.

அவள் தன் பெயர் சொல்லி அறிமுகம் செய்து கொண்டதும், ''ஓ! நீங்கதானா அந்த சம்யுக்தா? உங்களை சந்தித்ததில் ரொம்ப சந்தோசம்! உங்க கட்டுரைகள் நிறைய நான் படிச்சிருக்கேன்! ரொம்ப எபக்டிவா எழுதறீங்க! வாழ்த்துக்கள்!'' என்று மதியழகன் வாழ்த்தியதும் சம்யுக்தாவின் முகம் மலர்ந்தது.

''தேங்க் யூ சார்!'' என்று புன்னகையுடன் நன்றி சொன்னவள்,

''நீங்கள் இயக்கிய 'தெய்வம் தந்த பூவே' படம், சிறந்த படத்துக்கான தேசிய விருது பெற்றதுக்கு, எங்கள் பத்திரிகையின் சார்பில், எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள் சார்!'' என்றபடி ஒரு மலர்ச்செண்டை நீட்ட, நன்றி சொல்லி பெற்றுக் கொண்டான் மதியழகன்.

''நீங்க ரெண்டு பேரும் என்ன சாப்பிடறீங்க? காபி ஆர் ஜூஸ்?''

மதியழகன் சம்யுக்தாவையும், புகைப்படம் எடுக்க வந்த ஏழுமலையையும் கேட்க, இருவரும் தங்களது விருப்பத்தை சொல்ல, இன்டர்காமில் தன் அன்னை

யிடம், அவர்கள் கேட்டதைக் கொடுத்தனுப்ப சொன்னான்.

"கேள்வியை ஆரம்பிக்கலாமா சார்?"

சம்யுக்தா வினவியதும், "ஷ்யூர்!" என்று சொல்லி விட்டு மதியழகன் புன்னகைக்க.

"இந்த மாதிரி ஆட்டிசம் பற்றின படம் எடுக்கணும் என்று எப்படி உங்களுக்குத் தோன்றியது?" என்று தன் முதல் கேள்வியுடன் பேட்டியை ஆரம்பித்தாள்.

"இது நான் சினிமா துறைக்கு வருவதற்கு முன்னரே, என் மனதில் இருந்த விஷயம்! ஆட்டிசம் என்பது ஒரு நரம்பியல் குறைபாடு! ஆனால், அந்தக் குறை இருப்பவர்களை, மன நலம் குன்றியவர்கள் என்ற கண்ணோட்டத்தோடுதான் இந்த சமுதாயம் பார்க்குது. ஆட்டிசம் உள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படுவது பரிதாபமோ, புறக்கணிப்போ இல்லை! கூடுதல் கவனிப்பும், பயிற்சியும்தான். அது கிடைத்தால், அவங்களால் மற்ற குழந்தைகள் செய்யற விஷயங்களைச் செய்ய முடியும், இன்னும் சொல்லப் போனால், சாதாரணக் குழந்தைகளை விடச் சிறப்பாகவே அவங்களால் இயங்க முடியும்! இதெல்லாம், நான் ஸ்பெஷல் சில்ட்ரன் ஹோம் நடத்துகிற சுவாமிநாதன் சார் கிட்ட இருந்தே தெரிஞ்சுகிட்ட விஷயங்கள்! இதை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கணும் என்று நான் விரும்பியதன் விளைவுதான் 'தெய்வம் தந்த பூவே!"

"பட், இந்த மாதிரி ஒரு படத்தைத் தயாரிக்க தயாரிப்பாளர் முன் வரணும் இல்லையா? என்னை நம்பி அவர் பணம் போடணும்! அதற்குத் தகுந்த மாதிரி நானும் என்னை நிரூபிக்கணும்! இதெல்லாம் நடந்து இந்தப் படம் எடுக்க நாள் ஆகிடுச்சு!"



"இந்த படத்துக்காக உங்களுக்கு சிறந்த இயக்குனர் விருது கிடைக்கும் என்ற பேச்சுதான் பரவலா இருந்தது! பட், இப்போது படத்துக்கு மட்டும்தான் விருது கிடைச்சிருக்கு! அதில உங்களுக்கு ஏதாவது வருத்தம் இருக்கா?"

"நிச்சயமா இல்லை!" என்று வார்த்தைகளில் மட்டுமன்றி குரலிலும், உறுதியுடன் பதில் சொன்ன மதியை உள்ளூரத் தோன்றிய ஆச்சரியத்துடன் சம்யுக்தா நோக்கினாள்.

"கண்டிப்பா வருத்தம் இல்லை! ஏன்னா இந்த படத்தை விருது வாங்கணும் என்ற நோக்கத்துக்காக எடுக்கவில்லை! ஒரு நல்ல கருத்து மக்களிடம் சென்று சேரணும் என்று நோக்கத்தோடு தான் எடுத்தோம்! அந்த நோக்கம் ஓரளவுக்கு நல்லபடியா நிறைவேறி இருக்கு என்று, பல்வேறு தரப்பட்ட மக்கள் கிட்ட இருந்து வர ஃபீட் பேக்ல இருந்து தெரிஞ்சிக்க முடியுது! அதுதான் அந்த படத்தின் இயக்குநரா, எனக்கு கிடைச்ச மிகப் பெரிய அங்கீகாரமா நான் நினைக்கிறேன்!"

அவனது பதில் ஆச்சரியம் அளித்தாலும், பத்திரிகைகாரர்களுக்கே உரிய சந்தேக கண்ணோடு, அவனது பதில் நேர்மையானதுதானா என்று யோசித்த சம்யு. தனது அடுத்த கேள்வியைக் கேட்கும் முன்னர், அலுவலக அறைக்கும் மதியின் வீட்டுக்கும் இடையே இருந்த கதவு தட்டப்பட்டது.

"எக்ஸ்யூஸ் மீ!" என்றபடி எழுந்த மதியழகன் கதவைத் திறக்க, அங்கே காஞ்சனா ஜூஸ் கொண்டு வந்திருப்பதைக் கண்டதும், ஆச்சரியத்துடன் புருவத்தை உயர்த்தினான். ரொம்பவும் தெரிந்தவர்கள் வந்திருந்தால்

மட்டுமே காஞ்சனா மதியின் அலுவலக அறைக்குள் வருவது வழக்கம்!

மகனின் ஆச்சரியத்தைக் கண்டு கொள்ளாது உள்ளே வந்த காஞ்சனாவின் பார்வை, அங்கே அமர்ந்திருந்த இருவரின் மீதும் பதிந்து, சம்யுக்தாவின் மேல் நிலைத்தது.

'மாமா சொன்னது உண்மைதான்!' என்று அவன் மனதில் நினைத்த நேரம், தட்டில் இருந்து பழச்சாறை எடுத்து சம்யுக்தாவுக்கும் ஏழுமலைக்கும் கொடுத்த மதி, ''இவங்க என் அம்மா! திருமதி காஞ்சனா அறிவழகன்!'' என்றவன்,

''இவங்க மிஸ்.சம்யுக்தா, 'வித்தகன்' பத்திரிகை நிருபர்! இவர் மிஸ்டர். ஏழுமலை, பத்திரிகையோட போட்டோக்ராபர்!'' என்று அவர்களையும் அன்னைக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

அருகில் இருந்த மேஜையில் ஜூஸை வைத்துவிட்டு, ''வணக்கம் மேடம்!'' சம்யுக்தா எழுந்து கை குவித்து வணக்கம் சொல்ல, 'மரியாதையான பெண்!' என்று காஞ்சனா மனதுக்குள் மெச்சிக்கொண்ட காஞ்சனா, பதில் வணக்கம் தெரிவித்துவிட்டு அங்கிருந்து அகன்றார்.

பழச்சாறைக் குடித்துவிட்டு, சம்யுக்தா தன் கேள்வியைத் தொடர்ந்தாள்.

''உங்களுக்கு சிறந்த இயக்குனரா விருது கிடைக்காத தில் வருத்தம் இல்லை என்று சொன்னீங்க! அப்போ இந்த விருது உங்களை சந்தோஷப் படுத்தவும் இல்லை போலிருக்கே?''

'பத்திரிகைக்காரர்கள் பத்திரிகைக்காரர்கள்தான்! என்று மனதுக்குள் நினைத்த மதி.

''ஏன் மேடம்? எனக்கு விருது கிடைக்காததில் வருத்தம் இல்லை என்று சொன்னால், படத்துக்கு விருது



கிடைச்சதில் சந்தோசம் இல்லை என்று அர்த்தமா என்ன?'' என்று புன்னகையுடனே கேட்டவன்,

''சிறந்த படத்துக்கான விருது கிடைச்சது எனக்கு ரொம்பவே சந்தோசம்! இன்னும் சொல்லப் போனா, சிறந்த இயக்குனரா எனக்கு கிடைச்சிருந்தா கூட இவ்வளவு சந்தோசம் இருந்திருக்காது! படத்துக்காக கிடைச்சதால் இந்த விருது, இந்தப் படம் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் கிடைச்ச விருதா தான் நினைக்கிறேன்!

''இந்த படத்தில் கமர்ஷியல் அம்சங்கள் ரொம்பவே கம்மி! படம் வியாபார ரீதியா வெற்றியடையுமா என்ற எண்ணத்தை எல்லாம் மீறி, ஒரு நல்ல படம் எடுக்கணும் என்று தைரியமா பணத்தை போட்ட தயாரிப்பாளருக்கு கிடைச்ச விருது என்பதால் எனக்கு ரொம்பவே சந்தோஷம் தான்!''

அவனது பதில் அவனது உள்ளத்தை எடுத்துரைப்பதாகவே தோன்ற, சம்யுக்தா திருப்தியுடன் அடுத்த கேள்விக்குத் தாவினாள்.

அவள் கேட்ட எல்லா கேள்விகளுக்குமே, எந்தவித வெளிப்பூச்சும் இல்லாமல் அவன் பதில் தந்த விதம் சம்யுக்தாவை மிகவும் கவர்ந்தது.

இவ்வளவு நேரமும் எந்த பிரச்னையும் இல்லாமல் கழிய, தான் கேட்க நினைத்த கடைசி கேள்வியைக் கேட்கலாமா வேண்டாமா என்று சம்யுக்தா யோசிக்க ஆரம்பித்தாள்.

அவள் யோசனையைப் பார்த்த மதி, ''என்ன மேடம்! ஏதோ பலமான யோசனை போல! எந்த கேள்வி வேணுமானாலும் கேளுங்க!'' என்று ஊக்கினான்.

''இல்லை சார்! இண்டஸ்ட்ரியில் உங்களைப் பற்றி பேசப்படுகிற ஒரு விஷயத்தைப் பற்றி கேள்வி கேட்க

ணும்! அதுக்கு உங்களோட உண்மையான, நேர்மையான பதில் வேணும்!'' என்ற சம்யுக்தாவை நேர்ப் பார்வையுடன் நோக்கினான் மதியழகன்.

''இதுவரை நீங்க கேட்ட கேள்விகளுக்கு நான் இதுவரைக்கும் நேர்மையாத்தான் பதில் சொல்லி இருக்கேன்! இனிமேலும் அப்படித்தான்!''

குரலில் அழுத்தம் இருந்தாலும் அதில் கோபம் இல்லை என்று தோன்ற, ஏனோ சம்யுவின் மனதுக்குள் ஒரு இதம் பரவியது!

''நீங்கள் தயாரிப்பாளர்களிடம் நிறைய நிபந்தனைகள் போடறீங்க என்று பேசிக்கிறாங்க. அது உண்மையா? நீங்கள் என்னதான் நல்ல படங்களைக் கொடுக்கிறீர்கள் என்றாலும், உங்களை நம்பி பணம் போடுகிற தயாரிப்பாளர்களிடம் ஏன் சார் ஏகப்பட்ட நிபந்தனைகள் போட்டு அவங்களைக் கஷ்டப்படுத்தணும்?''

தைரியமாக கேள்வி கேட்டு விட்டாலும், கொஞ்சம் தயக்கத்துடனே சம்யு மதியை நோக்க, அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

இந்தக் கேள்விக்கு கொஞ்சமாவது கோபப்படுவான் என்று அவள் நினைத்திருக்க, அவன் சிரிக்கவும் அவள் திகைத்துப் போனாள்.

''நீங்க இந்த கேள்வியைக் கேட்கணும் என்று நான் நினைச்சிட்டே இருந்தேன்! ஏன்னா, என்னைப் பற்றி பேசப்படுகிற ஒரு குற்றச்சாட்டுக்கு நான் பதில் சொல்லி தானே ஆகணும்?

''உங்கள் முதல் கேள்விக்கு பதில்: ஆமாம்! நான் நிபந்தனைகள் போடறேன்தான்! ஆனால், என்னிடம் படம் செய்ய சொல்லி கேட்டு வரும்போதே, நான் அந்த



நிபந்தனைகள் என்ன என்று சொல்லிடறேன்! அதற்கு அவர்களும் ஒத்துக் கொள்ளும் பட்சத்தில்தான் நான் அவங்களோட ஒப்பந்தமே போடறேன்! அதனால நான் அவங்களைக் கஷ்டப்படுத்தறேன் என்ற பேச்சுக்கே இடமில்லை!''

கொஞ்சம் நேரம் முன்பு சிரித்ததற்கு சற்றும் சம்மந்தமே இல்லாமல் அழுத்தத்துடன் வந்தது அவனது பதில்!

''என்னோட படம் செஞ்ச எந்தத் தயாரிப்பாளருமே என்னைப் பற்றி தவறா பேச மாட்டாங்க! அதை என்னால உறுதியா சொல்ல முடியும்!'' என்றவனிடம்,

''அப்படி என்ன நிபந்தனைகள் போடறீங்க சார்?'' ஆர்வம் தாங்காமல் சம்யு வினவ,

''கண்டிப்பா சொல்றேன் மேடம்! அதுக்கப்புறம் நீங்களே சொல்லுங்க என் நிபந்தனைகள் சரியா இல்லையா என்று!'' என்ற மதியழகன் தன் நிபந்தனைகளைச் சொல்லி முடித்ததும் சம்யுக்தா அயர்ந்து போனாள். அவன் படங்களைப் பார்த்து அவன் மேல் ஏற்பட்டிருந்த மதிப்பு பன் மடங்கு உயர்ந்து போனது!

அவன் சொன்ன நிபந்தனைகள்!

''படத்தில் புகை பிடிக்கும், மது அருந்தும்படி காட்சிகள் வைக்க மாட்டேன்! நான் அதை படத்தில் காட்டா விட்டால், யாரும் குடிக்க மாட்டாங்க என்று இல்லை... ஆனால், இரண்டு நண்பர்கள் சந்தித்தாலே அது பாரில் தான் என்பது இப்போ நிறைய படங்களில் இயல்பான விஷயம் ஆகிடுச்சு... அந்த மாதிரி காட்சிகள் வைப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை.

''பள்ளி சிறுவர்கள் காதலிக்கிறார்கள் என்று காட்ட மாட்டேன்! குழந்தைப் பருவத்தின் ஒரு கடைசி

நிலைதான் பள்ளிப் பருவம், அதை அவர்கள் அழகாய் அனுபவிக்க வேண்டுமே தவிர, அது காதல் கொள்ளும் நேரம் அல்ல என்பது என் கருத்து.

''நகைச்சுவை என்ற பெயரில் பெண்களை இழிவு படுத்தும் காட்சிகள், படங்களில் ரொம்ப சகஜமாகி விட்டது. எக்காரணத்தைக் கொண்டும், அந்த மாதிரி காட்சிகள் நான் இயக்கும் படத்தில் இருக்கக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

''வன்முறையைத் தூண்டும் காட்சிகள் வைக்க மாட்டேன்.

''படத்துக்கு தேவை இல்லாமல், வெளிநாடு என்று படப்பிடிப்பு நடத்த மாட்டேன்!

''இப்போ சொல்லுங்க மேடம்! நான் சொல்ற நிபந்தனைகள் தயாரிப்பாளரை கஷ்டப்படுத்தணும் என்று சொல்கிற மாதிரியா இருக்கு?'' என்று கேள்வி கேட்ட மதியழகனுக்கு, சம்யுவால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அந்த அளவுக்கு அவள் பிரமிப்பின் உச்சியில் இருந்தாள்.

''ஐ நோ, சினிமா இஸ் அ பிசினெஸ்! அட் தி எண்ட் எண்ட் ஆப் தி டே, எவரிபடி வாண்ட்ஸ் டு மேக் மணி! என்னை நம்பி பணம் போடுகிற தயாரிப்பாளரை நஷ்டமடைய விடக் கூடாது என்பதில் நானும் உறுதியா இருக்கேன்!

''நான் சொல்கிற நிபந்தனையோடு நான் எடுக்கிற படங்கள் இதுவரை வியாபார ரீதியாவும் எந்த தயாரிப்பாளரையும் நஷ்டப்படுத்தியதே இல்லையே!

''என் நிபந்தனைகள் சரி இல்லை என்று சொல்றவங்க, மக்களுக்குப் பிடிச்சிருக்கு என்றால் அதை



செய்யறதில் என்ன தப்பு இருக்கு என்று கேள்வி கேட்கிறாங்க? மக்களுக்கு இந்த விஷயங்கள் பிடிக்கும் என்று யார் முடிவெடுக்கிறது? அவங்க சொல்ற மாதிரி, மக்களுக்குப் பிடிக்கும் என்று நினைத்து, அவர்கள் எடுக்கிற படங்கள் எல்லாமே வெற்றி அடையுதா? இல்லை, அவர்கள் குறிப்பிடுகிற அம்சங்கள் இல்லாமல் வெளி வரும் நல்ல படங்கள் வெற்றி அடையறது இல்லையா?

''மக்கள் ரொம்ப தெளிவானவங்க! நாம்தான், இது தான் அவங்களுக்கு பிடிக்குது என்று சாக்கு சொல்லிட்டு ஒரு வட்டத்துக்குள்ளேயே படம் எடுத்துகிட்டு இருக்கோம். அந்த வட்டத்தில் இருந்து வெளியே வந்து படம் எடுக்கிறது அவ்வளவு சுலபமில்லை மேடம்! நான் மட்டுமில்லை! நிறைய பேர் அந்த வட்டத்தை விட்டு வெளியே வந்து நல்ல படங்கள் கொடுக்கணும் என்று வெறியோடு இருக்காங்க! அந்த வாய்ப்பை அவங்களுக்கு கொடுத்தால்தான் இந்த மாற்றம் நல்லது என்று எல்லாருக்குமே புரியும்!''

இதுவரை எல்லாக் கேள்விகளுக்கும் அமைதியாகப் புன்னகையுடன் பதில் சொல்லிக் கொண்டு வந்தவன், இப்போது கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்ட மாதிரி சம்யுக்குத் தோன்றியது! ஆனால், அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் உண்மைதான் என்று அவளுக்குப் புரிந்தது. அவளும் அகிலனுமே எத்தனை முறை இன்றைய படங்களைப் பற்றி பேசி இருக்கிறார்கள்.

''கிரேட் சார்! உங்க நிபந்தனைகள் எல்லாமே கண்டிப்பா ஒவ்வொரு இயக்குனரும் போட வேண்டிய நிபந்தனைகள்தான்!''

உணர்ச்சி வசப்பட்டு சம்யு பாராட்ட, மதியழகனும் இயல்புக்கு மீண்டிருந்தான்.

''இதைத்தானே கொஞ்ச நேரம் முன்பு, தயாரிப்பாளர்களைக் கஷ்டப்படுத்திய நிபந்தனைகள் என்று சொன்னீங்க?''

அவன் குரலில் இழையோடிய கேலி சம்யுவை உசுப்பினாலும், புன்னகையுடனே பதில் தந்தாள் அவள்.

''அது! நி.கே.மு!''

அவள் சொன்ன விதம் மனதைக் கவர, ''அது என்ன நி.கே.மு?'' என்று கேட்டவனை, கண்களை உருட்டி புருவம் சுருக்கிப் பார்த்துவிட்டு,

''என்ன சார்? பெரிய டைரக்டர்! இது கூடத் தெரியலையா? நி.கே.மு. என்றால் நிபந்தனைகளை கேட்பதற்கு முன் என்று அர்த்தம்!'' என்று விளக்கம் கொடுக்க, அவளைப் புன்னகையுடன் பார்த்திருந்த மதி இப்போது வாய் விட்டே சிரித்தான்.

அவன் சிரிப்பைப் பார்த்தவளுக்கு, 'உண்மையிலேயே இவன் அழகன்தான்!' என்ற எண்ணம் உள்ளூரத் தோன்ற, தலையை லேசாகக் குலுக்கிக் கொண்டாள்.

''இந்த மாதிரி பேச்சு வரும்போதே, உங்கள் நிலையையும் எடுத்துச் சொல்லலாம் இல்லையா சார்? வீணாக எதுக்கு கெட்ட பெயர்?''

அக்கறையுடன் கேட்ட சம்யுவை ஒரு கணம் நோக்கியவன்,

''எத்தனை பேர்கிட்ட சொல்ல முடியும் சொல்லுங்க? பத்திரிகை பேட்டியில் சொல்லலாம் என்றாலும் அதிலயும் ஒரு பிரச்சனை!'' என்றவன் ஒரு கணம் தயங்க,

''என்ன பிரச்சனை?'' என்றாள் சம்யு.



''உங்க துறையைச் சார்ந்தவங்களை தப்பா சொல்றேன் என்று நினைக்காதீங்க! நான் சொல்கிற பதிலை பரபரப்பு ஏற்படுத்தணும் என்பதற்காக மாற்றி எழுதறவங்க இருக்காங்க! நான் சொல்ற கருத்தை அவங்க சொல்ற விதத்திலேயே அது வேற மாதிரி வருது! என்ன செய்ய?''

மதியழகன் சொன்னதைக் கேட்டு சம்யுவால் கோபப்பட முடியவில்லை!

'இதுபோல நடக்கிறதுதானே?' என்று எண்ணியவள், ''இந்த பேட்டி எப்படி வரப் போகுதுன்னு நான் உங்களுக்கு ஒரு காப்பி அனுப்பறேன் சார்! ஏதாவது திருத்தும் செய்யணும் என்றால் சொல்லுங்க!'' என்றாள்.

''நோ! நோ! அதற்கு அவசியமில்லை மேடம்! உங்கள் சுதந்திரத்தில் நான் தலையிட விரும்பலை! நான் சொன்னதை சொன்ன மாதிரி போட்டாலே போதும்! நீங்க அதைச் செய்வீங்க என்று எனக்கு நம்பிக்கை இருக்கு!''

மதியழகன் அப்படிச் சொன்னதும் சம்யுக்தாவின் முகம் மலர்ந்தது. ''ஷ்யூர் சார்!'' என்று அவனிடம் உறுதி அளித்தாள்.

''திரைப்படத் துறையில் உங்கள் எதிர்கால லட்சியம்?''

''ஒரு தயாரிப்பாளரா மாறணும் என்கிறதுதான் என்னோட லட்சியம்! சினிமா நிறைய பேருக்கு வாழ்க்கை கொடுக்கிற ஒரு தொழில்! அத்தனை பேருக்கு வாழ்க்கை கொடுக்கிற ஒரு திரைப்படம் வெறும் பொழுதுபோக்கு அம்சமா மட்டும் இல்லாமல், மக்களுக்குள் ஒரு நல்ல மாற்றத்துக்கான விதையை விதைக்கணும் என்பது என்னோட ஆசை! என்னோட இளம் திறமைசாலிகள்

"அப்படியா?" என்று சம்புவின் புறம் திரும்பிய மதியழகனின் ஆச்சரியம், அவளின் சிவந்த முகத்தைக் கண்டதும், கூடிப் போயிற்று.

"வாங்க!" என்றபடி மதி அவனை அழைக்க, அவன் அருகில் வந்து நின்றதும் லேசாய் மனம் படபடத்தது சம்புவுக்கு.

"இதென்ன இவ்வளவு நேரம் இல்லாத ஒரு உணர்வு?" என்று உள்ளூர யோசித்தவளை, "கொஞ்சம் சிரிம்மா!" என்ற எழுமலையின் குரல் நிகழ்வுக்கு கொண்டு வந்தது.

புகைப்படம் எடுத்துக் கொண்டதும், "என்னோட கேள்விகளுக்கு பொறுமையா பதில் சொன்னதுக்கு நன்றி!" என்று விட்டு சம்பு அவனிடம் இருந்து விடை பெற,

"நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்! ரொம்ப நாளா நான் சொல்லணும் என்று நினைச்சிட்டு இருந்த நிறைய விஷயங்களை வெளிப்படுத்துகிற மாதிரி உங்க கேள்விகள் அமைஞ்சிருந்தது! தேங்க் யூ பார் தட்!" என்று விடை கொடுத்தான்.

## 4

"ஹாய் சிஸ்! ஹௌ வாஸ் தி இன்டர்வியூ?"

ஆர்ப்பாட்டமாக கேட்டுக் கொண்டே சம்புக்தாவின் அறைக்குள் நுழைந்தான் அகிலன்.

"இட் வாஸ் ரியலி, ரியலி குட்!" என்று முகமலர்ச்சியுடன் சொன்ன தமக்கையிடம்,

"நான்தான் சொன்னேனே சம்பு! இதுக்குதானே பெரியவங்க பேச்சை மதிக்கணும் என்று சொல்றது!" என்றான் தம்பி.



"சரிங்க தாத்தா! இனிமேல் நீங்க என்ன சொன்னாலும் கேட்டுக்கறேன்!" என்று போலிப் பணிவுடன் சொன்னவள், பேட்டியின் விவரத்தை அவனிடம் பகிர்ந்து கொண்டாள்.

"ஹீ இஸ் ரியலி கிரேட் சம்பு! வருஷத்துக்கு ஒரு படம்தான் பண்றார்! அதையும் சூப்பரா பண்றார்! பணத்துக்காக செய்யணும் என்றால் எத்தனை படம் பண்ணலாம் இல்லை? பட், தனக்கென்று சில கொள்கைகள் வைச்சுகிட்டு, வாவ்! ஹீ இஸ் ரியலி கிரேட்!" என்று திரும்ப திரும்ப மதியழகனைப் புகழ்ந்து கொண்டிருந்த தம்பியை ஆச்சரியத்துடன் நோக்கினாள் சம்பு.

என்னவென்று புருவம் உயர்த்தி வினவிய தம்பியிடம், "என் தம்பி ஒருத்தரை இவ்வளவு பாராட்டுவதை இப்போதான் பார்க்கிறேன்!" என்றாள்.

"ஹேய்! ஒருத்தரைப் பாராட்டணும் என்றால் அதுக்கு அவங்க தகுதியானவங்களா இருக்கணும், இல்லை? நாங்கல்லாம் தகுதியைப் பார்த்துதான் பாராட்டுவோமாக்கும்!"

"ஆமாமாம்! நீங்க எவ்வளவு பெரிய ஆளு! பட், மதி டிசெர்வ்ஸ் தி அப்ரிசியேஷன்! பெஸ்ட் டைரக்டர் அவார்டும் கிடைச்சிருந்தால் நல்லா இருந்திருக்கும் இல்லை?"

நேற்றை விட இன்னும் அதிகமான குறையுடன் கேட்டவளை, ஆச்சரியத்துடன் நோக்கிய அகிலன், "விடு சம்ஸ்! இன்னும் நிறைய வாய்ப்புகள் இருக்கு!" என்றான்.

"சரிதான் அகில்!" என்று ஆமோதித்த சம்பு, "ரொம்ப நாள் கழிச்சு ஒரு நல்ல பேட்டி எடுத்த நிறைவு இருக்குடா அகில்!" என்றாள்.

சந்தோஷமாகச் சொன்ன தமக்கையிடம், ''தட்ஸ் குட்!'' என்ற அகிலன், ''ஓகே சிஸ்! நீ உன் வேலையைப் பார்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

பேட்டி முடிந்ததும் நேராக பத்திரிகை அலுவலகத்துக்கு சென்று விட்டாள் சம்யுக்தா. அங்கேயும் அவளுக்கு சில வேலைகள் காத்திருக்க, பேட்டியைத் தொகுத்துக் கொடுக்க முடியவில்லை! இன்னும் இரண்டு நாட்களில் பதிப்புக்கு தந்துவிட வேண்டும் என்பதால், வீட்டிலேயே செய்யலாம் என்று வேலையை வீட்டுக்கு எடுத்து வந்தாயிற்று.

கணிப்பொறியில் எல்லாவற்றையும் தயார் செய்தவள், ஏழுமலை கொடுத்திருந்த புகைப்படங்களைப் பார்க்க ஆரம்பித்தாள்.

மதியும் அவளும் அவனும் சேர்ந்திருந்த புகைப்படத்தைப் பார்த்ததும், அவளோடு புகைப்படம் எடுக்க நின்றபோது ஏற்பட்ட படபடப்பு இப்போதும் தோன்றியது.

'இது என்ன மாதிரியான உணர்வு?'

மேலே யோசிக்க தயக்கம் தோன்றவே, தலையைக் குலுக்கி விட்டு வேலையைத் தொடர்ந்து முடித்தவளுக்கு, மீண்டும் அவனோடு தான் நிற்கும் புகைப்படத்தைப் பார்க்கும் ஆவல் தோன்றியது.

நீண்ட நேரம் அதை பார்த்துக் கொண்டிருந்தவள், அந்த புகைப்படத்தைத் தன் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து கொண்டாள்.

'எதற்கு கைப்பேசியில் இந்த புகைப்படம்?' என்று கேள்வி கேட்ட மனசாட்சியைக் கண்டு கொள்ளாமல், அவள் உறங்கத் துவங்க, மூடிய கண்களுக்குள்ளும், மதியழகனின் புன்னகை நிறைந்த முகமே தோன்றியது.



சட்டென்று எழுந்து அமர்ந்த சம்யுக்தா, ''இது என்னடா வம்பாப் போச்சு!' என்று நொந்து கொண்டவளாய், மீண்டும் படுத்துறங்க, மீண்டும் அவன் முகமே மனக் கண்ணில் தோன்ற, நேற்றும், அவனது நினைவே ஆக்கிரமித்து இருந்தது நினைவுக்கு வந்தது.

நேற்று, அவனை நேரில் பார்த்த பிறகு அவனிடம் இருக்கும் மதிப்பு குறைந்து விடுமோ என்ற பயம்!

இன்று, அவன் மேல் மதிப்பு கூடி இருப்பதால் வந்த பரபரப்பு!

அவனை சந்தித்த நிகழ்வை மீண்டும் உள்ளம் அசை போட, சிறிது நேரம் கழித்து புன்னகையுடனே உறங்கிப் போனாள் அவள்.

* * *

சம்ய, மதியழகனை சந்தித்து விட்டு வந்த நான்கு நாட்களாய், கைப்பேசியில் மதியழகனோடு தான் இருக்கும் புகைப்படத்தை அடிக்கடி பார்த்துக் கொள்வது மட்டும் வழக்கமாயிற்று.

தான் செய்வது சரியா? இல்லையா என்று தெரியாத நிலையில், நேற்று அந்த புகைப்படத்தை கைப்பேசியில் இருந்து அழித்தும் விட்டாள். பிறகும் ஏதோ நினைவில், அதைப் பார்க்க கைப்பேசியை எடுத்தவளுக்கு மனதில் வெறுமை சூழ்ந்தது. அப்படியும் கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு மணி நேரம் இருந்தவளுக்கு, அதற்கு மேல் வேலையில் கவனம் செல்லவில்லை.

திரும்பவும் புகைப்படத்தை கைப்பேசியில் ஏற்றிய பிறகுதான் நிம்மதியாக இருக்க முடிந்தது.

தான் மிகவும் மதிக்கும் ரசிக்கும் ஒரு கலைஞனின் மீதிருக்கும் அபிமானம்தான், தன்னுடைய இந்த

செய்கைக்கு காரணம் என்று மனதுக்கு சமாதானம் சொல்லிக் கொள்ள முயன்றாலும், மூளை அதை ஏற்க வில்லை!

எந்த ஒரு விஷயத்திலும், நல்லது கெட்டதை ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்கும் சம்யுக்தா, மதியழ கனின் விஷயத்தில் தடுமாறினாள்.

வேலையின் நடுவில் இந்த தடுமாற்றம் குறுக்கிட, 'இனிமேல் அவனைப் பற்றி நினைப்பதில்லை!' என்று உறுதி எடுத்துக் கொண்டு வேலையில் ஆழ்ந்தவள், அதில் வெற்றியும் பெற்றாள் என்றுதான் சொல்ல வேண் டும்.

இதற்கிடையில் மதியழகனை சம்யுக்தா எடுத்திருந்த பேட்டி அவர்களது பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

பேட்டி நன்றாக வந்திருப்பதாக, சக தோழர்களும், பொறுப்பாசிரியரும் பாராட்டிய போது, 'மதி பார்த்திருப் பானா? பிடித்திருக்குமா?' என்ற கேள்வி எழுந்ததைத் தடுக்க இயலவில்லை.

மண்டையில் மானசீகமாய் ஒரு குட்டு வைத்துக் கொண்டு வேலையைத் தொடர்ந்தவளை, சிறிது நேரத்தில் பொறுப்பாசிரியர் அழைத்தார்.

''வாம்மா சம்யுக்தா! மதியழகன் பேட்டி பற்றி நல்ல ஃபீட்பேக் வந்துட்டு இருக்கு! மதியழகன் கால் செஞ்சு, பேட்டி ரொம்ப நல்லா வந்திருக்கிறதா சொன்னார்! உன்கிட்ட அவரோட நன்றியை சொல்லணுமாம்! உன் போன் நம்பர் கேட்டார்! அதையும் உன்கிட்ட கேட்டுட்டு கொடுக்கச் சொன்னார்! இல்லை, நான் கொடுக்கறேன் என்று சொன்னாலும் கேட்கவில்லை! உன்கிட்ட கேட் டுட்டு உனக்கு ஆட்சேபணை இல்லைன்னா கொடுக்கச்



சொன்னார்! ரொம்ப மரியாதையான மனுஷன்! என் னம்மா, போன் நம்பர் கொடுக்கட்டுமா?''

மதியழகனைப் பற்றி நினைக்கக் கூடாது என்று என்னதான் நினைத்திருந்தாலும், அவன் அவளோடு பேச விரும்புகிறான் என்ற செய்தி, சம்யுக்தாவின் மனதில் உற்சாகத்தைக் கிளப்பத்தான் செய்தது.

பதிலுக்குக் காத்திருந்த பொறுப்பாசிரியரை மறந்து விட்டு அவள் நின்றிருக்க, ''என்னம்மா? கொடுக்கட் டுமா?'' என்று மீண்டும் கேட்டார் அவர்.

''ம்ம்ம்... கொடுங்க சார்! ஒண்ணும் பிரச்சனை இல்லை!'' என்று அவசரமாக மொழிந்து விட்டு வெளியே வந்தவள், அந்த நொடியில் இருந்து மதியழகனின் அழைப்புக்காக காத்திருக்க ஆரம்பித்தாள்.

* * *

சம்யுக்தாவின் அலுவலகத்தில் இருந்து அவளது கைப்பேசி எண்ணைப் பெற்றுக் கொண்ட நொடியில் இருந்து மதியழகனின் உள்ளம், அவளை அழைக்கலாமா வேண்டாமா என்று ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

நேற்று பத்திரிகையில் பேட்டியைப் பார்த்ததும், அவனுக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. அந்தப் பேட்டியைப் பார்த்து விட்டு சில பேர் அவனுக்கு வாழ்த்து தெரிவித்தும், அவனது உள்ளத்தில் உற்சாகத்தில் நிரப்பி இருந்தது.

உடனே சம்யுக்தாவை அழைத்து நன்றி சொல்ல வேண்டும் என்று தோன்றினாலும், ஏதோ ஒரு தயக்கம் இழுத்து கொண்டே இருந்தது. அவள் வந்த அன்று, அவனுக்கு எதுவும் பெரிதாகத் தோன்றவில்லை.

பேட்டி எடுக்க சம்யுக்தா வந்த அன்று, அவனது அன்னை, ''ரொம்ப அழகா இருந்த அந்த பொண்ணு...

ரொம்ப மரியாதையும் கூட!'' என்று பாராட்டி சொல்லி விட்டு, அவனது முகத்தை ஆர்வத்துடன் ஏறிட, அன்னையின் எண்ண ஓட்டம் புரிந்து, ''அம்மா!'' என்று ஒரு விரல் நீட்டி மிரட்டினான் மதி.

''உனக்குக் கல்யாணத்துக்கு பொண்ணு பார்க்கக் கூடாது என்று சொல்லி இருக்கே! அதுக்காக நான் எந்தப் பெண்ணையுமே பார்க்கக் கூடாது என்று நீ சொல்ல முடியாது!'' என்று தோரணையாக சொல்லிவிட்டு காஞ்சனா சென்று விட்டார்.

அன்பழகன் வந்து பேட்டி எப்படி இருந்தது என்று அவனிடம் விசாரிக்க, ''ரொம்ப நாள் கழித்து ஒரு நல்ல பேட்டி கொடுத்த திருப்தி தாத்தா!'' என்று முகம் மலர்ந்து சொன்னவனிடம், அவர் பேட்டி எடுக்க வந்த வளைப் பற்றி விசாரிக்க,

அன்னையிடம் போல் இல்லாமல், அவளைப் பற்றி அவரிடம் பெருமையாகச் சொன்னவன், ''அவங்க கட் டுரைகள் எல்லாம் நீங்களும் படிச்சிருப்பீங்க தாத்தா.. பரபரப்புக்கு என்று எழுதாமல் உண்மையான ஒரு சமுதாய அக்கறையோட இருக்கும்'' என்று பாராட்டி னான்.

அவளைப் பற்றிப் பேசும்போது அவன் முகம் மலர்ந்த விதத்தைக் கண்டு அன்பழகன் புன்னகைக்க, ''என்ன தாத்தா?'' என்றான் பேரன்.

''இல்லைடா கண்ணா! அந்தப் பொண்ணை பார்த்ததும் எனக்கு ஒரு எண்ணம் தோணுச்சு!'' என்று தன் எண்ணத்தைப் பகிர,

''கடவுளே! நீங்களும் அம்மா மாதிரியே ஆகிட்டீங்க தாத்தா!'' என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றான்



அப்போதும், அவனது மனதில் பெரிதாக எதுவும் தோன்றவில்லை.

வித்தகன் பத்திரிகை அலுவலகத்தில் இருந்து, அவனது பேட்டி வந்திருந்த இதழோடு, ஏழுமலையோடும், சம்யுக்தாவோடும் அவன் எடுத்திருந்த புகைப்படங்களும் வந்திருந்தன.

சம்யுக்தாவும் அவனும் சேர்ந்திருந்த புகைப்படத்தைப் பார்த்த மதிக்குள், இனம் புரியாத ஒரு உணர்வு தோன்றியது.

புகைப்படத்தில் அவளது லேசாக சிவந்த முகத்தைப் பார்த்தவனின் மனக்கண்ணில், அன்று அவளை சந்தித்தது, திரைப்படமாய் விரிய, அவள் கண்ணை உருட்டி அவனைக் கேலி செய்ததும், புகைப்படம் எடுக்கும்போது முகம் சிவந்ததும், அவளது புன்னகையும், அவனுள் நேற்று வரை இல்லாத ஒரு மாற்றத்தை உண்டு செய்தது.

இதென்ன, நேரில் பார்த்த போது தோன்றாத ஒரு உணர்வு, இப்போது மட்டும்? என்ற கேள்விக்கு விடை தெரியாமல், புகைப்படத்தில் இருந்த சம்யுக்தாவை உற்று நோக்க, உடனே அவளைப் பார்க்க வேண்டும், அவளிடம் பேச வேண்டும் என்ற பேராவல் பேரலையாய் அவனை மூழ்கடிக்க, மதியழகன் திகைத்துப் போனான்.

இந்த உணர்வுக்கு என்ன பெயர்? என்று அவன் மனம், யோசனையில் ஆழ விடைதான் கிடைத்தபாடில்லை!

தனது திரைப்படங்களில், காதலைக் கவிதையாய் சொன்னவனுக்குத் தன் மனம் காதலில் விழுந்து விட்டதை உணர முடியவில்லை!

ஏது எப்படியிருந்தாலும், பேட்டி தந்த நிறைவுக்காக அவளிடம் நன்றி சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியவன், அவளது அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு அவளது கைப்பேசி எண்ணைப் பெற்றுக் கொண்டான்.

அவளது எண்ணை வாங்கியதும், உடனே அவனது விரல்கள் தனது கைப்பேசியில் அவளது எண்ணை அழுத்த ஆரம்பித்து விட்டது. கால் பட்டனை அழுத்தச் சென்ற விரல் ஒரு கணம் தடுமாற, அவளிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று அவனது உள்ளம் யோசிக்க ஆரம்பித்தது.

தனக்கு சரி என்று தோன்றும் எந்த விஷயத்தையும் செய்யத் தயங்காத மதியழகன், இப்போது சம்யுக்தாவிடம் பேசும் விஷயத்தில் தடுமாறி நின்றான்.

நெடுநேரம் தயங்கி நின்றவன், அன்றைய பாதி நாள் இதே குழப்பத்தில் வீணானதை உணர்ந்து ஒரு வழியாக அவளை அழைத்தான்.

அவளது குரலை கேட்டதும் அவன் மனதில் தோன்றிய இனிய அதிர்வு, அவனது அன்றைய குழப்பத்துக்கு விடையைத் தந்தது.

* * *

எடிட்டரின் அறையில் இருந்து வந்த நேரமாய், மதியின் அழைப்புக்காக காத்திருந்த சம்யுக்தாவுக்கு, அவனிடம் இருந்து வெகு நேரமாகியும் அழைப்பு வரவில்லை என்றதும், கோபம் வந்தது!

கைப்பேசி எண்ணைக் கேட்டு வாங்கி விட்டு பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்? என்று தனக்குள் எரிச்சல் பட்டுக் கொண்டவள்,



'அட லூசே! நீ இப்படி அவன் அழைப்புக்கு காத்திருப்பாய் என்று அவனுக்கு எப்படி தெரியும்? அவனுக்கு இருக்கும் வேலைக்கு, உன்னிடம் பேச வேண்டும் என்று நினைவு இருக்குமோ என்னமோ?' என்று மனசாட்சி கேள்வி கேட்டதும்,

'ஏன்? எங்களுக்கு மட்டும் வேலை இல்லையா?' என்று சிலிர்த்துக் கொண்டு, மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேலையில் ஆழ்ந்தாள்.

வேலையில் ஆழ்ந்தது, மனதின் படபடப்பைக் குறைத்திருந்தாலும், பார்வை கைப்பேசியின் மேல் அவ்வப்போது படிந்ததை அவளால் தடுக்க இயலவில்லை!

வேலை நேரம் முடியும் வரையிலும் அவனிடம் இருந்து அழைப்பு வரவில்லை! எரிச்சலுடன், கைப்பேசியை கைப்பையில் போட்டவள், வீட்டுக்கு கிளம்பினாள்.

"என்னடா! முகமே ஒரே சோர்வா இருக்கு?" என்று அக்கறையுடன் விசாரித்த அன்னையிடம், "ஒன்னுமில்லைம்மா! கொஞ்சம் வேலை ஜாஸ்தி!" என்று சொல்லி விட்டு தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

ஏனோ, கண்ணீர் துருத்திக் கொண்டு வந்தது!

'இதென்ன மடத்தனம்! அவன் போன் பேசாததற்கு போய் ஏன் இவ்வளவு வருத்தப்பட வேண்டும்?' என்று தன்னையே தேற்றிக் கொண்டவள், முகம் கழுவிக் கொண்டு, அம்மா கொடுக்கும் காபியை குடித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணி குளியலறைக்குச் சென்றாள்.

குளியலறை கண்ணாடியில், தன் முகத்தைப் பார்த்தவளுக்குத் தன் முகம் அளவுக்கு மீறி சோர்ந்திருப்பதை உணர முடிந்தது.

எல்லாம் அவனால்தான் என்று மதியை மனதுக்குள் திட்டியபடி, தலையைக் குலுக்கிக் கொண்டு, முகத்தை அழுந்தக் கழுவியவளின் காதில், தன் கைப்பேசி அழைக்கும் சத்தம் மெலிதாகக் கேட்க, பாய்ந்து வந்து கைப்பேசியை எடுத்தவளுக்கு மூச்சு வாங்கியது!

பேசியை எடுத்த பிறகும், ஒரு சத்தமும் இல்லாமல் இருக்கவே, குழம்பிப் போன மதியழகன், "சம்யுக்தா?" என்று அழைக்க, அவனது அழைப்பில் உருகிய உள்ளத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு, "ஹலோ!" என்று சொல்லிய சம்யுவின் குரலில் மூச்சு வாங்கியதன் மிச்சம் இருந்தது.

"என்ன ஆச்சு? இப்படி மூச்சு வாங்குது?" என்று இயல்பான அக்கறையுடன் மதி விசாரிக்க, 'எல்லாம் உன்னால்தாண்டா!' என்று சொல்லத் துடித்த நாவைக் கட்டுப்படுத்தியவள், "இல்லை! உள்ளே இருந்தேன்... ஓடி வந்து எடுத்தேன்... அதான்!" என்றாள்.

"வேலையா இருக்கீங்களா? டிஸ்டர்ப் செஞ்சிட்டேனா? வேலை நேரத்தில் செஞ்சால் தொந்தரவா இருக்குமேன்னுதான், இப்போ கூப்பிட்டேன்! அப்புறம் வேணா கூப்பிடட்டுமா?" என்றான் மதி.

எங்கே மதி அழைப்பைத் துண்டித்து விடுவானோ என்ற பதட்டத்தில், "இல்லை... இல்லை... நானே உங்கள் அழைப்புக்காகத்தான் எதிர்பார்த்துட்டு இருந்தேன்!" என்று சொல்லிவிட்டு சம்யு, நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"ஓ!" என்றவன் குரலில் துள்ளல் இருந்ததோ?

"இல்லை! எடிட்டர் நீங்க போன் செய்வீங்கன்னு சொன்னார்! அதான்!" என்று சம்யு சமாளிக்க,



"உங்களுக்கு நன்றி சொல்லணும் என்றுதான் போன் செஞ்சேன்! பேட்டி ரொம்ப நல்லா வந்திருக்கு! நிறைய பேர் போன் செஞ்சு பேசினாங்க! உங்களைப் பற்றி தப்பா கேள்விப் பட்டு விலகியே இருந்தோம், சாரி சார்! என்று நிறைய பேர் சொன்னாங்க! நான் ரொம்ப நாளா வேலை செய்ய ஆசைப்பட்ட ஒரு அனுபவம் மிக்க தயாரிப்பாளர், நம்ம சேர்ந்து வேலை செய்யணும் தம்பி என்று சொன்னார்! எல்லாத்துக்குமே அந்த பேட்டிதான் காரணம்! தேங்கே யூ சம்யுக்தா! தேங் யூ சோ மச்!" என்றவன் குரலில் இருந்த என்ன மாயம் இருந்ததோ? சம்யுக்தா ஒரு மந்தகாசப் புன்னகையுடன் முகம் ஜொலிக்க அமர்ந்திருந்தாள்.

பெண்ணின் சோர்வான முகத்தைக் கண்டு கவலையுற்று இருந்து ராஜேஸ்வரி, டிபனும் காபியும் எடுத்துக் கொண்டு அறைக்குள் வர, பெண்ணின் முகத்தில் இருந்த ஜொலிப்பு, சந்தோஷத்தைத் தந்தது.

பேசிக் கொண்டிருந்தவளைத் தொந்தரவு செய்யாமல், "சாப்பிடு!" என்று சைகையில் சொல்லிவிட்டு அவர் செல்ல, அது எதையுமே உணராமல் சம்யு. ஒரு மயக்கத்தில் இருந்தாள்.

தன் பேச்சுக்கு எந்த எதிரொலியும் இல்லாமல் போகவே, "என்ன ஆச்சு? சம்யுக்தா? லைன்ல இருக்கீங்களா?" என்று மதி கேட்ட பிறகு, சுய நினைவுக்கு வந்தவளாக, "ஹான்! என்ன கேட்டீங்க?" என்று விசாரிக்க,

"போச்சுடா! நான் சொன்னது ஒண்ணையுமே கேட்கலையா?" என்று கேலியாகக் கேட்டவன், தான் சொன்னதைத் திரும்பச் சொல்ல,

''எனக்கு எதுக்கு நன்றி எல்லாம் சொல்றீங்க? அது உங்க வேலையைப் பார்த்து அவர் படம் செய்யணும் என்று சொல்லி இருக்கார்!'' என்றாள்.

''அப்படி இல்லை! அவர் வயசு அனுபவம் எல்லாத் திலையும் பெரியவர்! என்னோட வேலை செய்யணும் என்று ஆசை இருந்தாலும், இந்த நிபந்தனைகள் பற்றிய குழப்பத்தில அவர் தயங்கி இருக்கார்! இப்போ இந்தப் பேட்டியை படிச்சதும், அவர் எண்ணம் மாறி இருக்கு! அதுக்குத்தான் உங்களுக்கு நன்றி சொன்னேன்!''

''நீங்க எனக்கு தேவைக்கு அதிகமா கிரெடிட் கொடுக்கிற மாதிரி இருக்கு! நீங்க சொன்னதைத்தானே நான் போட்டேன்!'' என்றவள், கொஞ்சம் இயல்புக்கு மீண்டு இருந்தாள்.

அதன் பிறகு அவனது நன்றிக்கு, அவள் நன்றி சொல்லிய பிறகு, அவன் அழைப்பைத் துண்டித்தான்.

* * *

மதியழகனிடம் பேசியதில் இருந்தே சம்யுக்தாவின் மனம் ஒரு நிலையில் இல்லை!

இந்த ஐந்து நாட்களாய், அவனோடு தான் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந் ததின் காரணம், கைப்பேசியில் மதியின் குரலைக் கேட்ட வினாடி தெள்ளத் தெளிவாகப் புரிந்தது!

மதியின் குரலைக் கேட்ட அந்த நொடி, ஜென்ம ஜென்மமாய் காதலிப்பவனின் குரலை, ஒரு பெரிய பிரிவுக்குப் பிறகு கேட்கும் உணர்வை அவளிடம் தோற்று வித்தது என்றால் அது மிகையில்லை!

அவன் அழைப்பு வரும் வரை ஒரு ஆர்வம் கலந்த படபடப்பு இருந்தது உண்மைதான்!



ஆனால், அவன் குரல் தன் செவியைத் தீண்டியதும், மனம் லேசாகி, கண்ணீரும் புன்னகையும் போட்டி போட்டுக் கொண்டு வந்தபோதுதான், சம்யுக்தா தன் மனதைத் தெளிவாகப் புரிந்து கொண்டாள்!

ஆம்! சம்யுக்தா மதியழகனை விரும்புகிறாள்!

ஏன்? எப்போதிலிருந்து? என்ற கேள்விகளுக்கெல் லாம் அவளிடம் விடையில்லை!

ஒன்று மட்டும் அவளுக்கு நிச்சயம்! இது நேற்று பார்த்து, இன்று தோன்றி, நாளை மறைந்து விடும் நேசம் இல்லை!

பார்த்து ஐந்தே நாட்களான ஒருவனின் மேல் இத் தகைய அன்பு சாத்தியமா? என்று மூளை எழுப்பிய கேள்விக்கு, 'காதலில் இது சாத்தியம்தான்!' என்று மனம் உறுதியாக பதில் அளித்தது.

ஐந்து நாட்களாய் மதியழகனின் பால் தோன்றும் உணர்வு எத்தகையது என்று புரியாமல் இருந்தது போய், அது நேசம்தான் என்று தெளிவான பிறகு, அவள் மனம் லேசாகி இருந்தது!

அவனிடம் பேசியதில் இருந்து தனக்குத்தானே புன்னகைத்துக் கொள்வது வழக்கமாயிற்று!

நேற்றில் இருந்து மதியிடம் பேசியதை நினைப்பதும், தனக்குள் சிரிப்பதுமாக இருந்தவளுக்கு, தன்னுடைய இந்த மாற்றம், மற்றவர் கண்களுக்கு வித்தியாசமாக இருக்கும் என்பது உறைக்கவே இல்லை. அகிலன் வந்து அவளை விசாரிக்கும் வரை!

''என்னக்கா? நேற்றில் இருந்தே ஒரு மாதிரி இருக்கே? நாம எல்லாரும் உட்கார்ந்து பேசும்போது, உன் கவனம் இங்கே இருக்கிற மாதிரியே இல்லை! என்ன விஷயம்?''

அக்கறையுடன் அகிலன் விசாரித்த போது, சம்யுவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

''இல்லையே! எப்பவும் போலதான் இருக்கேன்!'' என்று சமாளித்தாள் அவள்.

அவளை ஒரு தரம் கூர்ந்து பார்த்துவிட்டு, ''ஒண்ணுமில்லைன்னா ஓகே!'' என்றதோடு அகிலன் சென்றுவிட்டான்.

தம்பியின் விசாரணைக்குப் பிறகு, சம்யுக்தா தன் மயக்கத்தில் இருந்து வெளியே வந்து, யோசிக்க ஆரம்பித்தாள்.

'நான் மதியை நேசிக்கிறேன், சரி... ஆனால் அவன்?' என்று கேள்வி தோன்றியபோதே, அவனும் 'காதல் திருமணம்தான் செய்வேன்' என்று சொன்னானே என்ற பதிலும் கூடவே வர,

'காதல் திருமணம் செய்வேன் என்று சொன்னான் என்பதற்காக அவன் உன்னைத் தான் விரும்புவான்! என்று என்ன நிச்சயம்?' என்று மூளை அடுத்த கேள்வியைத் தொடுத்தது.

சரிதானே? அவளுக்குத்தான் அவனைப் பார்த்த அன்றே நேசம் பிறந்தது என்றால், அவனுக்கும் அதே மாதிரி இருக்க வேண்டும் என்ற கட்டாயம்?

நேற்று பேசும்போது கூட, அவன் சாதாரணமாகத் தானே பேசிக் கொண்டிருந்தான்.

சந்தித்த ஐந்து நாட்களிலேயே, உன்னைக் காதலிக்கிறேன் என்று போய் அவன் முன்னால் நிற்க முடியுமா என்ன? அப்படி நின்றால், அவனும்தான் என்ன நினைப்பான்?



மூளை, அவளைக் கேள்விகளால் குடைய, காதல் கொண்ட அவளது மனம் தடுமாறித்தான் போனது.

அடுத்து என்ன செய்வது என்ற சிந்தனையில், தலைவலியே வந்துவிட, இன்னும் ஒரு வாரம் அமைதியாக இருக்கலாம்! அதற்குள், தன்னுடைய முயற்சி இல்லாமலே அவனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால், அவனும் உன்னை விரும்புவான் என்று வைத்துக் கொள்! என்று மனம் முடிவெடுக்க, 'இதென்ன பைத்தியக்காரத்தனம்?' என்று மூளை கேலி செய்தது.

மூளையை அலட்சியம் செய்து, மனதின் ஆணைப்படி நடக்க முடிவெடுத்தவளாக, அமைதியாக வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள் அவள்.

பத்திரிகையின் ஆண்டு விழாவுக்கான வேலைகளும் அதிகமாகவே இருந்தது வேறு, அவளுக்கு உதவியாக இருந்தது.

அடுத்த ஐந்து நாட்கள் அமைதியாகவே சென்றது.

ஆறாவது நாள் மனதில் கலக்கம் தோன்றியது.

இந்த மாதிரி ஒரு சோதனை வைத்துக் கொண்டதே தவறோ என்று தோன்ற, மூளை சொன்னதுதான் சரி! இது பைத்தியக்காரத்தனம்தான், என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாலுமே, மனதில் ஒரு வெறுமை சூழ்ந்ததைத் தவிர்க்க இயலவில்லை.

இன்று ஏழாவது நாள்!

நேற்று இருந்த வெறுமை குறைந்து, ஏனோ ஒரு உற்சாகம் பிறந்த மாதிரி இருந்தது. இன்று பார்க்கா விட்டால்தான் என்ன? அதற்காக அவள், அவனை விரும்புவதைத் தவிர்த்து விட முடியுமா என்ன?

இன்று சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கா விட்டால், தானாக வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது தான் என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள், அதே உற்சாகத்துடன் வேலைக்குக் கிளம்பினாள்.

ஐந்து மணி வாக்கில், கைப்பேசியை எடுத்தவள், மதிக்கு போன் செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், அவளது கைப்பேசி சிணுங்கியது. அப்பாவின் எண் திரையில் ஒளிர்வதைக் கண்டதும் ஆச்சரியத்துடன் அழைப்பை எடுத்தாள்.

"என்னப்பா? என்ன விஷயம்? எப்பவும் ஆபீஸ் நேரத்தில் போன் செய்ய மாட்டீங்களே?" கொஞ்சம் பதட்டத்துடனே விசாரித்தவளிடம்,

"டென்ஷன் ஆகறதுக்கு ஒண்ணுமில்லைடா! இன்னைக்கு எங்க மருத்துவமனையின் நிறுவனர் நாள்! அதுக்கு இங்கே ஏழு மணிக்கு ஒரு விழா இருக்கு! நீ வர முடியுமான்னு கேட்கத்தான் போன் செஞ்சேன்! அம்மாவும், அகிலனும் கூட வரதா சொல்லி இருக்காங்க!" என்றார் அவளது தந்தை.

ஐந்து நாட்களாக அதிக நேரம் வேலை செய்திருந்ததால், இன்றைய வேலையும் கிட்டத்தட்ட முடிந்து விட்டது. மதியின் நினைவில் மனம் குழம்பிக் கிடந்தவள், ஒரு மாற்றமாக இருக்கும் என்றெண்ணி விழாவுக்கு செல்லலாம் என்று முடிவு செய்தாள்.

வீட்டுக்கு சென்று அம்மா, அகிலனுடனே கிளம்பலாம் என்று முடிவெடுத்தவள், "சரிப்பா... நானும் வரேன்!" என்று ஒப்புதல் அளிக்க, "தேங்க்ஸ் டா குட்டிம்மா!" என்று விட்டு தந்தை போனை வைக்க, தந்தை ரொம்பவும் சந்தோஷமாக இருக்கும் தருணங்களில் வரும்



அந்த குட்டிம்மா என்ற அழைப்பு அவளை நெகிழ்த்த, மதியைப் பற்றிய யோசனையைத் தற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டு வீட்டுக்குக் கிளம்பினாள்.

* * *

மதி உற்சாகமான மனநிலையில் இருந்தான். தன் மனம் சம்யுக்தாவின் பால் ஈர்க்கப்பட்டிருப்பதை உணர்ந்த நொடியில் இருந்தே, அவனது மனம் ஒரு நிலையில் இல்லை.

காதல் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணி இருந்த போதும், காதல் என்பது தானாக மலர வேண்டும் என்பதிலும் அவன் உறுதியாகவே இருந்தான்.

சம்யுக்தாவை முதலில் பார்த்த அன்று, எதுவும் தோன்றா விட்டாலும், அவனும் அவளும் இணைந்திருந்த புகைப்படத்தைப் பார்த்த அன்று, அவனிடம் தோன்றிய விசித்திர உணர்வு அவனுக்கே ஆச்சரியம் தான்.

அவளிடம் போனில் பேசிய அன்று, அவளது குரலைக் கேட்டதும் தோன்றிய அந்த இன்ப அதிர்வு, அவனது நேசத்தை அவனுக்குத் தெளிவாக உணர்த்தியது.

ஆனால், ஒரே ஒரு முறை பார்த்த பெண்ணிடம், தோன்றும் இந்த உணர்வு உண்மையிலேயே காதல் தானா? என்று தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்று மூளை அறிவுறுத்தியதை அவனால் தட்டிக் கழிக்க இயலவில்லை.

அவளிடம் பேசிய அந்த நாளுக்குப் பிறகு, அந்த நாள் என்ன? அவளிடம் பேசி வைத்த அடுத்த நொடியே,

அவளிடம் மீண்டும் பேச வேண்டும் என்று தோன்றி யதை முயன்று அடக்கிக் கொண்டவனுக்கு, அடுத்து வந்த நாட்கள் இம்சையாகக் கழிந்தது.

ஏதோ ஒரு வார்த்தையில், செயலில் அவள் நினைவே, அவனது மனதை ஆக்கிரமிக்க, வேலையிலும் கவனம் சிதறிய போதுதான், அவன் தன் மனதை முழுமையாக அறிந்து கொண்டான்.

இது காதலேதான்! என்று முடிவெடுத்த பிறகு, அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதில் யோசனை சென்றது.

ஒரே ஒரு நாள் பார்த்து பழகிய பெண்ணிடம் உடனே காதலைச் சொல்ல முடியுமா என்ன?

அவளிடம் முதலில் நட்பாகப் பழகி, அவள் மன திலும் இடம் பிடித்த பிறகு, தன் காதலைச் சொல்வது என முடிவெடுத்த பிறகு, மனம் லேசாகியது.

அதற்குள், கண் தானம் பற்றிய விழிப்புணர்வுக்காக ஒரு குறும்படம் எடுக்க வேண்டும் என்று, அவனது தந் தாவின் மருத்துவ நண்பர் அவனை அணுக, அவனும் ஒத்துக் கொண்டு விட்டான்.

அந்த வேலையில் அடுத்து வந்த இரண்டு நாட்கள் வேகமாகச் செல்ல, இன்று மருத்துவமனையின் விழாவுக் காக அவனையும் அழைத்திருந்தார்கள்.

நாளை எப்படியும் சம்யுக்தாவுக்கு போன் செய்து விட வேண்டும் என்று உறுதியாக முடிவெடுத்து இருந் தால், அவனது மனம் உற்சாகமாகவே இருக்க, அதே உற்சாகத்தோடு மருத்துவமனை விழாவுக்குக் கிளம்பி னான்.

* * *



"ராஜிம்மா, சம்யு விழாவுக்கு வரேன்னு ஒத்துக்கிட் டாள்!"

கணவரின் உற்சாகக் குரலைக் கேட்டதும் சந்தோஷப் பட்டாலும், "அவள்தான் இன்னும் மூணு நாள்ல அவள் பத்திரிகை ஆண்டு விழா முடிந்ததும் பார்க்கலாம் என்று சொல்லி இருந்தாளே! அதுக்குள்ளே என்ன அவசரம்?" என்று ராஜேஸ்வரி குறைபட,

"என்னம்மா? நான் தான் சொன்னேனே? அந்தப் பையன் நாளைக்கு அவசர வேலையா யூஎஸ் போறார், வர எப்படியும் ஒரு மாசம் ஆகிடும்! சரி இன்னைக்கு ஒரு கேசுவல் மீட்டிங்கா இருக்கட்டுமேன்னுதான்!" என்று இழுக்க, கணவரின் மனம் தன் கேள்வியால் வாடியதை உணர்ந்து ராஜேஸ்வரியும், "சரிப்பா, நாங்க கிளம்பிட்டு இருக்கோம்!" என்று போனை வைத்தார்.

ராஜசேகருக்கும் தன் மகளிடம் இந்த விஷயத்தை சொல்லக் கூடாது என்று இல்லை! இன்னும் இரண்டு நாட்களில் பார்ப்பதாகத் தானே ஏற்பாடு என்று எண்ணி யவர், மகளிடம் பேசி அவள் மறுப்பாக எதுவும் சொல்லி விட வேண்டாம் என்றுதான் விழாவுக்கென மட்டும் அழைத்திருந்தார்.

வீட்டுக்கு வந்த சம்யு, அழகான வேலைப்பாடமைந்த ஒரு சுடிதாரை விழாவுக்கு அணிவதற்காகத் தேர்ந்தெடுக்க, அவளது அறைக்கு வந்த ராஜேஸ்வரி, "ஏதாவது சேலை கட்டிக்கோயேன் சம்மு!" என்றதும், சம்யு ஆச்சரியத் துடன், "ஏன்மா?" என்று விசாரிக்க, ராஜேஸ்வரி விஷ யத்தைச் சொல்லி விடுவது எனத் தீர்மானித்தார்.

"இல்லைடா சம்மு! அப்பா அன்னைக்கு சொன்னார் இல்லையா ஒரு டாக்டர் மாப்பிள்ளை..." என்று

ராஜேஸ்வரி சொல்லத் தொடங்கியதுமே, சம்யுவின் முகம் மாறியது.

''அதுதான் அப்புறம் பார்த்துக்கலாம்னு சொன்னேனே. ஓ! இப்போ அவரை மீட் செய்யத்தான் அப்பா என்னை விழாவுக்கு கூப்பிட்டாரா?'' என்று அடக்கப்பட்ட கோபத்துடன் சம்யு வினவ,

''என்னடா இது? சொல்லி முடிக்கிறதுக்குள்ள அவசரம்? அந்த டாக்டர் நீ சொல்லி இருந்த நாள் ஊரில் இருக்க மாட்டார்! வெளியூர் போறாராம்! அதான் இன்னைக்கே கேஷுவலா பார்த்துடலாம்னு அப்பா நினைச்சார். உனக்கும்தான் இந்த டிபிகல் பெண் பார்க்கும் படலம் எல்லாம் பிடிக்கலை இல்லை?'' என்று சமாதானப்படுத்திய அன்னையை, இயலாமையோடு நோக்கினாள் சம்யு.

''குட்டிம்மா, எது எப்படி இருந்தாலும் உனக்குப் பிடிச்சிருந்தால்தாண்டா மீதி எல்லாம்!'' என்று மகளின் தோளில் ஆதரவாகக் கை வைத்து ராஜேஸ்வரி சொல்ல, அதற்கு மேல் விவாதம் செய்யவில்லை. ஆனாலும், புடவை கட்ட மறுத்து விட்டாள்.

ரொம்பவும் கேவலமாக ட்ரஸ் செய்து கொண்டு போனால் என்ன? என்று கூட ஒரு கணம் தோன்றியது.

எப்போதுமே, ஆடம்பரமாக இல்லா விட்டாலும், நேர்த்தியாக உடுத்துபவள் என்பதால், அதற்கும் மனம் வரவில்லை. எப்படியும், தான் சரி என்று சொன்னால்தான் மீதி எல்லாம் என்று அன்னை சொன்னது நினைவு வர, எப்போதும் போல நேர்த்தியாக உடை அணிந்து கொண்டு கிளம்பினாள். முகம் மட்டும் வழக்கமான புன்னகையை ஒளித்து, லேசான கடுகடுப்பைக் காட்டியது.



தாயும் மகளும் கிளம்பிய நேரம் உள்ளே நுழைந்த அகிலன், ''சம்ஸ்! நீயும் வரயா விழாவுக்கு? குட்! சூப்பரா இருக்கு ட்ரஸ்! பட், ஏன் இங்கே டல்லடிக்குது?'' என்று சொல்லி தமக்கையின் முகத்துக்கு நேரே விரல் நீட்டினான்.

''இங்கே கொஞ்சம் லைட் கம்மியா இருந்ததுடா தம்பி. நீ வந்துட்டே இல்லை? இப்போ ப்ரைட் ஆயிடுச்சு பார்!'' என்று சம்யு பற்களைக் காட்டி சிரிக்க.

''ஹைய்யோ! இதுக்கு முன்னே இருந்ததே தேவலை!'' என்று கேலியாகச் சொல்லிவிட்டு அகிலன் கண்களை மூட, சம்யுவின் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

''போடா! சீக்கிரம் போய் ட்ரஸ் மாத்திட்டு வா!'' என்று அவனைத் துரிதப்படுத்தினாள்.

பெண்ணின் முகத்தில் புன்னகை குடியேறியதைக் கண்டதும் ராஜேஸ்வரியின் முகமும் மலர்ந்தது.

தந்தையின் மருத்துவமனை விழாவுக்குப் போகிறோம். அங்கே இருக்கும் அவரது நண்பர்களைச் சந்திக்க மாட்டோமா என்ன? அது மாதிரி, இந்த சந்திப்பையும் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்ட சம்யு, புன்னகையுடன் தாயுடனும், தம்பியுடனும் மருத்துவமனைக்கு வந்தாள்.

ஒரு செயற்கைப் புன்னகையோடு மருத்துவமனைக்கு வந்த சம்யுக்தாவின் அகமும் முகமும், சூரியனைக் கண்ட தாமரையாய் மலர்ந்தது. மருத்துவமனை வாயிலில் தன் அன்னையுடன் நின்று கொண்டிருந்த மதியழகனைக் கண்டதும்!

## 5

எதிர்பாராத விதமாக மதியழ கனைச் சந்தித்த சம்யுக்தா மகிழ்ச்சி யில் திக்கு முக்காடிப் போனாள். அவள், குருட்டாம்போக்கில் வைத்துக் கொண்ட சோதனையில் வெற்றி பெற்றது. அவளை இறக்கை இல்லாமல் பறக்க வைத்தது.

அதுவரை, தந்தை மீது இருந்த சின்னக் கோபம் கூட காற்றில் இட்ட கற்பூரமாய்க் கரைந்து போய் இருந்தது. உடனே, தந்தையைப் பார்த்து நன்றி சொல்ல வேண்டும் போலத் துடித்த மனத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டவள், ''அகில், அங்கே பாருடா மதி வந்திருக் கார்!'' என்று மகிழ்ச்சி ததும்பும் குரலில் சொல்ல, அன் னையும், அகிலனும், ''எந்த மதி?'' என்று விசாரித் தார்கள்.

''ப்ச்... என்னடா? டைரக்டர் மதியழகன் அங்கே நிற் கிறார் பாரு!'' என்று கண்ணால் ஜாடை காட்ட, ''ஹே! ஆமாம்!'' என்றான் அகிலன்.

அதற்குள், மதியும் இவர்களைப் பார்த்து விட, அன் னையை அழைத்துக் கொண்டு இவர்கள் அருகில் வந்தான்.

அவன் இவர்களை நோக்கி வருவதைக் கண்டதும், சம்யுவின் மனம் படபடத்தது.

அருகில் வந்ததும், ''ஹாய் சம்யுக்தா! எப்படி இருக் கீங்க?'' என்று விசாரித்த மதி, தன் அன்னையிடம் திரும்பி, ''அம்மா! இவங்களை நினைவு இருக்கில்லை?'' என்றான்.



''ம்ம்ம்... நல்லா நினைவிருக்கு! எப்படி இருக்கேம்மா?'' என்று அவரும் அவளை விசாரிக்க, ''நல்லா இருக்கேன் ஆன்... மேடம்!'' என்று சம்யு பதிலிறுத்தாள்.

ஆன்ட்டி என்று கூப்பிட வந்து மாற்றியவளிடம், ''ஆன்ட்டின்னே கூப்பிடும்மா!'' என்று காஞ்சனா புன்ன கைக்க, ராஜேஸ்வரியும், அகிலனும் இதை ஆச்சரியத் துடன் பார்த்தபடி நின்றிருந்தனர்.

''மேடம்! நான்தான் முதலில் உங்களை விசாரித் தேன்! எனக்கு நீங்க இன்னும் பதில் சொல்லலை!'' என்று மதியழகன் வம்பிழுத்தான்.

மதியின் புறம் திரும்பி, ''சாரி! நல்லா இருக்கேன்! நீங்க எப்படி இருக்கீங்க?'' என்று அவன் முகத்தையே பார்த்தவாறு சம்யு வினவ,

''ம்ம்ம்... ரொம்ப நல்லா இருக்கேன்!'' என்று அவன் புன்னகைக்க, சம்யுவுக்குதான் அவனிடம் இருந்து பார்வையை விலக்குவது கடினமாக இருந்தது.

அதற்குள், மதியே, ''இவங்க...'' என்று ராஜேஸ்வரியை யும், அகிலனையும் பார்த்து இழுக்க,

''இவங்க என்னோட அம்மா திருமதி. ராஜேஸ்வரி ராஜசேகர், இவன் என்னோட தம்பி அகிலன்'' என்று மதிக்கும் காஞ்சனாவுக்கும் இருவரையும் அறிமுகம் செய்து வைத்தாள்.

அறிமுகம் முடிந்ததும், ''நீங்க எப்படி இங்கே?'' என்று மதி விசாரிக்க, ''என்னோட அப்பா ஒரு கண் மருத்துவர். இங்கேதான் வேலை பார்க்கிறார். நீங்க எப்படி?'' என்று பதிலுக்கு சம்யு விசாரிக்க, தான் வந்த விவரத்தைச் சொல்லிவிட்டு,

''அப்பாவும் தாத்தாவும் வெளியே போயிருந்தாங்க. அவங்க வந்தவுடனே உள்ளே போகலாம்னு இங்கே

நிற்கும்போது உங்களைப் பார்த்தேன்!'' என்ற மதி அகிலனிடம் திரும்பி, அவனைப் பற்றி விசாரித்த நேரம், ராஜேஸ்வரியும் காஞ்சனாவும் பேசத் துவங்கி இருந்தனர்.

ஆண்கள் இருவரும், அன்னைமாரும் பேசத் துவங்க, மதியழகனையே பார்த்தபடி நின்றிருந்த சம்யுக்தா, 'ஒரு வாரமாக பைத்தியம் மாதிரி உன்னையே நினைச்சுக்கிட்டு இருக்கேன்... நீ என்னடான்னா என்னை கண்டுக்காமல் என் தம்பிகிட்ட பேசிட்டு இருக்கே! உன்னை என்னடா செய்யறது?' என்று மதியழகனுக்கு மனதுக்குள் மண்டகப்படி செய்து கொண்டிருந்தாள்.

அந்த நேரம் மதியின் தந்தையும், தாத்தாவும் வந்து விட, மீண்டும் ஒரு அறிமுகப் படலம் முடிந்து அனைவரும் உள்ளே சென்றனர்.

விழா நிகழ்ச்சிகளில் ஒரு அங்கமாக மதியழகன் இயக்கிய கண் தான விழிப்புணர்வு பற்றிய குறும்படத்தை ஒளிபரப்பினர்.

மனதை உருக்கும்படி, அதே சமயம் விழிப்புணர்வைத் தூண்டும்படி அமைந்திருந்த அந்த படத்தைப் பார்த்ததும், சம்யுக்தாவின் உள்ளம் பெருமிதம் அடைந்தது.

விழா முடிந்து அவளது தந்தையிடம், மதியின் குடும்பம் சிறிது நேரம் பேசிவிட்டுக் கிளம்பினர்.

''வரேன்!'' என்று புன்னகையுடன் மதி சம்யுவிடம் விடை பெற, சம்யுவும் தலை அசைத்து விடை கொடுத்தாள்.

மதியைச் சந்தித்த சந்தோஷத்தில் இருந்த சம்யுக்தா, தந்தை டாக்டர் அருணை அறிமுகம் செய்த போதும், புன்னகையுடனே அவனிடம் பேசினாள்.



ஆனால், அவனிடம் என்ன பேசினாள் என்று யாராவது கேட்டால், அவளுக்கு நினைவிருக்குமா என்பது சந்தேகம்தான்!

அவளது மனம், மதியை எதிர்பாராது சந்தித்திருந்த சந்தோஷ மயக்கத்தில் இருந்து இன்னும் மீளாமலே இருந்தது.

மகள், முதலிலேயே சொல்லவில்லையே என்று கோபப்படுவாளோ என்று எண்ணி இருந்த ராஜசேகருக்கும், அவளது புன்னகை நிறைவைத் தந்தது.

வீட்டுக்குத் திரும்பும்போது, அவரவர் தங்கள் சிந்தனையில் உழன்றபடி அமைதியாகவே வந்தனர்.

வரும்போதே, உணவை முடித்து விட்டு வந்ததால், வீட்டுக்கு வந்தவுடன், சம்யு தன் அறைக்குள் சென்று புகுந்து விட்டாள்.

அவளுக்கு, மதியைச் சந்தித்த நிகழ்வை மீண்டும் அசை போட வேண்டி இருந்தது.

தன் மனதை அறிந்த பிறகான இந்த சந்திப்பு, மிகவும் சிறப்புக்குரியதல்லவா?

முதல் நாள் காஞ்சனாவைப் பார்த்தபோது, 'மேடம்' என்று அழைப்பது இயல்பாக இருந்தது. இப்போது தானாகவே ஆன்ட்டி என்று அழைக்க வந்து விட்டது. அவள் மாற்றி அழைத்ததை உணர்ந்து அவரே, 'ஆன்ட்டி' என்று கூப்பிடு என்று சொன்னதும் அவளுக்கு சந்தோஷமாக இருந்தது.

அவள் நினைத்திருந்ததைப் போலவே அவளது முயற்சி இல்லாமலே, ஏழு நாட்களுக்குள் மதியைச் சந்திக்கும் வாய்ப்பும் அமைந்து விட்டதை எண்ணி, அவளது

உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது. என்னமோ, இன்றே காதல் கை கூடி விட்டதைப் போல நெஞ்சம் பூரித்தது. நிச்சயம், தன் காதலுக்கான எதிரொலி அவனிடமும் இருக்கும் என்ற நம்பிக்கை பூத்தது.

இன்னும் இரண்டு நாட்களில் பத்திரிகையின் ஆண்டு விழா. அது முடிந்ததும், மதியிடம் எப்படியும் பேசிவிட வேண்டும் என்று தீர்மானித்தவளாக புன்னகையுடன் உறங்க ஆரம்பித்தாள்.

* * *

''அம்மா! இன்னைக்கு நீங்க மாலை எங்க பத்திரிகை விழாவுக்கு வரீங்கதானே?'' என்று காலையில் அலுவலகத்துக்குக் கிளம்பியபடியே, சம்யு வினவ,

''இல்லைடா சம்மு... நம்ம ஜானு ஆன்ட்டியோட பொண்ணுக்கு இன்னைக்கு நிச்சயம்! அப்பாவுக்கும் அவசர வேலை இருக்கிறதால் வர முடியாது என்று சொல்லிட்டார்! நானாவது போகணும்! அகில் உங்க விழாவுக்கு வருவதாக என்று சொல்லி இருக்கான்!''

''சரிம்மா... நான் இன்னைக்கு கொஞ்சம் சீக்கிரமே கிளம்பறேன்! அகிலை சரியா ஆறு மணிக்கு வரச் சொல்லிடுங்க. நான் இன்னைக்கு வண்டி எடுத்துட்டுப் போகலை! வரும்போது, அவன் வண்டியிலேயே வந்துடறேன்!'' என்றவள் அவசரமாகக் கிளம்பினாள்.

அலுவலகத்துக்கு வந்த சம்யுக்தாவுக்கு, மாலை வரை வேலை சரியாக இருந்தது. இன்னும் ஒரு மணி நேரத்தில் விழா ஆரம்பமாகி விடும். அதற்குள், விழாவுக்கென எடுத்து வைத்திருந்த ஆடையை அணிந்து கொண்டு தயார் ஆகி விட எண்ணி, அலுவலகத்தில் இருந்த ரெஸ்ட் ரூமுக்கு சென்றாள். சக தோழியர் எல்லாரும்



இன்று சேலை கட்ட வேண்டும் என்று சொல்லி இருந்ததால், அவளும் ஒரு மைசூர் சில்க் சேலையை எடுத்து வைத்திருந்தாள்.

வெந்தய நிறத்தில், மரூன் நிற பார்டர் இருந்த அந்த சேலை, அவளுக்கு மிகவும் பாந்தமாகப் பொருந்தியது. சேலைக்குப் பொருத்தமான அணிகலன்களை அணிந்து வந்தவளை, தோழியர் பாராட்ட, புன்னகையுடன் விழா நடக்கும் இடத்துக்கு வந்தவளுக்கு, இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

விழா மேடையில், அருகில் அமர்ந்திருந்தவரோடு பேசிக் கொண்டிருந்த மதியழகன்தான் அதற்குக் காரணம்!

இவன் வருவதாக இல்லையே? விழாவுக்கு வரும் சிறப்பு விருந்தினர்களைப் பற்றி சொல்லும்போது கூட, இவன் வருவதாக எடிட்டர் சொல்லவே இல்லையே?

எப்படி இருந்தால் என்ன? மதி வந்திருக்கிறான் என்பதே, அவளுக்கு மகிழ்ச்சியைத் தர, அவனைக் கண் எடுக்காமல் பார்த்திருந்தவள், அருகில் வந்து அகிலன் நின்றதையோ, அவளை அழைத்ததையோ உணரவே இல்லை!

''அக்கா!'' என்று தோளில் கை வைத்து கொஞ்சம் உரக்க அழைத்த பிறகே, அவன் புறம் திரும்பினாள்.

''ஹே அகில்! நீ எப்படா வந்தே?'' என்று விசாரித்த தமக்கையை ஒரு மாதிரி பார்த்தவன்,

''வந்து ஐந்து நிமிஷமாச்சு! பத்து தடவை கூப்பிட்டாச்சு!'' என்று சொல்ல,

''ரொம்ப அளந்து விடுவாயே!'' என்று கேலியாகச் சொன்னவள், அவன் உட்கார இடம் ஏற்பாடு செய்து விட்டு, தனது வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

விழா மேடையைக் கடக்கும்போது, அவளையும் அறியாமல் அவளது பார்வை மதியிடம் செல்ல, அவளைக் கண்ட மதியும், புன்னகையுடன் அவளை நோக்கி கை அசைத்தான்.

அவன், தன்னைக் கவனித்து விட்டான் என்றதும், உள்ளம் பூரிக்க, சம்யுவும் அவனை நோக்கி கை அசைத்தாள்.

மதி, சம்யுவை அவன் தம்பியுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே பார்த்து விட்டான். வந்த நேரமாய், அவன் பார்வை அவளைத் தேடிய வண்ணமே இருந்தது.

அவள் அணிந்திருந்த அந்த சேலையும், அவளது நேர்த்தியான அலங்காரமும் அவளைத் தேவதையாக காட்ட, நட்பாகப் பழகி, அவள் மனதில் இடம் பிடித்து, தன் காதலைச் சொல்ல நினைத்த அவனது தீர்மானம் தளர்ந்தது.

இப்போதே, இந்த நொடியே அவளிடம் காதலைச் சொல்லி விடத் துடித்த மனதை அடக்குவதற்கு, அவன் வெகுவாக பிரயத்தனப் பட வேண்டி இருந்தது.

தம்பியிடம் பேசி விட்டு வரும்போது, தன்னைத் திரும்பி பார்ப்பாளா மாட்டாளா என்ற தவிப்பு, அவனை உட்கார விடாமல் செய்தது.

மேடையில் இருந்து இறங்கிப் போய் அவளிடம் பேச வேண்டும் என்று எழுந்த தவிப்பை முயன்று அடக்கிய படி அவன் அமர்ந்திருக்க, அவனது தேவதை அவனைப் பார்த்து விட்டாள்.

சந்தோஷப் பெருமூச்சோடு, அவளை நோக்கி கை காட்டியவனின் பார்வை, அவள் அங்கிருந்து நகர்ந்த பிறகும் அவளையே தொடர்ந்தது.



விழா ஆரம்பித்த பிறகு, சம்யுக்தா தன் தோழிகள் அமர்ந்திருந்த இடத்தில் சென்று அமர்ந்து கொண்டாள். அவ்வப்போது, பார்வை மதியின் மேல் பதிந்த வண்ணம் இருந்தது.

விழா முடிந்ததும், அவனோடு பேசும் வாய்ப்பு கிடைக்குமா? என்றெண்ணியபடி அவள் அமர்ந்திருக்க, அவளது கைப்பேசி குறுந்தகவல் வந்திருப்பதைத் தெரிவித்தது.

''அக்கா! என் நண்பனுக்கு ஒரு விபத்து! உடனே போக வேண்டும்! முடிந்தால், விழா முடிவதற்குள் வரப் பார்க்கிறேன்! இல்லை என்றால், நீயே டாக்சி பிடித்து வந்து விடு! ப்ளீஸ்!'' என்று அகிலன் தகவல் அனுப்பி இருந்தான்.

''சரி! ஏதாவது உதவி தேவை என்றால் கூப்பிடு! டேக் கேர்!'' என்று பதில் அனுப்பி விட்டு, 'அந்த நண்பனுக்கு பெரிதாக எதுவும் இருக்கக் கூடாது!' என்ற வேண்டுதலோடு விழா நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்தினாள்.

விழா முடியும்போது, இரவு பத்து மணி ஆகி இருந்தது.

மதி கிளம்புவதைப் பார்த்துக் கொண்டிருந்த சம்யுவுக்கு, அவனிடம் தானாகச் சென்று பேசத் தயக்கமாக இருந்தது.

எடிட்டரிடம் விடை பெறும் முகமாக பேசிக் கொண்டிருந்த மதியை ஏக்கமாக பார்த்துக் கொண்டிருந்தவள், நேரமாவதை உணர்ந்து வீட்டுக்குக் கிளம்பினாள்.

அகிலனிடம் இருந்து, இப்போதைக்கு தன்னால் வர முடியாது என்பதால், கவனமாக வீட்டுக்குப் போகும்படி

தகவல் வந்திருக்க, அன்னையும் இருமுறை போன் செய்திருந்தார்.

அன்னையிடம் அகிலன் கூட இல்லை என்பதை சொன்னால், தான் வரும் வரை டென்ஷனோடு காத்திருப் பார்கள் என்றெண்ணி, அன்னையிடம் அவள் அதைச் சொல்லவில்லை.

'வண்டியை எடுத்து வந்திருக்கலாம்!' என்று நொந்து கொண்டபடி, ஆட்டோ நிறுத்தத்தை நோக்கி நடந்த வளின் அருகில் ஒரு கார் வந்து நிற்க, அவள் திடுக்கிட்டு திரும்பினாள்.

மதியின் கார்!

வண்டியை நிறுத்தி விட்டு, இறங்கி வந்த மதி, ''சம்யுக்தா! என்ன தனியா பேசறீங்க? அகிலன் வந் திருந்தானே?'' என்று விசாரித்தான்.

அவனிடம், அவள் விஷயத்தைப் பகிர, ''சரி, வாங்க! நான் உங்களை ட்ராப் செய்யறேன்!'' என்றான் மதி.

''இல்லை! உங்களுக்கு எதுக்கு சிரமம்! நான் ஆட் டோவில போய் விடுவேன்!'' என்று சம்யுக்தா தயக்கம் காட்டினாள்.

''எனக்கு எந்தச் சிரமமும் இல்லை! உங்களுக்கு என் கூட காரில் வருவதில் தயக்கம் இல்லைன்னா வரலாம்!'' என்றவன் குரலில் இருந்த ஏதோ ஒன்று, அவளைக் காரில் ஏற வைத்தது.

அவள் ஏறியதும், அவளது இருப்பிடத்தின் முகவரியைக் கேட்டுக் கொண்டு மதி, காரை எடுத்தான்.

அவனருகில் அமர்ந்து பயணம் செய்கிறோம் என் பதை நம்ப முடியாமலும், அவனது அருகாமை தந்த இதத்திலும், சம்யுக்தா அமைதியாக வர, மதிக்கு அந்த அமைதி அவ்வளவு உவப்பாக இல்லை!



''ஏன் சம்யுக்தா! கார்ல போகும்போது பேசக் கூடாது என்று உங்களுக்கு ஏதாவது வேண்டுதலா?'' என்றான்.

திடீர் என்று வந்த கேள்வியில், திடுக்கிட்டு அவன் புறம் திரும்பிய சம்யு, அவன் முகம் சாதாரணமாக இருந்ததைப் பார்த்து விட்டு, ''ம்ம்ம்... அப்படி இல்லை! உங்களுக்கு வளவளன்னு பேசினால் பிடிக்குமோ, பிடிக்காதோ என்றுதான்!'' என்று இழுக்க, அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''சோ, எனக்குப் பிடிக்கிறதை மட்டும் செய்யணும் என்று நினைக்கறீங்க என்று சொல்லுங்க!'' என்ற அவன் கேள்வியில், மீண்டும் திடுக்கிட்டவள், ஏதாவது உள்ளர்த் தம் வைத்து சொல்கிறானோ என்று அவன் முகத்தை ஆராய, இப்போதும் அவன் முகம் சாதாரணமாகவே இருந்தது.

'சரியான கல்லுளி மங்கன்!' என்று மனதுக்குள் திட்டி யவள், ''அப்படி இல்லை! அட்லீஸ்ட் பிடிக்காத மாதிரி நடந்துக்க வேண்டாமேன்னு நினைச்சேன்!'' என்று அமர்த்தலாக சொல்லி விட்டு மீண்டும் அமைதியானாள்.

மதியே மீண்டும் பேச்சை ஆரம்பித்தான்.

''எத்தனை வருஷமா இந்த பத்திரிகையில் வேலை செய்யறீங்க?''

''உங்க வீட்டில் எத்தனை பேர்?''

''உங்க ஹாபி என்ன?''

இப்படியாக அவன் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் அவள் பதில் சொல்லிக் கொண்டு வர, மதி சட்டென சிரித்தான்.

''என்ன?'' என்றபடி சம்யு, அவன் புறம் திரும்ப, ''நான் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லிட்டு

வந்தீங்களா? எனக்கு என்னமோ, இப்போ நான் நிருபர் ஆகிட்ட மாதிரி தோணுது!'' என்றான் மதி புன்னகையுடன்.

'நீ இப்படி சிரிச்சுகிட்டே இருந்தால், என்னால் பதில் கூட சொல்ல முடியாது!' என்று மனதில் நினைத்தபடி அவனது முகத்தையே பார்க்க, அவனும் அவளது புறம் திரும்பினான்.

அவன் சட்டென்று தன் புறம் திரும்பியதும், தன் பார்வையைத் தழைத்துக் கொண்ட சம்யு, ''ஆன்ட்டி, தாத்தா எல்லாம் எப்படி இருக்காங்க?'' என்று விசாரித்தாள்.

''மம்... எல்லாரும் நல்லா இருக்காங்க? அன்னைக்கு மருத்துவமனை விழாவில் பார்த்ததில் இருந்து தாத்தா உங்களைப் பற்றிதான் பேசிட்டு இருக்கார்!'' என்று மதி சொன்னதும்,

''அப்படியா... ஹீ இஸ் எ வெரி ஸ்வீட் பெர்சன்! பேசிட்டு இருந்த அந்த கொஞ்ச நேரத்திலேயே, அந்த இடத்தை அவ்வளவு கலகலப்பா ஆக்கிட்டாரு!'' என்று சம்யு சொல்ல, முதன் முறையாக மதிக்கு தன் தாத்தா மீது பொறாமையாக இருந்தது.

அடுத்த அரை மணி நேரப் பயணம், சுவாரசியமான பேச்சுடன் நகர, தன் வீடு வந்ததும், சம்யுவுக்கு இறங்கவே மனம் வரவில்லை!

உள்ளூரப் பெருமூச்சுடன் இறங்கியவள், ''வீட்டுக்கு வாங்க!'' என்று அழைக்க, ''இல்லை! இன்னொரு நாள் வரேன்!'' என்று சொல்லிவிட்டு, மதி கிளம்பினான்.

கார் சத்தம் கேட்டதும், கதவைத் திறந்த ராஜேஸ்வரி, ''சம்மு! நீயா? கார் சத்தம் கேட்டதும் அப்பாதான்



வந்துட்டாரோன்னு நினைச்சேன்! நீ எப்படிடா வந்தே? அகில் கூட வரலை?'' என்று பதட்டத்துடன் விசாரிக்க,

''இப்போ மதிதான் என்னை ட்ராப் செஞ்சார் அம்மா! அவர் எங்க விழாவுக்கு வந்திருந்தார்!'' என்று முழு விவரத்தையும் அவரிடம் சொன்னாள்.

''அச்சோ! அகில் பிரண்டுக்கு என்ன ஆச்சு? பெரிசா எதுவும் இல்லையே?'' என்று விசாரித்து தெரிந்து கொண்டவர், ''அந்த மதி வீட்டில் எல்லாருமே நல்ல டைப் இல்லையா சம்மு? அன்னைக்கு அவங்க எல்லாரும் எவ்வளவு இயல்பா பழகினாங்க!'' என்றார்.

''ஆமாம்மா!'' என்று தலையாட்டி ஆமோதித்த சம்யு, அகிலனிடம் ஒரு முறை போன் செய்து பேசிவிட்டு, தன் அறைக்கு வந்து, உடை மாற்றி விட்டு கட்டிலில் அமர்ந்தாள்.

இன்று மதியை சந்தித்தது அவளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருந்தது.

நாளை எப்படியும், அவனோடு பேச முடிவெடுத்திருந்தவளுக்கு, இன்று அவனே பேசியும் தன்னால் இயல்பாகப் பேச முடியாதது வருத்தத்தைக் கொடுத்தது. இந்த அழகில், அவளாகவே என்னவென்று பேசி இருப்பாள்?

மனம் முழுக்க அவன் மீது காதலை வைத்துக் கொண்டு, சாதாரணமாகப் பேச அவளால் இயலவில்லை என்பது தான், அவள் அதிகம் பேசாமல் இருந்ததற்குக் காரணம்!

தன் மனதிலிருக்கும் காதலைச் சொல்லி விட்டால், மனதின் சுமை நீங்கி விடும்! ஆனால், அவன் சாதாரணமாகப் பேசுவதைப் பார்த்தால், அவனுக்குள் எந்த பாதிப்பும் இருப்பதைப் போலத் தோன்றவில்லையே என்று எண்ணியவளுக்கு மனம் சோர்ந்தது.

அப்படி இருக்கும்போது, அவள் தனது காதலைச் சொல்லி, அவன் மறுத்து விட்டால் அவளால் தாங்க முடியுமா? என்று கேள்வி. அதுவரை இருந்த சந்தோஷத்தை மங்கச் செய்தது.

முதலில், அவனோடு நட்பாகப் பழகி, அவன் மனதில் இடம் பிடித்த பிறகு, தன் காதலைச் சொல்வதே சரி என்று முடிவெடுத்தவள், அமைதியாக உறங்க முயற்சி செய்தாள்.

* * *

தன் அறையில் இருந்த மதியும், சம்யுவைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தான்.

அவளிடம் பேசிப் பழகிய பிறகே தன் காதலைச் சொல்ல வேண்டும் என்று எண்ணி இருந்தவனுக்கு, இன்று அவளைப் பார்த்ததில் இருந்து, ரொம்ப நாள் காத்திருப்பது முடியாத காரியம் என்று தோன்றியது.

அவன் தன் காதலைச் சொல்லத் தவித்திருக்க, அவளோ, காரில் ஏறவும் தயக்கம் காட்டியதோடு, அவனோடு இயல்பாகப் பேசவே தயங்குகிறாள்.

இந்த லட்சணத்தில், அவன் உடனே தன் காதலைச் சொன்னால் அவ்வளவுதான்! என்று எண்ணியவன், அவள் தன் காரில் விட்டுப் போயிருந்த, அவளது கைக்குட்டையை கையில் எடுத்து முகர்ந்தான்.

அவளது வாசம் அந்தக் கைக்குட்டையில் இருப்பதைப் போலத் தோன்ற, மென்மையாகத் தன் இதழ்களை அதில் பதித்தவன், ''ரொம்ப நாள் காக்க வைக்காதே, ஸ்வீட்டி!'' என்று மனதுக்குள் சம்யுவிடம் சொல்லிக் கொண்டான்.



காலையில் எழுந்த சம்யுக்தாவுக்கு, முதலில் மதியின் நினைவுதான் வந்தது. அவனிடம் நட்பாகப் பழக வேண்டும் என்று முடிவெடுத்தது சரி, அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்று யோசித்தபடி, வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அவளுடைய முயற்சி இல்லாமலே, இரு முறை அவனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்த மாதிரி, இனிமேலும் நடக்குமா என்ன?

ஆனால், அடுத்த நாளும் அவள் முயற்சியின்றியே மதியழகனைச் சந்திக்கப் போகும் வாய்ப்பு கிடைக்கும் என்று அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை!

நாளை என்ன நடக்கப் போகிறது என்று தெரியாமல் இருக்கும் புதிர்தானே நம் வாழ்க்கை!

அடுத்த நாள் ஞாயிறு!

இரண்டு வாரங்களாக விழா ஏற்பாடுகளில் பிசியாக இருந்ததால், விடுபட்டுப் போயிருந்த ஒரு முக்கியப் பணியைக் கவனிக்கச் சென்றவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

'மலர்கள்' இல்லத்தின் வாயிலில் நுழையும்போதே, மதியழகனின் கார் கண்ணில் பட சம்யுவின் உள்ளம் துள்ளியது.

தொடர்ந்து அவனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறதென்றால், இது தெய்வ அருள்தான் என்று எண்ணிக்கொண்டே, சுவாமிநாதனின் அறைக்குள் சென்றவள், மதியழகன் அங்கே அமர்ந்திருப்பதைக் கண்டதும், மனதைச் சமனப்படுத்திக் கொண்டு, இயல்பான புன்னகையுடன், உள்ளே சென்றாள்.

''குட் மார்னிங் அங்கிள்!'' என்று அவள் முகமன் தெரிவிக்க, அவளது குரலைக் கேட்டதும், சுவாமி

நாதனுடன் பேசிக் கொண்டிருந்த மதி ஆச்சரியத்துடன் திரும்பினான்.

"ஹே ! சம்யுக்தா! வாட் எ ப்ளசன்ட் சர்ப்ரைஸ்! நீங்க எங்கே இங்கே?" என்று கண்கள் மலர விசாரித்தான்.

அவளைப் பார்த்ததும், அவன் கண்களில் தோன்றிய மலர்ச்சி, சம்யுவுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.

அவள் பதில் சொல்வதற்குள், சுவாமிநாதன் மதிக்கு பதில் சொன்னார்.

"இங்கே குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக சில வாலண்டியர்ஸ் வராங்க என்று சொல்லி இருந்தேன் இல்லை மதி! அதுல ஒருத்தவங்க சம்யுக்தா!"

சுவாமிநாதன் சொன்னதும், ஆச்சரியத்துடன் சம்யுக்தாவை நோக்கிய மதியின் கண்களில் பெருமிதமும் பாராட்டும் தெரிந்தது.

அவனது அந்தப் பார்வை அவளை ஏதோ செய்ய, அதிலிருந்து தப்பிக்க எண்ணியவளாய், சுவாமிநாதனிடம் திரும்பியவள், "ஓகே அங்கிள்! நான் குழந்தைகளிடம் போகிறேன்!" என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

அவள் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்த மதியை சுவாமிநாதனின் குரல் ஈர்த்தது.

"ரொம்ப நல்ல பொண்ணு! இங்கே இருக்கும் குழந்தைகளுக்கு எந்த விதத்திலாவது உதவணும் என்று அவங்க இங்க வந்தபோது, எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. உங்களுக்குத்தான் தெரியுமே மதி... இங்கே இருக்கிற குழந்தைகளுக்கு பயிற்சி கொடுக்கிறதுதான் முக்கியம் என்று. அதற்கான ஆட்கள் குறைவா இருக்கும் போதுதான் சம்யுக்தா இங்கே வந்தாங்க. அவங்களுக்கு



இங்கே இருக்கிற பயிற்சியாளர்கள் பயிற்சி கொடுத்தாங்க. இப்போ சம்யக்தாவே நிறைய குழந்தைகளுக்கு பயிற்சி கொடுக்க ஆரம்பிச்சிருக்காங்க. அவங்க இங்கே வந்த பிறகு, அவங்க பிரண்ட்ஸ் நிறைய பேரும் வாலண்டியர்சா இங்கே வராங்க. இந்த வயசில் இவ்வளவு பொறுமையும், சகிப்புதன்மையுமா இந்த இளைஞர்கள் இருக்கிறதைப் பார்க்கும்போது, எதிர்கால சந்ததி பற்றி ஒரு நம்பிக்கை உருவாகுது!"

சுவாமிநாதன் சம்யுவைப் பாராட்டிப் பேச, மதியின் மனம் பெருமிதத்தில் நிறைந்தது.

"வாங்க மதி, நம்ம வேலையைப் பார்க்கலாம்!" என்றபடி சுவாமிநாதன் எழ, மதியும் இன்று சம்யுவிடம் நேரம் செலவு செய்தே ஆக வேண்டும் என்ற தீர்மானத்தோடு எழுந்தான்.

குழந்தைகளுக்குத் தேவையான பூங்கா அமைக்க வேண்டும் என்று சென்ற முறை வந்தபோது சுவாமிநாதன் மதியிடம் சொல்லி இருந்தார். அதற்கான ஏற்பாடுகளை மதியும் செய்திருந்தான். அந்த வேலை விஷயமாகத்தான் இன்று மலர்கள் இல்லத்துக்கு மதி வந்திருந்தான்.

மதியைச் சந்தித்த சந்தோஷத்தோடு குழந்தைகள் இருக்கும் அறைக்குள் வந்த சம்யு, தற்காலிகமாக மதியை மறந்து குழந்தைகளோடு ஒன்றிப் போனாள்.

மூன்று மணி நேரம் கடந்ததும், மதி அவள் இருந்த அறைக்கு வந்தான்

குழந்தைகளிடம் பேச்சுக் கொடுத்தபடி, விளையாடிக் கொண்டிருந்த சம்யுவை மனதுக்குள் நிறைத்துக் கொண்டவன், அவளைத் தொந்தரவு செய்யாமல் அங்கேயே

நின்றுவிட, சிறிது நேரத்தில் சம்யுவின் பார்வை அவ னிடம் படிந்தது.

புன்னகையுடன் அவளை நோக்கியவன், "நீங்க எப்போ கிளம்புவீங்க?" என்று விசாரித்தான்.

"கிளம்பற நேரம்தான்!" என்றவள், குழந்தைகளிடம் விடை பெற்றுக் கொண்டு வந்தாள்.

"நீங்க செய்யற இந்த வேலை உண்மையிலேயே ரொம்ப நல்ல விஷயம் சம்யுக்தா!" என்று அவன் பாராட்ட,

"இந்தப் பாராட்டு உங்களைத்தான் சேரணும்!" என்று சொல்லி அவனை ஆச்சரியப்படுத்தினாள் அவள்.

ஆச்சரியத்துடன் மதி, அவளை நோக்கினான்.

"உங்க 'தெய்வம் தந்த பூவே' படம்தான், நான் இதைச் செய்வதற்கான உந்து சக்தி! அதுக்கு முன்னாடி இந்த மாதிரி குழந்தைகளைப் பார்க்கும்போது மன கனத்துப் போகுதுன்னு, இந்த மாதிரி இடங்களுக்கு வ ரொம்பவே தயங்குவேன்! உங்க படத்துக்குப் பிறகு அந்த தயக்கம் போய், நம்மால் முடிந்த ஏதாவது செய்ய ணும் என்ற எண்ணம் வந்தது!"

அவளது பதில், அவனைச் சந்தோஷத்தில் மூழ்கடி தது.

"நானும் இங்கே அடிக்கடி வருவதுண்டு! உங்களை பார்த்ததே இல்லையே?" என்றவன் குரலில் இத்தனை நாளாய் அவளைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில் லையே என்ற ஆதங்கம் இருந்தது.

"நான் பெரும்பாலும் ஞாயிறுதான் வருவேன். ந வில் டைம் கிடைச்சாலும் வருவதுண்டு!" என்று பதி சொன்னவள், சுவாமிநாதனிடம் சொல்லி விட்டுக் கிள பியபோது,



மதியை நோக்கி, "உங்களை இங்கே சந்தித்ததில் ரொம்ப சந்தோஷம்! நான் கிளம்பறேன்!" என்று மனமே இல்லாமல் சொன்னாள்.

அவள் கிளம்புகிறாள் என்றதும், அவனுக்கு இருப்பு கொள்ளவில்லை.

"வந்து... உங்களுக்கு எதுவும் அவசர வேலை இல் லன்னா, நாம வெளியில் எங்காவது போகலாமா? நானே உங்களுக்கு போன் செய்யணும் என்று நினைச்சிட்டு இருந்தேன்!" என்று தயக்கத்துடன் சொல்ல,

அவன் விடுத்த அழைப்பில் மகிழ்ச்சி அடைந்த சம்யு. "என்னைக் கூப்பிடணும் என்று நினைச்சீங்களா? என்ன விஷயம்?" என்று ஆர்வத்துடன் வினவினாள்.

"நேற்று, என் கூட கார்ல வந்தீங்க இல்லை? அப்போ, உங்க பொருள் ஒண்ணை விட்டுட்டுப் போய் விட்டீங்க! அதைத் திருப்பிக் கொடுக்கணும் என்றுதான் உங்களைச் சந்திக்கணும் என்று நினைத்தேன்!"

"இல்லையே, எதுவும் விட்டுட்டு வந்த மாதிரி தெரிய லையே?" என்று வாய்விட்டு யோசித்தவளுக்குப் பதிலாக, "இல்லை சம்யுக்தா! உண்மையிலேயே உங்க பொருள் ஒண்ணு என் கிட்ட இருக்கு!" என்று புன் னகையுடன் மதி சொல்ல,

'என்ன விட்டுட்டு வந்திருப்பேன்?' என்று யோசித்த வளுக்கு, 'ஒருவேளை! ஒரு வேளை! என் இதயத்தை அவனிடம் விட்டு விட்டதைச் சொல்கிறானோ?' என்று தோன்ற மூச்சடைத்தது.

'பைத்தியம்! காதலிக்க ஆரம்பித்து விட்டால் மூளை மழுங்கி விடுமா, என்ன? அவன் திருப்பித் தரப் போகிறேன் என்று சொன்னானே?' என்று தன்னையே

கடிந்து கொண்டு, "சரி கொடுங்க!" என்று சாதாரண மாகச் சொன்னாள்.

"தரேன்! கண்டிப்பா தரேன்! அதுக்கு முன்னாடி, எங்காவது வெளியேப் போகலாமா என்று கேட்டேனே?" என்றவனிடம், "சரி! போகலாம்! எங்கே என்று நீங்களே சொல்லுங்க!" என்று அவள் ஒப்புதல் தந்ததும், அவன் முகம் மலர்ந்தது.

"மதிய உணவு நேரம் வந்தாச்சு! ஹோட்டல் போக லாமா?" என்று அவன் கேட்டதும், சம்யு சரி என்பதாய்த் தலையசைத்தாள்.

"நீங்க உங்க வண்டியில் வந்து இருக்கீங்களா?"

"இல்லை! ஆட்டோவில் தான் வந்தேன்!" என்று அவள் சொல்ல, இருவரும், அவனது காரில் ஒரு பிரபல டிரைவ் இன் ஹோட்டலுக்குச் சென்றனர்.

"என்ன சாப்பிடறீங்க சம்யுக்தா?" என்று அவளிடம் கேட்டு, பேரரிடம் ஆர்டர் கொடுத்து அனுப்பினான்.

நேற்று மாதிரி சொதப்பாமல் இன்று அவனுடன் இயல்பாக உரையாட வேண்டும் என்று எண்ணிய சம்யு, பேரர் சென்றதும் மதியிடம், "இப்போ என்ன படம் செஞ்சுட்டு இருக்கீங்க?" என்று விசாரித்தாள்.

அவள் அப்படிக் கேட்டதும் மதி சிரித்தான்.

'என்ன?' என்று கேள்வியை அவள் நோக்க, "இல்லை! நிருபர் மேடம் திரும்ப பார்முக்கு வந்துட்டாங்க போல?" என்றான் புன்னகையுடன்.

"ஆமாம்! அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள்! இப்போ நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க!" என்று சம்யு துருவ,



"இப்போதைக்கு எந்த படமும் ப்ளான் செய்யலை! இந்த மாசம்தான் என்னோட புதுப் படம் வெளியாச்சு! எப்பவும் ஒரு படம் முடிஞ்சா உடனே, ஒரு மாசம் நான் பிரேக் எடுப்பேன். குடும்பத்துக்காக நேரம் செலவு செய்யறது, என்னோட பொழுதுபோக்குக்கு, மைண்ட்டை ரெப்ரெஷ் செய்ய என்று! எப்போ அடுத்த படத்துக்கான கரு தோணுதோ, அப்போ அதற்கு முழு வடிவம் கொடுக்க மூணு மாசம்! அதற்கு அப்புறம் முழு மூச்சா ஆறு மாசம் படப்பிடிப்பு, அதற்கப்புறம் போஸ்ட் ப்ரொடக்ஷன் வேலைகள், வெளியீடு என்று ரெண்டு மாசம் ஓடிடும், திரும்பவும் ஒரு மாசம் பிரேக்!" என்று அவன் மூச்சு விடாமல் சொல்ல, சம்யு அவனையே பார்த்திருந்தாள்.

"மூணு மாசம் தேவையா டிஸ்கஷனுக்கு?" என்று அவள் ஆச்சரியமாக வினவ,

"எனக்குத் தேவை! படத்தின் முதல் பிரேமில் இருந்து கடைசி வரை எப்படி எடுக்கப் போறேன் என்று, முன்னாடியே முடிவு செஞ்சிடுவேன்! படப்பிடிப்பின் போது சில மெருகேற்றும் வேலைகள் இருக்குமே தவிர, முன்னாடியே எல்லாத்தையும் சரியாய் திட்டமிட்டா, படப்பிடிப்பு சரியான நேரத்துக்கு முடிஞ்சுடும், இல்லையா?" என்று அவன் சொன்னபோது, அவனது படங்களில் இருக்கும் நேர்த்திக்கான காரணம் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

"இந்த ஒரு மாச இடைவெளியில, கண் தானம் பற்றி குறும்படம் எடுத்துக் கொடுத்து இருக்கீங்க... இவ்வளவு பெரிய டைரக்டரா இருந்துட்டு, இதெல்லாம் செய்யறதுக்கு பெரிய விச்சாயம் சார்!" என்று சம்யு பாராட்ட,

"நம்மால் முடிஞ்ச ஒரு நல்ல விஷயம் செய்யறதில் என்ன இருக்கு!" என்று அதை ஒதுக்கியவன், "இந்த சார்

எல்லாம் வேண்டாமே சம்யுக்தா, மதி என்றே கூப்பிடுங்க!'' என்று சொல்ல, சம்யுவுக்கு மனம் குளிர்ந்தது.

அதற்குள் அவர்கள் ஆர்டர் செய்திருந்த உணவு வர, இருவரும் இயல்பான பேச்சுக்கிடையில் உண்டு முடித்தனர்.

அவனுடைய காரில் ஒரு பெரிய நோட்டுப் புத்தகம் இருக்க, ''இதென்ன?'' என்றபடி அதை எடுத்த சம்யுக்தா, அவன், ''என்னோட டிராயிங் புக்!'' என்றதும், ''பார்க்கலாமா?'' என்று தயக்கம் கலந்த ஆவலுடன் வினவ, ஆமோதிப்பாய் மதி தலையாட்டினான்.

அதில் பென்சிலால் ஸ்கெட்ச் ஓவியங்கள் வரையப்பட்டிருக்க, ஒவ்வொரு ஓவியமும் ஒவ்வொரு விதமான உணர்வை வெளிப்படுத்தின.

ஆச்சரியத்துடன் அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தவள், ''இது உங்க படங்களுக்கான ஸ்கெட்சா?'' என்று தலை நிமிர்த்தாமலே வினவ, அவளது முகபாவங்களை ரசித்துக் கொண்டிருந்தவன்,

''ம்ம்... இல்லை!'' என்றான்.

''பின்னே?'' என்று தலை நிமிர்த்தி அவள் வினவியதும், ''நான் எல்லார்கிட்டயும் அதிகமா பேச மாட்டேன் சம்யுக்தா! பேசினால் மனதில் பட்டதைப் பட்டென்று பேசி விடுவேன்! அது சில சமயம் மற்றவங்களை ஹர்ட் செஞ்சிடும்! அதனால், என்னுடைய சில சந்தோஷங்களை, கோபங்களை, வருத்தங்களை, ஏக்கங்களை இப்படி படமா வரைஞ்சிடுவேன்! என்னோட வெளியே சொல்ல முடியாத, இல்லை, சொல்லத் தயங்குகிற சில உணர்வுகளுக்கு, இது வடிகால் என்று வைச்சுக்கோங்களேன்!'' என்றான் மதி.



''ஏன் டயரி எழுதற பழக்கம் இல்லையா?'' என்று சம்யு வினவ, ''ம்ம்ம்... எழுதுவேன், அது தினமும் நடக்கிற நிகழ்வுகளில், மனதை நல்ல படியாகவோ, இல்லை... எதிர் மறையாகவோ பாதித்ததை மட்டும் எழுதுவேன்!'' என்று சொல்ல,

''தன்னைச் சந்தித்ததைப் பற்றியும் எழுதி இருப்பானோ என்ற ஆவல் தோன்றி, உடனே அவனது டயரியைப் படிக்க வேண்டும் என்று மனம் பரபரத்தது சம்யுவுக்கு!

அதற்கப்புறம் சிறிது நேரப் பேச்சுக்குப் பிறகு, ''என்னோட பொருள்?'' என்று சம்யு இழுக்க, தன் சட்டைப் பையில் இருந்து அவன், அவளது கைக்குட்டையை எடுத்து அவளிடம் தந்தான்.

''ஓ! இதுதானா?'' என்றபடி அவள் அதை வாங்க, ''நீங்க வேறென்ன நினைச்சீங்க?'' என்று அவன் எதிர் கேள்வி கேட்க, தான் நினைத்ததை எண்ணி, லேசாக முகம் சிவந்த சம்யு, ''இல்லை! எனக்கு எதுவுமே தோணலை!'' என்று அவசரமாக மொழிந்தாள்.

அவளது சிவந்த முகத்தைப் பார்த்தவனுக்கு, இப்போதே காதலைச் சொல்லி விடலாமா என்று மனம் பரபரத்தது.

'இப்போதுதான் இயல்பாகப் பேச ஆரம்பித்திருக்கிறாள்! அதற்குள் ஏதாவது சொல்லி சொதப்பாதே!' என்று பரபரத்த மனதை அடக்கினான்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அவர்கள் கிளம்பிய போது, இருவரும் மதி, சம்யு என்று அழைப்புகள் இயல்பாக வந்திருந்தது.

நேற்று போல் அல்லாமல், இன்று அவனோடு இயல்பாகப் பேசியது, சம்யுவுக்கு நிறைவைத் தந்தது.

விரைவில் அவன் மனதில் இடம் பிடித்து, காதலைச் சொல்லி விட வேண்டும் என்று எண்ணியவள், அவனது

சட்டை பையில் இருந்து எடுத்துக் கொடுத்த, தனது கைக்குட்டையை கன்னத்தோடு வைத்து அழுத்தியபடி உறங்கப் போனாள்.

அதன் பிறகு, பத்து நாட்கள் அவர்கள் போனில் பேசிக் கொள்வதும், அவ்வப்போது சந்திப்பதும் இயல்பாக நடக்க, இருவருமே, தங்களது மனதை வெளிப்படுத்திக் கொள்வதில் மட்டும் தயக்கம் காட்டினர்.

தங்களது மனதைச் சொன்ன பிறகு, அழகாய் மலர்ந்திருக்கும் நட்புக்கு பங்கம் வந்து விடுமோ என்ற பயம், இருவரின் மனக் கதவையும் பூட்டியே வைத்தது.

ஆனால், விரைவிலேயே இருவரும் தங்களது தயக்கத்தைக் களையும் நாளும் வந்தது.

## 6

அன்று இரவு உணவுக்குப் பிறகு, ராஜசேகர், சம்யுக்தாவிடம் பேச வேண்டும் என்று சொன்னதும், இயல்பாகவே வந்து அமர்ந்தாள் சம்யு.

நால்வரும் சோபாவில் அமர, ராஜசேகர், "சம்யு, அன்னைக்கு ஹாஸ்பிடலில் பார்த்தோமே, டாக்டர் அருண், அவரைப் பற்றி உன்னோட அபிப்ராயம் என்ன?" என்று விசாரிக்க, சம்யு விழித்தாள்.

அன்று மதியைப் பார்த்த சந்தோஷத்தில், சம்யுவுக்கு அன்று நடந்தது எல்லாமே ஏதோ கனவில் நடந்த மாதிரிதானே இருந்தது. தந்தை சொன்ன டாக்டர். அருணின் முகம் கூட அவளுக்கு நினைவில் இல்லையே!

"என்னப்பா திடீர்னு அவரைப் பற்றி?" என்று அவள் வினவ,



"சம்யு, என்னடா இப்படி கேட்கிறே? அவரைப் பற்றி ஏற்கனவே பேசியதுதானே? அன்னைக்கே கேட்க வேண்டாம் என்றுதான், உனக்கு பத்து நாள் யோசிக்க நேரம் கொடுத்து, இப்போ கேட்கிறேன்!" என்று தந்தை சொன்னதும், அவளுக்கு தந்தை தன் திருமண விஷயத்தைப் பற்றிப் பேசுகிறார் என்பது புரிந்தது.

"இல்லைப்பா! எனக்கு விருப்பமில்லை!" என்று அவள் சட்டென்று சொல்லிவிட, ராஜசேகரின் முகம் மாறியது.

அருணிடம் அவள் இயல்பாகப் புன்னகையுடன் பேசியதை வைத்து, மகளுக்கு சம்மதம் என்றே அவர் நினைத்திருந்தார். அவளை வற்புறுத்துவதைப் போல இருக்கக் கூடாது என்று எண்ணித்தான், பத்து நாட்களுக்கு மேலாக அமைதியாகவும் இருந்தார்.

மகளின் விருப்பமின்மையைக் கேட்டதும், அவருக்குக் காரணம் தெரிய வேண்டி இருந்தது.

"காரணம்?" என்று அவர் சுருக்கமாக வினவ, "காரணம் என்று எதுவும் இல்லைப்பா! எனக்கு விருப்பமில்லை அவ்வளவுதான்!" என்றாள் அவளும் சுருக்கமாகவே!

"சம்யு! உன்னோட விருப்பம்தான் எங்களுக்கு முக்கியம்! ஆனால், இப்படி காரணமின்றி நல்ல சம்மந்தத்தை இழப்பதில் எனக்கு விருப்பமில்லை! இன்னும் கொஞ்ச நாளுக்குப் பிறகு யோசித்து சொல்கிறாயா?" என்று நயமாகவே ராஜசேகர் வினவ,

"இல்லைப்பா! யோசிக்கவே வேண்டாம்!" என்று சம்யு உறுதியாகக் கூறினாள்.

"அப்போ! வேற ஏதாவது விருப்பம் இருக்கா சம்யு?" என்று ராஜசேகர் நேரிடையாகவே விஷயத்துக்கு வந்தார்.

முன்னே மாதிரி, ''அப்படி எதுவும் இல்லைப்பா!'' என்று அவளால் சொல்ல இயலவில்லை!

அவளது மௌனம், ஏதோ விஷயமிருப்பதை உணர்த்த, கணவரின் அருகில் அமர்ந்திருந்த ராஜேஸ்வரி மகளின் அருகில் வந்து அமர்ந்தார்.

''சம்மு! எங்க கிட்ட சொல்றதுக்கு என்னடா தயக்கம்?'' என்று ஆதுரத்துடன் வினவ, மதியிடம் எதுவும் பேசாமல், இதை எப்படி பெற்றோரிடம் சொல்வது எனக் குழம்பிய சம்யு, ''எனக்கு இன்னும் ஒரு வாரம் டைம் கொடுங்கப்பா ப்ளீஸ்!'' என்று தந்தையைப் பார்த்துச் சொல்ல,

அவளது பதில் ஏமாற்றத்தைத் தந்திருந்தாலும், அவளது கலங்கிய முகத்தைப் பார்த்தவர், ''நீ சந்தோஷமா இருக்கிறதுதான் எங்களுக்கு முக்கியம் சம்யு! நான் இன்னொரு தரம் இந்த விஷயத்தைப் பற்றி கேட்கவில்லை! ஆனால், நீயாக வந்து சொல்லணும்!'' என்பதோடு எழுந்து சென்றார்.

ராஜேஸ்வரி ஒன்றும் சொலலாமல் மகளையே பார்த்திருக்க, ''ப்ளீஸ்மா! உங்ககிட்ட சொல்லக் கூடாதுன்னு இல்லை! பட், நானே இன்னும் அவர்கிட்ட பேசலை!'' என்று மகள் சொல்லவும், ராஜேஸ்வரிக்கு ஒரு ஊகம் எழுந்தது.

''உன் முடிவு தப்பா இருக்காது என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கு சம்மு! ஆனால் எதுவா இருந்தாலும், எங்ககிட்ட சீக்கிரமா சொல்லிடு!'' என்றதோடு அவளைத் துருவ மனமில்லாமல் ராஜேஸ்வரியும் சென்று விட்டார்.

பெற்றோர் இருவரும் உள்ளே சென்று விட, அகிலன் தமக்கையின் அருகில் வந்து அமர்ந்தான், ''எப்போ மதி சார் கிட்டே பேசப் போறே அக்கா?'' என்ற கேள்வியுடன்!



''அகில்!?'' என்று அதிர்ச்சியுடன் சம்யு, அவனை ஏறிட, ''என்கிட்டே கூட சொல்லவே இல்லை, இல்லை?'' என்று குறை கூறிய தம்பியிடம்,

இன்னும் ஆச்சரியம் விலகாமல், ''உனக்கு எப்படிடா தெரியும்?'' என்றாள் தமக்கை.

''அப்பாவோட ஹாஸ்பிடல் விழாவில், நீ அவரைப் பார்த்த விதத்திலேயே எனக்கு சந்தேகம் வந்தது. உங்க பத்திரிகை ஆண்டு விழா அன்னைக்கு, சந்தேகம் கிளியர் ஆகிடுச்சு!'' என்றான் அகிலன் சிரிப்புடன்.

'அப்படியா மனதை வெளிப்படையாகக் காட்டினேன்?' என்று சம்யு உள்ளுக்குள் வியக்க, ''ஆனால் எல்லாத்தையும் என்கிட்டே ஷேர் செய்யற நீ, இதை மட்டும் சொல்லவே இல்லை பார்த்தாயா?'' என்று குறைபட்டான்.

''அப்படி இல்லைடா! அவரோட மனசு தெரியாம நான் எப்படிடா உன்கிட்ட சொல்லுவேன்?'' என்றாள் சம்யு.

''உடனே பேசிடுக்கா! இந்த மாதிரி விஷயங்களை தள்ளி போடக்கூடாது!'' என்று அறிவுரை கூற,

''அடேங்கப்பா! அட்வைஸ் எல்லாம் பலமா இருக்கே! ரொம்ப அனுபவம் இருக்கிற மாதிரி பேசறே?'' என்று கேலியுடன் தம்பியைப் பார்க்க,

''நாங்க எல்லாம் உங்களை மாதிரி இழுத்துட்டே இருக்க மாட்டோம்! இவள்தான் என்று தோன்றி விட்டால், உடனே ப்ரொபோஸ் செஞ்சுடுவோம்!'' என்று சொல்லி விட்டு அவன் சிரித்தான்.

அவனுடன் இணைந்து சிரித்த சம்யு, அடுத்த நொடியே, ''ஒரு வேளை, மதி... அவருக்கு விருப்ப

மில்லை என்று சொல்லிட்டா என்ன செய்யறது?''
என்று கலங்கிய குரலில் வினவினாள்.
''அச்சோ! என் அக்காவை யாருக்காவது பிடிக்காமல்
போகுமா?'' என்று தமக்கையின் கையைப் பற்றியபடி,
அகிலன் கூற, ''ஒரு வேளை சொல்லிட்டால்?'' என்று
இன்னமும் கலக்கம் தீராமலே சம்யு வினவ,
''அதுக்காக சொல்லாமலே இருக்க முடியுமா என்ன?
சொன்னால்தானே அக்கா தீர்வு பிறக்கும்? யு நோ சம்
திங்? அவரைப் பார்த்தபோது உன் முகத்தில் எவ்வளவு
பிரகாசமா லைட் எரிஞ்சதோ, அதைவிட டபுளா அவர்
முகத்தில் லைட் எரிஞ்சதை நான் பார்த்தேன்!'' என்றான்
அகிலன் கண் சிமிட்டலுடன்!

''உணமையாவா அகில்?'' என்று ஆர்வத்துடன் சம்யு வினவ, ''100 பெர்சண்ட் உண்மை! நாளைக்கே அவர்கிட்ட பேசிடு! நல்லதே நடக்கும்'' என்று அவன் ஆசி கூறுவதைப் போல கையை மடக்க, இதே போல, மதியை முதலில் சந்திக்கப் போகும்போது, அகிலன் கூறியது நினைவில் வந்து சம்யுவின் முகம் மலர்ந்தது.

''தேங்க்ஸ் அகில்! கண்டிப்பா நாளைக்கே பேசிடறேன்!'' என்ற சம்யு, சந்தோஷத்துடன் தனது அறைக்குச் சென்றாள்.

இந்த பத்து நாட்களில் அவனோடு பேசிய போதும், சந்தித்தபோதும், அவனுக்குத் தன்னைப் பிடித்திருக்கிறது என்பதை சம்யுவால் உணர முடிந்தது.

மலர்கள் இல்லத்தில் சந்தித்ததில் இருந்து, இந்தப் பத்து நாட்களில் மதியழகன் சம்யுக்தாவிடம் கலகலப்பாக பழகி இருந்தான் என்றாலுமே, அவனுடைய பேச்சிலோ, பார்வையிலோ அதிக உரிமை தெரிந்த



தில்லை. அப்படி ஏதாவது வாய் தவறி பேசி விட்டாலுமே, இவள் அவனது முகத்தை நிமிர்ந்து பார்ப்பதற்குள், அவன் முகம் இயல்பான பாவனையுடன்தான் இருக்கும் என்று யோசித்துக் கொண்டே வந்த சம்யுக்தாவுக்கு பொறி தட்டியது.

இயல்பான பாவனை!

யெஸ்! அது இயல்பாக இருப்பது போலக் காட்டிக் கொள்ளும் பாவனை! உண்மை அல்ல!

அவளுமே அப்படிதானே அவனிடம் இருக்கிறாள்! மனதுக்குள் எவ்வளவு ஆசை இருந்தாலும், அவனைப் பார்க்கும்போதும், பேசும்போதும் தன் நேசத்தைக் காட்டி விடுமோ என்ற பயத்தில் கவனமாகத்தானே நடந்து கொள்கிறாள்!

அவனும், அவளைப் போலவே நினைத்திருந்தால்? என்ற எண்ணம் தோன்ற, சம்யுக்தாவின் உள்ளத்தில் மகிழ்ச்சி குமிழிட்டது.

இப்போது, மனம் திறந்து பேச வேண்டிய கட்டம் வந்து விட்டதை உணர்ந்தவள், நாளை எப்படியும் மதியிடம் இதைப் பற்றிப் பேசி விடுவது என்ற முடிவோடு படுக்கச் சென்றாள்.

* * *

தனது அறைக்குள் சம்யுவைப் பற்றி யோசித்தபடி மதியழகன் அமர்ந்திருக்க, கதவை தட்டி விட்டு அவனது தாத்தா அன்பழகன் உள்ளே நுழைந்தார்.

''வாங்க தாத்தா!'' என்று மதி வரவேற்றான்.

''என்ன கண்ணா! இந்த பத்து நாளா நீ சரியாவே பேசறது இல்லை! என்ன விஷயம்?'' என்று வினவ, ''ஒண்ணுமில்லையே தாத்தா!'' என்று மதி மழுப்பினான்.

"அப்படியா?!" என்று நம்பாமல் அவனைப் பார்த்
தான். "உன்னை பேச வைக்கிறேன் பார்!" என்று மனதில்
நினைத்துக் கொண்டு,

"அண்ணனுக்கு சாரங்கனோட ஹாஸ்பிடல் விழாவில்
ஒரு பொண்ணைப் பார்த்தாரே! அதான்பா உன்னை
பேட்டி எடுக்க வந்த பொண்!" என்று ஆரம்பித்ததும்,
"சம்பூர்ணா, தாத்தா" என்று சட்டென்று சொல்லிவிட்டு
நாக்கை கடித்துக் கொண்டான் மதி.

"ஹான்! அந்த பொண்தான்! அவளை சாரங்கன் தங்
அண்ணனோட பேத்திக்காகப் பார்க்கிறாராம்!" என்று
தாத்தா சொன்னதும், மதி விறைப்பாக அமர்ந்தான்.

அதைக் கண்டும் காணாமல், அன்பழகன் தொடர்ந்
தார்.

"அந்த பொண்ணோட அப்பாவும் ஒரு டாக்டர். அந்
பையனும் டாக்டர். அந்தப் பையனையும் பொண்ணை
மீட் செய்ய வைக்கத்தான், அண்ணனுக்கு விழாவுக்
அந்த பொண்ணோட குடும்பம் வந்ததாம்!"

"உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும் தாத்தா?"
என்று மெல்லியக் குரலில் மதி வினவ,

"இல்லைப்பா! அந்தப் பெண்ணை உங்க அப்
வுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அதான் அவங்க குடு
பத்தைப் பற்றி சாரங்கன் கிட்ட விசாரிக்கச் சொன்னா
அப்படி விசாரிக்கும்போதுதான் சாரங்கன் என்கிட்ட
இதைச் சொன்னான்!" என்று தாத்தா சொன்னதும், ம
வின் முகம் வாடியது.

குறுகிய காலமே சம்யுவிடம் பழகி இருந்தாலு
அவள் மீதான அவனது நேசம் இறுகிக் கொண்டே வ
நேரத்தில், இதென்ன புதுக் குழப்பம் என்று எண்ண



மதியின் முகம், அவனது அகச் சோர்வைக் காட்ட, அதற்கு மேல் சோதிக்காமல், அன்பழகன் நேராக விஷயத்துக்கு வந்தார்.

"மதி! உனக்கு அந்த பெண்ணைப் பிடிச்சிருக்கா?" என்ற தாத்தாவை "தாத்தா!?" என்று ஆச்சரியத்துடன் பார்த்த மதி, மேலே எதுவும் சொல்லும் முன்,

"நீ சொல்லலை என்றாலும், எனக்குப் புரியுது! அன்னைக்கு ஹாஸ்பிடல்ல நீ அவளைப் பார்த்த பார்வை, எனக்கு இன்னும் நினைவில் இருக்கு!" என்று புன்னகைக்க,

"சரியான ஆள் தாத்தா, நீங்க!" என்று பதிலுக்கு புன்னகைத்தான்.

"இன்னும் ஏன்டா அவள்கிட்ட பேசலை?" என்ற தாத்தாவின் கேள்விக்குப் பதிலாக,

"அவள் கிட்ட சொல்லிடணும் என்றுதான் தாத்தா நினைக்கிறேன்! பட், ஏதோ ஒரு தயக்கம்! ஒரு வேளை, நான் நட்பாதான் பழகறேன் என்று சொல்லிட்டால், என்னால் தாங்கிக்க முடியாது தாத்தா!" என்றவனின் குரல் மிகவும் மெலிந்து வர,

"என்ன மதி! எதையும் நம்பிக்கையுடன் எதிர்நோக்கும் நீ, இப்படிப் பேசறது எனக்கு ஆச்சர்யமா இருக்கு! உன்னோட காதல் உண்மையானது என்றால், அவளிடமும் அதற்கான எதிரொலி கண்டிப்பா இருக்கும்! இன்னும் எதுவும் முடிவாகலை என்று சாரங்கன் சொன்னான்! அதுக்கு முன்னாடி நீ அவள் கிட்ட பேசறது தான் சரி!" என்று விட்டு, தாத்தா சென்றுவிட, மதி யோசனையில் ஆழ்ந்தான்.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு, நாளை கண்டிப்பாக சம்யுவிடம் தன் மனதைச் சொல்லிவிட வேண்டும் என்று முடிவு செய்தான்.

''ஸ்வீட்டி! உனக்கும் என்னைப் பிடிக்கும் என்று எனக்குத் தெரியும்! ஆனால், நான் என் மனதை சொல் லும்போது, நீ எந்தத் தயக்கமும் இல்லாமல் என் காதலை ஏற்றுக் கொள்ளணும் என்றுதான் காத்திருந்தேன்! எனக்கு ஏமாற்றத்தை மட்டும் தந்து விடாதே!'' என்று மனதுக்குள் சம்யுக்தாவிடம் பேசியவன், தன் ஓவியப் புத்தகத்தை எடுத்து, தன் மனதை உணர்த்தும் ஓவி யத்தை வரைந்து விட்டு, நாளை அவளிடம் தன் காதலைச் சொல்லப் போவதை, கற்பனையில் கண்டபடி உறங்கினான்.

* * *

தானே இன்று மதியை அழைத்து சந்திக்க வேண்டும் என்று எண்ணி இருக்க, காலையிலேயே அவளை அழைத்த மதி, இன்று கடற்கரையில் சந்திக்கலாம் என்று சொன்னபோது, சம்யுவுக்கு இது நல்ல சகுனம் என்று மனதில் உற்சாகம் பொங்கியது.

அவனிடம், தான் அவனைக் காதலிக்கும் விஷயத்தை எப்படிச் சொல்ல ஆரம்பிப்பது என்ற யோசனையில் அன்றைய நாள் கழிய, மாலை மதியைச் சந்தித்தபோது வார்த்தைகள் வராமல் தடுமாறினாள்.

என்னதான் அவனும் அவளை விரும்புகிறான் என்று தோன்றினாலும், எதிர்மறையான பதில் வந்து விட்டால் என்ன செய்வது என்ற அச்சத்துடன், சொல்ல வந்ததை அவள் ஒத்திகைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, அவனுமே, எதோ யோசனையில் இருப்பதைப் போல இருந்தது.



வண்டியைப் பார்க் செய்து விட்டு, காரை விட்டு இறங்கும் வேளையில், மதியழகனுக்கு கைப்பேசியில் அழைப்பு வர, அவன் பேசுவதற்காக இறங்கிச் செல்ல, சம்யு காரிலேயே அமர்ந்திருந்தாள்.

எப்போதும் போல, மதியின் ஓவியப் புத்தகத்தை எடுத்துப் புரட்டியவள், கடைசி பக்கத்தில் இருந்த ஓவியத்தைப் பார்த்ததும், ஆனந்தமாக அதிர்ந்தாள்.

அதுவரை இருந்த தயக்கம், பயம் எல்லாம் விலகி, மனம் சந்தோஷத்தில் குதூகலித்தது.

''கடவுளே, உன் கருணைக்கு நன்றி!'' என்று மனதார கடவுளுக்கு நன்றி சொன்னவளின் பார்வை, மீண்டும் ஓவியத்தில் படிந்தது.

சம்யுக்தாவின் சாயலோடு ஒரு பெண் கையில் மாலையுடன் நிற்க, மதியின் சாயலில் குதிரையில் ஒரு ஆணின் உருவம் அவளை நோக்கி கையை நீட்டுவதைப் போல வரையப்பட்டிருந்தது.

அந்த ஓவியம், மதியின் மனதைத் தெளிவாக உணர்ந்த, தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்ட சம்யுவுக்கு, கண்ணீரும் புன்னகையும் போட்டி போட்டுக் கொண்டு வந்தது.

மதி, தன்னை இன்று அழைத்ததற்கான காரணமும் தெரிய வர, அவனே சொல்லட்டும் என்று எண்ணியவளாக, மதி காரை நோக்கி வருவதைக் கண்டதும், ஓவியப் புத்தகத்தை அதன் இடத்தில் எடுத்த சுவடே தெரியாமல் வைத்துவிட்டு, துள்ளிய மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக அமர்ந்தாள்.

காரின் அருகில் வந்த மதி, ''உன்கிட்ட கொஞ்சம் பேசணும் சம்யு! காரிலேயே உட்காரலாமா?'' என்று வினவ, சம்யு சரி என்பதாய்த் தலையாட்டினாள்.

உள்ளே வந்து அமர்ந்தவன், பேச வார்த்தைகளைத் தேட, அவனது மனதை ஏற்கனவே அறிந்து கொண்டதால், சம்யு சுவாரசியமாக அவனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏதோ முடிவெடுத்தவனாக, சம்யுவின் புறம் திரும்பிய மதி, "சம்யு, உனக்கு காதல்ல நம்பிக்கை இருக்கா?" என்று பேச்சை ஆரம்பித்தான்.

"ம்ம்ம்..." என்று வெகுவாக யோசித்த சம்யு, உள்ளூரத் தோன்றிய படபடப்பை மறைத்துக் கொண்டு,

"ம்... இருக்கு! இன்பாக்ட், நானே காதல் கல்யாணம் செஞ்சுக்கணும் என்றுதான் இருந்தேன், பட், என்னோட எதிர்பார்ப்புக்கு ஏற்ற மாதிரி ஆளை நான் இன்னும் பார்க்கவே இல்லை!" என்று கொஞ்சம் சலித்த குரலில் சொல்ல மதிக்கு ஏனோ மனதில் ஒரு இதம் படர்ந்தது.

காதல் என்றால் எட்டிக்காய் என்று அவள் நினைக்கவில்லை!

"ஓ! அப்படி என்ன எதிர்பார்ப்பு என்று தெரிஞ்சிக்கலாமா?"

தன் படபடப்பை அடக்க முயன்றபடி மதியழகன் விசாரிக்க, அவனைப் புன்னகையுடன் ஒரு பார்வை பார்த்த சம்யு, சொல்ல ஆரம்பித்தாள்.

"ம்ம்ம்... பையனுக்கு பெரிய குடும்பமா இருக்கணும்! தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, அத்தை, மாமா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை..."

விரல் விட்டு ஒவ்வொன்றாக சம்யு சொல்லிக் கொண்டு வர மதியின் முகம் வாடியது.

ஓரக்கண்ணால் அவனது முக மாற்றத்தைக் கவனித்தவள், "இவ்வளவு மெம்பர் இல்லை என்றாலும்,



அம்மா அப்பாவோடு, கூட ஒரு பெரியவர்களாவது இருக்கணும்!" என்று சொல்ல, மதியின் முகம் பிரகாசித்தது.

முதல் நிபந்தனை ஓகே!

அடுத்து என்ன சொல்லப் போகிறாள் என்று அவன் ஆர்வமாக அவளைப் பார்க்க, அவனது ஆர்வத்தைக் கண்டவளுக்கு, நேராகவே சொல்லி விடலாமா என்று தோன்ற, அவன் மட்டும் சொன்னானா என்று மனம் முறுக்கிக் கொண்டது.

அவள், விளையாட்டைத் தொடர்ந்தாள்.

"மீடியாவில வேலை செய்யறவரா இருக்கணும்!"

சம்யுக்தா சொன்னதும் மதியின் மனம் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தது.

ஒருவேளை, அவளைப் போலவே பத்திரிகைத் துறையில் வேலை செய்ய வேண்டும் என்று சொல்லுகிறாளோ என்ற சந்தேகம் தோன்ற, மனம் மீண்டும் சற்றே துவண்டது.

அவளது ஒவ்வொரு சொல்லுக்கும் தனக்குள் கேள்வி பதில் நடத்திக் கொண்டிருந்த மதியழகன், அவளது முக பாவங்களைக் கவனிக்கவில்லை என்றாலும், சம்யு அவனது ஒவ்வொரு முக மாற்றத்தையும் அளவெடுத்துக் கொண்டுதான் இருந்தாள் என்பதால், அவனது இந்த மாற்றத்தையும் சரியாகவே கவனித்தவள்,

"பத்திரிகை என்று இல்லை! சினிமாவா இருந்தாலும் பரவாயில்லை!" என்று பெருந்தன்மையுடன் அறிவிக்க, மதி அவசரமாக தன் யோசனையில் இருந்து மீண்டு வந்தான்.

இவள் தன்னிடம் விளையாடுகிறாளோ என்ற சந்தேகம் முதன் முறையாகத் தோன்ற, அவளது முகத்தை

உற்றுப் பார்த்த வனுக்கு, அவள் சிரிப்பை அடக்கிக் கொண்டிருப்பது தென்பட்டது.

'அடிப்பாவி! ஒரு மனிதனை இந்த அளவா சோதிப்பாய்?' என்று தோன்றினாலும், அவளது விளையாட்டை ரசிக்க ஆரம்பித்திருந்தவனுக்கு அவளே முடிக்கட்டும் என்று தோன்றியது.

இறுக்கமாக அமர்ந்திருந்த பாவனை மாறி, அவன் இலகுவாக அமர்ந்ததும், தன் விளையாட்டை அவன் புரிந்து கொண்டான் என்பதை உணர்ந்ததால், அவளும் சிறிது நேரம் அமைதியாக இருந்தாள்.

''அப்புறம்? அடுத்த கண்டிஷன் என்ன மேடம்?'' என்று விசாரித்த மதியின் குரலில் துள்ளல் இருந்தது.

இப்போது வெளிப்படையாகவே புன்னகைத்த சம்யு, ''அவர் டைரக்டரா இருக்கணும்! அதுவும் தேசிய விருது வாங்கி இருக்கணும்! அட்லீஸ்ட், அவர் இயக்கிய படத்துக்காவது தேசிய விருது கிடைச்சிருக்கணும்!'' என்று தொடர,

''ம்ம்ம்... அப்புறம்?'' என்று கிசுகிசுப்பான குரலில் கேட்டபடி மதி அவளிடம் நெருங்கி அமர, அந்த நெருக்கம் தந்த அவஸ்தை தாளாமல் கொஞ்சம் விலகி அமர்ந்த சம்யு,

''அழகனா இருக்கணும்! அட்லீஸ்ட், பெயரிலாவது அழகன் என்று இருக்கணும்!'' என்று அமர்த்தலாக சொல்ல முயல, அவள் விலகி அமர்ந்தும் விடாமல் நெருங்கி அமர்ந்த மதியின் ஸ்பரிசத்தில், அவள் குரல் காற்றாக மட்டுமே வெளிவர, அடுத்த கணம் அவள் மதியழகனின் இறுகிய அணைப்பில் இருந்தாள்.

முதலில் திகைத்தாலும், அந்த அணைப்பு தந்த இதத்தில், சம்யுக்தாவும் அவன் தோளில் முகம் புதைக்க,



இருவரும் தங்களது காதலை வார்த்தைகள் இன்றி பகிர்ந்து கொண்ட நிறைவில், அதன் சுகத்தை அனுபவித்தபடி அமைதியாகவே இருந்தனர்.

கொஞ்ச நேரம் கழித்து அவளை விடுவித்தவன், ''சாரி!'' என்று மெல்லியக் குரலில் சொல்ல, அதற்குள் தன்னிலைக்கு மீண்டிருந்த சம்யுவுக்கு, அவன் தன்னை அணைத்திருந்ததைச் சொல்கிறான் என்று புரிந்தது.

'ரொம்ப நல்லவன்டா நீ!' என்று மனதுக்குள் அவனைச் சீராட்டியபடி, ''எதுக்கு சாரி?'' என்றபோது, அவளது குரலில் குறும்பு கொப்பளித்தது.

அவள் தன்னை மனதுக்குள் கேலி செய்கிறாள் என்பதை உணர்ந்த மதி, ''ம்ம்ம்... ஹக் மட்டும் பண்ணிட்டு கிஸ் பண்ணாமல் விட்டதுக்கு!'' என்று விட்டு, அவள் முகம் பார்த்து குனிய,

''உதை விழும்!'' என்று அவனை ஒரு கையால் தள்ளி விட்டாள் சம்யுக்தா.

''தன் விருப்பத்தை வாய் விட்டு சொல்லக்கூட தைரியமில்லை! இப்போ மட்டும் பாரு!'' என்று செல்லக் கோபத்துடன் சொன்னவள், கார்க் கதவைத் திறந்து கொண்டு, இறங்கி வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

''ஹே! சம்யு! நில்லு!'' என்றபடி அவளோடு வந்து இணைந்தவன், ''கொஞ்சம் ஸ்டார்டிங் ட்ரபிள் ஸ்வீட்டி... அப்புறம் பாரு அய்யாவோட திறமையை!'' என்று தோரணையாக சொல்ல,

சட்டென்று அவன் புறம் திரும்பிய சம்யு, ''ஸ்வீட்டி!?'' என்று வினவ,

''ம்ம்ம்... நான் உனக்கு வைச்சிருக்க பெயர்! உன்னைப் பற்றி நினைச்சாலே, மனசுக்குள் ஒரு இனிமை

பரவும்! என் சர்க்கரைக் கட்டி! சுருக்கமா ஸ்வீட்டி!'' என்று புன்னகையுடன் மதி சொன்னதும், அவளது முகம் லேசாக சிவந்தது.

அவளது சிவந்த கன்னங்களில் முத்தமிடத் துடித்த மனதை, முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு அவளது கை விரல்களைத் தன் விரல்களோடு பிணைத்தபடி நடக்கத் துவங்கினான்.

ஒரு இடத்தில இருவரும் அமர்ந்தனர்.

''ஹே! சம்யு! கொஞ்ச நேரம் என்னை போட்டு வாட்டி எடுத்துட்ட தெரியுமா?'' என்று மதி குறைபட, சம்யு சிரித்தாள்.

''இல்லை மதி! நானும் உங்ககிட்ட இன்னைக்கு மனம் திறந்து பேசிடணும் என்றுதான் வந்தேன்! இருந்தாலும், ஒரு தயக்கம் இருந்திட்டே இருந்தது. உங்க மனசு புரிஞ்ச பிறகு, மனசு ரொம்ப லேசாயிடுச்சு! அதான், உங்ககிட்ட கொஞ்சம் விளையாடிப் பார்த்தேன்!'' என்று சொல்ல,

''ஹே! உனக்கெப்படி என் மனசு தெரிஞ்சது?'' என்று மதி ஆச்சர்யத்துடன் வினவினான்.

''நீங்கதான் சொன்னீங்க!'' என்று சம்யு சொன்னதும், ''நான் எப்போ சொன்னேன்!'' இன்னும் ஆச்சரியம் விலகாமல் மதி கேட்க, ''ப்ரிதிவிராஜன் வேஷத்தில வந்து நீங்கதான் சொன்னீங்க!'' என்ற சம்யு கண் சிமிட்டினாள்.

அவள் தனது ஓவியத்தைப் பார்த்து விட்டாள் என்பது புரிய, ''அடக்கள்ளி! பார்த்து விட்டாயா?'' என்று அவளைப் போலியாக முறைக்க, அதை கண்டு கொள்ளாமல், ''ம்ம்ம்... பின்னே! பார்க்கணும் என்றுதானே வைச்சிட்டுப் போனீங்க?'' என்று அவனை வம்பிழுத்தாள்.



அதன் பிறகு இருவரும், தங்களது மனதைத் திறந்து வெளிப்படையாக பேச, அந்த நாள், இருவருக்கும் மறக்க முடியாத இனிமையான நாளாக அமைந்தது.

## 7

மதியிடம் தன் காதலைப் பகிர்ந்து கொண்ட அன்றே, சம்யு தன பெற்றோரிடமும் விஷயத்தைச் சொல்ல, மதியின் அன்னையிடம் பேசியதில் இருந்து அவர்கள் குடும்பத்தின் மேல் நன்மதிப்பு ஏற்பட்டு இருந்ததால், ராஜேஸ்வரி சந்தோஷமே அடைந்தார்.

அகிலன், தமக்கையிடம் தனது வாழ்த்தைத் தெரிவித்தான்.

ராஜசேகருக்கு மட்டும் கொஞ்சம் குறையாக இருந்தது.

அவரது முகத்தையே ஆவலோடு சம்யு நோக்கியபடி இருக்க, ''உன் சந்தோஷம்தான் எங்களுக்கு முக்கியம் சம்யு! எதற்கும், நான் அவரைப் பற்றி விசாரிக்கிறேன்! அதன் பிறகு அவங்களை நம்ம வீட்டுக்கு அழைக்கலாம்!'' என்றார்.

அடுத்த நாள் டாக்டர். சாரங்கனிடம் இதைப் பற்றி அவர் பேச, ''அவர்கள் குடும்பம் ரொம்ப நல்ல குடும்பம் சேகர்! மதியும் ரொம்ப நல்ல பையன்! அவனை எனக்கு சின்ன வயதில் இருந்தே தெரியும்! ரொம்ப பொறுப்பான பையன்! நீ, உன் மகளை என் பேரனுக்கு கொடுத்திருந்தால் எவ்வளவு சந்தோஷப் படுவேனோ, அதே சந்தோசம் அவளை மதிக்குத் திருமணம் செய்து வைத்தாலும் கிடைக்கும்!'' என்று சாரங்கன் பெருந்தன்மையோடு சொல்லிவிட, ராஜசேகருக்கும் திருப்தி ஏற்பட்டது.

அதன் பிறகு மதியின் குடும்பம், சம்யுவை சம்பிரதாயமாக பெண் பார்க்க வந்தனர்.

வந்த கொஞ்ச நேரத்திலேயே, சம்யுவும் தாத்தாவும் கலகலப்பாகப் பேச, அவர்களைப் போலியாக முறைத்த வண்ணம், மதி அகிலனுடன் பேசத் தொடங்கினான்.

''சம்யு! மதிக்கு நான் கொடுத்த ஷாக் ட்ரீட்மெண்ட் தான், உன்கிட்ட காதல் சொல்ல வந்ததுக்கு காரணம்!'' என்று மதியைப் போட்டுக் கொடுத்தார்.

அகிலனுடன் பேசிக் கொண்டிருந்தாலும், சம்யு-தாத்தாவின் பக்கம் கவனம் வைத்திருந்த மதி, ''வேண்டாம் தாத்தா! இதுக்கு மேல் நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்!'' என்று அவரைக் கெஞ்ச,

''நீ ஏன்டா நாங்க ரெண்டு பேர் பேசிட்டு இருக்கும் போது, இடையில் வருகிறாய்?'' என்று அவனை மிரட்டி விட்டு, சம்யுவிடம் தன் பேச்சைத் தொடர, மதியைப் பார்த்து நமட்டு சிரிப்பு சிரித்தபடி சம்யுவும் அவருடன் பேசலானாள்.

இரு குடும்பத்தினருக்கும் பரஸ்பரம் மிகவும் பிடித்து விட, அந்த நாள் அனைவருக்கும் இனிமையான நாளாக அமைந்தது.

மதிக்கு திருமணம் செய்ய வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த காஞ்சனா, பெண் முடிவாகி விட்ட பிறகும், திருமணத்தில் அவசரம் காட்டாது இருக்க, மதி ஆச்சரியமடைந்தான்.

''என்னம்மா? போன மாசம் எனக்கு கல்யாணம் செய்யணும் என்று துடிச்சிட்டு இருந்தீங்க! இப்போ பெண் முடிவான பிறகும் அமைதியா இருக்கீங்களே?'' என்று அன்னையிடம் விசாரித்தான்.



''ம்ம்... நான் கல்யாணம் செஞ்சுக்கோன்னு சொல்லும்போது தள்ளிப் போட்டுகிட்டே வந்தாயில்லையா? அதான், இனிமேல் நீயா வந்து கல்யாணம் செஞ்சு வைங்கன்னு சொல்றபோதுதான் கல்யாணம் செய்யணும் என்று இருக்கேன்!'' என்று காஞ்சனா அவனைச் சீண்டினார்.

''பழிக்குப் பழியா? இதெல்லாம் ஒரு நல்ல அம்மாவுக்கு அழகா?'' என்று மதியழகன் வம்பிழுக்க,

''அப்படி இல்லை கண்ணா! போன மாசம் உன்னோட ஜாதகத்தை ஒரு நல்ல ஜோசியர்கிட்ட காண்பித்த போது, இன்னும் மூணு மாசத்துக்குப் பிறகுதான் கல்யாண யோகம் என்று சொன்னார். கல்யாண யோகம் வந்த இரண்டு மாசத்துக்குள்ளே கல்யாணம் நடக்கலைன்னா, அப்புறம் கல்யாணம் நடக்கிறது கேள்விக்குறியாகி விடும் என்று சொல்லி இருந்தார். நான் ரொம்ப பயந்தே போயிட்டேன்!'' என்ற அன்னையின் குரலில் இருந்த கலக்கம் மதியை நெகிழ்த்தியது.

ஜோசியம், ஜாதகத்தில் அதிக நம்பிக்கை இல்லை என்றாலும், அன்னையின் மனம் புரிந்து, மதி அன்னையை ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

''அதனால்தான் நான் கூட உன்னைக் கட்டாயப் படுத்தினேன். உனக்கு கூட என் மேல் வருத்தமா இருந்திருக்கும். இப்போ உனக்கும் பிடிச்ச மாதிரியே பெண் அமைஞ்சாச்சு! எனக்கு ரொம்ப சந்தோசம்!'' என்ற அன்னையின் குரலில் இருந்த உண்மையான மகிழ்ச்சி, அவனையும் தொற்றிக் கொண்டது.

''கவலைப் படாதே! இன்னும் ரெண்டு மாசம் கழிச்சு கண்டிப்பா கல்யாணம் செஞ்சு வைச்சிடறோம்!'' என்று சொல்லி விட்டு சிரித்தார் காஞ்சனா.

''எனக்கொன்னும் அவசரம் இல்லைம்மா... நீங்க தான் ரொம்ப ஆசையா இருந்தீங்களேன்னு கேட்டேன்!'' என்று அவன் விட்டுக் கொடுக்காமல் பேச, ''சரிப்பா! நான் நம்பிட்டேன்!'' என்று விட்டு சிரிக்க, மதியின் அவரோடு இணைந்து நகைத்தான்.

* * *

இரு வீட்டாரின் சம்மதத்துக்குப் பிறகு, மதியும் சம்யுவும் தினமும் சந்திப்பது வழக்கமாயிற்று.

''முதல் நாள் என்னைப் பார்த்ததும் உங்களுக்கு எதுவும் தோணலையா?''

இந்த ஒரு மாதத்தில், மதியிடம் கிட்டத்தட்ட ஆயிரம் முறையாவது சம்யு இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பாள்.

''ஸ்வீட்டி! உனக்கு கஷ்டமா இருந்தாலும், நான் உண்மையைத்தான் சொல்லி ஆகணும்! எனக்கு அப்போ எதுவுமே தோணலை! என்னை பேட்டி எடுக்க வந்திருக்கும் ஒரு நிருபர், என்று மட்டும்தான் இருந்தது!''

எப்போதும் சொல்லும் பதிலையே மதி இன்றும் சொல்ல, ''சும்மாவாவது எனக்குப் பிடிச்ச மாதிரி சொல்லலாம் இல்லை? பெரிய உண்மை விளம்பி!'' என்று சம்யு எப்போதும் போல அலுத்துக் கொள்ள,

''பொய் சொல்லித்தான் உன்னைத் திருப்தி படுத்தணுமா? இப்போ முழுக்க முழுக்க உன் மேல் பைத்தியமா இருக்கேனே! அதை நினைச்சு திருப்தி படேன்!'' என்று மதியும் வம்பிழுத்தான்.

''சரி! ரொம்ப நாளா கேட்கணும் என்று இருந்தேன்! உங்களுக்கு டயரி எழுதற பழக்கம் இருக்கில்லை? என்னைப் பற்றி என்ன எழுதி வைச்சிருக்கீங்கன்னு பார்க்க ஆவலா இருக்கு! கல்யாணத்துக்கு அப்புறம்,



உங்க டயரியை படிக்க எனக்கு நீங்க பெர்மிஷன் தரணும்!'' என்று அனுமதி கேட்டவளின் குரலில் வேண்டுகோள் இல்லாமல் கட்டளையே இருந்தது.

அவளது அனுமதி கோரும் அழகு, மதியை சிரிக்க வைத்தது.

எப்போதும் மயக்கும் அவனது சிரிப்பு, இப்போதும் மயக்கினாலும், ''என்ன ஒரு மாதிரி சிரிக்கறீங்க?'' என்று வினவினாள்.

''இல்லைடா! முதல் நாள் ஒரு நிருபர் பேட்டி எடுக்க வந்தாங்க என்றுதான் உன்னைப் பற்றி நான் டயரில எழுதி இருக்கேன்! எப்போ நீ என் மனசில வந்தாயோ, அதில் இருந்து உன்னைப் பற்றி டயரில எழுதறது இல்லை!''

மதியின் பதிலில் அதிர்ச்சி அடைந்த சம்யு, ''ஏன்? ஏன் எழுதறதில்லை! என்னைப் பற்றி எழுதற அளவுக்கு நான் முக்கியம் இல்லையா?'' என்று அவனுடன் சண்டைக்கு வந்தாள்.

அவள் கையைப் பற்றி தன் கையில் வைத்துக் கொண்ட மதியழகன், ''அப்படி இல்லைடா! என்னோட டயரில சந்தோசம், வருத்தம் தர எல்லா நிகழ்வுகளைப் பற்றியும் எழுதுவேன், அதில பத்தோட பதினொன்னா உன்னைப் பற்றி எழுத மனசு வராமல்தான் எழுதலை!'' என்று சொல்லி முடிக்கும் முன்பே,

''அப்புறம் எப்படி நீங்க என்னைப் பற்றி என்ன என்னவெல்லாம் நினைச்சீங்கன்னு தெரிஞ்சிக்கறது?'' என்று சம்யு சிணுங்க, அவள் அருகில் நெருங்கி அமர்ந்த மதி.

''என் இதயம் தான் நான் உன்னைப் பற்றி எழுதி வைச்சிருக்கிற டயரி! அது எப்பவும், நீ படிப்பதற்காக

திறந்தே இருக்கும் ஸ்வீட்டி!'' என்று குழைவுடன் சொல்ல, அவனது நெருக்கத்திலும், குரலிலும் சம்யு மயங்கி நின்றாலும், சம்யு அந்த விஷயத்தை அத்தோடு விட்டு விடவில்லை.

அடுத்த நாளே, இதய வடிவில் இருந்த இளம் சிவப்பு நிற டயரியை மதிக்கு பரிசளித்தாள், ''இது என்னைப் பற்றி மட்டும் நீங்க எழுதறதுக்காக!'' என்றபடி!

''ஹே! இதென்ன? நான்தான் சொன்னேனே? உன்னைப் பற்றி இங்கே எழுதி வைச்சிருக்கேன் என்று!'' என்று நெஞ்சைத் தொட்டுக் காட்ட,

''அது இருக்கட்டும்! அத்தோடு இதுவும் இருக்கட்டும்!'' என்று சம்யு கொஞ்சலுடன் சொன்ன பிறகு, மதியால் அவளது கோரிக்கையைத் தட்ட முடியவில்லை!

அடுத்த நாளில் இருந்து, மதியின் அடுத்த படத்துக்கான வேலைகள் தொடங்கி விட, இருவரும் சந்திப்பது குறைந்து போனது என்றாலும், அவர்களது கைப்பேசி உரையாடல் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

மூன்று நாளுக்குப் பிறகு, இருவரும் அன்று சந்தித்த போது, மதியின் முகம் இயல்பாக இல்லை!

''என்ன ஆச்சு என் புன்னகை மன்னனுக்கு?'' என்று சம்யு விசாரிக்க, மதி ஒன்றுமில்லை என்பதாகத் தலையசைத்தான்.

''அதான் உங்க முகமே சொல்லுதே? என்ன விஷயம் மதி! சொல்லுங்க! எனக்கு நீங்க இப்படி இருக்கறது கவலையா இருக்கு!'' என்று அக்கறையுடன் சம்யு துருவ,

''சாரிடா! மூணு நாளுக்குப் பிறகு பார்க்கிறோம்! உன்னையும் மூட் அவுட் ஆக்கிட்டேன் போல! சாரி!'' என்று வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் வேறு



விஷயம் பேசத் துவங்க, சம்யு அவனைக் கை நீட்டி நிறுத்தினாள்.

''மதி! ப்ளீஸ்! என்ன விஷயம் என்று சொல்லுங்க! உங்க கூட சந்தோஷமா பேசத்தான் நானும் வந்தேன்! அதுக்காக உங்க மன வருத்தங்களை என் கூட பகிர்ந்து கொள்ள நீங்க தயங்க வேண்டியதில்லை!'' என்று அவன் தோளை ஆறுதலாகப் பற்றிக் கொண்டு வினவினாள்.

''என் அசிஸ்டெண்ட் தாமுவைப் பற்றி சொல்லி இருக்கிறேன் இல்லை சம்யு?'' என்ற மதியின் கேள்விக்கு,

''ம்ம்ம்... நல்ல திறமை இருந்தாலும், இன்னும் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயம் இருக்கு என்று சொல்வீங்க! அதனால்தானே, டைரக்ட் செய்ய வந்த வாய்ப்பை போன தரம் சிவாவுக்கு சிபாரிசு செஞ்சீங்க!'' என்றாள் சம்யு.

''ஆமாம்! அவனுடைய முதல் படம் நல்லபடியா வரணும் என்றுதான் அப்படிச் செய்தேன்! அதிலேயே அவனுக்கு வருத்தம்! அதனால் ஒரு மாதிரி நடக்க ஆரம்பித்தான்! நானும் வருத்தத்தில் அப்படி இருக்கான்னு விட்டுட்டேன்! அப்புறம் நான் செஞ்சது நன்மைக்குதான் என்று புரியும் என்று நினைத்தேன்! ஆனால்...'' என்று நிறுத்திய மதியின் முகத்தில் கோப ரேகைகளைக் கண்ட சம்யு.

''என்ன ஆச்சு?'' என்று கவலையுடன் வினவினாள்.

''ரொம்ப கேவலமா நடந்துகிட்டான் சம்யு. வாய்ப்பு கேட்டு வந்த சில புதுமுக நடிகைகள் கிட்ட...'' என்பதற்கு மேல் எதுவும் பேசாமல் அவன் இறுகிப் போய்

அமர்ந்திருக்க, சம்யு அவனது கையைப் பற்றி வருடிக் கொடுத்தாள்.

அந்த வருடலில் இதம் கண்டவன், சிறிது நேரத்துக்குப் பிறகு பேசத் தொடங்கினான்.

''விஷயம் தெரிஞ்சு விசாரிச்சால், அவன் செஞ்சது தப்பே இல்லை என்கிற மாதிரி பேசினான்! ராஸ்கல்! ரெண்டு மாசம் சம்பளம் கொடுத்து போடான்னு அனுப்பிட்டேன்!'' என்றபோது, மதியின் முகம் சிவந்து போயிருந்தது.

சிறிது நேர அமைதிக்குப் பின் சம்யு, அவனை நெருங்கி அமர்ந்தவாறே, ''கூல் டவுன் மதி! அதான் அவனை அப்புறப்படுத்தியாச்சு இல்லை! அப்புறம் என்ன?'' என்று ஆறுதலாகப பேச,

''இல்லைடா! இந்த மாதிரி விஷயங்கள் கேள்விப்படும்போது எனக்கு பயங்கரமா கோபம் வரும்! சினிமாவில் நடிக்க வந்ததாலேயே அவங்களை இப்படி கீழ்த்தரமா நடத்தலாமா என்று! இப்போ என்னுடைய டீமில் ஒருத்தனே... ச்சே!'' என்று அவன் நொந்து கொள்ள, அவன் வருத்தத்தைப் பார்க்க முடியாமல் சம்யு பேச்சை மாற்றினாள்.

''சரி! அது முடிஞ்சு போச்சு, விட்டுடுங்க! இப்போ உங்களுக்கு சந்தோஷமான விஷயம் ஒண்ணு சொல்லப் போறேன்! அத்தை இன்னைக்கு எங்க வீட்டுக்கு கால் செஞ்சாங்க! அடுத்த வாரமே எனக்கும் உங்களுக்கும் நிச்சயம் செய்யப் போறாங்களாம்!'' என்று கண்களில் மின்னலுடன் சொல்ல,

''அதெப்படி! என்னைக் கேட்காமல் அம்மா இப்படி முடிவு செஞ்சாங்க?'' என்று மதி சின்னக் கோபத்துடன் சொல்ல, சம்யு குழம்பினாள்.



''ஓஹோ! உங்களைக் கேட்டிருந்தால் அடுத்த வாரம் நிச்சயம் வேண்டாம் என்று சொல்லி இருப்பீங்களோ?'' எரிச்சலுடன் அவளது கேள்வி வர, மதி வாய் விட்டுச் சிரித்தான்.

அப்போதும் முகம் திருப்பியபடி சம்யு அமர்ந்திருக்க, ''ஹே! என் சக்கரைக் கட்டி! கரெக்டா சொல்லி விட்டாயே! ஆமாம், அடுத்த வாரம் நிச்சயம் வேண்டாம் என்றுதான் சொல்லி இருப்பேன்!'' என்றான் மதி புன்னகையுடன்.

கோபத்துடன் அவன் புறம் திரும்பிய சம்யு, அவனை முறைக்க, ''ஹையோ! எனக்கு பயமா இருக்கே! விட்டால், மேடம் கண்ணாலேயே எரிச்சிடுவீங்க போலிருக்கே!'' என்றபடி அவளைத் தன் புறம் இழுத்தவன்,

''நிச்சயம் எல்லாம் எதுக்கு? நேரா அடுத்த வாரம், கல்யாணத்துக்கே ஏற்பாடு செஞ்சுடுங்க என்று சொல்லி இருப்பேனடா ஸ்வீட்டி!'' என்று அவள் காதோரமாய்ச் சொல்லி விட்டு லேசாக அவளை அணைத்துக் கொள்ள, சம்யுவின் இறுக்கம் தளர்ந்தது.

''போடா! கொஞ்ச நேரமே ஆனாலும் டென்ஷன் கிளப்பிட்டு!'' என்று எரிச்சலுடன் அவள் விலக முயல, அவனது லேசான அணைப்பு மேலும் இறுகியது.

''விடுடா! சொல்றேன் இல்லை?'' என்று மிரட்டியவள், அவன் விலகவில்லை என்றதும், ''விடுங்க மதி!'' என்று அவள் கெஞ்ச, அவளை விடுவித்தவன், அவளது சிவந்த முகத்தைக் கண்டு சிரித்தான்.

''மேடம், அப்படி முறைச்சீங்க?'' என்று வம்பிழுத்து விட்டு, ''உண்மைதான் சம்யு! எனக்கு உன்னை உடனே கல்யாணம் செஞ்சுகிட்டு நம்ம வீட்டுக்கு கூட்டிட்டுப்

போகணும் போல இருக்கு!'' என்று ஏக்கத்துடன் சொல்ல,

'அம்மா, கல்யாணத்தை ஒரு மாசம் தள்ளிப் போடறதும் நல்லதுதான் சம்யு! நமக்கும் கல்யாணத்துக்கு முன்னாடி இந்தக் காதல் அனுபவத்தை என்ஜாய் செய்ய வாய்ப்பு கிடைக்குதில்லை?' என்று போன வாரம் சொன்னவன், இப்போது இப்படிச் சொல்லவும், ''என்ன திடீர்னு?'' என்று ஆச்சரியத்துடன் சம்யு வினவினாள்.

''நேற்று எங்க தாத்தாவோட நண்பருக்கு எண்பதாம் கல்யாணம்! நாங்க எல்லாரும் போய் இருந்தோம்! அந்த தாத்தா, பாட்டி ரெண்டு பேரும் இந்த வயசுக்கும் எவ்வளவு அன்னியோன்யமா இருந்தாங்க தெரியுமா? என்னமோ, அதைப் பார்த்ததும், நமக்கும் உடனே கல்யாணம் நடந்தால் நல்லா இருக்கும்னு தோணுச்சு!'' என்றவன் தனது ஓவியப் புத்தகத்தை அவளது கையில் கொடுக்க, கடைசியாய் அவன் வரைந்திருந்த ஓவியத்தைக் கண்டதும், சம்யுவின் மனம் நெகிழ்ந்தது.

மதி, சம்யுவின் ஜாடையில் இரு முதியவர்கள் இணைந்திருந்த கைகளோடு, முகத்தில் பெருமிதத்துடன் தங்களது பிள்ளைகளையும் பேரக் குழந்தைகளையும் பார்த்த வண்ணம் அமர்ந்திருப்பதைப் போல, மதி வரைந்திருந்தான்.

அந்த ஓவியம் அவனது அன்பைப் பறைசாற்ற, தானாகவே மதியின் அருகில் நெருங்கி அமர்ந்த சம்யு, அவனது கன்னத்தில் தன் இதழ்களைப் பதித்தாள்.

அவளது முதல் முத்தத்தில் தன்னைத் தொலைத்த மதி, அவளது கலங்கிய விழிகளைக் கண்டதும் அதை மாற்றும் முயற்சியாக, ''ஹே! நான் ஏற்கனவே கல்யாண



மூடில் இருக்கேன்! நீ வேற இப்படி எல்லாம் செய்யாதே! கொஞ்சம் தள்ளியே உட்காரு!'' என்றபடி தள்ளி அமர, சம்யு அவனை இடித்துக் கொண்டு அமர்ந்தாள்.

அவனது தோளில் சாய்ந்தவள், ''டேய் அழகா!'' என்று கிசுகிசுப்பான குரலில் அவனை அழைக்க, அவளது அந்தப் பிரத்யேக அழைப்பில் மனம் குளிர்ந்து, ''என்னடா ஸ்வீட்டி?'' என்று குழைந்தான் மதி.

''என்னை ஏன்டா இவ்வளவு லவ் பண்றே?'' என்று காதலுடன் வினவ,

அவளது தோளில் தனது கையைப் போட்டு இறுக்கியபடி, ''என்னோட சக்கரை கட்டி, என்னை இதை விட அதிகமா லவ் பண்றா! அதான்!'' என்ற மதியின் குரலிலும் காதல் கரை புரண்டோடியது.

''உங்களைப் பார்த்து ரெண்டு மாசம்தான் ஆகுது என்று என்னால் நம்பவே முடியலை, மதி! என்னமோ ஜென்ம ஜென்மமாய் பழகின மாதிரி இருக்கு! எல்லா காதலர்களுக்கும் இப்படித் தான் தோணுமா என்று தெரியலை! ஆனால் நான் சொல்றது நிஜம் மதி!'' என்று சம்யு ஆத்மார்த்தமாகச் சொன்னதை மதியாலும் உணர முடிந்தது. அவனுக்குமே அப்படிப்பட்ட உணர்வுதானே எழுகிறது!

அவளை மென்மையாகத் தன் பிடிக்குள் வைத்திருந்தவன், குனிந்து அவள் உச்சியில் இதழ் பதித்து அவள் சொல்வதை ஆமோதித்தான்.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு, அவனிடம் இருந்து மெல்ல விலகி அமர்ந்தவள், ''கல்யாணம்னா சந்தோசம் மட்டும்தான்னு நினைக்காதே! நான் சரியான சண்டைக்காரி! தினமும் ஒரு காரணத்தோடு சண்டை போடுவேன்! காரணம் இல்லைன்னாலும் சண்டை போடுவேன்!''

என்று [illegible] உருட்டி எல்லிக்க, மதி வாய் விட்டு சிரித்தாள்.

"நீ என் [illegible] கட்டியது நினைவிலேயா! இப்போ நான் தெரிந்து [illegible]! நீ எவ்வளவு வேணு என்றாலும் [illegible]. போடலாம் சப்பு. நீ எவ்வளவு [illegible]. போட்டாலும், நான் அதை ரசிப்பேன்!" என்று [illegible] சொன்னாள்.

இருவரும் இணைந்து நடிக்க, அடுத்த படத்தின் நடிகைகளைப் பற்றி பேச வந்தது.

"இந்த எப்படி மதி, எல்லாருக்கும் எப்படி நடிக்கனும் என்று சொல்லிக் கொடுப்பீங்களா?" என்று சப்புவின் கேள்விக்கு,

"இல்லைடா! அந்த காட்சிக்கு என்ன தேவையோ அதை விளக்கி சொல்லுவேன். அப்படியும் நான் எதிர்பார்த்தது வரவில்லை என்றால்தான் நடிச்சு காண்பிப்பேன்!" என்றான் மதி.

"காதல் காட்சிகளைக் கூட நடித்துக் காட்டுவது உண்டா?" என்றாள்.

"ம்ம்... சில நேரம்!" என்று அவன் பதில் சொன்னது.

"ம்ம்... அப்போ நடிகைகள் கிட்ட தொட்டு கிட்டு நெருக்கமா வேண்டி இருக்கும் இல்லை? அப்போ எல்லாம் எப்படி இருக்கும்?" என்று விளையாட்டாய் கிண்டினாள்.

அவனிடம் இருந்து கிண்டலாக பதில் வரும் என்று அவள் எண்ணி இருக்க, மதியின் முகம் சீரியஸானது.

"எப்படி இருக்கும் என்று சொல்றதைவிட, எப்படி இருக்காதுன்னு சொல்லட்டுமா?" என்றவன், அவளது



[illegible] பற்றி தனது கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டு,

"உன்னுடைய இந்த நெருக்கம், இந்த ஸ்பரிசம், என் மனதில் ஒரு நிறைவையும், இனிமையையும் தருது சப்பு! இந்த மாதிரி நான் வேறு எப்பவும் உணர்ந்த தில்லை!" என்று ஆழமான குரலில் மொழிந்தான்.

அவனது பதில் நெகிழ்ந்த சப்புக்கோ, அவன் முகம் கொஞ்சம் இறுகி இருந்ததைக் கண்டதும், "ஹேய்! மதி! நான் சும்மா உங்ககிட்ட விளையாட்டுக்கு கேட்டேன்! சாரி!" என்று சொல்ல,

"இல்லை சப்பு! நான் ஏற்கனவே சொன்னதுதான். நீ கண்டிட்டு சண்டை போட்டால் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியும். பட், எந்த சூழ்நிலையிலும் நீ என்னை சந்தேகப்படுவதைத் தாங்கிக் கொள்ள முடியாது! நீ என் மேல் சந்தேகப்படவும் கூடாது!" என்று அழுத்தமான குரலில் சொல்ல, சப்பு திகைத்தாள்.

அவள் ஏதோ விளையாட்டாய்க் கேட்கப் போய், அது மதியை வருத்தப்படுத்தி விட்டதோ என்று பதறியவள், "நான் என்டா என் அழகனைச் சந்தேகப் படப் போறேன்!" என்று கொஞ்சலாக சொல்லி விட்டு, அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்.

அவன் அமைதியாக இருப்பதைக் கண்டவள், "சாரி மதி! நான் உண்மையிலேயே விளையாட்டுக்குத் தான் கேட்டேன்! உங்களை கஷ்டப்படுத்தி இருந்தால், சாரி, வெரி சாரி!" என்று உள்ளார்ந்த குரலில் மன்னிப்பு வேண்டியும், அவன் அமைதியாக இருக்க, நிமிர்ந்து அவனை நோக்கியவள், அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும், "ஹேய்! என்ன சிரிப்பு?" என்று கேட்டாள்.

''இல்லை... நான் சீரியஸ் ஆனதும், நீயா வந்து என் மேல் சாய்ந்து கொண்டாய்! அதை கொஞ்ச நேரம் நீட்டிக்கலாம்னு நினைச்சேன்!'' என்று சிரிக்க, சட்டென்று அவன் தோளில் சாய்த்து இருந்த தன் முகத்தை நிமிர்த்திய சம்யு, ''திருடா!'' என்றபடி அவன் தோளிலேயே இரண்டு அடி வைத்தாள்.

''நான் மாய்ந்து மாய்ந்து சாரி கேட்டால், சிரிச்சிட்டு இருக்கியா நீ?'' என்றபடி, அவளது தாக்குதல்களைத் தொடர, மதி அவளது கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''சம்யு! நீ சாரி! கேட்க வேண்டியதில்லை! ஆனால், நான் என் மனைவியா வரவகிட்ட எதிர்பார்க்கிற முக்கியமான விஷயம் அது ஒண்ணுதான்! அதைத் தான் சொன்னேன்!'' என்று சீரியசான குரலில் சொன்னவன்,

கைகளை விடுவித்துக் கொண்டு அவனை மறுபடி அடிக்க வந்தவளை, ''போதுண்டா ஸ்வீட்டி! இதோட விட்டுடு! உன் அழகன் பாவம் இல்லை?'' என்று கெஞ்ச, சம்யுவும் புன்னகையோடு ''ரொம்ப கெஞ்சறீங்க என்று விடறேன்!'' என்று பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்தாள்.

''நீ சொல்லு ஸ்வீட்டி! எனக்கிருக்கிற மாதிரி உனக்கும் ஏதாவது எதிர்பார்ப்பு இருக்கும் இல்லை?'' என்று மதி விசாரிக்க,

''எதிர்பார்ப்பு என்று சொல்ல முடியாது! ஆனால், எனக்கு ஒரு எண்ணம் உண்டு! கல்யாணம் என்பது ஒரு அழகான அமைப்பு! அதை சின்ன சின்ன விஷயங்களுக்காக உடைத்து விடக் கூடாது! எவ்வளவு சண்டை போட்டாலும், சேர்ந்தே இருக்கணும் என்பது மட்டும் தான் என்னோட ஆசை!''



தன் எண்ணத்தைப் பகிர்ந்தபடி, அவனது தோளில் சாய்ந்து கொண்டு, ''ஒரு நாளும் உன்னை மறவாத இனிதான வரம் வேண்டும்! உடலாலும் உயிர் உணர்வாலும் பிரியாத வரம் வேண்டும்!'' என்று நெகிழ்ந்த குரலில் பாட, காதலுடன் அவளை அணைத்துக் கொண்டான் அவளது ஆருயிர்க் காதலன்.

## 8

சம்யு உற்சாகமான மனநிலையில் இருந்தாள்.

இன்னும் நான்கு நாட்களில் நிச்சயம், அடுத்த இருபது நாட்களில் திருமணம் என்று உறுதி செய்யப்பட்டிருந்தது அவளது உற்சாகத்தை அதிகப்படுத்தி இருந்தது.

கண்ணில் கனவுடன் வளைய வந்த அக்காவைக் கேலி செய்தபடி இருந்தான் அகிலன்.

அரைத்த மருதாணி இலையை, அவள், தனது கைகளில் அணிந்திருக்க, ''என்னக்கா இது? எப்பவும் கோன் மருதாணி வைச்சு அழகா டிசைன் போடுவே? இப்போ என்ன இது பழைய மாடல்ல?'' என்று அகிலன் விசாரித்தான்.

தம்பியின் கேள்வியில், சம்யுக்கு இரண்டு நாளைக்கு முன்னர் மதி சொன்னது நினைவுக்கு வந்தது.

நிச்சயத்துக்கு புது டிசைனில் மெஹந்தி போடவென்று, சம்யு மெஹந்தி புத்தகம் வாங்கி இருந்தாள். அதைப் பார்த்த மதி, ''என்ன இது?'' என்று விசாரிக்க, சம்யு, ''நம்ம நிச்சயத்துக்கு மெஹந்தி போடறதுக்கு, டிசைன் பார்க்க வாங்கினேன்!'' என்றாள்.

அவள் அப்படிச் சொன்னதும் சற்று தயங்கிய மதி, "வந்து... மருதாணி இலை அரைச்சுப் போட மாட்டாயா?" என்றதும்,

"போடுவேன் எப்பவாவது! அம்மா உடம்பு குளிர்ச்சிக்கு நல்லது என்று சொல்லிப் போடச் சொல்லுவாங்க. பட் அதுல இது மாதிரி டிசைன் வராது மதி!" என்றவள், அவன் முகம் லேசாக வாடியதைக் கண்டு, "என்ன விஷயம்?" என்று விசாரித்தாள்.

அவன் "ஒன்னுமில்லை!" என்றதும், "ஹே! அதான் புன்னகை மன்னன் முகம் வாடிப் போகுதே! அப்புறம் என்ன ஒன்னுமில்லை? ம்? சொல்லுங்கப்பா?" என்று வற்புறுத்த,

"எனக்கு மருதாணி இலையை அரைச்சு வைக்கிறது ரொம்பப் பிடிக்கும் சம்யு! அம்மா வைத்துக் கொள்ளும் போது, சின்ன வயசுல எனக்கும் கையில் ஒரு வட்டம் போட்டு விடுவாங்க! அந்த வாசம் ரொம்ப நல்லா இருக்கும்! அது, இந்த கெமிக்கல் கலந்த மருதாணியில் இருக்காதில்லை?" என்று தயக்கத்துடன் சொல்ல,

"ஹய்யோ! இதைச் சொல்லத் தான் இவ்வளவு தயக்கமா? உங்களுக்கு அதுதான் பிடிக்கும்னா அதையே போட்டுக்கறேன்! சரியா?" என்றாள் சம்யு.

"இல்லை சம்யு! எனக்காக நீ உனக்குப் பிடிச்சதை மாற்றிக்க வேண்டாம்!" என்று அவசரமாக மதி சொல்ல,

"இங்கே பாருங்க மதி! ஒருத்தருக்காக இன்னொருத்தர் முழுசா மாறணும் என்று நானும் நினைக்கலை! பட்! இந்த மாதிரி சின்ன சின்ன மாற்றங்கள், பெரிய பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கும்! எனக்கும் அந்த மாதிரி வைத்துக் கொள்ளப் பிடிக்கும்னு சொன்னேனே!" என்று இலகுவாக முடித்தாள் சம்யு.



அப்போது மதி அவளைப் பார்த்த பார்வை, உடனே மருதாணி போட்டுக் கொண்டு வந்து அவன் முன் நிற்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது.

"ஹே! சம்மு! உன்கிட்ட இருந்து இப்போவெல்லாம் ஒரு பதில் வாங்கணும்னா அரை நாள் காத்திருக்கணும் போலிருக்கு!" என்று அகிலன் உலுக்கிய பிறகே சம்யு நடப்புக்கு வந்தாள்.

"ஹான்! என்ன கேட்டே?" என்று சம்யு வினவ,

"ஒன்னுமில்லை தாயே! நல்லா இருக்கியான்னு கேட்டேன்!" என்ற அகிலன் அவளை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டு செல்ல, சம்யு மதியைப் பார்க்க கிளம்பினாள்.

மதி எப்போதும் சந்திக்கும் இடத்தில் காரை நிறுத்தியதும், "மதி, கண்ணை மூடுங்க!" என்றாள் சம்யு.

"ஏன்டா?" என்ற மதியிடம், "எல்லாம் விளக்கி சொன்னால்தான் செய்வீங்களா? கண்ணை மூடுங்க என்று சொல்றேன் இல்லை?" என்று சிணுங்கினாள் அவள்.

"ஒகே! ஒகே!" என்றபடி மதி கண்களை மூட, அவன் முகத்தருகே தன் கைகளை வைத்தாள்.

மருதாணியின் வாசம் மூக்கைத் துளைக்க, மெல்ல கண் திறந்த மதி, "ஹே! ஸ்வீட்டி? அதுக்குள்ளே போட்டுகிட்டாயா? ரொம்ப அழகா இருக்கு!" என்று கண்கள் மலரச் சொல்லி விட்டு, மீண்டும் அவளது கையைப் பற்றி நிதானமாக வாசம் பிடித்து, சம்யுவையே காதலுடன் பார்த்த வண்ணம், அவளது உள்ளங்கையில் தன் இதழ்களைப் பதித்தான்.

அவனது முத்தம் சிலிர்ப்பூட்டினாலும், "அதானே! சந்துல சிந்து பாடிடுவீங்களே!" என்றபடி சம்யு கையை இழுத்துக் கொண்டாள்.

மதி சிரித்தபடி, "நிச்சயத்துக்கு இன்னும் நாலு நாள் இருக்கே ஸ்வீட்டி! இப்பவே வைத்துக் கொண்டாயா?" என்று கேட்டதும்,

"ரெண்டு நாள் முன்னாடி நீங்க சொன்னபோது, உடனே வைச்சிட்டு வந்து உங்ககிட்ட காண்பிக்கணும் போல இருந்தது. இதைப் பார்க்கும்போது உங்கள் கண்ணில தெரியற சந்தோஷத்தைப் பார்க்கணும் என்றுதான் இப்பவே வைச்சுக்கிட்டேன்!" என்று அவனது தோளில் சாய்ந்தபடி அவள் சொல்ல,

"தேங்க்ஸ்டா ஸ்வீட்டி!" என்றான் மதி நெகிழ்ந்த குரலில்.

"தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம்! நான் எதிர்பார்த்தது எனக்கு கிடைச்சிருச்சு!" என்று சம்யு குழைவாகச் சொல்ல,

"நான் கொடுத்த முத்தத்தைச் சொல்றாயா?" என்று கண் சிமிட்டி மதி வினவ,

"உங்களை..." முறைக்க முயன்று முடியாமல் சிரித்த சம்யு, அவனது தோளில் தனது சிவந்த முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

* * *

இந்த இரண்டு மாதங்களில், இருவரது குடும்பங்களும், அடிக்கடி சந்திப்பதும், சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்வதுமாக ஒரு அழகான உறவு ஏற்பட்டிருந்தது.

அன்பழகன், மதிக்கு போலவே சம்யுவுக்கும் சிறந்த நண்பர் ஆகிப் போனார்.

"இந்த தாத்தா பக்கத்தில் இருந்தால், நீ என்னையே மறந்து விடுகிறாய்!" என்று மதி அடிக்கடி விளையாட்டாய் புலம்புவதுண்டு.



திருமணத்துக்குப் பிறகு அவள் வேலையைத் தொடர்வதில், மதியழகன் வீட்டினருக்கும் விருப்பம் இருந்தாலும், முழு நேர வேலைக்குப் போக சம்யுவுக்கு விருப்பமில்லை.

அதற்காகத் தான் விரும்பித் தேர்ந்தெடுத்த வேலையை விடவும் மனமில்லை என்பதால், ப்ரீலான்சர் நிருபராக வேலை செய்யலாம் என்று முடிவெடுத்திருந்தாள். மதிக்கும் அவளது முடிவுக்குத் துணையாக இருந்தான்.

இன்று சந்திக்கலாம் என்று சொல்லி இருந்த மதி, கடைசி நிமிடத்தில் வேலை இருப்பதாகச் சொல்லி மறுத்து விட்டான்.

இரவு ஒன்பது மணி ஆனதும், மதிக்கு போன் செய்யலாம் என்றழைத்த சம்யு. அழைப்பு எடுக்கப்படாமல் இருந்ததும், சோர்வுடன் போனை வைத்துவிட்டு உறங்க முயற்சி செய்தாள்.

இந்த இரண்டு மாதங்களாக, மதியை மாலை நேரத்தில் சந்தித்தாலுமே, இரவில் அவனுடன் போனில் பேசாமல் அவள் உறங்கவில்லை.

தன் அழைப்பைப் பார்த்து விட்டு, அவனே அழைப்பான் என்ற நம்பிக்கை இருந்ததால், உறக்கமும் வரவில்லை.

புரண்டு புரண்டு அவள் படுத்துக் கொண்டிருந்த நேரத்தில், அவளது கைப்பேசி அழைத்தது.

"மதியாகத்தான் இருக்கும்!" என்று உற்சாகத்துடன் போனை எடுத்த சம்யுவுக்குத் தெரியாத எண்ணில் இருந்து வந்து அழைப்பு, ஆச்சரியத்தைக் கொடுத்தது.

'யாராக இருக்கும்?' என்று எண்ணியபடி அவள் அழைப்பை எடுக்க, "ஹலோ? சம்யுக்தாதானே?" என்று

இருந்து கேள்வி கட்டைக் குரலில் மறுமுனையில் வந்தது.

''ஆமாம்! நீங்க யாரு?'' என்று சம்யுவின் கேள்விக்குப் பதிலாக, ''நான் யார் என்பது முக்கியமில்லை! நான் சொல்லப் போகிற விஷயம்தான் முக்கியம்!'' என்று அலட்சியமாக பதில் வந்தது.

''எதுவா இருந்தாலும் நீங்க யார் என்று முதலில் சொல்லிட்டு, அப்புறம் விஷயத்தைச் சொல்லுங்க!'' என்ற சம்யுவின் அழுத்தமான வார்த்தைகளைக் கண்டு கொள்ளாமல்,

''மேடம்! இது உங்க வாழ்க்கையையே பாதிக்கக் கூடிய விஷயம்! இன்னும் இரண்டு நாட்களில் உங்க ளோட நிச்சயம் வைத்துக் கொண்டு, இங்கே மதியழகன் பட டிஸ்கஷன் என்ற பெயரில் பெண்களோடு...'' என்று சொல்லிக் கொண்டு வந்தவனை, சம்யுவின், ''ஷட் அப்!'' என்ற ஆத்திரக் குரல் தடுத்து நிறுத்தியது.

ஆத்திரத்துடன் சம்யு அழைப்பைத் துண்டிக்க, அடுத்த நொடியே கைப்பேசி மீண்டும் அலறியது.

சம்யு, அழைப்பை எடுக்காமலே விட, மீண்டும் அழைப்பு வந்தது.

ஒரு முடிவுடன் அழைப்பை எடுத்தவள், ''யாருடா நீ? பேர் கூட சொல்ல முடியாத கோழை! நீ சொல்றதை நான் நம்புவேன்னு கனவு காணறியா? மரியாதையா போனை வை! இதுக்கு மேல போன் செஞ்சே, போலீஸ்ல கம்ப் ளைண்ட் கொடுப்பேன்!'' என்று எரிச்சலுடன் சொன் னதும்,

''மேடம்! நான் பேர் சொல்லலை என்பதற்காக நான் சொன்னது உண்மை இல்லை என்று ஆகிடாது. நீங்களே,



ஹோட்டல் பாண்டியனுக்கு வந்து பாருங்க! நான் சொன் னது உண்மை என்று புரியும்!'' என்று அவன் திமிராகச் சொல்ல, சம்யுவின் பொறுமை பறந்தது.

''இங்கே பாருடா! எனக்கு, என் மதியைப் பற்றி தெரி யும்! நீ உன்னோட பேர், அட்ரஸ் சொல்லிட்டு, இந்த மாதிரி விஷயத்தைச் சொன்னாலும்... ஏன், நேரிலேயே வந்து சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்! இத்தோட இந்த வேலையை நிறுத்தி விட்டு, வேற ஏதாவது உருப்படியான வேலை இருந்தால், பார்! இதுக்கு மேல ஒரு கால் வந்தது... அப்புறம் நீ ஜெயில்லதான் இருப்பே!'' என்று மிரட்டிய சம்யு. அவன் மேலே பேச இடம் கொடாமல், அழைப்பைத் துண்டித்தாள்.

அழைப்பைத் துண்டித்த பிறகும், சம்யுவுக்கு ஆத் திரம் தீரவில்லை.

''ராஸ்கல்!'' என்று திட்டியவளின் நிருபர் மூளை, போன் செய்தது யாராக இருக்கும் என்று ஆராயத் தொடங்கியது.

மதியைப் பிடிக்காதவர் யாராவதுதான் இப்படிச் செய் திருப்பார்கள்!

யாராக இருக்கும்? மதியிடம் கேட்கலாமா? என்று எண்ணியவள், அடுத்த கணம் இதைப் பற்றி அவனிடம் பேச வேண்டாம் என்று முடிவு செய்தாள்.

இன்று மாலை பேசும்போதே, மதி கொஞ்சம் சோர் வாக இருந்த மாதிரி இருந்தது. வேலையின் தாக்கம்!

இன்னும் இரண்டு நாட்களில் நிச்சயம் ஆகப் போகிறது! எதற்கு இதைச் சொல்லி அவனது மூடையும் கெடுக்க வேண்டும்? என்று எண்ணியவள், எதற்கும் இருக்கட்டும் என்று அழைப்பு வந்த எண்ணை தன் கைப்பேசியில் ஒரு பெயரிட்டு சேவ் செய்தாள்.

அவள் இவ்வளவு சொன்ன பிறகு, அந்த ராஸ்கல் இன்னொரு முறை இப்படி ஒரு முயற்சி எடுக்க மாட்டான்.

ஒரு முகம் தெரியாதவனின் அனாமதேய அழைப்பு, இவர்கள் வாழ்வில் அவன் விரும்பிய பிரச்சனையைக் கொண்டு வந்து விடுமா என்ன? என்று ஏளனமாக எண்ணிய சம்யுவுக்கு அப்போது தெரியவில்லை. ஒரு போன் கால் அவள் வாழ்வில் பெரும் பிரச்சனையைக் கிளப்பத்தான் போகிறதென்று!

அந்த அழைப்பு தந்த எரிச்சல் போகாமல், அறையிலேயே நடை பழகிய சம்யுக்கு உறக்கம் வரவில்லை! மதியே அழைப்பான் என்று அவள் காத்திருக்க, இரவு பத்தரை ஆனதே தவிர அவனிடம் இருந்து அழைப்பு வரவில்லை.

திரும்பவும் அழைக்கலாமா என்று நினைத்தவள், வேலை முடிந்திருந்தால் அவனே அழைத்திருப்பானே என்றெண்ணி, அதையும் செய்யாமல் விடுத்தாள்.

மேலும் அரை மணி நேரம் போக, சோர்வுடன் படுத்தவளை கைப்பேசியின் அழைப்பு ஈர்த்தது.

மதிதான் அழைத்திருந்தான்.

வேகமாக அழைப்பை எடுத்தவள், ''மதி!'' என்று ஆர்வமாக அழைக்க, ''சாரிடா, ஸ்வீட்டி! ரொம்ப முக்கியமான டிஸ்கஷன்! முடிஞ்சதும் கூப்பிடலாம்னு பார்த்தால், இழுத்துட்டே போயிடுச்சு! அது சரி, நீ இன்னுமா தூங்கலை? தூக்க கலக்கத்தோடு எடுப்பாய்னு நினைச்சால், இப்படி பயங்கர பிரிஸ்கா இருக்கே? என்ன இப்பவே கனவு காண ஆம்பிச்சாச்சா?'' என்று கேலியுடன் வினவினான் மதி.



''இந்த ரெண்டு மாசத்தில, நைட் உங்ககிட்ட பேசாமல் எப்போ தூங்கி இருக்கேன்? இவ்வளவு நேரமாகியும் நீங்க ஏன் கூப்பிடலைங்க? அந்தப் பழக்கத்தால்தானே?'' என்றவளிடம்,

''ஆமாண்டா! ரொம்ப நேரம் ஆயிடுச்சே, உன்னை தொந்தரவு செய்ய வேண்டாம்னு படுத்துட்டேன். ஆனால், தூக்கமே வரலை! ஒரு குட் நைட்டாவது சொல்லிட்டுப் படுக்கலாம்னுதான் போன் செஞ்சேன்! பார்த்தா, மேடம் பிரிஸ்காதான் இருக்கீங்க? அப்போ, எப்பவும் போல கொஞ்ச நேரம் பேசலாம்தானே?'' ஆவலுடன் வந்த அவன் கேள்விக்கு பதிலாக,

''ரொம்ப நேரம் வேலை செஞ்சது உங்களுக்கு டயர்டா இல்லாமல் இருந்தால், எனக்கு ஓகே!'' என்றாள் சம்யு.

''அப்படியே டயர்டா இருந்தாலும் என் சக்கரைக் கட்டி ஏதாவது பூஸ்ட் கொடுத்து, என்னை பிரிஸ்க் ஆக்கிடுவாள்! என்னடா ஸ்வீட்டி?'' என்றவனின் கிசுகிசுப்பான குரல், அவளது மனதைத் தீண்ட, சற்று முன் வரை மனதில் மண்டியிருந்த எரிச்சல், இப்போது காணாமல் போயிருந்தது.

''என்னடா சத்தத்தையே காணோம்?''

''ம்ம்ம்... பூஸ்ட் கலந்திட்டேன்! எப்படி போன் வழியா கொடுக்கிறதுன்னு யோசிக்கிறேன்!'' என்று நமட்டு சிரிப்புடன் சம்யு சொன்னதும்,

''ஹய்யோ! சம்யு! இது உனக்கே நியாயமா? இவ்வளவு நேரமாகியும் கால் செஞ்ச எனக்கு, தண்டனையா இந்த கடி எல்லாம்?'' என்று சிரித்தவன்,

"நாளைக்கும் நாம சந்திக்க முடியாது போலிருக்குடா! கதாநாயகி விஷயத்தை நாளைக்கு கண்டிப்பா முடிவு செஞ்சுடணும்!" என்று சொல்ல,

"என்ன மதி இது? இன்னைக்கும் பார்க்கலை! நாளைக் கும் இப்படியே சொன்னால் எப்படி?" என்று சிணுங்கி னாள் மதியின் மனம் கவர்ந்தவள்.

"எனக்கும் உன்னைப் பார்க்கணும் என்றுதான் இருக் குடா! பட், நாளைக்கு இந்த வேலை முடிந்து விட்டால், நிச்சயம் முடிந்த பிறகு, உன் கூட ரெண்டு நாள் ஸ்பென்ட் செய்யலாம் என்று நினைத்தேன். சாரிடா!"

"எனக்குப் புரியுது மதி! இருந்தாலும், என்னவோ உங்களைப் பார்க்கணும் போல இருக்கு!" என்றவளின் குரல் மெலிந்து வர, ஏனோ கண்களிலும் நீர் கோர்த்தது.

"ஹே! என்னடா? என்னடா செல்லம்? இவ்வளவு நேரம் நல்லாதானே பேசிட்டு இருந்தே? இப்போ என்ன ஆச்சு?"

குழப்பத்துடன் வினவிய மதியின் குரலில் கவலை தெரிய, 'ச்சே... என்ன மடத்தனம்!' என்று தன்னையே நொந்து கொண்ட சம்யு.

"ஹே! சும்மா சொன்னேன்! நான் இப்படி சொன்னால், நீங்க எப்படி ரியாக்ட் செய்வீங்க என்று தெரிஞ்சிக்க!" என்று சொல்லிச் சிரித்தாள்.

"ஸ்வீட்டி! உண்மையாதானே சொல்றே? ஏதாவதுன்னா என்கிட்டே சொல்லிடுடா!" என்று கூறி விட்டு,

"நாளைக்கு எப்படியாவது மீட் செய்ய முடியுமான்னு பார்க்கிறேன், ஓகே?" என்றவன்,

"என் சக்கரைக் கட்டி! உன் அழகன் ஒண்ணு கேட்டேனே தர மாட்டாயா?" என்று ஏக்கத்துடன் வினவினான்.



அவன் கேட்பது புரிந்தாலும், "என்ன கேட்டீங்க?" என்று யோசிக்கும் பாவனையில் சம்யு சொல்ல,

"ஹே! இது அநியாயம்! இவ்வளவு நாள்ல, நீயா இது வரைக்கும் ஒரே ஒரு முறை தான் கொடுத்திருக்கே! போன்லதானே கேட்கிறேன்! கொடுத்தால் என்னவாம்?" என்று அவன் அலுத்துக் கொண்டான்.

அப்போதும் சம்யு அமைதியாக இருக்க, "நீ சரியான கல்நெஞ்சக்காரின்னு எனக்குத்தான் தெரியுமே? நான் வைக்கிறேன்! குட் நைட்!" என்று சலிப்பாகச் சொல்லி விட்டு போனை வைக்காமலே காத்திருக்க, அவன் பக்கம் இருந்து சத்தம் இல்லை என்றாலும், அவன் அழைப்பைத் துண்டிக்கவில்லை என்று சம்யுவுக்குப் புரிந்தது.

வேண்டுமென்றே அவள் அமைதியாக இருக்க, மதியும் அமைதியாகவே இருந்தான்.

இது எப்போதும் நடக்கும் விளையாட்டுதான். மதியே தான் திரும்பவும் பேசுவான்.

நேரமாகியும் அவன் பேசவில்லை என்றதும், "டேய் அழகா! கோபமா?" கொஞ்சலுடன் சம்யு வினவ, அப் போதும் அவன் பக்கமிருந்து பதில் வரவில்லை.

குழப்பத்துடன், உண்மையிலேயே அழைப்பைத் துண்டித்து விட்டானோ என்று சம்யு கைப்பேசியைப் பார்க்க, அழைப்பு இருந்தது.

ஒரு சிரிப்புடன் கைப்பேசியைப் பார்த்துவிட்டு, "சரி! மதி வைச்சிட்டார் போலிருக்கு! அவர் கேட்டதைக் கொடுக்கலாம் என்று நினைச்சேன்! இட்ஸ் ஓகே! போனை வைச்சிட்டு தூங்க வேண்டியதுதான்!" என்று தனக்குள் சொல்லிக் கொள்வதைப் போல சம்யு சொன் னதும்,

''ஹே! ஸ்வீட்டி! நான் லைன்லதான் இருக்கேன்!
கொடுக்க நினைச்சதைக் கொடுத்துட்டு தூங்கப் போ!''
என்று மதியின் குரல் அவசரமாக வந்தது.
''திருடா! இவ்வளவு நேரம் பேசாமல் இருந்தே
இல்லை! அதுக்கு தண்டனை! கொடுக்க நினைச்சதைக்
கொடுக்க மாட்டேன் போ!'' என்று போலிக் கோபத்
துடன் சம்யு சொன்னதும்,
''என் செல்ல ஸ்வீட்டி இல்லை? என் சக்கரைக் கட்டி
இல்லை? ப்ளீஸ்டா...'' என்று மதி கொஞ்ச ஆரம்பித்
தான்.
''சரி! சரி! நான் தருவேன், அதை கையில்தான் வாங்
கிக்கணும்!'' என்ற அமர்த்தலுடன் சம்யு அறிவிக்க,
''இதெல்லாம் ஓவர்! நீ கொடுக்கிறதைக் கொடு!
நான் எங்கே வாங்கிக்கறேன் என்பது என்னோட
இஷ்டம்!'' என்ற மதியின் குரலில் குறும்பு கொப்பளித்
தது.
''அதெல்லாம் கிடையாது! நான் சொன்ன மாதிரி
செய்யறதுன்னா தரேன்! இல்லன்னா எதுவும் கிடை
யாது!'' என்று அவள் அலட்டிக் கொள்ள, மதி சிரித்தான்.
''நடத்துங்க மேடம்! இன்னும் எவ்வளவு நாளைக்கு
என்று பார்க்கிறேன்!'' என்றவன்,
''ப்ளீஸ் ஸ்வீட்டி! என்னைப் பார்த்தா பாவமா
இல்லை! சீக்கிரம் கொடு ஸ்வீட்டி!'' என்று கெஞ்ச
ஆரம்பிக்க, அவன் கேட்ட ஒன்றுக்கு பத்தாகக் கொடுத்த
பிறகு, கனவுடன் உறங்கச் சென்ற இருவருக்கும், அன்
றைக்குப் பிறகு இருவருக்கும் நிம்மதியான உறக்கமே
இருக்கப் போவதில்லை என்று அப்போது தெரிந்திருக்க
வில்லை.



# 9

மதியழகன் மிகவும் எரிச்சலான மனநிலையில் இருந்தான்.

காலை வீட்டில் இருந்து கிளம்பும் போதே, அன்னை காஞ்சனா, ''என்னடா இது? நாளைக்கு நிச்சயம்! இன்னைக்கு வீட்டில் இருக்கக் கூடாதா?'' என்று ஆதங்கத்துடன் கேட்டிருந்தார்.

''சீக்கிரம் வந்திடறேன் அம்மா! முக்கியமான வேலை!'' என்று அவரிடம் பேசி, அவரைச் சமாதானப் படுத்தி விட்டு கிளம்பியவனுக்கு, ஆடிஷன் நடக்கும் இடத்துக்கு வந்ததுமே டென்ஷன் ஏறி விட்டது.

நேற்று சம்யு அவனைப் பார்க்க வேண்டும் என்று சொன்னதே, மனதில் ஒலித்துக் கொண்டிருக்க, விரைவில் வேலையை முடித்து விட்டுக் கிளம்பி விட வேண்டும் என்று தீர்மானித்திருந்தான்.

ஆனால், வேலை முடிவதாக இல்லை என்பதோடு புதுப் புது பிரச்னையும் கிளம்ப, அன்றைய நாள், கடினமான நாளாக இருந்தது.

இந்தப் படம் எடுக்கப் போவதாக முடிவு செய்த பிறகு, ஒரு படத்தில் சிறிய வேடத்தில் நடித்திருந்த ராகினி என்ற பெண்ணைத்தான், கதாநாயகியாக போட வேண்டும் என்றும் அவன் முடிவு செய்திருந்தான்.

கதைக்கேற்ப, நடிகர்களைத் தேர்வு செய்வதுதான் அவனது வழக்கம்.

இப்போதும், அப்படியே அவன் தேர்வு செய்ய, தயாரிப்பாளருக்கோ, ஒரு பிரபல கதாநாயகியைப் போட வேண்டும் என்ற எண்ணம்!

கதைக்கு இந்தப் பெண்தான் சரியான தேர்வாக இருப்பாள் என்று, அவரைச் சமாதானப் படுத்துவதற்குள் அவனுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது.

அந்தப் பெண்ணுக்கு மூன்று நாட்களாக ஸ்க்ரீன்
டெஸ்ட், ஆடிஷன் என்று நடந்து கொண்டிருக்க, முதல்
நாள் நல்ல படியாக ஒத்துழைத்தவள், நேற்றில் இருந்து
சொதப்பிக் கொண்டிருந்தாள்.

''பயப்படாமல் இயல்பா இருங்க!'' என்று சொன்ன
பிறகும், அவளது பயம் தீரவில்லை!

அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த தயாரிப்
பாளர், இதுதான் சமயமென்று, ''இதுக்குத்தான் தம்பி,
அனுபவம் இருக்கிற ஹீரோயினைப் போடலாம் என்று
சொன்னேன்!'' என்று சொல்லி அவனைப் படுத்தி எடுத்
துக் கொண்டிருந்தார். அந்தப் பிரபலமான நடிகையும்,
ஒரு காலத்தில் புதுமுகம்தானே என்பதை அவர் நினைக்
கவே இல்லை போலும்!

படத்தில், ஹீரோயினுக்கு மூன்று விதமான கதாப்
பாத்திரங்கள்! கதாநாயகி என்றதுமே, மதிக்கு அந்தப்
பெண்ணின் முகம்தான் நினைவுக்கு வந்தது. தயாரிப்
பாளர் சொல்லும் கதாநாயகியைப் போட்டால், வெறும்
பாடல்களுக்கு ஆட மட்டும்தான் செய்வார் என்று எரிச்ச
லுடன் எண்ணியவன், ராகினியிடம் வந்தான்.

''இங்கே பாருங்கம்மா! நேற்று எல்லாம் நல்லாதானே
செஞ்சீங்க? இன்னைக்கு மட்டும் என்ன ஆச்சு? தயா
ரிப்பாளர் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லியும்,
நான்தான் உங்களை எடுத்திருக்கேன். தயவு செய்து,
நான் என்ன சொல்றேனோ, அதை அப்படியே செய்ங்க,
போதும்! இனிமேலும், நீங்க இப்படி சொதப்பினால்,
இந்த வாய்ப்பு கிடைக்காது!'' என்று நேற்று கொஞ்சம்
கடினமாகவே அவளிடம் சொல்லி இருந்தான்.

நேற்று சொன்னதற்கு எதிரொலியாக இன்று நன்
றாகச் செய்வாள் என்று அவன் எதிர்பார்த்திருக்க, அவள்



முந்தைய நாளை விட மோசமாக அவன் சொல்லிக்
கொடுத்ததைச் செய்ய, மதிக்குமே பொறுமை பறந்தது.

அவன் தேர்ந்தெடுக்கும் எந்த நடிகர்களுமே இதுவரை
சோடை போனதில்லை!

முதல் பார்வையிலேயே, இவர்கள் இந்த வேடத்துக்கு
ஒத்து வருவார்களா? இல்லையா? என்று முடிவு செய்வ
தில் தேர்ந்தவன் என்று அவனது உதவியாளர்கள் பெருமை
யாகக் கூறுவதுண்டு!

ஆனால் இப்போது? யானைக்கும் அடி சறுக்கும் எனும்
போது, மதியழகன் எம்மாத்திரம்?

நேராக, அந்தப் பெண்ணிடம் வந்தவன், ''வந்து...
இந்த படத்துக்கு உங்களைக் கதாநாயகியா போட முடி
யாது! வேற ஏதாவது வாய்ப்பு வந்தால் கூப்பிடுகிறேன்!''
என்று நேரிடையாகவே சொல்லி விட்டான்.

''சார்! ப்ளீஸ் சார்! இந்த மாதிரி ஒரு வாய்ப்புக்காக
நான் ரொம்ப நாளா காத்திட்டு இருக்கேன் சார்! நான் நல்லா
செய்யறேன் சார்! இன்னும் ஒரு வாய்ப்பு கொடுங்க
சார்!'' என்று கண்களில் நீரோடு கெஞ்ச, அவனுக்குப்
பாவமாக இருந்தாலும், இன்னும் நாளைக் கடத்த முடி
யாது என்பதால்,

''வாய்ப்பு வேண்டுமென்றால், நீங்களும் அதுக்கேற்ற
மாதிரி சரியா நடந்துக்கணும் இல்லை? நானே உங்
களுக்கு வேற ஏதாவது சரியான வேடம் வரும்போது
கூப்பிடறேன்!'' என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து
கிளம்பினான்.

அடுத்து, இசை அமைப்பாளரைச் சந்திக்கும் வேலை
இருந்தது.

மாலை வரை வேலை இழுத்தடிக்க, இன்றும் சம்யுவை
சந்திக்க முடியாது என்பது வருத்தத்தைத் தர, அவளிடம்

போனிலாவது பேசி விடலாம் என்று எண்ணியவனாக, அவளை அழைத்தான்.

"மதி! வேலை முடிஞ்சிடுச்சா? நான் ரெடியா இருக்கேன்! அம்மா கூட, நாளைக்கு நிச்சயத்தை வைத்துக் கொண்டு, இப்போ வெளியே போகக் கூடாதுன்னு ஒரே அட்வைஸ்! ரொம்ப கெஞ்சி அனுமதி வாங்கி இருக்கேன்! நீங்களே வந்து கூட்டிட்டுப் போறீங்களா? இல்லை நான் வரணுமா?"

படபடவென சம்யு கேள்விகளை அடுக்க, மதிக்கு வருத்தமாக இருந்தது.

"சாரிடா, ஸ்வீட்டி!" என்று மதி தொடங்கியதுமே,

"என்ன? இன்னைக்கும் பார்க்க முடியாதா? போடா!" எரிச்சலுடன் சம்யு இடையிட்டாள்.

"என் செல்லம் இல்லை? இன்னைக்கு ரொம்பவே வேலை இழுத்துடுச்சுடா! இப்போ என் அசிஸ்டென்ட்ஸ் கூட மீட்டிங் இருக்கு! மூணு நாள், வேலை பக்கமே போகப் போறதில்லை! அதுக்காகத்தான் இப்போ மீட்டிங்! ப்ளீஸ் கோபிச்சிக்காதேடா!" என்று மதி கொஞ்சியதும்,

'என்ன இது? இப்படி பேசி விட்டோம்!' என்றெண்ணி, "சரி! கோபம் இல்லை! பட் நாளையில் இருந்து மூணு நாள், என் கூட மட்டும் தான்! சரியா?" என்று பெரிய மனதுடன் ஒப்புதல் தந்தாள்.

"தங்கள் சித்தம்! என் பாக்கியம்!" என்ற மதி, சிறிது நேரம் பேசி விட்டு போனை வைக்க,

"என்னை அலைய விடறதே, இவனுக்கு வேலை!" என்று செல்லமாக அவனைத் திட்டி விட்டு, அவளது அறையில் இருந்து வந்த சம்யுவை, அகிலன் பிடித்துக் கொண்டான்.



"என்ன யுக்? வெளியே போகப் போறேன் என்று சொல்லிட்டு இருந்தே? இன்னும் கிளம்பலையா?"

"ப்ச்! அவருக்கு இன்னும் வேலை முடியலையாம்!" என்று அலுத்துக் கொண்ட சம்யுவிடம்,

"நாளைக்கு தான் பார்க்க போறீங்க இல்லை? அப்புறம் என்ன?" என்று கேலி செய்தான் அகிலன்.

"போடா! ரெண்டு நாளா, நான் மதியைப் பார்க்கவே இல்லை, தெரியுமா?" என்று குறைபட்ட சம்யுவைப் பார்த்து அகிலனுக்கு சிரிப்பு வந்தது.

"எதுக்குடா சிரிக்கற, இப்போ?" சின்னக் கோபத்துடன் தம்பியை முறைத்தாள்.

"இல்லை சிஸ்! இருபத்து நாலு வருஷம் அவரைப் பார்க்காமல்தானே இருந்தே? என்னமோ, ரெண்டு நாள் பார்க்காததை ரொம்ப வருஷம் பார்க்காத மாதிரி ஃபீல் செய்யறே?"

கேலியுடன் கேட்ட தம்பியை முறைத்துப் பார்த்த சம்யு, "அதெல்லாம், அவங்க அவங்களுக்கு வரும் போது புரியும்!" என்று சொல்லி விட்டுத் தலையைத் திருப்பிக் கொள்ள, அகிலன் சிரித்தான்.

"சும்மா உன்னை வெறுப்பேற்றினேன்கா! இன்னும் ஒரு மாசம்! அப்புறம் நானே நினைச்சாலும் இப்படி எல்லாம் உன்கிட்ட பேச முடியுமா?" என்ற தம்பியின் குரல் மெலிந்து வர,

"அகில்! என்னடா இது? நேற்று நான் இப்படி பீல் செஞ்சப்போ, பக்கத்திலதானே இருக்கோம்... தினமும் கூட பார்த்துக்கலாம் என்று சொல்லிட்டு, நீயே இப்படி பேசறே?" என்று சொன்னவளின் கண்களும் கலங்கியது.

''விடு சிஸ்! நானும் கொஞ்சம் சென்டிமென்ட் ட்ரை பண்ணேன்.''

''சரி! நானும் அப்பாவும் நம்ம சொந்தக்காரங்க தங்கி இருக்கிற ஹோட்டலுக்கு போய் எல்லாம் வசதியா இருக்கான்னு பார்த்துட்டு வரோம்! நீ கொஞ்சம் தூங்கு! அப்போதான் நாளைக்கு ஃப்ரஷா இருக்க முடியும்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

நிச்சயம் முடிந்த இருபது நாட்களில் திருமணம் என்று முடிவு செய்திருப்பதால், நெருங்கிய சொந்தங்களுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அடுத்த நாள் காலையிலேயே நிச்சயம் என்பதால், ராஜசேகர் அவர்களுக்கு நிச்சயம் நடக்கப் போகும் ஹோட்டலில் அறைகள் ஏற்பாடு செய்து கொடுத்திருந் தார்.

தந்தையும், தம்பியும் சென்று விட, தாயும் மகளும் கொஞ்சம் நேரம் செல்ல கொஞ்சிக் கொண்டிருந்தனர்.

ஒன்பது மணி ஆனதும், ''நேரத்தோடு படுக்க போ சம்மு!'' என்று அன்னை அனுப்ப, சம்யுக்தா தனது அறைக்கு வந்தாள்.

மனம் கவர்ந்தவனோடு நாளை திருமண நிச்சயம் என்று எண்ணம் மனதை நிறைக்க, மதிக்கு போன் செய்யலாம் என்று கைப்பேசியை எடுத்தவள், வேலைக்கு இடையில் தொந்தரவு தர வேண்டாம் என்றெண்ணி, படுக்கையில் சரிந்தாள்.

கொஞ்ச நேரத்திலேயே கைப்பேசி சிணுங்க, ஆவலோடு கைப்பேசியை எடுத்தவளின் முகம் சுருங்கியது.

* * *



தாமு, மதியழகனின் முன்னாள் உதவியாளன், குடி போதையில் தன் நண்பர்களிடம் பிதற்றிக் கொண்டிருந் தான்.

''எதுக்காக அவன் கிட்ட நான் அசிஸ்டென்டா போனேன்! வேலை கத்துக்கவா? எனக்கு சொல்லிக் கொடுக்கிற அளவுக்கு அவன் என்ன பெரிய ஆளா? ஏதோ அதிர்ஷ்டம், எடுத்த எல்லா படமும் ஓடிடுச்சு! சரி, இவன்கிட்ட அசிஸ்டென்டா சேருகிற எல்லாருக்கும், படம் எடுக்கிற வாய்ப்பு சீக்கிரமே கிடைக்குதேன்னு அவன்கிட்ட சேர்ந்தேன். போன தரம் வந்த வாய்ப்பை கூட சிவாவுக்கு கொடுத்துட்டான்! இன்னும் கொஞ்சம் கத்துக்கணும் என்று எனக்கு அட்வைஸ் வேற! சரின்னு பொறுத்துகிட்டு இருந்தேன். இப்போ நான் என்ன பெரிசா தப்பு செஞ்சுட்டேன்? சினிமாவில இதெல்லாம் சகஜம்தானே? என்னவோ பெண்களைக் காக்க வந்த தேவ தூதன்னு அவனுக்கு நினைப்பு! என்னை வெளியே தள்ளிட்டான்!'' என்று அவன் பிதற்ற, அவனது நண்பன்.

''ரெண்டு மாச சம்பளம் கொடுத்துதானே அனுப்பி னாரு!'' என்றான்.

''யாருக்கு வேண்டும் ரெண்டு மாச சம்பளம்? இவன் அனுப்பினது தெரிஞ்சால் யாருடா எனக்கு படம் செய்ய வாய்ப்பு தருவாங்க?'' ஆங்காரத்துடன் வினவினான்.

''எல்லார் எதிர்க்கவும் உன்னை அவமானப் படுத்தி அனுப்பினாரா என்ன? இல்லையே? தனியா விசாரிச்சு, நீ திமிரா பேசவேதானே அனுப்பினாரு?''

கொஞ்சம் நியாய புத்தியுடன அவனது நண்பன் எடுத்துச் சொல்ல, தாமுவின் முகம் மாறியது.

''தனியா சொன்னால், யாருக்கும் தெரியாதா என்ன? இப்பவே ரெண்டு பேர் கேட்க ஆரம்பிச்சிட்டாங்க. என்ன

நடந்தது. மதி உன்னை அனுப்பிட்டாறாமேன்னு இன்னும் வெளியில தெரியும்போது எப்படிடா வாய்ப்பு கிடைக்கும் எனக்கு? என்னை வெளியே அனுப்பினதுக்கு அவனுக்கு தண்டனை கிடைக்காமல் போகலாமா?'' என்றவன் ஒரு மாதிரி சிரிக்க,

''நேற்று நீ ட்ரை பண்ணதுதான் ஃப்ளாப் ஆயிடுச்சே?'' என்றான் அவனது நண்பன்.

''ஆமான்டா! ரொம்பத்தான் அந்த பொண்ணு அலட்டிக்கிட்டா! அதான் இன்னைக்கு பக்காவா பிளான் போட்டிருக்கேன்... எந்த விதத்திலும் சொதப்பாத ப்ளான்! எப்படியும் மதியோட நிச்சயம் நாளைக்கு நடக்காது!'' என்று பெருமிதத்துடன் இளித்து விட்டு, போனை எடுத்தவன், ஒரு கணம் யோசித்து விட்டு, ''டேய், உன் போனை கொடு!'' என்றபடி தன் நண்பனின் போனை வாங்கி, ராகினியின் நம்பரை அழுத்தத் துவங்கினான்.

''ராகினி... நான்தான் மதி சாரோட அசிஸ்டெண்ட் தாமு பேசறேன்! நேற்று நான் சொல்லி இருந்தேனே, அதே ஹோட்டல்தான்... நேற்று நிறைய பேர் அவர் கூட இருந்தாங்க... அதுத்தான் போக வேண்டாம் என்று சொன்னேன்! இப்போ தனியாதான் இருக்கார்... நீ கொஞ்சம் கெஞ்சி கேட்டால், வாய்ப்பு இருக்கு! என்ன? இல்லை... இல்லை... ஆள் சபல கேஸ்தான... ஆனால், அத்து மீறி எதுவும் செய்ய மாட்டார்... அதுக்கு நான் க்யாரண்டீ... சரியா ஒன்பது மணிக்கு அங்கே இருக்கணும்! அப்புறம், கிளம்பிட்டார் என்றால் கஷ்டம்!''

அடுத்து அவன் பேசியது சம்யுக்தாவிடம்! மதியழகனின் உதவியாளர் ரவியின் பேரைச் சொல்லி!

இருவரிடமும் பேசி விட்டு ஒரு கணம் யோசித்தவன், ஹோட்டல் பாண்டியனில் வேலை செய்பவனை அழைத்தான்.



''குமார்! நான் தாமு பேசறேன்! மதியழகன் அறைக்கு இணைப்பு கொடுக்கச் சொல்லி யார் போன் செஞ்சாலும் கொடுக்காதே! மதியழகனின் அறைக்கு போன் செஞ்சு, நான் சொல்ற மாதிரி சொல்லு!'' என்று விட்டு, என்ன சொல்ல வேண்டும் என்று விளக்கமாகச் சொல்லியவன்,

''பயப்படாதேப்பா! எந்தப் பிரச்னையும் வராது! இதை ஒழுங்கா செய்தால், என்னோட படத்தில நான் சொன்ன மாதிரி உனக்கு ஒரு வேஷம் நிச்சயம் கிடைக்கும்!'' என்று சினிமா ஆசையில், வாய்ப்புக்காக அலையும் அவனுக்குத் தெரிந்த வரவேற்பு பணியாளிடம் பேசினான்.

இவை அனைத்தையும் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்த நண்பன், ''என்னடா? எதோ பயங்கர சதி செய்யற மாதிரி இருக்கு!'' என்று அச்சத்துடன் வினவ,

''என்னை வேலையை விட்டு துரத்தியவனைப் பழி வாங்க, இதைக்கூட செய்யலைன்னா எப்படிடா?'' என்று குரூரத்துடன் கூறினான்.

''நிச்சயம் நின்னு போகும் என்று எப்படிடா நிச்சயமா சொல்றே?''

''அந்த மதி ஒரு மாதிரி ஆள்டா! அவனை நம்பணும், கூட இருக்கிறவங்க நேர்மையா இருக்கணும் என்று அனத்துகிறவன்! இப்போ மனைவியா வரப் போறவளே தன்னை சந்தேகப்பட்டு விட்டால் என்றால் அவனால் அதைத் தாங்க முடியாது!'' என்று தாமு உறுதியாகக் கூற,

''சரி... இப்போதைக்கு நிச்சயம் நின்னாலும், அப்புறம் உண்மை தெரியாமலா போகப் போகுது?'' என்று நண்பன் தன் சந்தேகத்தை முன் வைத்தான்.

''அப்புறம் சரி ஆகலாம்! ஆனால், நாளைக்கு நிச்சயம்
நின்னு போனால், அது அவனுக்கும் அவமானம்தானே?
அந்த அவமானத்தையாவது அவன் அனுபவித்தால்
தாண்டா எனக்கு நிம்மதி! எந்தப் பிரச்சனை என்றாலும்,
நேரிடையா என்னைக் குற்றம் சாட்ட முடியாதபடிதான்
ப்ளான் செஞ்சிருக்கேன்!''

''நாளைக்கு பேப்பரில் மதியோட நிச்சயம் நின்று
விட்டது என்று செய்தி வரும், பார்!'' என்று உறுதியாகக்
கூறியவன், அந்தக் கற்பனை தந்த சுகத்தில் சிரிக்க
ஆரம்பித்தான்.

* * *

கதாநாயகி தேர்வு சொதப்பி விட்டாலும், உதவியாளர்
களுடன் நடந்த டிஸ்கஷன் நல்லபடியாக நடந்ததில், மதி
கொஞ்சம் உற்சாகமாகவே வீட்டுக்குக் கிளம்ப நினைத்தான்.
வீட்டுக்குச் சென்ற பிறகு, சம்யுவிடம் பேசிக் கொள்ள
லாம் என்று நினைத்தவன், அறையில் இருந்த தன்
பொருட்களை எடுத்துக் கொண்டு கிளம்பிய போது
அறைக் கதவு தட்டப்பட்டது.

'இந்த நேரத்தில் யார்? ரூம் சர்வீசுக்கு கூட சொல்ல
வில்லையே?' என்றெண்ணியபடியே வந்து கதவைத்
திறந்தவன், வெளியே நின்று கொண்டிருந்த நபரைக்
கண்டதும் ஆச்சரியமடைந்தான்.

* * *

தெரியாத எண்ணில் இருந்து வந்த அழைப்பைக்
கண்டதும், சம்யுவின் முகம் சுருங்கியது.

நேற்று போன் செய்தவனோ என்று நினைத்தவள்,
இது வேறு எண் என்றாலும், எடுக்கலாமா வேண்டாமா
என்று குழம்பினாள்.



அவள் குழம்பிய நேரத்தில், முழு மணியும் அடித்து
ஓய்ந்து போக, மறு முறையும் அழைப்பு வந்தது.
எடுத்துப் பார்த்தால்தானே யாரென்று தெரியும் என்று
எண்ணியபடி, அழைப்பை எடுத்தவளின் காதில்,
''சம்யுக்தா மேடம்தானே?'' என்ற பதட்டமான கேள்வி
விழுந்தது.

''ஆமாம்! நீங்க யாரு?'' என்று சம்யு விசாரிக்க,

''நான் மதி சாரோட அசிஸ்டெண்ட் ரவி பேசறேன்
மேடம்! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் சாரோட
எங்க மீட்டிங் முடிந்தது. தாமு என்று ஒரு அசிஸ்டெண்ட்
இருந்தான் மேடம்! சார், கொஞ்ச நாள் முன்னாடி
அவனை வெளியே அனுப்பிட்டாரு. அந்த ஆத்திரத்தில்,
அவரை நல்லபடியா வாழ விட மாட்டேன் என்று கருவிக்
கொண்டே இருந்தான். இப்போ சார் இருக்கிற ஹோட்
டல் ரூமுக்குக் கிளம்பி போயிருக்கான் மேடம். ஆத்திரத்
தில் ஏதாவது செய்து விடுவானோ என்று பயமா இருக்கு
மேடம்! நான் இங்கே இருந்து ஹோட்டலுக்கு போற
துக்கு லேட் ஆயிடும். சாருக்கு போன் செஞ்சா, எடுக்க
வில்லை! நீங்க கொஞ்சம் அவருக்கு போன் செஞ்சு
ஜாக்கிரதையா இருக்க சொல்றீங்களா, மேடம்?'' என்று
பதட்டத்துடன் சொல்ல, சம்யுவுக்கு இதயத் துடிப்பு
ஏறியது.

நேற்று தனக்கு போன் செய்து மதியைப் பற்றி
தவறாகப் பேசியது தாமுதான் என்று சம்யு முடிவு செய்
தாள்.

''கடவுளே! நேற்று என்கிட்டே பிரச்சனை செய்ய
முயற்சி செஞ்சிருக்கான்! அது முடியலை என்றதும்,
இப்போ மதிக்கு ஏதாவது ஆபத்தை விளைவிக்க

பார்க்கிறானா?'' என்று பதறியவள், ரவியிடம் இருந்து
ஹோட்டல் பெயர், அறை எண்ணை விசாரித்துக்
கொண்டு வேகமாக வெளியே வந்தாள்.
''அம்மா, அவசரமா நா கொஞ்சம் வெளியே போக
ணும்!'' என்று வந்து நின்ற மகளை, ஆச்சரியத்துடன்
பார்த்த ராஜேஸ்வரி, ''என்ன சம்மு! இந்த நேரத்தில?
நாளைக்கு நிச்சயம் வேற இருக்கு! நீ எங்கேயும் போக
வேண்டாம்!'' என்று ஆட்சேபித்தார்.
''ப்ளீஸ்மா! உடனே வந்துடறேன், என்ன எதுன்னு
வந்து சொல்றேன்!'' என்று சொன்னவள், ''சம்மு!
சொல்றேன் இல்லை! அவசரம்னா அப்பாவைக் கூப்பிட
றேன்!'' என்று சொன்னதைக் காதில் வாங்காமல், வேக
மாக தன் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.
எப்போதும் நிதானமாக நடந்து கொள்ளும் இந்தப்
பெண்ணுக்கு என்ன ஆயிற்று, என்ற பதட்டத்துடன்
ராஜேஸ்வரி தன் கணவரை போனில் அழைக்கச் சென்றார்.
வண்டியில் செல்லும்போதே, இரண்டு முறை மதிக்கு
அழைத்த சம்யு, அவன் அழைப்பை எடுக்காமல் இருக்
கவே, வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தினாள்.

* * *

''நீங்க எங்கே இங்கே?'' தன் எதிரே நின்ற ராகினியை ஆராய்ச்சியுடன் பார்த்த மதி வினவ,

''பளீஸ் சார்! ஒரு பத்து நிமிஷம் எனக்கு டைம் கொடுங்க! நான் சொல்ல வந்ததைச் சொல்லிட்டுப் போறேன்!'' என்றாள் ராகினி.

''எதுவா இருந்தாலும் இப்போ வேண்டாம்! யாராவது பார்த்தால் தப்பா நினைப்பாங்க!'' என்று மதி சொன்னதும், ராகினியின் விழிகள் விரிந்தன.



அவளது ஆச்சரியத்தைக் கண்ட மதிக்கு, 'இதிலென்ன ஆச்சரியம்?' என்று தோன்ற, ''ப்ளீஸ் சார்! நான் உங்களோடு பேசியே ஆகணும்!'' என்று ராகினி கெஞ்ச,

''சரி வாங்க!'' என்று அவள் உள்ளே வர வழி விட்டவன், கதவை அடைத்தான்.

''சீக்கிரம் சொல்லிட்டுக் கிளம்புங்க, யாராவது பார்த்தால் உங்களுக்கும் தேவை இல்லாத கெட்ட பெயர் வரும்!'' என்றான் மதி.

ராகினியின் குழம்பிய பாவனையைக் கண்டவன், ''என்ன விஷயம்?'' என்றான்.

''சார்! நான்... வந்து... எப்படி சொல்றதுன்னு தெரியல சார்!'' என்று தடுமாறிய ராகினி,

''உங்க அசிஸ்டெண்ட் என்கிட்டே ஒரு விஷயம் சொன்னார், உங்க படத்தில் நடிக்கணும்னா, உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ற மாதிரி நடந்துக்கணும் என்று... அது, என்னால் முடியாது சார்! ஆனால், எனக்கு இந்த வாய்ப்பு கண்டிப்பா வேணும்! எனக்கு நிறைய கமிட்மெண்ட்ஸ் இருக்கு சார்! அதனால், உங்ககிட்ட கெஞ்சிக் கூத்தாடியாவது இந்த வாய்ப்பை அடையணும் என்றுதான் இங்கே வந்தேன்!'' என்று சொல்ல, மதிக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்னம்மா சொல்றீங்க! ஒழுங்கா ஆடிஷன்ல நான் எதிர்பார்த்த மாதிரி பெர்பார்ம் செஞ்சிருந்தால் வாய்ப்பு தானா கிடைச்சிருக்கும்! எனக்கும் உங்களுக்கு வாய்ப்பு தரணும் என்றுதான் எண்ணம்! நீங்கதான் சொதப்பிட்டீங்களே!'' என்று குறை கூற,

''சார்! அது நான் கொஞ்சம் பயந்துட்டேன் சார்!'' என்று இடையிட்ட ராகினியிடம்,

''இப்படி ஆடிஷனுக்கே பயந்தால், எப்படியப்பா முழு படமும் நடிப்பீங்க?'' என்று எரிச்சல் பட்ட மதியை, வியப்புடன் நோக்கியவள்,

''இல்லை சார்! உங்க அசிஸ்டென்ட் உங்களுக்கு வேறே எதிர்பார்ப்பு என்று சொன்னார்... அதைக் கேட்டதுக்கு அப்புறம் நான் கொஞ்சம் பயந்துட்டேன் சார்!'' என்று கண் கலங்கியபடி சொல்ல, மதிக்கு தலை சுற்றியது.

''என்ன எதிர்பார்ப்பு? எந்த அசிஸ்டென்ட் என்ன சொன்னார்?'' என்று எரிச்சலுடன் கேட்டவனுக்கு,

''தாமு சார்தான்...'' என்று ராகினி ஆரம்பித்ததும், இதுவரை புரியாமல் இருந்ததெல்லாம் விளங்கி ஆத்திரத்தில் முகம் சிவந்தது.

'கடவுளே!' என்று தலையில் கை வைத்தவன், ''ஏம்மா... யாராவது ஏதாவது சொன்னால் அப்படியே நம்பி விடுவீர்களா? முதலில் அந்த தாமு இப்போ என்னுடைய அசிஸ்டென்ட் இல்லை! அவன் சொன்னதை வைத்து... கடவுளே!'' என்றவன்,

''நீங்க கிளம்புங்க... உங்களுக்கு இன்னொரு வாய்ப்பு கொடுக்கறேன்... அதில் நீங்க சரியா செஞ்சீங்கன்னா, கண்டிப்பா இந்த வாய்ப்பு உங்களுக்குத்தான்! இப்போ கிளம்புங்க!'' என்று துரிதப்படுத்தினான்.

''ரொம்ப நன்றி சார்! ரொம்ப நன்றி! உங்களைப் பற்றி தப்பா நினைச்சதுக்கு சாரி சார்! சாரி'' என்று ராகினி உணர்ச்சி வசப்பட,

''நன்றி, சாரி எல்லாம் இருக்கட்டும்! முதலில் கிளம்புங்க!'' என்றவன், அறையில் இருந்த தொலைபேசி அடித்ததும், வேகமாகச் சென்று எடுத்தான்.



''சார், கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, ஒரு லேடி போன் செஞ்சு, மதியழகன் ரூமுக்கு யாராவது பெண் வந்தாளா என்று விசாரித்தாங்க சார்!''

ஹோட்டல் பணியாள் சொன்ன செய்தியில் அவன் முகம் சுருங்கியது.

''யார் என்று சொன்னாங்களா?'' இறுகிய குரலில் வினவியவனுக்கு, ''பெயர் கேட்டதும் உடனே போனை வச்சிட்டாங்க, சார்!'' என்று பதில் வந்தது.

என்னவோ நடக்கிறது! என்று எண்ணியவனுக்கு எதற்கென்றே புரியாமல், மனதில் கலக்கம் சூழ்ந்தது.

''பட், காலர் ஐடியில் நம்பர் இருக்கும், பார்த்து சொல்கிறேன் சார்!'' என்று விட்டு வரவேற்பு ஆள் சொன்ன எண்ணைக் கேட்டதும், மதிக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

முதலில் ராகினியை இங்கே இருந்து அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்தவன், கதவை லேசாகத் திறந்துவிட்டு, ஒரு கணம் யோசித்தான்.

''இருங்க... முதலில் நான் வெளியே யாராவது இருக்கிறாங்களான்னு பார்க்கிறேன்... அப்புறம் போகலாம்!'' என்றபடி கதவை முழுவதுமாகத் திறந்த மதி. அறை வாசலில் நின்ற சம்யுவைப் பார்த்ததும் திகைத்து நின்றான்.

## 10

மதிக்கு ஆபத்து என்றதும், பதை பதைப்போடு ஓடி வந்த சம்யுக்தா, கதவைத் தட்ட கையை உயர்த்திய நேரம், அறைக் கதவு லேசாகத் திறந்தது.

லேசாகத் திறந்த கதவின் வழியே, மதியின் வார்த்தைகள் காதில் விழ, குழம்பிப் போய் நின்றவள், அவன் பின்னால் நின்ற பெண்ணைக் கண்டதும், மேலும் குழம்பினாள்.

சம்யுக்தாவைக் கண்டதும், ஒரு கணம் திகைத்து நின்ற மதியழகன், ராகினியிடம் திரும்பி, ''நீங்க போங்க!'' என்று அனுப்பி வைத்தான்.

ராகினி சென்றதும், மதி சம்யுவையே வெறித்துப் பார்த்தபடி நிற்க, மதிக்கு ஆபத்து என்ற பதட்டத்துடன் வந்திருந்த சம்யு, அவனுக்கு ஆபத்தில்லை என்று அறிந்ததும், பதட்டம் வடிந்து, சற்றே இயல்பு நிலைக்கு மீண்டிருந்தாள்.

''யார் மதி, அந்தப் பெண்?''

ராகினியைப் பற்றி சம்யு விசாரிக்க, மதிக்கு சற்று முன் ஹோட்டல் பணியாள் சொன்னது நினைவுக்கு வந்தது.

''அதை அப்புறம் சொல்றேன்! நீ என்ன இங்கே திடீர் என்று?'' என்று இறுகிய குரலில் விசாரித்தான்.

''எனக்கு ஒரு போன் வந்தது மதி... உங்களுக்கு...'' என்று ஆரம்பித்த சம்யுவை, மதி கை நீட்டி நிறுத்தினான்.

தாமுதான் ராகினியை இங்கே அனுப்பிவிட்டு, சம்யுக்தாவுக்கும் போன் செய்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

எவனோ ஒருத்தன் தன்னைப் பற்றி தவறாகச் சொன்னால், உடனே அதை சரி பார்க்கக் கிளம்பி வந்து விடுவாளா?

''யாரோ ஒருத்தர் போன் செஞ்சவுடன், உடனே கிளம்பி வந்திட்டே இல்லை?'' என்று மதி அடக்கப்பட்ட ஆத்திரத்தோடு, ஒரு மாதிரிக் குரலில் வினவ,



''பின்னே! அவங்க சொன்ன விஷயம் அப்படி! அப்புறம் நான் எப்படி வராமல் இருக்கிறது?'' என்றாள் சம்யு.

தாமு போனில் என்ன சொல்லி இருப்பன் என்பது தெரிந்ததே என்பதால், மதிக்கு வேதனையும், கோபமும் ஒருங்கே தோன்றியது.

''கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு! ஒரே ஒரு போன் போதும் இல்லை. நீ என்னை சந்தேகப்படுவதற்கு?'' என்றவன் குரலில் இருந்த வருத்தத்தை புரிந்து கொள்ள முடியாமல் சம்யு குழம்பினாள்.

''என்ன மதி? என்ன என்னவோ சொல்றீங்க?''

''எல்லாம் சரியாகத்தான் சொல்றேன்! யாரோ ஒருத்தன் என்னைப் பற்றி தவறா சொல்லிட்டான் என்று உடனே நேரம் காலம் கூடப் பார்க்காமல் வேவு பார்க்க கிளம்பி வந்து விட்டாய்! என் மேல் உனக்கிருக்கும் நம்பிக்கையைப் பார்த்து எனக்கு ஒரே பூரிப்பா இருக்கு!'' என்று எகத்தாளமான குரலில் சொன்னவன்,

''இவ்வளவுதான் நீ என் மேல் வைத்திருக்கிற நம்பிக்கையா சம்யு?'' என்றபோது அவனது குரலில் வேதனையே மிஞ்சி நின்றது.

சம்யுவுக்கு அவன் கேட்பது எதுவும் புரியவில்லை. அவனுக்கு ஆபத்து என்று அவள் ஓடி வந்தால், இவன் அவளையே குற்றம் சாட்டுகிறானே!

''மதி, நீங்க சொல்றது எதுவும் எனக்குப் புரியலை! உங்களுக்கு...'' என்று அவள் பேசத் தொடங்க, மதி கோபத்துடன் இடைப் புகுந்தான்.

''வேண்டாம்! நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்! உனக்கு, என் மேல் நம்பிக்கை இல்லை என்று இதை விட தெளிவா நிரூபணம் செய்ய முடியாது சம்யுக்தா!

உன்னுடைய நம்பிக்கைக்கு ரொம்ப ரொம்ப நன்றி!'' என்று சொன்னவன் கண்களில் இருந்த வேதனையைக் கண்டு, சம்யு அவன் அருகில் வந்து அவனது கையைப் பற்ற முயல, அவன் அவளிடம் இருந்து விலகி நின்றான்.

''மதி!?''

சம்யுவுக்கு, அவள் இங்கே வந்ததை அவன் தவறாகப் புரிந்து கொண்டான் என்று புரிந்தாலும், காரணம் என்னவென்று புரியாமல் திணறினாள்.

''மதி... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க! உங்க மேல் சந்தேகப்பட்டு நான் இங்கே வரலை மதி... தாமு உங்களை...'' என்று ஆரம்பிக்க, தாமுவின் பெயரைக் கேட்டதும், மதிக்கு கோபம் தலைக்கேறியது.

அந்த வக்கிரம் பிடித்தவன் எதோ சொன்னான் என்று அவனது சம்யு அவளைச் சந்தேகப்பட்டு விட்டாள் என்பது, அவனது நேசம் கொண்ட மனதை வாளாய் அறுத்தது.

''போதும்!'' என்று கை நீட்டி அவளை மேலே பேச விடாமல் தடுத்தவன், ''முகம் தெரியாத ஒருத்தன் பேச்சைக் கேட்டு என்னை சந்தேகப்படும், உன்னை நேசிச்சேன் என்று நினைக்கவே எனக்கு அருவெறுப்பா இருக்கு!'' என்று ஆத்திரத்தில் வார்த்தைகளை உதிர்த்தான்.

அவனது வார்த்தைகள், மனதில் அமிலத்தை வாரி இறைக்க, சம்யுவுக்குப் பொறுமை பறந்தது.

என்ன சொல்ல வருகிறாள் என்றே கேட்காமல், அவனே எதோ கற்பனை செய்து கொண்டு பேசுகிறானே என்று அவளுக்கும் கோபம் வர,

''வாய்க்கு வந்ததைப் பேசாதீங்க! நான் உங்களை சந்தேகப்படலை! அப்படி சந்தேகப்பட்டு வந்திரு



க்கணும் என்றால், நேற்றே... அந்த போன் கால் வந்த போதே வந்திருப்பேன்! இன்னைக்கு அந்த தாமு உங்களைப் பார்க்க கோபத்தோடு வந்தான் என்று, உங்க அசிஸ்டென்ட் ரவி கிட்ட இருந்து போன் வந்ததும் பதறி அடிச்சிட்டு வந்தால், என்னிடமே குற்றம் கண்டு பிடிக்கறீங்களா?'' என்று எரிச்சலுடன் மொழிந்தாள்.

''யார் போன் செஞ்சதா, சொன்னாய்?'' என்று மதியழகன் ஆத்திரத்துடன் வினவ, 'எதற்கு இந்தளவு கோபப்படுகிறாள்?' என்று குழம்பிய சம்யுக்தா, ''ரவி!'' என்றாள்.

''பாட்டிக்கு உடம்பு சரி இல்லை என்று அவன் நேற்று முன் தினம் ஊருக்கு போய் விட்டான்! அவன் உனக்கு போன் செஞ்சானா?'' என்று மதி எகத்தாளமாக வினவ, சம்யுக்தா திகைத்து நின்றாள்.

''தாமு எனக்கு ஆபத்து விளைவிக்க வந்தான் என்றால், நீ எனக்கு ஏன் போன் செய்யவில்லை?'' என்று அடுத்த கேள்வி வந்தது.

எதோ நடந்திருக்கிறது! ஆனால், என்னவென்று யோசிக்கக் கூட விடாமல், மதியின் கோபம் அவளை வாட்டியது.

''போன் செஞ்சேன் மதி! நீங்க எடுக்கலை... சைலண்ட் மோடில் வச்சிருக்கீங்க என்று நினைக்கிறேன்!''

''அது சரிதான்! ஏன் ஹோட்டலுக்குப் போன் செஞ்சு என்னை எச்சரிக்கை செய்யவில்லை?''

குற்றவாளியை நிற்க வைத்து கேள்வி கேட்பது போல, மதி கேள்விகளை அடுக்கியது வருத்தத்தைத் தந்தாலும், இந்தக் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல இயலவில்லை!

ஹோட்டலுக்கு பின் செய்திருக்கலாம்தான்! ஆனால், மதிக்கு ஆபத்து என்ற அச்சத்தில் அவளது மூளை

தெளிவாக வேலை செய்யவில்லை என்று சொன்னால், இவன் ஒப்பக் கொள்ளவாப் போகிறான்!?

அவள் அமைதியாக நின்றதும், "என்னை எச்சரிக்க முயற்சி செய்யவில்லை! ஆனால், என்னைப் பார்க்க ஏதாவது பெண் வந்தாளா? என்று மட்டும் ஹோட்டலுக்கு போன் செய்து விசாரிக்க முடிந்தது இல்லையா?" என்று மதி குற்றம் சாடும் குரலில் சொல்ல, சம்யுவுக்கு தலை சுற்றியது.

"நான் போன் செய்தேனா? என்ன சொல்றீங்க மதி?" என்று அவள் குழப்பத்துடன் வினவ,

"பின்னே! உன் எண்ணில் இருந்து வேற யார் செய்தது? அவளை இங்கே அனுப்பியது தாமு! அவன்தான் உனக்கும் போன் செஞ்சு என்னைப் பற்றி தவறாக இருக்கிறான்! அவன் சொன்னதை சரி பார்க்க, முதலில் ஹோட்டலுக்கு போன் செய்து விசாரித்திருக்கிறாய்! பின்னாலேயே நேரில் சரி பார்க்க கிளம்பி வந்து விட்டாய்!"

அழுத்தம் திருத்தமாக மதி சொன்னதும், சம்யுக்தாவுக்கு கோபம் வந்தது.

"மதி... ப்ளீஸ்! உங்க கற்பனையை நிறுத்திட்டு, நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க!" என்று அழுத்தத்துடன் சொன்னதும், கோபமாக முறைத்தவனைக் கண்டு கொள்ளாமல், சொல்ல ஆரம்பித்தாள்.

"நேற்று எனக்கு ஒரு போன் வந்தது... இங்கே நீங்க பெண்களோடு..." என்று போனில் அந்த முகம் தெரியாதவனின் அழைப்பை முழுவதுமாகச் சொன்னவள், "நான் கோபமாக பேசி அந்த போனை கட் செஞ்சிட்டேன்!" என்று முடித்தாள்.



"இதை ஏன் நேற்றே என்னிடம் சொல்லவில்லை?" என்று நம்பிக்கை இல்லாத குரலில் மதியழகன் வினவ, சம்யுக்தாவுக்கு வருத்தமாக இருந்தாலும், அவன் கேள்வி நியாயமானதுதான் என்று தோன்றியது!

அவனது மனநிலையைக் கெடுக்கக் கூடாது என்று எண்ணி தான் மறைத்த விஷயம், இன்று தனக்கே எதிராகிப் போனதை நினைத்து நொந்து போனவளுக்கு, மதி இப்போதிருக்கும் மனநிலையில் தான் சொல்லும் காரணத்தை ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று புரிந்தது.

அவள் அமைதியாக நிற்பதைக் கண்டு, "ஒரு பொய்யை மறைக்க, இன்னொரு பொய் சொன்னவளுக்கு இப்போது வார்த்தை வரவில்லையா?" என்று வார்த்தைகளால் அவளைக் காயப்படுத்தியவன், "நீ இங்கே இருந்து போயிடு சம்யுக்தா. எனக்கு உன்னைப் பார்க்கவே பிடிக்கலை!" என்றபோது குரலில் கோபம் இருந்த அளவு வேதனையும் இருந்தது.

அவன் கோபமாக இருக்கும்போது, தானும் அதைக் கிளறி விடுகிற மாதிரி பேசக்கூடாது என்று முடிவு செய்தவளாக,

"மதி ப்ளீஸ்! நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க! நான் உங்களை எப்பவும் சந்தேகப்பட்டதில்லை! ஏன், இப்போ இந்த நேரத்தில் உங்க கூட ஒரு தனியா பெண் இருக்கிறதைப் பார்த்து கூட, நான் உங்ககிட்ட இருந்து விளக்கம் கேட்கலையே?" என்று தன் பக்கத்தை விளக்க முயல, மதிக்கு கோபம் கூடியதே தவிர குறையவில்லை.

"சந்தேகம் இல்லாமல்தான், வந்தவுடனேயே அவளைப் பற்றி விசாரித்தாயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டவன்,

''இப்போ, அந்தப் பெண் இங்கே வந்தாள் என்று என்னால் விளக்கம் கொடுக்க முடியும். ஆனால் நான் அதைச் செய்ய விரும்பவில்லை! யாரோ ஒருத்தன் ஏதோ சொன்னான் என்று என்னைச் சந்தேகப்பட்ட உன்னிடம் விளக்கம் சொல்ல எனக்கு விருப்பமில்லை! நான் இருக்கும் துறை பற்றி உனக்கு ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்! இந்த மாதிரி சூழ்நிலைகள் எப்போ வேண்டுமானாலும் வரலாம்! எல்லா நேரத்திலும் நான் விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்க முடியாது!''

''அந்த தாமு என்ன நினைத்து இதை எல்லாம் செய்தானோ தெரியாது! ஆனால், உன்னைப் பற்றி, என் மேல் உனக்கிருக்கும் அபிப்ராயம் பற்றி புரிந்து கொள்ள எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்ததற்காக, அவனுக்கு நான் நன்றி சொல்லத்தான் வேண்டும்!'' என்று விரக்தியான குரலில் சொன்னவன் வார்த்தைகள், சரியாகத்தான் தன் காதில் விழுந்ததா என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, அடுத்து மதியழகன் உதிர்த்த வார்த்தைகள் அவளை அதிர்ச்சியில் ஆழ்த்தின.

''எப்போ நீ என்னை சந்தேகப்பட்டு இவ்வளவு தூரம் வந்தாயோ, அப்பவே உனக்கும் எனக்கும் உள்ள உறவு முடிந்து விட்டது!''

'கடவுளே! இவன் சுய நினைவோடுதான் பேசுகிறானா?' என்ற சந்தேகம் தோன்ற, அவனது கண்களை ஆழ்ந்து பார்க்க முயல, அவன் முகம் திருப்பிக் கொண்டான்.

முயன்று தன்னை சமாளித்துக் கொண்டவள், ''நீங்க கோபத்தில் இருக்கீங்க! நான் என்ன சொன்னாலும் உங்களுக்குப் புரியப் போறதில்லை! ஆனால், இதுக்கு



மேல் எதுவும் பேசாதீங்க! வார்த்தைகளை விட்டு விட்டால் அதை திரும்ப அள்ள முடியாது!'' என்று எச்சரித்த சம்யு, அங்கிருந்து கிளம்ப முயன்றாள்.

அவள் நிதானமாகப் பேசியதே, மதிக்கு ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

'எவனோ சொன்னான் என்று சந்தேகப்பட்டவள், எனக்கே அறிவுரை சொல்கிறாளோ?' என்று தோன்ற,

''நில்லு சம்யுக்தா! இதுதான் நாம் பேசும் கடைசி முறையாக இருக்கலாம்! அதனால் மீதியையும் கேட்டு விட்டு போ!'' என்றான்.

அவனது கடைசி முறை என்ற சொல், சம்யுக்தாவின் மனதை கலங்க வைத்தது.

''உன்னை சந்தித்ததுதான் என் வாழ்வில் நடந்த இனிமையான நிகழ்வு என்று இத்தனை நாள் நினைத்துக் கொண்டிருந்தேன்! ஆனால், அதுதான் என்னுடைய துரதிர்ஷ்டம் என்று இப்போதான் புரிகிறது!'' என்று வார்த்தைகளைக் கொட்டியவன், அவள் அதிர்ந்து நோக்கியதை பொருட்படுத்தாமல்,

''இனிமேல், உன்னைப் பார்க்கும் சந்தர்ப்பமே கிட்டாமல் இருந்தால் நான் சந்தோஷமாக இருப்பேன்!'' என்று முடித்தான்!

கொஞ்ச நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

சொல்லி விட்டு அவன் திரும்பி நிற்க, சம்யுவுக்கு தண்ணீர் துளிர்த்தது.

அவர்களுக்குள் இருக்கும் உறவு அவ்வளவுதானா?

ஒரு சின்ன மனஸ்தாபத்தில் பிரிந்து விடக் கூடிய அளவுக்கு, பலவீனமானதா அவர்களது நேசம்?

மதியின் வார்த்தைகளில் திகைத்து நின்று கொண்டிருந்தவள், சமாளித்துக் கொண்டு, நேராக அவன் முன் சென்று நின்றாள்.

''சொல்லக் கூடாத வார்த்தை எல்லாம் சொல்லிட்டீங்க, மதி! அமைதியாக உட்கார்ந்து யோசித்து பார்த்தீங்கன்னா, நீங்க பேசினது எல்லாம் தப்பு என்று உங்களுக்கே புரியும்! இதற்கு மேல் நான் எதுவும் பேச விரும்பலை! நான் கிளம்பறேன்!'' என்றவள் வாயிலை அடையும் போது, அவனது குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.

''நான் சொன்னதை உணர்ந்துதான் சொன்னேன் சம்யுக்தா! இன்னொரு முறை தெளிவாக சொல்லுகிறேன்! உன்னை இங்கே இருந்து மட்டுமில்லை, என்னோட வாழ்க்கையில் இருந்தே போகச் சொன்னேன்!'' என்ற மதியின் உறுதியான குரல், இவ்வளவு நேரம் தன் வேதனையை அடக்கிக் கொண்டு அமைதியாக இருக்க முயன்றவளை, ஸ்தம்பிக்க வைத்தது.

''எஸ்! ஐ செட், ஜஸ்ட் கெட் அவுட் ஆஃப் மை லைஃப்!'' என்று வார்த்தைக்கு வார்த்தை அழுத்தத்துடன் மொழிந்தவன், அதே அழுத்தத்துடன் அவள் புறம் திரும்ப, சிலை போல் அவள் திகைத்து நின்ற தோற்றம், அவன் மனதை லேசாக இளக்கியது.

தன்னையும் அறியாமல், அவள் புறம் சென்ற கால்களை அடக்கியபடி, இதற்கு மேல் இங்கே நின்றால், தன் மனம் மாறி விட வாய்ப்பு இருக்கிறது என்று பயந்தவனாக, உள்ளே இருந்த அறைக்குள் சென்றவன், கதவை அறைந்து சாத்தினான்.

சுற்றுப் புறம் மறந்து கலங்கி நின்றிருந்த சம்யுவுக்கு, அவன் கதவை அறைந்து சாத்திய சப்தத்தில் சுய உணர்வு வந்தது.



என்ன வார்த்தை சொல்லி விட்டான்! கோபத்தில் வந்த வார்த்தைகள்தான் என்றாலும், அதன் அர்த்தம் மாறி விடுமா என்ன?

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு! என்பதற்கு இதை விட சிறந்த உதாரணம் இருக்க முடியுமா?

இன்னமும், மதி அந்த வார்த்தைகளைச் சொன்னான் என்பதை அவளது மனம் நம்ப மறுத்தது.

இதெல்லாம் ஒரு கொடிய கனவாக இருக்கக் கூடாதா என்று எண்ணியவளின் பார்வை, ஏக்கத்துடன் மூடி இருந்த கதவில் படிய, அவளுக்குத் தன் மேலேயே எரிச்சல் வந்தது.

என்னதான் காதலிக்கிறவன் என்றாலும், தன்னை வாழ்க்கையை விட்டே வெளியே போ என்று சொன்ன பிறகும், அவன் வந்து பேசுவான் என்று எதிர்பார்த்து நிற்கும் அளவுக்கா அவள் தன்மானம் அற்றுப் போய் விட்டாள்?

கோபத்துடன் தலையைக் குலுக்கியவள், வேகமாக அங்கே இருந்து அகன்றாள்.

அவன் சொன்ன வார்த்தைகள் தவறென்று உணர்ந்து, அவனே வந்து பேசினால் ஒழிய, தானாக அவனிடம் போகக் கூடாது என்று மனம் உறுதியாக முடிவெடுத்தது.

வரும் வழியெல்லாம், மனம் கொந்தளித்துக் கொண்டிருந்த போதும், அனிச்சை செயலாக, கைகள் வண்டியை ஓட்டின.

வாயிலிலேயே நின்று, ''என்னடா இது? எங்கே போறேன்னு கூட சொல்லாமல் போய் விட்டாய்? போன் செஞ்சாலும் எடுக்கலை! நாளைக்கு நிச்சயத்தை வைத்துக் கொண்டு இப்படியா செய்யறது?'' என்று கோபத்

துடன் கேள்விகளை அடுக்கிய ராஜேஸ்வரி, மகளின் கலங்கிய முகத்தைக் கண்டதும்,

''சம்மு!? என்னடா? ஏன்டா முகம் இப்படி வாடி இருக்கு! கண்ணெல்லாம் கலங்கி இருக்கு? என்னடா ஆச்சு?'' என்று பதட்டத்துடன் விசாரித்தார்.

''என் பிரெண்ட் ஒருத்திக்கு ஆக்சிடென்ட் ஆயிடுச் சும்மா... அதான் பார்த்துட்டு வந்தேன்!'' என்றவளுக்கு அதற்கு மேல் முடியாமல் கேவல் வந்துவிட, அன்னையின் தோளில் சாய்ந்து விம்மி அழுதாள்.

''சம்மு! உள்ளே வா!'' என்று அவளை உள்ளே நடத்திச் சென்று சோபாவில் அவளை அமர்த்தி விட்டுத் தானும் அமர்ந்த ராஜேஸ்வரி, ''சம்மு! அழாதேடா! ரொம்ப பெரிய அடியா?'' என்று கவலையுடன் வினவ,

மெல்ல அவரது தோளில் இருந்து நிமிர்ந்த சம்யு, ''ஆமாம்!'' என்பதைத் தலையசைத்தாள்.

''உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே?'' என்று மெல்லியக் குரலில் வினவினார் ராஜேஸ்வரி.

மதியின் வார்த்தைகள் இன்னும் காதில் ஒலிக்க, மனதில் இருந்த வலி அதிகமாகியது.

''உயிர் மட்டும்தான் இருக்கிறது!'' என்று கேவலுடன் சொல்லி விட்டு, மீண்டும் அவள் அன்னையைக் கட்டிக் கொண்டவளின் கண்களின் கண்ணீர் அருவி ஊற்றெடுத்தது.

''உயிருக்கு ஆபத்தில்லைதானே குட்டிம்மா! சரியா போயிடும்டா... நீயே பாரு, உன் கல்யாணத்துக்கு அவள் நல்லபடியாக வருவாள்!'' என்று அழும் மகளின் முதுகை ஆறுதலாக வருடியவாறே ராஜேஸ்வரி சொல்ல, சம்யு விலுக்கென நிமிர்ந்தாள்.



அவ்வளவு பேசினவன், நிச்சயத்தை நடக்க விடுவானா?

நிச்சயத்தை நிறுத்தி விடுவானோ? என்று கலக்கம் தோன்ற, அந்தக் கலக்கம் அவளது கண்களிலும் வெளிப்பட்டது.

''சம்மு! நான் சொல்றேன் இலலை! எல்லாம் சரியாப் போயிடும்! போ! போய் படு! நாளைக்கு நிச்சயத்தை வைத்துக் கொண்டு இப்படி அழுது கரையாதே!'' என்று கொஞ்சம் கண்டிப்புடன் ராஜேஸ்வரி சொல்ல, சம்யு எழுந்து தன் அறைக்கு வந்தாள்.

என்ன என்ன வார்த்தை சொல்லி விட்டான்!

அவன் மேல் அவள் வைத்திருக்கும் அளவில்லாத நேசத்துக்கு, இதுதான் அவன் தரும் பரிசா?

துடைக்கத் துடைக்க கண்ணீர் பெருகியது!

முட்டாள் மாதிரி அவன்தான் பேசி விட்டான் என்றால், இவள் எதற்காக அழுது கரைய வேண்டும்?

வேகமாக குளியலறைக்குச் சென்று ஷவரின் அடியில் நிற்க, குளிர்ந்த நீர் அழுகையை நிறுத்தி, கொதித்துக் கொண்டிருந்த மனதையும் சமனப்படுத்தியது.

உடை மாற்றிக் கொண்டு கட்டிலில் வந்து அமர்ந்தவள், தெளிவாக யோசிக்க முயற்சி செய்தாள்.

மதிக்கு ஆபத்து என்று சம்யுவுக்கு போன் வந்தது.

இவள் பதறி அடித்துக் கொண்டு அங்கே சென்றால், அவன் அறையில் இருந்து ஒரு பெண் வெளியே வருகிறாள்.

மதியோ, இவள் சந்தேகப்பட்டு அங்கே வந்ததாக எண்ணுகிறான்.

நடந்ததை மீண்டும் அசை போட்டவளுக்கு, ஒன்று தெளிவாகப் புரிந்தது.

அந்த தாமுதான் எல்லாவற்றுக்கும் காரணம்!

நேற்று, மதியைப் பற்றித் தவறாகப் பேசி அவளை ஹோட்டலுக்கு அனுப்ப முயன்றான்.

அது நடக்கவில்லை என்றானதும், இன்று வேறு மாதிரி சொல்லி, அவளை ஹோட்டலுக்கு அனுப்பி இருக்கிறான்.

அந்தப் பெண்ணிடமும் ஏதோ சொல்லி மதியின் அறைக்கு அனுப்பி இருக்கிறான்.

ஆக மொத்தம், மதியின் வாழ்வைக் கெடுக்க சதித் திட்டம் செய்திருக்கிறான்.

இந்த மதியும் அந்த சதியில் வீழத் தயாராகி விட்டான்.

முட்டாள், மரமண்டை என்று மதியை மனதுக்குள் திட்டியவளுக்கு, அவன் பேசியதில் வருத்தம் குறைய வில்லை என்றாலும், கோபம் குறைந்திருந்தது.

அந்தப் பெண் இருக்கும் சமயம் இவள் அங்கே சென்றதும், அய்யாவுக்கு இவள் சந்தேகப்பட்டு வந்து விட்டாள் என்று தோன்றி விட்டது போல!

தன் மேல் நம்பிக்கை இல்லை என்று குதித்தானே? நான் அவனைச் சந்தேகப்பட மாட்டேன் என்று என் மேல் நம்பிக்கை இருந்ததா அந்த முட்டாளுக்கு? என்று கோபம் கொண்டவளுக்கு, தனக்குப் புரிந்ததைப் போலவே, அந்த மாங்காய் மடையனுக்கும் உட்கார்ந்து யோசித்தால் புரிந்து விடும் என்று தோன்ற, இரண்டு மணி நேர வேதனைக்குப் பிறகு, மெல்லிய முறுவல் மலர்ந்தது.

தோன்றிய முறுவல் மலர்ந்த வேகத்திலேயே மறைய, "இருந்தாலும் அவன் அந்த வார்த்தை சொல்லலாமா?



அதைக் கேட்ட பிறகும் அவன் பின்னால் செல்லும் உனக்கு சுயமரியாதை என்று ஒன்று கிடையாதா?" என்று மூளை முரண்டியது.

"சொன்னது தப்புதான்! அதற்காக அவன் சொன்ன மாதிரி அவனை விட்டு விலகி விடுவாயா? அவ்வளவு தான் உன் காதலா?" என்று அவளது காதல் கொண்ட மனம் எதிர் கேள்வி கேட்டது.

இந்த வாக்குவாதத்துக்கு இடையில், ஒரு வேளை கோபம் குறையாமல், அவன் நிச்சயத்தை நிறுத்தி விட்டால்? என்ற சந்தேகம் தோன்ற, மனம் பதறியது.

அவர்கள் சந்தித்து இரண்டு மணி நேரம் ஆகிறது! இதற்குள், அவன் வீட்டுக்கு சென்றிருப்பான்.

நிச்சயத்தை நிறுத்தும் எண்ணம் இருந்தால், இந்நேரம் இங்கேயும் செய்தி வந்திருக்குமே என்று மனதைத் தேற்றிக் கொண்டவள், 'என்னைப் பார்க்காமல் இருந்தால் சந்தோஷமா இருப்பாயா? உன்னை அவ்வளவு சீக்கிரம் விட்டு விடுவேனா? நீ சொன்ன அந்த வார்த்தைகளுக்கு, உனக்கு என்ன தண்டனை தரப் போகிறேன் பார்!' என்று மனதுக்குள் கருவியவள், உடனே,

"என்னதான் கோபம் என்றாலும், ஏன்டா அப்படி ஒரு வார்த்தை படி சொன்னாய்?" என்று மனதுக்குள் அவனிடம் சண்டையிட்டு விட்டு, வெகு நேர உணர்ச்சிப் போராட்டத்தின் முடிவில், தன்னையும் மீறி, மெல்ல உறங்க ஆரம்பித்தாள்.

* * *

கதவை அறைந்து சாத்தியத்தைப் போலவே மனக் கதவையும் சாத்த முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், என்று மனதுக்குள் வேதனையுடன் புலம்பிக் கொண்டிருந்தான் மதியழகன்.

தான் உயிராக நேசிக்கும் பெண், தன்னை சந்தேகப் பட்டு விட்டாள் என்பது அவனது காதல் கொண்ட மனதை ரணமாக்கி இருந்தது.

அவ்வளவுதானா அவளது காதல்? அவளது நம்பிக்கை? என்று மனம் விடாமல் அரற்றிக் கொண்டிருந்தது.

தன்னை மணந்து கொள்ளும் பெண் தன்னைப் புரிந்தவளாக இருக்க வேண்டும், தன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று எண்ணியது அத்தனைப் பெரியக் குற்றமா என்ன?

அந்த தாமு சொன்னான் என்று என்னை சந்தேகப் பட்டு விட்டாளே?

தன் மேல் நம்பிக்கை இல்லாதவள், கலங்கி நின்றாள் என்றதும், அவளைத் தேற்றத் துடித்த மனதை நொந்தபடி, தனது முஷ்டியால் சுவரைக் குத்தியவனின் கோபம் பெருகியதே தவிர குறையவில்லை!

சம்யு என்னை நம்பவில்லை! என்னை சந்தேகப்பட்டு விட்டாள்! என்று எண்ணி எண்ணி தன் மனதை மேலும் காயப்படுத்திக் கொண்டவனுக்கு, தலை வலித்தது.

இந்த அழகில் நாளைக்கு நிச்சயம்! நிச்சயம் என்று நடந்த பிறகு, திருமணத்தை எப்படித் தடுக்க முடியும்?

தன் மேல் நம்பிக்கை இல்லாதவளை, எப்படி திருமணம் செய்து கொள்ள முடியும்? என்று யோசித்தவனுக்கு, நிச்சயத்தை நிறுத்தும் வழி புலப்படவில்லை!

வீட்டில் இருப்பவர்கள், காரணம் கேட்டால் என்னவென்று சொல்லுவான்?

நான் காதலித்த பெண்ணுக்கு என் மேல் நம்பிக்கை இல்லை என்றா?



அன்னை, திருமணம் செய்து கொள் என்று வற்புறுத்திய போதெல்லாம், காதல் திருமணம் செய்தால்தான், புரிதல் கொண்ட மனைவி கிடைப்பாள் என்று சொல்லிக் கொண்டிருந்தவன், எந்த முகத்தோடு, காதலித்தவளுக்கே தன் மேல் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவான்?

இந்த யோசனை ஓடும்போதே, ஒரு வேளை, சம்யுக்தாவை இழக்க மனமில்லாமல் தன் மனம் சப்பை கட்டு கட்டுகின்றதோ என்ற எண்ணம் தோன்ற, பலமாக தலையைக் குலுக்கியவன், 'என் மேல் முழு நம்பிக்கை வைக்கும் ஒருத்திக்குத்தான் என் மனைவி என்ற உரிமை!' என்று ஆத்திரத்துடன் தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டு, வேகமாக சென்று காரை எடுத்தான்.

'என்ன ஆனாலும் சரி! என் மேல் நம்பிக்கை இல்லாதவளோடு திருமணம் நடக்காது! இந்த நிச்சயம் நடக்க விட மாட்டேன்!' என்று மனதுக்குள் சூளுரைத்தவனின் கைகளில் கார் பறந்தது.

## 11

சிறிது நேரத்துக்கு முன்தான் உறங்க ஆரம்பித்த சம்யுவுக்கு, கதவை யாரோ பலமாகத் தட்டும் சப்தத்தில் விழிப்பு வந்தது.

மெல்ல திரும்பி மணியைப் பார்த்தவளுக்கு, நள்ளிரவு இரண்டு மணி என்பது புரிய, இவ்வளவு சீக்கிரமே எதற்கு அம்மா எழுப்புகிறார்கள்? என்று யோசித்தபடி எழுந்து வந்து கதவைத் திறந்தவள், கலங்கிய முகங்களோடு வெளியே நின்று கொண்டிருந்த பெற்றோரையும், தம்பியையும் பார்த்ததும் அதிர்ந்தாள்.

'கடவுளே! மதி நிச்சயத்தை நிறுத்தி விட்டானா என்ன?'

அந்த எண்ணம் தோன்றியதுமே, மனம் பதறத் துவங்க,

"என்னம்மா?" என்று அன்னையிடம் விசாரித்தவளின் குரல் காற்றாய் வெளிவந்தது.

ஒன்றும் சொல்லாமல், ராஜேஸ்வரி சம்யுவின் அருகில் வந்து அணைத்துக் கொண்டார்.

அன்னையின் உடல் அழுகையில் குலுங்குவதை உணர்ந்தவள், "என்னப்பா?" என்று பரிதவிப்புடன் வினவ, தந்தையும் தயங்கி நின்றார்.

"அகில்! நீயாவது சொல்லேண்டா? என்ன ஆச்சு?" சற்றே குரல் உயர்த்தி சம்யு வினவ, அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

"பதட்டப்படாதே சம்யு! வந்து... மதி..." என்று தந்தை தயங்க, தான் நினைத்தேதான் என்று எண்ணிய சம்யு.

"எதுவா இருந்தாலும் சொல்லிடுங்கப்பா!" என்று முயன்று வரவழைத்த இயல்பான குரலில் சொன்னாள்.

"மதிக்கு ஆக்சிடென்ட் ஆகிடுச்சு சம்யு! இப்போ ஹாஸ்பிடல்ல இருக்காரு. மதியோட அப்பா இப்போ தான் போன் செஞ்சார்!"

எதையோ எதிர்பார்த்து காத்திருந்த சம்யுவுக்கு, தந்தை சொன்ன தகவலில் மனம் அதிர்ந்தது.

சிறிது நேரம், தந்தை சொன்னது புரியாதவளைப் போல, மலங்க மலங்க விழித்துக் கொண்டு நின்றாள்.

அவளது திகைத்த தோற்றத்தைக் கண்ட அகிலன், "அக்கா!" என்று மென்மையாக அழைத்து, அவளை லேசாக உலுக்கினான்.



திடுக்கிட்டவளாய், தம்பியை நிமிர்ந்து நோக்கியவள், "என்ன ஆச்சு?" என்று குரல் எழும்பாமல் வினவினாள்.

அவள் உதட்டசைவில் அவளது கேள்வியைப் புரிந்து கொண்ட அகிலன், "மதி அத்தான் ஓட்டிப் போன கார் எதிரே வந்த லாரி மேல் மோதிடுச்சு!" என்று மெல்லியக் குரலில் கூற, சம்யுவின் மனதோடு உடலும் அதிர்ந்தது.

அந்த அதிர்வில், அவளது தோளில் முகத்தைப் பதித்து அழுது கொண்டிருந்த ராஜேஸ்வரி திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"சம்மு! என்னம்மா?" என்று அவர் பதற, "எனக்கு... எனக்கு உடனே... மதி மதியைப் பார்க்கணும்!" தட்டுத் தடுமாறி சொன்னவளின் விழிகளில் கண்ணீர் பொங்கியது.

"இப்போ பார்க்க முடியாது சம்யு! ஐ.சி.யூவில் இருக்காராம். போனாலும் பார்க்க முடியாது!" என்று தந்தை மெல்லக் கூற,

"இல்லைப்பா! எனக்கு மதியை உடனே பார்க்கணும்!" என்று சொல்லிவிட்டு, சம்யு அழ ஆரம்பித்தாள்.

"அக்கா! அழாதே... போகலாம்!" என்ற அகிலன், அவளது கையைப் பற்றி அழைத்துச் சென்று காரில் அமர வைத்தான்.

"நானும் வரேன்!" என்ற ராஜசேகரிடம், "இல்லைப்பா... அம்மா ரொம்ப உடைஞ்சு போய் இருக்காங்க... நீங்க அவங்க கூட இருங்க, இப்போ வந்தாலுமே அவரைப் பார்க்க முடியாது!" என்ற அகிலன்,

"எப்படியும் நாளைக்கு நிச்சயம் நடக்கப் போறதில்லை... அதை வேற ஹோட்டலில் இருக்கும் சொந்தக்காரங்களுக்கு சொல்லி ஆகணும் இல்லை?" என்று சொல்லி விட்டுக் காரை எடுத்தான்.

''கடவுளே! என் மதிக்கு எதுவும் ஆகி இருக்கக் கூடாது!'' என்று இடைவிடாமல் பிரார்த்தனை செய்த சம்யுக்தாவுக்கு, அன்று இரவு, மதி அவளைப் பார்த்து சொன்ன வார்த்தைகளோ, தான் அவன் மீது கொண்ட கோபமோ, எதுவுமே நினைவுக்கு வரவில்லை!

மருத்துவமனையில் அவளைக் கண்டதும், ஓடி வந்து அணைத்துக் கொண்டு அழுத காஞ்சனாவைத் தேற்ற இயலாமல், சம்யுவும் அழுது கரைந்தாள்.

மதியின் விபத்து அகிலனையும் உலுக்கி இருந்தது. இருந்தாலும், சம்யு அழுது கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, ''அக்கா... ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர்செல்ப்! ஆன்ட்டிக்கு ஆறுதல் சொல்றதை விட்டுட்டு நீயும் அழுது கொண்டிருந்தால் எப்படி?'' என்று தமக்கையைக் கட்டுப்படுத்த முயன்றான்.

தம்பி சொன்னது புரிய, காஞ்சனாவின் முதுகை ஆறுதலாக வருடிய, ''மதிக்கு எதுவும் ஆகாது அத்தை! அழாதீங்க!'' என்று மெல்லியக் குரலில் ஆறுதல் சொல்ல,

''ஹய்யோ! உடம்பு பூரா ரத்தம், சம்யு! முகமே தெரியலை! அப்படி என் பிள்ளையைப் பார்த்துட்டு என்னால் அழாமல் எப்படி இருக்க முடியும்?'' என்று அழுகைக்கிடையில் சொல்லிவிட்டு, காஞ்சனா அழ, அவர் சொன்னதைக் கற்பனையில் கண்ட, சம்யுவாலும் கண்ணீரை அடக்க இயலவில்லை.

''காஞ்சனாம்மா... பிள்ளை நல்லபடியா பிழைத்து வரணும் என்று கடவுளை வேண்டாமல், இப்படி அழுது கொண்டிருந்தா என்ன அர்த்தம்?'' என்று மருமகனை அடக்கிய அன்பழகன்,



''சம்யு... படிச்ச பொண்ணு... நீயே இப்படி இருந்தால் எப்படி?'' என்று சம்யுவையும் அடக்க, பெண்கள் இருவரும் அழுகையை நிறுத்தி விட்டு, அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தனர். அருகே, அறிவழகன், கண்களை மூடியபடி வேதனை படிந்த முகத்தோடு அமர்ந்திருந்தார்.

''என்ன ஆச்சு தாத்தா?'' என்று மெல்லியக் குரலில் அகிலன் விசாரிக்க,

''ரொம்ப ரேஷா டிரைவ் செஞ்சிருக்கான்! சீட் பெல்ட்டும் போடலை! தலைல பயங்கர அடி! ரெண்டு கைகளிலும் அடி! ரத்தம் ரொம்ப சேதமாயிருக்காம். உடனே ஆபரேஷன் செய்யணும் என்று டாக்டர் சொல்லிட்டார். ஆபரேஷன் நடந்திட்டு இருக்கு!''

அன்பழகன் மெல்லச் சொன்னது, சம்யுவின் காதிலும் விழுந்தது.

''ரேஷ் டிரைவிங்!''

மதியழகனுக்கு சற்றும் பிடிக்காத ஒன்று!

குறைந்த தூரமே பயணம் சென்றாலும், சீட் பெல்ட் அணியாமல் வண்டி ஓட்டாதவன்!

இன்று, அவன் செய்யாத இரண்டையும் செய்திருக்கிறான் என்றால், அவனது மனம் ஒரு நிலையில் இல்லாமல் இருந்திருக்கிறது!

அதற்குக் காரணம்?

யோசித்த சம்யுவுக்கு, இந்த விபத்துக்கு முழுக்க முழுக்க தானே காரணம் என்று தோன்றியது.

அவளிடம் அவன் சண்டையிட்டான்தான்! சொல்லக் கூடாத வார்த்தைகளை சொன்னான்தான்!

ஆனாலும், அவனைச் சமாதானப் படுத்தாமல், முறுக்கிக் கொண்டு வந்தது தன் தவறு என்று தோன்ற, தாத்தாவின் அதட்டலில் நின்றிருந்த கண்ணீர் மீண்டும் பொழியத் தொடங்கியது.

''என்னால்தான்! என்னால்தான்!'' என்று மனதை வருத்திக் கொண்டவளை, அந்தக் கணமே மதியைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அலைக்கழித்தது.

கலக்கம் நிறைந்த நீண்ட இரவாய் அந்த இரவு கழிய, காலை ஏழு மணிக்கு சிகிச்சையை முடித்து விட்டு மருத்துவர் வெளியே வந்தார்.

ஆபரேஷன் நடக்கும் அறை வாயிலிலேயே காத்திருந்தவர்கள், அவரைச் சூழ்ந்து கொள்ள, ''மதியோட பேரண்ட்ஸ் மட்டும் என் ரூமுக்கு வாங்க!'' என்று சொல்லி விட்டு, தன் அறைக்குச் சென்று விட்டார் மருத்துவர்.

மதியின் தந்தை அறிவழகனும், தாத்தா அன்பழகனும் மருத்துவரிடம் செல்ல, நடுங்கிக் கொண்டிருந்த காஞ்சனாவின் கையைப் பற்றிக் கொண்ட சம்யுவின் கரமும் நடுங்கியது.

''மதி எப்படி இருக்கான் டாக்டர்?''

நடுக்கத்தை மறைத்துக் கொண்டு அன்பழகன் விசாரிக்க,

''தலையில் பலமா அடி பட்டிருக்கு... ஒரு கையில் எலும்பு முறிவு! தலையில் ஆபரேஷன் செஞ்சிருக்கோம்! உடைந்த கண்ணாடி சில் மூளையையும் பதம் பாத்திருக்கு... ரொம்ப முயற்சி செஞ்சு அதை எல்லாம் சரி செஞ்சிருக்கோம்!''

மருத்துவர் சொன்னதும், ''உயிருக்கு எதுவும் ஆப...?'' என்ற அறிவழகனின் கேள்வி பாதியில் நிற்க,



''இப்போதைக்கு ஒன்றும் சொல்ல முடியாது மிஸ்டர் அறிவழகன்! மூளையிலும் அடிபட்டு இருப்பதால், எந்த நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்!'' என்ற மருத்துவர், கேட்டிருந்த இருவர் முகங்களும் பீதியில் உறைவதைக் கண்டு,

''நல்லதே நடக்கும் என்று நம்புவோம்! இன்னும் ரெண்டு நாட்களில் அவர் கண்விழிச்சிட்டா, உயிருக்கு ஆபத்து இருக்காது!'' என்று கொஞ்சமே கொஞ்சம் நம்பிக்கையுடன் சொல்ல, இருவருக்கும் நின்றிருந்த மூச்சு வெளிவந்தது.

''மதியை இப்போ பார்க்கலாமா டாக்டர்?'' என்று அறிவழகன் மருத்துவரிடம் விசாரிக்க,

''இன்னும் இரண்டு மணி நேரத்தில், ஐ.சி.யுவுக்கு மாற்றி விடுவாங்க. அப்போ பார்க்கலாம், பட் கூட்டமா போகாதீங்க, எந்த தொந்தரவும் செய்யாமல் சீக்கிரமா வெளியே வந்திடணும்!'' என்றார் அவர்.

தலையாட்டி விட்டு வெளியே வந்த இருவரையும், டாக்டரின் அறை வாயிலிலே நின்று கொண்டிருந்த சம்யுவும், காஞ்சனாவும் பயத்துடன் நோக்க,

அவர்களை மேலும் கலவரப் படுத்த வேண்டாம் என்று எண்ணிய அன்பழகன் ''உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையாம்! ஆனால், விழிக்க ரெண்டு நாள் ஆகும் என்று சொல்லி இருக்கார்!'' என்று சொல்ல, அதுவரை பயத்தோடு நின்றிருந்த காஞ்சனா, ''இப்போ மதியைப் பார்க்கலாமா, மாமா?'' என்று ஆர்வத்துடன் வினவினார்.

''இல்லைம்மா, இரண்டு மணி நேரத்தில் ஐ.சி.யு. ரூமுக்குக் கூட்டிட்டு வந்தவுடன் பார்க்கலாமாம்!''

அன்பழகன் சொன்னதும் சோர்வுடன் வந்து அமர்ந்த காஞ்சனாவின் அருகில் வந்து அமர்ந்தாள் சம்யுக்தா.

என்னதான் மதியின் தந்தை நம்பிக்கை அளிக்கும்படி பேசினாலும், அவரது கண்களில் இருந்த கலக்கம் சம்யுக்தாவுக்கு பயத்தை அளித்தது.

'கடவுளே! என் மதிக்கு எந்த ஆபத்தும் நேராமல் காப்பாற்று!' என்று மனம் மீண்டும் கடவுளிடமே சரணடைந்தது.

மேலும் இரண்டு மணி நேரம் கடந்த பிறகு, ஐ.சி.யூ. அறைக்குள் மதியழகன் மாற்றப் பட்டான். கூட்டமாக உள்ளே செல்ல வேண்டாம் என்ற மருத்துவரின் அறிவுறுத்தலின்படி, ஒவ்வொருவராக உள்ளே சென்று பார்த்துவிட்டு வந்தனர்.

மதியைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்த சம்யுக்தாவுக்கு, உள்ளே செல்லுமுன் பயப்பந்து தொண்டையை அடைத்தது. சமாளித்துக் கொண்டு உள்ளே சென்றவளுக்கு, மதி இருந்த நிலையைக் கண்டதும், கண்ணீரை அடக்க முடியவில்லை.

தலையில் பெரிய கட்டு போடப்பட்டிருந்தது. வலது கையில் எலும்பு முறிவுக்கென கட்டுப் போடப்பட்டிருந்தது. அவன் உடலில் பொருந்தி இருந்த மருத்துவ உபகரணங்கள், சம்யுக்தாவைப் பயமுறுத்தின.

மௌனமாகக் கண்ணீர் வடித்தவள், ''ப்ளீஸ் மதி... நல்லபடியா பிழைச்சு வந்துடுங்க... ப்ளீஸ்!'' என்று மனதுக்குள் அவனிடம் கெஞ்சியவளுக்கு வெளியே போகவே மனம் வரவில்லை. கொஞ்ச நேரத்தில், நர்ஸ் வந்து ''ரொம்ப நேரம் இங்கே இருக்கக் கூடாது!'' என்று சொன்னதும், மதியைத் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே வெளியே வந்தாள்.

அவள் வருவதற்காகவே காத்திருந்தாற் போல, ''சம்யு! மதி அப்பா நம்பிக்கையா சொன்னாலும், மதியைப் பார்த்துட்டு வந்த பிறகு, எனக்கு ரொம்ப பயமாயிருக்கு. அவன்... அவன் நல்லபடியா பிழைச்சுக்குவான்தானே?'' என்று கண்ணீரோடு காஞ்சனா கேட்டதும்,



சம்யு தன் பயத்தை மறைத்துக் கொண்டு, ''கண்டிப்பா ஆன்ட்டி! சீக்கிரமே மதி, நல்லா ஆகிடுவார்!'' என்று உறுதியான குரலில், தனக்கும் சேர்த்து ஆறுதல் சொல்லிக் கொண்டாள்.

மேலும் ஒரு நாள் அவர்களை அலைக்கழித்து விட்டு, மதியழகன் அறுவை சிகிச்சை நடந்த இரண்டாம் நாள் கண் விழித்தான்.

மதியழகன் மருத்துவமனையில் இருந்த இரண்டு நாட்களாய், சம்யு தன் வீட்டுக்குக் கூட செல்லாமல், அங்கேயே இருந்தாள்.

ஐ.சி.யூ.வில் இருக்கும் மதியழகனைப் பார்க்க தடை இருந்த போதும், ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறையாவது கண்ணாடி ஜன்னலின் வழியே பார்த்துக் கொண்டிருந்தவள், உள்ளே இருந்த நர்ஸ் அவசரமாக வெளியே வருவதைக் கண்டு, ''என்ன சிஸ்டர்? என்ன?'' என்று பதட்டத்துடன் விசாரித்தாள்.

''பதட்டப் படாதீங்க, நல்ல விஷயம்தான், அவரிடம் அசைவு தெரியுது! அதான், டாக்டரைக் கூப்பிட போகிறேன்!'' என்று போகிற போக்கில், அவசரமாக சொல்லி விட்டுச் செல்ல, ஆனந்தத்தில் சம்யுவுக்கு கண்ணீர் துளிர்த்தது.

அறிவழகன், காஞ்சனாவை வற்புறுத்தி அப்போது தான் வீட்டுக்குக் கூட்டிச் சென்றிருந்தார்.

மதியின் தாத்தாவும், சம்யுவும் மட்டுமே அங்கிருந்தனர்.

உள்ளே சென்ற மருத்துவர், வெளியே வரும்வரை, இருவரும் தங்களது பரபரப்பை அடக்கிக் கொண்டு காத்திருந்தனர்.

சிறிது நேரத்தில் வெளியே வந்த மருத்துவரின் முகத்தில், நிம்மதி தெரிய, பயம் விலகி, அன்பழகன் மருத்துவரை ஏறிட்டார்.

''அவர் கிட்ட அசைவு தெரியுது. இனிமேல் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை!''

மருத்துவர் சொன்னதும், இரண்டு நாட்களாய் கலக்கமும், சோர்வும் மட்டுமே நிறைந்திருந்த சம்யுவின் முகம் லேசாக மலர்ந்தது.

''தேங்க் கே யூ, டாக்டர்! தேங்க் யூ சோ மச்!'' என்று உணர்ச்சி வசப்பட்டு சொன்னவள், ''இப்போ அவரைப் பார்க்கலாமா?'' என்று ஆர்வத்துடன் வினவினாள்.

''இன்னைக்கு மதியம் அவரை ரூமுக்கு மாத்திடலாம்! இப்போ யாரும் உள்ளே போக வேண்டாம்! ரூமுக்கு மாற்றியதும், நீங்க தாராளமா போய் பார்க்கலாம்!'' என்று விட்டு மருத்துவர் அகன்று விட, நிம்மதியோடு வந்து இருக்கையில் அமர்ந்தாள் சம்யு.

''சம்யும்மா! டாக்டர்தான் இனிமேல் பயப்படத் தேவை இல்லை என்று சொல்லி விட்டாரே! இரண்டு நாளா, நீ வீட்டுக்குப் போகலை. போ, போய் குளிச்சிட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு வா!'' என்று ஆதுரத்துடன் அன்பழகன் மொழிந்தார்.

''இல்லை தாத்தா! மதியம் அவர் ரூமுக்கு வந்ததும் பார்த்துட்டு போறேன்!'' என்று மதியைப் பார்க்காமல் வீட்டுக்குச் செல்ல மனமில்லாதவளாய், சம்யு சொல்ல,

''அவன் கண் விழிச்சிப் பார்க்கும்போது, இப்படியா அழுது வடிந்து கொண்டு இருக்கப் போகிறாய்!



போடாம்மா, கொஞ்சமாவது ரெஸ்ட் எடுத்துட்டு வா!'' என்று கனிவுடன் அதட்டியவரின் பேச்சை மீற முடியாமல், சம்யு வீட்டுக்குச் சென்றாள்.

வீட்டுக்குப் போனதும், ராஜேஸ்வரி மகளிடம், ''சம்யு! மதிக்கு இப்போ எப்படி இருக்கு? நிச்சயம் நடக்க இருந்த நேரம் இப்படி ஆகிடுச்சே!'' என்று வருத்தத்துடன் புலம்ப ஆரம்பிக்க,

''ப்ச்! அம்மா, திரும்பவும் ஆரம்பிக்காதீங்க. நேற்று மருத்துவமனையிலும், இதே புலம்பல்தான்! அதனால் தான் உங்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்! மதியிடம் இன்னைக்கு அசைவு தெரியுதுன்னு டாக்டர் சொன்னார். தாத்தாதான் என்னை ரெப்ரெஷ் செய்துட்டு வர அனுப்பினார்!'' என்று அன்னையிடம் ஆறுதல் அளிக்கும் விதமாகச் சொல்லி விட்டு தன் அறைக்குள் சென்றாள்.

குளித்துவிட்டு பூஜை அறைக்குள் சென்று மனமுருக கடவுளுக்கு நன்றி சொன்னவள், விரைவில் மதி பரிபூரணமாகக் குணமாக பிரார்த்தனை செய்து விட்டு வெளியே வந்தாள்.

''வா சம்யு! வந்து சாப்பிடு! ரெண்டு நாளா எதுவும் சாப்பிடலை!''

அக்கறையுடன் தாய் அழைக்க, சம்யு சாப்பிட அமர்ந்தாள்.

சிகிச்சை முடிந்து இன்று காலை, மருத்துவர் மதியின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று சொன்ன பிறகு, சம்யுவுக்கு மனம் கொஞ்சம் லேசாகி இருந்தது.

இரண்டு நாட்களாக உணவு, உறக்கம் பற்றிய எண்ணமே இல்லாமல் இருந்தவள், அன்னை கொடுத்த

உணவை அமைதியாக உண்டு வீட்டு, "நான் ஹாஸ்பிடலுக்கு கிளம்பறேன் மா!" என்று சொல்லிவிட்டு கிளம்ப,

"கொஞ்ச நேரமாவது படேன் சம்யு! எப்படியும் மதியம்தானே மதியைப் பார்க்க முடியும்?" என்ற தாயிடம்,

"இல்லைம்மா... மதியைப் பார்க்கும் வரை, என்னால் இங்கே நிம்மதியா இருக்க முடியாது! வேணுமானால் இன்னைக்கு நைட் வீட்டுக்கு வரப் பார்க்கிறேன்!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

சம்யு மருத்துவமனைக்குச் சென்ற நேரம், காஞ்சனாவும் வந்திருந்தார். அவருடன் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி இருந்தார்.

"வா சம்யு! இன்னும் ஒரு மணி நேரத்தில் மதி ரூமுக்கு வந்திடுவானாம்!" என்று மலர்ந்த முகத்தோடு காஞ்சனா வரவேற்றார்.

காஞ்சனாவின் அருகில் இருந்த பெண்மணி, "இது தான் நம்ம மதிக்கு நிச்சயம் செய்யவிருந்த பெண்ணா, அண்ணி?" என்று காஞ்சனாவிடம் கேட்டு விட்டு, சம்யுவை ஆராய்ச்சிப் பார்வை பார்க்க,

"இவங்க மதியோட ஒண்ணு விட்ட அத்தை!" என்று அறிமுகம் செய்தார் காஞ்சனா.

"வணக்கம் ஆன்ட்டி!" என்று சம்யு கை குவித்தாள்.

"பொண்ணு நல்லாத்தான் இருக்கா! ஜாதகம் எல்லாம் பார்த்தீங்களா இல்லையா? பொருத்தம் சரியா இருந்ததா? பையன் விரும்பி விட்டான் என்று, அதெல்லாம் பார்க்காமல் விட்டு விட்டீங்க என்று நினைக்கிறேன், அண்ணி!" என்று நேரம் காலம் தெரியாமல் பேசினார் அந்தப் பெண்மணி.



காஞ்சனா, இப்போது இந்தப் பேச்சு தேவையா என்று பார்த்திருக்க, சம்யுவும் சங்கடத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

இதெல்லாவற்றையும் விட அடுத்து அவர் சொன்ன வார்த்தைகள், காஞ்சனா, சம்யு இருவரையும அதிர வைத்தது.

"இந்தப் பொண்ணு ஜாதகத்தில் ஏதாவது குறை இருக்குமோ? அதான் நம்ம மதிக்கு இப்படி ஆகிட்டதோ?" என்று அவர் ரொம்பவும் அக்கறை இருப்பதைப் போல கேட்டதும், சம்யு அதிர்ந்து போனாள்.

சம்யுவின் அதிர்ந்த முகத்தைக் கண்ட காஞ்சனா, கோபத்துடன் அந்தப் பெண்மணியை ஏறிட்ட சமயம், அவர்கள் அருகில் வந்த நர்ஸ், "மேடம்! உங்க பிள்ளையை ரூமுக்கு மாற்றி ஆச்சு!" என்று அறிவித்து விட்டு, "கூட்டம் போடாதீங்க! அறைக்குள் ரெண்டு பேருக்கு மேல் இருக்கக் கூடாது!" என்று கண்டிப்புடன் சொல்லி விட்டு நகர்ந்தார்.

"நான் மதியைப் பார்த்துட்டு கிளம்பறேன் அண்ணி! நிச்சயத்துக்கு வந்த நேரம் இந்த நிலையில் மதியைப் பார்க்க வேண்டியதா போச்சு!" என்ற மதியின் அத்தை சொல்ல, பிள்ளையைப் பார்க்கும் ஆவலில் எதுவும் பேசாமல், மதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையை நோக்கிச் சென்றார் காஞ்சனா.

"சம்யுவின் ஜாதகத்தால்தான் மதிக்கு இப்படி ஆகி இருக்குமோ?" என்ற அந்தப் பெண்மணியின் வார்த்தைகள், தன்னால்தான் மதிக்கு விபத்து நேர்ந்தது என்று குற்ற உணர்வில் தவித்துக் கொண்டிருந்த சம்யுவின் மனதை மேலும் குத்திக் கிழிக்க, நின்ற இடத்திலேயே,

வேதனை படிந்த முகத்துடன் அசையாமல் நின்று விட்டாள் சம்யு.

சிறிது நேரம் கழித்து அவளருகில் வந்த காஞ்சனா, ''சம்யு! அவங்க பேசினதை எல்லாம் நினைத்து வருத்தப்படாதே! நம் வார்த்தைகள் மற்றவரைப் புண்படுத்தும் என்று யோசிக்காமல் பேசறவங்க அவங்க! வாம்மா, மதி ரூமுக்கு போகலாம்!'' எனறு கனிவுடன் அவளது கையைப் பற்றி அழைக்க, சம்யுவுக்கு கண்ணீர் துளிர்த்தது.

'அவங்க சொன்ன விதம் தப்பா இருக்கலாம்! ஆனால், மதிக்கு நேர்ந்த விபத்துக்கு, நான்தான் காரணம் அத்தை!' என்று அவள் மனம் ஊமையாய் அழுதது.



# 12

''என்ன டாக்டர்! மதிக்கு இனி மேல் ஆபத்து இல்லை என்று சொன்னீர்கள்! ஆனால், அவன் இன்னமும் விழித்துப் பார்க்கவே இல்லையே?''

ஐ.சி.யூ. அறையில் இருந்து சாதாரண அறைக்கு மாற்றி இரண்டு நாட்களாகியும், மதியழகன் கண் விழிக்காமல் இருக்க, மதியின் தந்தை அறிவழகன், மருத்துவரிடம் கவலையுடன் விசாரித்தார்.

''கவலைப்படாதீங்க மிஸ்டர். அறிவழகன்! அவருக்கு ரொம்ப சிக்கலான அறுவை சிகிச்சை நடந்திருக்கு. அதில் இருந்து அவர் மீண்டு வர கொஞ்ச நாள் ஆகும்! எங்கள் சிகிச்சைக்கு முதல் நாள், அவரிடம் இருந்து எந்த ரெஸ்பான்சும் இல்லை! இப்போ தான் அவரோட உடல், நல்ல முறையில் ரெஸ்பான்ட் செய்ய ஆரம்பித்திருக்கு. பயப்படற மாதிரி ஒண்ணும் இல்லை! இன்னும் ஒண்ணு



ரெண்டு நாட்களில் அவர் விழித்துப் பேச ஆரம்பிப்பார்!''

மருத்துவர் நம்பிக்கை அளிக்கும் விதமாகப் பேச, அறிவழகன் நிம்மதியுடன் மதி இருந்த அறைக்கு வந்தார்.

''என்னங்க? டாக்டர் என்ன சொல்றார்?''

காஞ்சனா பயத்துடன் வினவ, அவரிடம் மருத்துவர் சொன்னதைப் பகிர்ந்து கொண்டார் அறிவழகன்.

சம்யு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். காஞ்சனாவுக்கு ஆறுதலாக இருக்க வேண்டும் என்று தன் பயத்தை மறைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தாலும், சம்யுவும் கலங்கித்தான் போயிருந்தாள்.

ஐந்து நாட்களாக மருத்துவமனையே கதி என்று இருந்தவள், மதியிடம் இருந்து சின்ன அசைவு தெரிந்தாலும், அருகே சென்று பார்ப்பதும், அவன் விழிக்கவில்லை என்றதும் சோர்ந்து போவதுமாக இருந்தாள். அறிவழகன் சொன்ன வார்த்தைகள் கொஞ்சம் தெம்பளித்தது.

காஞ்சனாவும் சம்யுக்தாவும் மட்டுமே மதியின் அறையில் தங்கி இருந்தனர்.

தினமும் பார்வையாளர் நேரத்தில்தான் மற்றவர்கள் அவனது அறைக்கு வர முடிந்தது.

இந்த இரண்டு மாதங்களில் சம்யுவுக்கு, காஞ்சனாவுக்கும் ஏற்கனவே நெருக்கம் ஏற்பட்டிருந்தாலும், மருத்துவமனையில் சேர்ந்து இருந்த இந்த ஐந்து நாட்களில் அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த உறவு மேலும் பலப்பட்டிருந்தது.

திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்த வேளையில், மதிக்கு நேர்ந்த இந்த விபத்து, அனைவரையும் கலங்கடித்து இருந்தாலும், அதிகம் பாதிக்கப்பட்டவள்

சம்யுக்தாதான் என்ற எண்ணம் காஞ்சனாவுக்கு இருந்தது.

அதை எல்லாம் நினைக்காமல், தனக்கு ஆறுதலாக அவள் இருப்பதைக் கண்டவருக்கு அவள் மேல் இருந்த பாசம் அதிகமாகி இருந்தது.

இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டனர்.

''மதி உன்கிட்ட சொன்னானா இல்லையா என்று தெரியாது சம்யு. மூன்று மாசத்துக்கு முன்னே மதியோட ஜாதகத்தை ஒரு ஜோசியர் கிட்ட காட்டினேன்'' என்றவர், மதியிடம் திருமணத்தைப் பற்றி சொன்ன விவரத்தைப் பகிர்ந்தவர்,

''திருமண நிச்சயம் செய்து இருந்த இந்த நேரத்தில், அவனுக்கு விபத்து என்றதும் எனக்கு ரொம்ப பயமாகிடுச்சு!'' என்று தன் கலக்கத்தை அவளிடம் பகிர்ந்தார்.

ஜாதகத்தில் நம்பிக்கை இருந்தும், மகன் விரும்பினான் என்ற காரணத்துக்காக, ஜாதகப் பொருத்தம் பார்க்காமல் இருந்த காஞ்சனாவை எண்ணி சம்யுவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மதியின் உறவுப் பெண்மணி மதிக்கு நேர்ந்த விபத்துக்கு, அவளுடைய ஜாதகத்தில் இருந்த குறைதான் காரணம் என்று சொல்லி, குழம்பி இருந்ததைக் கண்டு கொள்ளாமல், தன் மேல் பாசமாக இருக்கும் காஞ்சனாவின் மேல் அவளுக்கும் மரியாதை அதிகரித்தது.

''உங்களுக்கு அந்த அத்தை சொன்ன மாதிரி, என் ஜாதகத்தில் ஏதாவது குறை இருக்கும் என்று எதுவும் தோணலையா அத்தை?'' என்று தயக்கத்துடன் அவள் விசாரிக்க,



''சம்யு! எனக்கு ஜாதகம், ஜோசியம் இதில் எல்லாம் நம்பிக்கை இருக்கு! இல்லை என்று சொல்ல மாட்டேன்! ஆனால், உங்க ரெண்டு பேர் மனசும் ஒத்துப் போய் விட்ட பிறகு, ஜாதகம் பார்த்து எதுவும் குழம்ப வேண்டாம் என்றுதான், நான் உங்க ரெண்டு பேருக்கும் ஜாதகம் பார்க்கவில்லை! ஆனால், அவங்க சொன்ன மாதிரி எனக்கு தோணலை சம்யு. உண்மையைச் சொல்லப் போனால், உன் ராசிதான் அவனுக்கு விபத்து நடந்திருந்தாலும், உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் காப்பாற்றி இருக்கு என்று தோணுது!'' என்று ஆத்மார்த்தமாக சொன்ன காஞ்சனாவைக் கண்ணீருடன் அணைத்துக் கொண்டாள் சம்யுக்தா.

அவளது கண்ணீரை மென்மையாகத் துடைத்து விட்ட காஞ்சனா, ''எனக்கு ஒரே ஒரு எண்ணம்தான் சம்யு! அந்த ஜோசியர் சொன்ன மாதிரி, இன்னும் ரெண்டு மாசத்துக்குள் உங்களுக்குக் கல்யாணம் செஞ்சு வைத்து விடணும்! கடவுள் அதற்கு நல்லபடியா வழி காட்டணும்!'' என்றதும்,

''எல்லாம் நல்லபடியா நடக்கும் அத்தை!'' என்று அவருக்குத் தேறுதல் சொல்ல, காஞ்சனாவுக்கு அவளது வார்த்தைகள் தெம்பளித்தன.

மதிக்கு விபத்து ஏற்பட்ட நாளில் இருந்து, அவன் நல்லபடியாக பிழைத்து வர வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர, வேறு எந்த நினைவும் இல்லாமல் இருந்த சம்யுவுக்கு, முதன் முறையாக ஹோட்டலில் நடந்த நிகழ்வுக்கு வந்தது.

அவன் விவரம் தெரியாமல் வார்த்தைகளை விட்டிருந்தது, அவளுக்குக் கோபம்தான் என்றாலும், மதிக்கு

நேர்ந்த விபத்து, அவளது கோபத்தை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகச் செய்திருந்தது.

மதிக்கு நேர்ந்த விபத்து, அவன் இல்லாமல் தன் வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லை என்பதை அவளுக்குத் தெளிவாக உணர்த்தி இருந்தது.

அவன் உயிருக்கு இனி ஆபத்தில்லை என்று மருத்துவர் சொல்லும் வரை, அரை உயிராக இருந்தவளுக்கு, மதி இல்லாத ஒரு வாழ்க்கையை கற்பனை செய்துகூட பார்க்க இயலவில்லை!

மதி நல்லபடியாக பிழைத்து வந்ததும், அவன் கோபம் காட்டினாலும், பொறுமையாக அன்று தான் ஹோட்டலுக்கு வந்த காரணத்தை அவனுக்குப் புரிய வைக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

* * *

விஷயம் கேள்விப்பட்டு மலர்கள் இல்லத்தில் இருந்து சுவாமிநாதன், மதியைப் பார்க்க வந்திருந்தார்.

வேதனை படிந்த முகத்தோடு இருந்த மதியின் குடும்பத்தாருக்கு ஆறுதல் சொன்னவர், சம்யுவிடமும் பேசினார்.

“சம்யுக்தா! இங்கேயே இருந்து மனசை வாட்டிக் கொள்ளாமல் இல்லத்துக்கு வாம்மா! உனக்கும் கொஞ்சம் மாறுதலாக இருக்கும்!” என்று அழைக்க, சம்யுவுக்கும் அதுவே சரி என்று தோன்றியது.

மதி விழிக்கும்போது தானும் அருகில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே, அவள் அங்கே இங்கே அசைவதில்லை. மருத்துவர் சொல்வதைப் பார்த்தால், மதி விழிக்க மேலும் இரண்டு நாட்கள் ஆகி



விடும் என்று தோன்ற, மலர்கள் இல்லத்துக்கு செல்ல முடிவெடுத்தவள், காஞ்சனாவிடம் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

இல்லத்தில் இருந்த குழந்தைகள், இவளது சோர்ந்த முகத்தைப் பார்த்துவிட்டு என்னவென்று விசாரிக்க, சம்யுவும் மதியின் உடல் நிலையைப் பற்றி அவர்களிடம் பகிர்ந்தாள்.

அவரவருக்குத் தெரிந்தபடி, குழந்தைகள் ஆறுதல் சொல்லினர்..

மதி அங்கிளுக்காக தாங்கள் பிரார்த்தனை செய்வதாகக் குழந்தைகள் சொன்ன போது, சம்யுவுக்கு மனம் நெகிழ்ந்தது.

விரைவில் மதி பரிபூரணமாக குணமடைவான், என்ற நம்பிக்கை பிறந்தது.

தன்னை இங்கே அழைத்த சுவாமிநாதனுக்கு நன்றி சொன்னவள், குழந்தைகளுடன் ஒன்றிப் போனாள்.

மலர்கள் இல்லத்தில் இருந்து கிளம்பும்போது, ஐந்து நாட்களாக உடல் மற்றும் மனதளவில் சோர்ந்து போயிருந்த சம்யு, மனதளவில் கொஞ்சம் தேறி இருந்தாள்.

அவள் ஆட்டோவில் மருத்துவமனையை நெருங்கும் போது, அன்பழகன் அவளை அழைத்தார்.

“என்ன தாத்தா?” என்று பயத்துடன் அவள் வினவ, “சம்யும்மா! மதி விழிச்சிட்டான்! டாக்டர் டெஸ்ட் செஞ்சுட்டு இருக்கார்! சீக்கிரம் வா!” என்று குதூகலக் குரலில் அவர் சொல்ல, “இதோ இன்னும் பத்து நிமிஷத்தில் வந்துடுவேன் தாத்தா!” என்று சம்யுவின் மனம் பரபரப்படைந்தது.

மருத்துவமனையை அடைந்ததும், ஐந்தாம் மாடியில் இருந்த மதியின் அறைக்கு, மின் தூக்கியை

எதிர்பார்க்காமல் வேகமாக மாடிப்படிகளில் ஏறி வந்து மூச்சு வாங்க நின்றவளை, மதியிடம் இருந்த வந்த வார்த்தைகள் நிலைகுலையச் செய்தது.

* * *

சம்யுக்தா, மலர்கள் இல்லத்துக்குச் சென்றிருந்த சமயத்தில், மதியிடம் அசைவு தோன்றியது.

அவனையே பார்த்தபடி அமர்ந்திருந்த காஞ்சனா, உடனடியாக மருத்துவரை அழைக்க, அவரும் உடனே வந்து மதியைப் பரிசோதித்தார்.

மருத்துவர் ஒரு ஊசி மருந்தை செலுத்த, சிறிது நேரத்தில் மதி கண் விழித்தான்.

மதி கண் விழித்த உடனேயே, காஞ்சனா கணவருக்கும் மாமனாருக்கும் விவரத்தைச் சொல்லிவிட்டு, சம்யுவை அழைத்தார்.

குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்ததால், சம்யு கைப்பேசியை அணைத்து வைத்திருக்க, அவளிடம் விவரத்தைச் சொல்லாமல விட்டவர், அவள் வரும் நேரம்தானே என்று எண்ணியபடி படபடத்த மனதோடு, மகன் அருகில் படபடத்த மனதுடன் நின்று கொண்டிருந்தார்.

கண் விழித்த மதியழகனின் பார்வை சோர்வுடன் அறையைச் சுற்றி வந்தது.

அவன் பார்வை படும் இடத்தில் நின்று கொண்டிருந்த, அன்னையைக் கண்டு லேசாக முறுவலிக்க முயன்றவனின் முகம், வலியின் தாக்கத்தில் சுருங்கியது.

மகனின் பார்வை தன் மீது படிந்ததுமே, ''ராஜா!'' என்று அழைத்தபடி காஞ்சனா அவனருகில் குனிய,



வேதனையில் சுருங்கிய அவனது முகம் வருத்தத்தைத் தா, மருத்துவரை நோக்கினார் அவர்.

''ரொம்ப வலிக்குதா மிஸ்டர். மதி!'' என்று மருத்துவர் மென்மையாக வினவ, ஆமாம் என்பதாய்த் தலையாட்டிய மதிக்கு, அந்த தலையாட்டாலே மேலும் வலியை அதிகப்படுத்தியது.

''கொஞ்ச நேரத்தில் வழிக்கு ஊசி போடுகிறேன்! அதுக்கு முன்னாடி உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்? உங்களுக்கு ரொம்ப சோர்வா இருந்தால், அப்புறம் பேசலாம்!''

மருத்துவர் சொன்னதும், ''இல்லை டாக்டர், இப்போ பேசலாம்! ஆனால் ஏன் இப்படி வலிக்குது?'' என்று மெல்லியக் குரல் மதி வினவ,

''உங்களுக்கு விபத்து ஏற்பட்டு தலையில் அடிபட்டிருப்பதால், ஆபரேஷன் செஞ்சிருக்கோம், அதான் வலியா இருக்கு!''

மருத்துவர் சொன்னதும், மதி ஆச்சரியத்துடன் மருத்துவரை ஏறிட்டான்.

''எப்படி விபத்து நடந்தது என்று உங்களுக்கு நினைவிருக்கா?''

மருத்துவரின் கேள்விக்கு ஒரு நொடி யோசித்த மதி, ''காரில் வரும்போது விபத்து நடந்தது!'' என்று பதில் சொல்ல, மருத்துவர் திருப்தியுடன் புன்னகைத்தார்.

மருத்துவரின் கேள்விக்கு பதில் சொன்ன மதி, புருவம் சுருக்கி யோசிக்க ஆரம்பிக்க, மருத்துவரும் காஞ்சனாவும் அவனையே பார்த்திருந்தனர்.

அன்னையிடம் திரும்பிய மதி, ''அம்மா! அப்பா தானே காரை ஓட்டிட்டு வந்தாங்க, அவருக்கு எதுவும்

அடிபடலையே?'' என்று மெல்லியக் குரலில் என்றாலும் பதட்டத்துடன் விசாரிக்க, காஞ்சனா அவன் கேள்வியில் திகைத்து நின்றார்.

அதற்குள், மதியின் தந்தையும் தாத்தாவும் வேகமாக மதியின் அறைக்குள் நுழைந்தனர்.

மருத்துவரும் ஒரு கணம் அவனது கேள்வியில் திகைத்து நின்றாலும், அடுத்த நொடியே தன்னை சமாளித்துக் கொண்டு, ''இல்லை மதி! விபத்து நடந்த அன்று நீங்கள்தான் காரை ஓட்டி இருக்கீங்க!'' என்று சொல்ல,

''இல்லை டாக்டர்! எனக்கு நல்லா நினைவு இருக்கு! அன்றைக்கு மலர்கள் இல்லத்துக்கு போய் விட்டு வந்தோம்! எனக்கு விருது கிடைத்த செய்தி தெரிந்து, வாழ்த்து தெரிவிக்க நிறைய பேர் போன் செஞ்சதால், அப்பாதான் வண்டியை ஓட்டினாங்க!'' என்றவன்,

அப்போதுதான், அருகில் வந்து நின்ற தந்தையைக் கண்டதும், ''அப்பா! உங்களுக்கு எதுவும் அடிபடலையே?'' என்று விசாரிக்க, மதியைச் சூழ்ந்து கொண்டிருந்தவர்களில், யாருக்கு அதிர்ச்சி அதிகம் என்று வரையறுக்க இயலவில்லை.

உள்ளே இருந்தவர்கள் நிலையை விட, அப்போதுதான் மூச்சு வாங்க ஓடி வந்த சம்யுக்தாவை, மதியின் வார்த்தைகளும், கேள்வியும் ஸ்தம்பிக்க வைத்தன.

மதியை அவள் பேட்டி காண வந்த நாளுக்கு முதல் நாள் நேர்ந்த விபத்தைப் பற்றிப் பேசுகிறான் என்றால் என்ன அர்த்தம்? என்று கேள்வி மண்டையைக் குடைய, உள்ளே செல்லவும் தெம்பின்றி, நின்ற இடத்திலேயே சிலையாய் நின்றவளின் நெஞ்சம் கலங்கியது.



மகனின் கேள்வியில் அறிவழகன் திகைத்து நிற்க, மகனருகில் வந்த காஞ்சனா, ''மதி? என்னப்பா சொல்றே! அது மூணு மாசத்துக்கு முன்னாடி நடந்ததுப்பா, அன்னைக்குதான் யாருக்கு எதுவும் ஆகலையே?'' என்று படபடத்தார்.

''கொஞ்சம் அமைதியா இருங்க!'' என்று அவரை அடக்கிய மருத்துவர், மதியிடம் திரும்ப, அன்னையின் கேள்வியில் அவன் குழப்பமுற்று இருப்பது தெரிந்தது.

''அம்மா என்ன சொல்றாங்க டாக்டர்?'' என்று அவன் குழப்பத்துடன் வினவ, ''ஒண்ணுமில்லை மதி, நீங்க அமைதியா இருங்க, வலி அதிகமா இருக்கில்லை? இப்போ ஒரு ஊசி போடறேன், வலி குறையும்!'' என்று விட்டு மருந்தை செலுத்த, மருந்தின் தாக்கத்தில், மதியின் கண்கள் தாமாக மூட, அமைதியாக உறங்கத் துவங்கினான்.

''என்ன டாக்டர்? அவன் எப்பவோ நடந்ததைப் பற்றிப் பேசறான்?'' என்று கலக்கத்துடன் காஞ்சனா மருத்துவரை வினவ, அவர் முகத்திலும் குழப்பம் தெரிந்தது.

''என் ரூமுக்கு வாங்க!'' என்று விட்டு மருத்துவர் கிளம்ப, மூவரும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

வாசலில் திகைத்துப் போய் நின்றிருந்த சம்யுக்தாவைப் பார்த்ததுமே, அவளும் மதியின் வார்த்தைகளைக் கேட்டு விட்டாள் என்று புரிய, அன்பழகன் அவளது கையை ஆறுதலாகப் பற்றியபடி மருத்துவரின் அறைக்கு அழைத்துச் சென்றார்.

மருத்துவரின் அறைக்குள் சென்றதுமே, ''என்ன டாக்டர் இது? மதி ஏன் இப்படி கேட்கிறான்?'' என்று பயத்துடன் மதியின் தந்தை அறிவழகன் விசாரிக்க,

''உங்க கேள்விக்கு அப்புறம் பதில் சொல்றேன்! முதலில் மூணு மாசத்துக்கு முன்னாடி என்ன நடந்தது என்று சொல்லுங்க!'' என்ற டாக்டரிடம், அறிவழகன் அனைத்தையும் விவரித்தார்.

கொஞ்ச நேரம் யோசனையில் இருந்த மருத்துவர், ''ஆபரேஷனுக்குப் பிறகு இப்போதான் விழிச்சிருக்கார்! அதனால், உடனே நடந்த எல்லாத்தையும், நினைவுக்கு வராமல் இருக்கிறது இயல்புதான்! ஆனால், மூன்று மாசத்துக்கு முன்னாடி நடந்ததை சரியா சொல்றார் எனும் போது, கொஞ்சம் குழப்பமா இருக்கு!'' என்ற மருத்துவரின் குரலிலும் குழப்பமே இருந்தது.

''எதாவது பிரச்சனை இருக்குமா, டாக்டர்?'' என்று அன்பழகன் கலக்கத்துடன் வினவினார்.

''அவர் தூங்கி எழுந்ததும், இன்னொரு முறை விசாரிக்கலாம்! அதுக்கப்புறம்தான் எதுவும் சொல்ல முடியும்!'' என்று விட்டு, மருத்துவர் அடுத்த நோயாளியைப் பார்க்கச் சென்று விட, நால்வரும் குழப்பமான மனநிலையில் மதியின் அறைக்கு வந்தனர்.

இவ்வளவு நேரமும், சம்யுக்தா யாருடனும் எதுவும் பேசவில்லை!

அவள் மனம் பயத்தில் உறைந்து போயிருந்தது.

மலர்கள் இல்லத்தில் இருந்து கிளம்பும்போது இருந்த தெளிவான மனநிலைக்கு முற்றிலும் எதிர்மாறான நிலையில் இருந்தவள், கையைத் தலையில் பிடித்தபடி அமர்ந்திருக்க, மற்ற மூவருக்கும், அவளது நிலையைக் கண்டு பரிதாபம் எழுந்தது.

''சம்யு! எந்தப் பிரச்னையும் இருக்காது! பயப்படாதே!'' என்று தாத்தா அன்பழகன் ஆறுதலாகக் கூற,



''ரொம்ப பயமா இருக்கு, தாத்தா!'' என்றவளின் குரல் நடுங்கியது.

குழப்பத்தில் இருந்த காஞ்சனாவும், சம்யுவின் அருகில் வந்து அமர்ந்து ''பயப்படாதே சம்யு!'' என்று ஆறுதல் கூற, எதுவும் பேசாமல், அவளது தோளில் சாய்ந்து கொண்டாள். அவரும், அவளை மென்மையாக அணைத்துக் கொண்டார்.

மதியழகன் விழிக்கும் வரை, அனைவரும் பயத்திலேயே இருக்க, அவன் விழித்ததும், மருத்துவர் உடனே வர, சம்யுவுக்கு இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது.

இடைப்பட்ட நேரத்தில், விஷயம் அறிந்து ராஜசேகர், மனைவி மற்றும் மகனோடு வந்திருந்தார்.

அகிலன், தமக்கையின் கையை ஆறுதலாகப் பற்றிக் கொண்டு நின்றான்.

மருத்துவர் முன்பு அவனிடம் கேட்ட கேள்வியைக் கேட்க, அவனும் முன்பு சொன்ன பதிலையே சொல்லிக் கொண்டிருந்தான்.

மதியின் வார்த்தைகளில் மனம் துவண்ட சம்யு, அகிலனின் தோளில் சாய, ஒரு இயலாமையோடு அகிலனும் தமக்கையின் தோளை இறுகப் பற்றினான்.

மதியின் பதிலையும், அந்த பதிலில் துவண்ட சம்யுக்தாவையும் கண்ட அன்பழகன், ''சம்யு, இங்கே வாம்மா!'' என்று அழைக்க, அவர் அழைப்பதை உணர்ந்தும், சம்யுவால் இருந்த இடத்தை விட்டு நகர இயலவில்லை.

தமக்கையின் நிலை அறிந்த அகிலன், அவளைக் கைப்பற்றி அழைத்துச் சென்று, மதியின் எதிரில் நின்றான்.

மதியின் அருகில் சென்ற அன்பழகன், ''மதி கண்ணா! இவங்க யாருன்னு தெரியுதா?'' என்று வினவ, சம்யுதாவையும், அகிலனையும் அறிமுகமற்ற பார்வை பார்த்த மதியழகன், ''தெரியலையே தாத்தா!'' என்று சொல்ல, சம்யுவின் விழிகள் கண்ணீரால் நிறைந்தன.

மகளின் நிலையைக் கண்டு ராஜசேகரும், ராஜேஸ்வரியும் செய்வதறியாது நிற்க, சம்யு அதற்கு மேல் அழுகையை அடக்க இயலாமல் வேகமாக அங்கிருந்து ஓடினாள்.

## 13

தாத்தா, தன்னிடம் இருவரைக் கட்டி யார் என்று தெரிகிறதா என்றதும், தன் எதிரில் நின்று கொண்டிருந்தவர்களை, ஒரு கணம் நோக்கிய மதியழகனுக்கு அவர்களைப் பார்த்த நினைவு இருக்கவில்லை.

தனக்கு அவர்களைத் தெரியவில்லை என்று சொன்னவன் மனதில், எதற்காக இந்தக் கேள்வி என்ற குழப்பம் மிக, அயர்வுடன் கண்களை மூடிக் கொண்டான்.

ஒரு நிமிடம் கழித்து அவன் கண் திறந்தபோது, அந்த இருவரையும் காணவில்லை.

''யார் அவங்க?'' என்று வினவிய மதியழகன், யாரிடம் இருந்தும் அதற்கு பதில் வராமல் போகவே, அதை விடுத்து, ''என்ன டாக்டர்? ஏன் விபத்து நடந்ததைப் பற்றி திரும்பத் திரும்ப கேட்கறீங்க? ஏதாவது பிரச்சனையா?'' என்று வினவினான்.

''ஒண்ணுமில்லை மதி! எந்தப் பிரச்னையும் இல்லை! இப்போ உங்க வலி எப்படி இருக்கு?''



''இப்போ வலி பரவாயில்லை, டாக்டர்!'' என்றவன் பார்வை கையில் போடப்பட்டிருந்த கட்டில் பதிய, ''எலும்பு முறிவா, டாக்டர்?'' என்று விசாரித்தான்.

''ஆமாம், சின்ன முறிவுதான்! சீக்கிரம் சரி ஆகிடும்! நீங்க ரெஸ்ட் எடுங்க!'' என்று விட்டுச் செல்ல, காஞ்சனாவைத் தவிர அனைவரும் மருத்துவருடன் வெளியே வந்தனர்.

அறையின் வாயிலில் சம்யு அழுது கொண்டிருக்க, ராஜேஸ்வரி மகளைத் தேற்றும் வகை புரியாமல், அவளது தோளை வருடிய வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

கலக்கம் நிறைந்த பார்வையோடு தன்னையே பார்த்துக் கொண்டிருந்த அன்னையைக் கண்ட மதி, ''ஏதாவது பிரச்சனையா? முதலில் நான் டாக்டர் கிட்ட விபத்து பற்றி சொல்லும்போது, நீங்க எதோ மூணு மாசத்துக்கு முன்னாடி என்று சொன்னீங்க இல்லை? என்னம்மா?'' என்றவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் காஞ்சனா விழித்தார்.

அன்னையின் கலக்கம் நிறைந்த முகம் மனதை வருத்த, அத்தோடு தன் கேள்வியை மறந்தவன், ''என்னம்மா? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? நான் நல்லா இருக்கேன்மா!'' என்று ஆறுதலாகச் சொல்ல, அவனிடம் எதுவும் சொல்ல இயலாத காரணத்தால், அமைதியாக இருந்தார்.

''ரொம்ப பயந்து போய் விட்டீங்களா? நல்ல வேளை, வேற யாருக்கும் எதுவும் ஆகலை!'' என்றவன், அப்போதும் அன்னையிடம் இருந்து எந்த பதிலும் வராமல் போகவே,

''என்ன ஆச்சும்மா?'' என்று துருவினான்.

''எதுவும் இல்லை ராஜா! உனக்கு அடிபட்டதும், நாங்க எல்லாம் பயந்து போயிட்டோம்! அதான், வேற எதுவும் இல்லை!'' என்றவர்,

''உனக்கு விபத்து நடந்ததைப் பற்றி வேற எதுவும் நினைவு இருக்கா?'' என்று மெதுவாக விசாரித்தார்.

''இல்லைம்மா, அந்த கார் வந்த வேகத்தைப் பார்த்து, நான் அப்பா கிட்ட பார்த்துப்பா என்று சொன்னது மட்டும்தான் எனக்கு நினைவிருக்கு! அப்புறம் ஒரு பெரிய சத்தம்! அதுக்கு மேல் எதுவும் நினைவில்லை! இப்போ, பார்த்தால், தலையில் ஆபரேஷன், கையில் ப்ராக்சர் என்று டாக்டர் சொல்றார்!'' என்று குழப்பத்துடன் அவன் சொன்னதும், காஞ்சனா சுதாரித்தார்.

''விடு மதி! நடந்தது நடந்து போச்சு! இனிமேல் எல்லாம் நல்ல படியா நடக்கட்டும்! ஏதாவது சாப்பிடுகிறாயா கண்ணா?'' என்று அக்கறையுடன் வினவ,

''இல்லைம்மா, வலி குறைந்திருந்தாலும், என்னவோ தூக்கம் வருது! தூங்கட்டுமா?'' என்று அனுமதி கேட்டுவிட்டு அவன் உறங்கத் துவங்கியதும், காஞ்சனா பாரமான மனதுடன் வெளியே வந்தார்.

சம்யுக்தா கண்ணீரோடு அங்கிருந்து ஓடியதில் இருந்து, அவரது மனம் அவளைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது.

வெளியே வந்து பார்த்தவர், சம்யு இன்னும் அழுது கொண்டிருப்பதைக் கண்டதும், ''சம்யு! அழாதேம்மா! சீக்கிரமே எல்லாம் சரி ஆகிடும்!'' என்று அவளருகில் வந்து ஆறுதல் கூறினார்.

''சரி ஆகிடும்தானே அத்தை?'' என்று கண்களில் ஏக்கத்துடன் கேட்டவளைக் கண்டதும், அவருக்கு மனம் கலங்கியது.



''கண்டிப்பா! முதலில் அழுகையை நிறுத்து!'' என்று கண்டிப்புடன் அவர் சொன்னதும், சம்யு முகத்தைத் துடைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

* * *

''என்ன ஆச்சு டாக்டர்? மதி ஏன் இன்னும் மூன்று மாசத்துக்கு முன்னாடி நடந்ததைத்தான் இப்போ நடந்த விபத்துன்னு நினைச்சிட்டு இருக்கான்?''

கலக்கத்துடன் மதியின் தாத்தா அன்பழகன் கேட்டதும், மருத்துவர் ஒரு கணம் அமைதியாக இருந்தார்.

அந்த ஒரு நொடி அமைதியே, அன்பழகனையும், அறிவழகனையும் கலங்கச் செய்ய, ''ப்ளீஸ் டாக்டர்! என்ன பிரச்சனை என்று சொல்லுங்க?'' என்று அறிவழகன் பதட்டத்துடன் வினவினார்.

''மிஸ்டர் அறிவழகன்! ஏற்கனவே சொன்னதுதான்! விபத்தின்போது அவரது மூளைக்கும் பாதிப்பு ஏற்பட்டு இருந்தது! நாங்கள் செய்த சிகிச்சை மூலம் அவருடைய உயிரைக் காப்பாற்ற முடிந்தது. இப்போ, மதி பேசறதை எல்லாம் வைத்துப் பார்த்தால், அவருக்கு அம்னீசியா ஏற்பட்டிருக்கு என்று தோணுது!''

மருத்துவரின் வார்த்தைகள், இருவரையும் அதிர வைத்தது.

''மூளையில் அறுவை சிகிச்சை என்பதால், இந்த மாதிரி நினைவிழப்புகள் எதிர்பார்க்கக் கூடியதுதான்!'' என்ற மருத்துவர், மதியின் தந்தையிடம் இன்னும் சில விவரங்களைக் கேட்டு அறிந்தார்.

''இப்போதைக்கு நான் எதுவும் சொல்ல முடியாது! நீங்கள் கொடுத்த விவரங்களின் அடிப்படையில்

அவர்கிட்ட இன்னொரு முறை பேசிய பிறகே, எதையும் சொல்ல முடியும்!'' என்ற மருத்துவர், அன்று மாலை, மாலையே, எந்தளவு அவனுடைய நிலை என்பதை அறிய, அவனிடம் தனிமையில் பேசினார்.

மதியிடம் பேசிய பிறகு, மருத்துவருக்கு அவனது நிலை குறித்த ஒரு தெளிவு ஏற்பட்டது.

''ஏன் டாக்டர்? பழைய விஷயங்களைப் பற்றி எல்லாம் கேட்கறீங்க?''

குழப்பத்துடன் மதி வினவ, ''மிஸ்டர் மதி, உங்களுக்கு மூளையில் நுண்ணிய ஆபரேஷன் நடந்திருக்கு. அந்த சிகிச்சைக்குப் பிறகு, இந்த மாதிரி கேள்விகள், ஒரு ஃபார்மாலிட்டி!'' என்ற மருத்துவருக்கு, இப்போதைக்கு அவனது நிலையைப் பற்றி சொல்வது, உசிதமில்லை என்று தோன்றியது.

மதியைப் பரிசோதித்து விட்டு வந்த மருத்துவரைத் தொடர்ந்து அவனது தந்தையும், தாத்தாவும் மருத்துவரின் அறைக்கு வந்தனர்.

''மிஸ்டர். அறிவழகன், மதியுடன் பேசியதில் இருந்து, நான் யூகித்தது போலவே அவருக்கு அம்னீசியா ஏற்பட்டிருக்கு!''

''டாக்டர்! அவனுக்கு எங்க எல்லாரையும் தெரியுதே டாக்டர், மூன்று மாசத்துக்கு முன்னாடி நடந்த விபத்தைக் கூட நினைவு வைத்திருக்கிறானே?''

மதியின் தாத்தா குழப்பத்துடன் வினவ, ''மூளையில் அடிபட்டு அறுவை சிகிச்சை நடந்த பிறகு, இந்த மாதிரி சில சமயம் நடக்கும். என்னோட கணிப்பின் படி மதிக்கு இப்போ வந்திருக்கிறது ரெட்ரோகிரேட் அம்னீசியா (Ret-



rograde Amnesia). இந்த பாதிப்பு வந்தவங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் நடந்தது மட்டும் மறந்து போயிருக்கும்!'' என்று அமைதியாக மருத்துவர் விவரித்தார்.

அறிவழகனும், மதியின் தாத்தாவும் அதிர்ச்சியில் உறைந்து போயினர்.

அவர்களது அதிர்ச்சியை உணர்ந்த மருத்துவர், ''நீங்க பயப்பட வேண்டிய அவசியம் இல்லை! இழந்த நினைவுகள் தானாகவே திரும்ப நினைவுக்கு வந்து விடும்!'' என்று ஆறுதலாகக் கூற, இருவரும் அதிர்ச்சியில் இருந்து மீண்டு,

''எப்போ நினைவுக்கு வரும், டாக்டர்?'' என்று ஆவலுடன் வினவ,

''அது... அதை இப்போ தெளிவா சொல்ல முடியாது! உடனே வரலாம்... சில மாதங்கள் ஆகலாம்... சில பேரோட விஷயத்தில் சில ஆண்டுகள் கூட ஆகலாம்!''

''கண்டிப்பா வந்துடும்தானே டாக்டர்?''

அறிவழகன் வினவ, ''ஒரு சில கேஸ்களில், நினைவு திரும்ப வராமலே போய் விட்டதும் உண்டு!'' என்று மருத்துவர் மீண்டும் அதிர வைத்தார்.

''மதி விஷயத்தில், அவருக்கு ஒரு குறுகிய காலத்தில் நடந்த விஷயங்கள் மட்டும்தான் மறந்து போயிருக்கு! அப்போது நடந்த சில விஷயங்களை இயல்பாக அவருக்கு நினைவூட்டுவதன் மூலம், சீக்கிரமே அவருக்கு அந்த நினைவுகள் திரும்ப வர வாய்ப்பு நிறைய இருக்கு! அதனால், நீங்க கவலைப்படாதீங்க!''

''பட், இப்போதைக்கு மதிக்கு இந்த விஷயம் தெரிய வேண்டாம்! உடல் அளவில் அவர் நன்றாகத் தேறிய பிறகு, இதைப் பற்றி அவர்கிட்ட சொல்லலாம்! இல்லன்னா, அவரோட இந்த நிலை, மன அழுத்தத்தை உண்டு செய்து, அவரது உடல் நிலையைப் பாதிக்கலாம்!''

''சரி, டாக்டர்!'' என்று விட்டு இருவரும், வெளியே வர, அவர்களது முகத்தையே பயம் கலந்த ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்த சம்யுக்தாவைக் கண்டதும், இருவருக்கும் மனம் நொந்தது.

தன்னையே பார்த்துக் கொண்டிருந்த சம்யுவின் அருகில் வந்த அன்பழகன், சம்யுக்தாவைக் கைப்பற்றி அழைத்துக் கொண்டு மருத்துவமனை வளாகத்தில் இருக்கும் பூங்காவில் வந்து அமர்ந்தார்.

அமைதியாக, அவருடன் வந்தவள், அவர் அமர்ந்ததும், ''என்ன தாத்தா?'' என்று மெல்லியக் குரலில் வினவ, மருத்துவர் மதியின் உடல்நிலை பற்றி சொன்னதில் எதையும் மறைக்காமல் அன்பழகன் அவளிடம் பகர்ந்தார்.

அன்பழகன் சொல்லச் சொல்ல, பெருகத் துவங்கிய கண்ணீர், அவர் சொல்லி முடித்ததும், சம்யுவின் கண்களை குளமாக்கி இருந்தது.

அவளைச் சந்தித்தது தன்னுடைய துரதிர்ஷ்டம் என்று அன்று கோபத்தில் சொன்னானே? இப்போது அவளைச் சந்தித்ததையே மறந்து விட்டான் என்றால், அன்று அவன் மனம் அவளை எவ்வளவு வெறுத்திருக்க வேண்டும்? என்ற எண்ணம், வேதனையைத் தர, சம்யுக்தாவுக்கு மனம் வலித்தது.



''சம்யு! உனக்கு கண்டிப்பாக இதெல்லாம் தெரிந்தாக வேண்டும் என்றுதான் சொன்னேன்! அதுக்காக, இப்படி நீ அழுது கரைய வேண்டியதில்லை! நம்பிக்கையோடு இரும்மா! சீக்கிரமே எல்லாம் சரி ஆகிடும்!'' என்று அவளது கையைப் பற்றி சின்னக் கண்டிப்புடன் அன்பழகன் சொல்ல,

''இல்லை தாத்தா! என்னால தாங்க முடியலை தாத்தா! இது எல்லாத்துக்கும் நான்தான் காரணம் எனும்போது என்னால் சுத்தமா தாங்க முடியலை!'' என்று சொல்லி விட்டு சம்யு அழ ஆரம்பிக்க, அன்பழகன் திகைத்துப் போனார்.

''சம்யு! என்னம்மா இது? மதியோட அந்த அத்தை சொல்லிட்டு போனதை வைத்து நீ இப்படி பேசறது கொஞ்சம் கூட நல்லாவே இல்லை!'' என்று கடிந்து கொண்டார்.

''இல்லை தாத்தா! அவங்க சொன்னதை வைத்து நான் சொல்லலை தாத்தா! நான் சொல்றது உண்மை! அந்த விபத்து நடந்த அன்று எனக்கும் மதிக்கு ஒரு வாக்கு வாதம்! அவர் கோபத்தில் ஏதோ சொல்லப் போக, நானும் கோபித்துக் கொண்டு, அவரைச் சமாதானப் படுத்தாமல் கிளம்பி வந்துட்டேன்! அந்த டென்ஷன்ல தான் மதி காரை ஓட்டி... இப்படி எல்லாம் நடந்துடுச்சு!

''நான்தான் எல்லாத்துக்கும் காரணம்! எனக்கு தண்டனை தேவைதான்! ஆனாலும், அவருக்கு என்னை என்னைப் பார்த்த நினைவே இல்லை என்பது பெரிய தண்டனை இல்லையா, தாத்தா?''

அழுகையூனுடே, சம்யு தவிக்க, அன்பழகன் திகைத்துப் போயிருந்தார்.

விபத்துக்குக் காரணம் தான்தான் என்று சம்யு சொன்னாலும், அந்தச் சிறிய பெண்ணைக் குற்றம் சாட்ட அவருக்கு மனம் வரவில்லை!

மதியின் இந்த நிலையால், இப்போது அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது அவள்தான் என்பதும், அவருக்கு அவள் மேல் பரிதாபத்தை வரவழைத்து இருந்தது.

வயதில் பெரியவராக, அவளைத் தேற்றும் பொறுப்பு தனக்கிருப்பதை உணர்ந்தவராக, ''அம்மா சம்யு! இருக்கிற வேதனையில், நீதான் எல்லாத்துக்கும் காரணம் என்று இன்னும் உன் மனசை ரணப்படுத்திக்காதே! எல்லாம் விதிப்படிதான் நடக்கும்! இதில் உன் குற்றம் என்று எதுவுமில்லைம்மா! இப்போதைக்கும் மதிக்கு சீக்கிரமே அந்த நினைவுகள் திரும்ப வரணும் என்று வேண்டுவது மட்டும்தான் நம்மால் செய்ய முடிந்தது! அதற்கு மேல் கடவுள் விட்ட வழி என்று அமைதியா இருக்க கற்றுக் கொள்ளணுமே தவிர, இப்படி நம்மை நாமே வாட்டிக்கக் கூடாது!'' என்று மென்மையாக உரைத்தவர்,

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு அமர்ந்ததும், ''டாக்டர் இப்போதைக்கு மதியிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்று சொல்லி இருக்கார்! அதனால்... அதனால்...'' என்று இழுத்தார்.

அவர் தயங்கி நின்றதும், அவரைக் கேள்வியாக சம்யு ஏறிட, ''கொஞ்ச நாளைக்கு... மதியைப் பார்க்க நீ வராமல் இருப்பது... நல்லது!'' என்று தயக்கத்துடன் சொல்ல வந்ததை முழுமையாக மொழிந்தார்.

தாத்தா சொன்னது வருத்தமாக இருந்தாலும், சம்யுவும் அதே முடிவைத்தான் எடுத்திருந்தாள். மதியழகன்



தன்னை அறிமுகமற்ற பார்வை பார்ப்பதைத் தாங்கும் சக்தி அவளுக்கும் இல்லை!

ஆனால், எவ்வளவு நாள் மதியைப் பார்க்காமல் அவளால் இருக்க முடியும் என்ற கேள்வியும் எழ, தாத்தா சொன்னது போல, கடவுளிடம்தான் பாரத்தை ஒப்படைக்க வேண்டும் எண்ணியவள், கண்களைத் துடைத்துக் கொண்டு, அமைதியாக எழுந்தாள்.

அவள் புரிந்து கொண்டாள் என்பதை உணர்ந்த அன்பழகனும், ஒரு பெருமூச்சுடன் எழுந்தார்.

அதற்குள், அறிவழகன் மருத்துவர் சொன்னதை அனைவரிடமும் சொல்லி இருந்தார்.

விஷயம் அறிந்து அனைவருக்கும் அதிர்ச்சிதான்!

ராஜேஸ்வரிக்கு, தங்கள் மகள் இதை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறாள் என்று வேதனையாக இருந்தது.

அன்பழகனும், சம்யுவும் உள்ளே வந்ததும், அகிலன் ஓடிச் சென்று தமக்கையின் கையை ஆறுதலாகப் பற்றிக் கொண்டான்.

வேதனையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த காஞ்சனாவிடமும், அறிவழகனிடமும் கண்களாலேயே விடை பெற்ற சம்யுக்தா, அகிலனின் கையைப் பற்றிக் கொண்டு வெளியேற, ராஜசேகரும், ராஜேஸ்வரியும், மதியின் குடும்பத்தினரிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினர்.

வீட்டுக்கு வந்த சம்யு, குளியலறையில் போய் நின்றாள்.

ஐந்து நாட்களாக அதிர்ச்சி மேல் அதிர்ச்சி!

உயிராக நேசித்தவனுக்கு, தன் நினைப்பே இல்லை என்றது அவளது மனதை முள்ளாய் குத்தி ரணமாக்கியது.

தாத்தா சொன்னது போல, இதில் தான் செய்வதற்கு எதுவுமே இல்லை என்ற இயலாமையும் சேர்ந்துகொள்ள, நின்றிருந்த கண்ணீர் மீண்டும் பெருகியது.

நெடு நேரம், குளிர் நீரில் நின்று, உடல் வெடவெடக்கத் துவங்கியது.

அறைக்கு வந்து உடை மாற்றியவள், கட்டிலில் சாய்ந்து அமர்ந்தாள்.

மதியைப் பேட்டி எடுக்கச் சென்றதும், அதன் பிறகு அவன் மேல் காதல் கொண்டதும், அவர்கள் காதல் வானில் சிறகடித்துப் பறந்ததும் ஒன்றன் பின் ஒன்றாக நினைவுக்கு வந்து, மேலும் மனம் நொந்தது.

சம்யுவின் வேதனை படிந்த முகத்தைக் காண சகியாமல், அவளது பெற்றோரும் தம்பியும், அவளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

ஆறுதல் சொல்லக் கூட, அவளருகில் செல்ல ஒருவருக்கும் தைரியம் இருக்கவில்லை!

அவர்களுக்கே நடந்தது அனைத்தும் அதிர்ச்சிதான் எனும்போது, சம்யுவின் நிலை எப்படி இருக்கும் என்று அவர்களால் உணர முடிந்தது.

''அகில்! சம்முவை சாப்பிட கூப்பிட்டு வா!'' என்று ராஜேஸ்வரி மகனை ஏவ, தமக்கையின் அறைக்கு வந்த அகிலனுக்கு, கண்ணீருடன் அவள் அமர்ந்திருந்த தோற்றம், கண்களைப் பனிக்கச் செய்தது.

''அக்கா!'' என்று மென்மையாக அழைத்தவனுக்கு பதில் வராமல் போக, அவளருகில் வந்தவன், அவளது கையைப் பற்றி, ''அக்கா! சாப்பிட வா!'' என்றழைத்தான்.



தன் கை மேல் தம்பியின் கை பட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்த சம்யு, ''இல்லை அகில்! எனக்கு பசிக்கலை!'' என்று சொல்லிவிட, பெருமூச்சுடன் அங்கிருந்து அகன்றான் அவன்.

''என்னப்பா? அக்கா வரலை?'' என்று ராஜேஸ்வரி வினவ, ''இல்லைம்மா! அவளுக்கு பசிக்கலையாம்!'' என்றவன்,

''இப்போ இருக்கிற மன நிலையில், அவள் சாப்பிட வரமாட்டாள்! நான் பாலாவது கொண்டு போய் கொடுக்கிறேன்!'' என்று அகிலன் பாலை எடுத்துச் செல்ல,

''ஒரு நிமிஷம் அகில்!'' என்ற ராஜசேகர், ''ஐந்து நாட்களாக, அவள் சரியா சாப்பிடலை, தூங்கவும் இல்லை! இன்னைக்கு கண்டிப்பா தூங்க மாட்டாள்! அதனால், பாலில் இந்த தூக்க மாத்திரையைக் கலந்து கொடு!'' என்று ஒரு மாத்திரையைக் கொடுக்க, அகிலனுக்கும் அதுவே சரி என்று தோன்றியது.

பாலும் வேண்டாம் என்றவளை வற்புறுத்தி பாலைக் குடிக்க வைத்தவன், அவள் தன்னை மறந்து உறங்கும் வரை அருகில் இருந்துவிட்டு, வெளியே வந்தான்.

ராஜேஸ்வரி, ''என்னங்க! டாக்டர் என்ன என்னவோ சொல்றாரே! மதிக்கு சீக்கிரம் மறந்து நினைவுகள் நினைவு வந்துடுமா?'' என்று கணவரிடம் வருத்தத்துடன் விசாரித்துக் கொண்டிருந்தார்.

''கண்டிப்பா வந்துடும்! நீதான் இப்போ அவளுக்கு ஆறுதலாக இருக்கணும்! நீயும் கவலைப்பட்டு அவளையும் கஷ்டப்படுத்தாதே!'' என்று கண்டிப்புடன் சொல்லி விட்டு, சாப்பிட்டேன் என்று பேருக்கு சாப்பிட்டு விட்டு ராஜசேகர் எழ, அகிலனும் கொஞ்சமாக கொறித்துவிட்டு எழுந்தான்.

ஒரு மங்கலகரமான விஷயம் நடக்க இருந்த வீட்டில், இப்போது சோகம் சூழ்ந்திருந்தது.

தூக்க மாத்திரை கலந்து கொடுத்திருந்ததால் சம்யுவும் அயர்ந்து உறங்கி இருந்தாள். காலை எட்டு மணி ஆகியும், அவள் எழவில்லை என்றதும், அவளது அறைக்கு வந்த ராஜேஸ்வரி, குரல் கொடுத்துப் பார்க்க, அப்போதும் அவளிடம் அசைவு இல்லை.

பயந்து போய், அவர் அவளைத் தொட்டு உலுக்க, சம்யுவின் உடல் நெருப்பாய் கொதித்ததை உணர முடிந்தது.

பதட்டத்துடன் அவர் கணவரையும், மகனையும் அழைக்க,

வேகமாக ஓடி வந்த ராஜசேகர், தான் ஒரு மருத்துவர் என்பதையும் மீறி மகள் இருந்த நிலையைக் கண்டு பதட்டமடைய, அகிலன்தான் அவளைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான்.

அளவுக்கு மீறிய அதிர்ச்சி, நெடுநேரம் குளிர் நீரில் நின்றது, மனதின் சோர்வு எல்லாமாக சேர்ந்து, உடலை அதிகமாகவே பாதித்திருந்தது.

மதி இருந்த மருத்துவமனையிலேயே அவளும் சேர்க்கப்பட்டிருக்க, காஞ்சனா வந்து சம்யுவின் நிலையைக் கண்டு கலங்கினார்.

எப்போதும் துருதுருப்புடன் இருக்கும் பெண், சோர்ந்து படுத்திருப்பதைக் காண முடியவில்லை.

மதி உறங்கும் நேரம் முழுவதும், அவர் சம்யுவின் அருகிலேயே இருக்க, இரண்டு நாட்கள் கழித்து கண் விழித்த சம்யு, தன் அருகில் அமர்ந்திருந்த காஞ்சனா வையே ஏக்கமாகப் பார்க்க,



''என்னம்மா?''

அன்பொழுக காஞ்சனா வினவ, ''எனக்கு மதியைப் பார்க்கணும் போல இருக்கு அத்தை!'' என்று சம்யு மெல்லியக் குரலில் சொன்னதும், காஞ்சனாவின் முகம் மாறியது.

அவரது முகமாறுதலைக் கவனித்த சம்யு, ''ப்ளீஸ் அத்தை! அவர் விழிச்சிட்டு இருக்கும்போது வேண்டாம்! அவர் தூங்கும்போது வரேன் அத்தை, ப்ளீஸ்!'' என்று கெஞ்ச, காஞ்சனாவுக்கு மனம் உருகியது.

'கடவுளே! சீக்கிரம் மதிக்கு இழந்த நினைவை திருப்பிக் கொடு!' என்று மனமார வேண்டியவர்.

''நீ முதல்ல உடம்பை தேத்திக்கோ, அப்புறம் அவனைப் பார்க்கலாம்!'' என்று சொல்லிச் சொல்லியே, சரியாக உண்ணக் கூட இல்லாமல் இருந்தவளை, சரியாக உண்ண வைத்தார்.

மதியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில், சம்யுவும் அவர் சொன்னபடி நடக்க, அடுத்த இரண்டு நாட்களில் அவளது உடல சற்று தேறியது.

## 14

மதியழகன் திரைப்படத் துறையில் இருந்ததால், அவனது விபத்து அளவுக்கு அதிகமாகவே பத்திரிகைச் செய்தியில் இடம் பிடித்து இருந்தது.

அவனைப் பற்றி விசாரிக்க வென்று மருத்துவமனைக்கு வெளியே அலை மோதிய ரசிகர்களின் கூட்டத்தையும், திரைப்பட நண்பர்களின் வருகையையும் சமாளிப்பதே மதியின் தாத்தா அன்பழகனுக்கு பெரும் வேலையாக இருந்தது.

மதியழகனின் அம்னீசியா பிரச்சனையால், மருத்துவமனையில், அவனைப் பார்க்க வந்த திரைப்படத் துறை நண்பர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

மிகவும் நுண்ணிய அறுவை சிகிச்சை காரணமாக, மதி பெரும்பாலும் உறக்கத்தின் பிடியில்தான் இருந்தான். ஏதாவது ஒரு வார்த்தையில், அவனுடைய நிலையைப் பற்றி உளறி விடுவோமோ என்ற பயத்தில் இருந்த குடும்பத்தினருக்கும், அது ஒரு வகையில் நிம்மதியையே அளித்தது.

இடையில், அவன் உறங்கும் நேரம் பார்த்து சம்யுக்தா மதியைப் பார்க்க வந்தாள். தன்னால்தான் இவ்வளவு பிரச்னையும் என்ற குற்ற உணர்வு நீங்கவில்லை என்றாலும், அந்த குற்ற உணர்வால் எந்தப் பிரச்னையும் தீர்க்க இயலாது என்ற நிதர்சனம் புரிந்தவளாக, நம்பிக்கையோடு மதியழகன் பூரண குணம் அடைய வேண்டும் என்ற பிரார்த்தனை செய்வதோடு, அவள் வேறு எதையும் எண்ணுவதில்லை.

மேலும் ஒரு வாரம் இப்படியே செல்ல, அன்று எப்போதும் போல, மதியின் கையை வருடியபடி அமர்ந்திருந்த சம்யுக்தா, அவனிடம் அசைவு தெரியவும் வேகமாக எழுந்து அங்கிருந்து வெளியேறினாள்.

அவளிருக்கும் நேரம், காஞ்சனாவும் அங்கிருந்து சென்று விடுவது வழக்கம். அத்தையை அழைக்க வெளியே வந்த சம்யுக்தா, மதியின் அறைக்குள், சத்தம் கேட்கவே, உள்ளே எட்டிப் பார்க்க, மதி அருகில் இருந்த மேஜையில் இருந்து தண்ணீர் பாட்டிலை, அடிபடாத இடக் கையால் எடுக்க முயன்று கொண்டிருந்தான். கொஞ்சம் தள்ளி இருந்த பாட்டில் அவனுக்கு எட்டாமல் இருக்க, அங்கிருந்த குவளை கீழே விழுந்திருந்தது.



வேகமாக உள்ளே சென்ற சம்யு, தண்ணீர் பாட்டிலை எடுத்து, திறந்து அவனிடம் நீட்ட, ''தேங்க்ஸ்!'' என்றபடி வாங்கி தண்ணீரை அருந்தியவன், ''நீங்க?'' என்று இழுக்க, சம்யுவுக்கு கண்ணீர் துளிர்த்தது.

உதட்டைக் கடித்துத் தன் தவிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''நான்... நான் இங்கே அட்மிட் ஆகி இருக்கிற என் தோழியைப் பார்க்க வந்தேன்... இங்கே சத்தம் கேட்டதும் உள்ளே வந்தேன்!'' என்று விட்டு நகர முயன்றாள்.

''தேங்க்ஸ் மேடம்!'' என்றவன், புருவத்தை சுருக்கிய வண்ணம், ''உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு! ஆனால், எங்கே என்று தெரியலை!'' என்று சொல்ல, சம்யுக்தாவுக்கு மனம் படபடத்தது.

'கடவுளே! மதிக்கு நினைவு வருகிறதா என்ன?' என்று எண்ணியபடி ஆவலோடு அவன் புறம் திரும்பியவள், ''எங்கே பார்த்திருக்கீங்க?'' என்று தன் படபடப்பை மறைத்துக் கொண்டு வினவ, கொஞ்சம் யோசித்தவன், ''நினைவில்லை!'' என்று உதட்டைப் பிதுக்க, சம்யுவுக்கு மனம் சோர்ந்தது.

அவன் விழித்த அன்று, 'இவங்களைத் தெரியுதா?' என்று தன்னையும், அகிலனையும் காட்டி கேட்டதை வைத்துச் சொல்கிறான் என்பது புரிய, அதற்கு மேல் அங்கே நிற்க முடியாமல், ''நான் வரேன்!'' என்றவள், அவனைத் திரும்பியும் பார்க்காமல், அங்கிருந்து நகர்ந்தாள்.

என்னதான் மனதைத் திடப்படுத்திக் கொண்டு இருந்தாலும், மதிக்கு தன்னை நினைவில்லை என்பது, அவளை வாட்டவே செய்தது.

காஞ்சனாவைத் தேடி வந்தவள், "அவர், விழிச்சிட்டார். அத்தை, நீங்க போங்க!" என்று அனுப்பிவிட்டு, வீட்டுக்குக் கிளம்பினாள்.

* * *

அந்தப் பெண்ணை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்று யோசித்துக் கொண்டிருந்த மதி, ரொம்பவும் யோசித்தால், தலை வலிப்பது போல் இருக்கவே, அந்த யோசனையைக் கை விட்டான். குடும்பத்தினர் அனைவரும் தன்னிடம் எதையோ மறைப்பதைப் போன்ற உணர்வு அவ்வப்போது எழுந்தது.

தன்னை இங்கே வந்து யாரும் பார்க்கக் கூட, மருத்துவர் அனுமதிக்கவில்லை என்றால் வேறு ஏதாவது பிரச்சனையா? என்று அவன் மனம் அடிக்கடி சிந்தனையில் ஆழ்ந்தது.

எந்தக் கேள்வியைக் கேட்டாலும், எல்லாரும் ரொம்ப யோசித்தே பதில் கூறுவது போலத் தோன்ற, அவனது குழப்பம் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

மருத்துவர் வரும் நேரம், அவன் தனது குழப்பத்தைப் பகிர்ந்து கொள்ள, இப்போதைக்கு நீங்கள் எதையும் யோசிக்காமல் இருப்பதே நல்லது என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்.

எதுவானாலும், தெரியும்போது தெரியட்டும் என்று மதியும் அமைதியாக இருக்க ஆரம்பித்தான்.

அடுத்த வாரத்தில், மதியின் உடல் நிலை சற்றே தேறியது. வலியும் குறைந்து இயல்பாக எழுந்து அமர்ந்து பேச ஆரம்பித்தவன், உறங்கும் நேரமும் குறைய, சம்யுவுக்குத்தான் அவனைப் பார்க்காமல் இருந்ததில் பைத்தியம் பிடிப்பதைப் போலிருந்தது.



மேலும் ஒரு வாரம் சென்ற பிறகு, மருத்துவர் மதிக்கு உடல் அளவில் எந்தப் பிரச்னையும் இல்லை என்று அறிவித்து விட்டு, வீட்டுக்குக் கிளம்பும் முன் அவனிடம் தனியாகப் பேச விரும்புவதாகச் சொல்ல, மதியழகன் மருத்துவரின் அறைக்கு வந்தான்.

"எனக்கு எதுவும் பிரச்சனை இருக்கிறதா டாக்டர்? எல்லாரும் என்கிட்டே பேசவே பயப்படற மாதிரி இருக்கு. யார் முகமும் சரியாகவே இல்லை. விபத்தில் எனக்கு ஏற்பட்ட பாதிப்பால் பயந்து இருக்காங்க என்று வைத்துக் கொண்டாலும், இந்த ஒரு வாரமாகவே நான் ரொம்ப நல்லா இருக்கிற மாதிரிதான் எனக்குத் தோணுது. அப்பவும் ஏன் எல்லோரும் இப்படி இருக்காங்க? ப்ளீஸ் டாக்டர்... எதுவா இருந்தாலும் என்கிட்டே சொல்லிடுங்க?" என்று தன் இயல்புக்கு மாறாக, மதியழகன் படபடத்தான்.

"பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது மிஸ்டர். மதி. ஆனால், ரொம்ப கவலைப் படுகிற மாதிரி எதுவும் இல்லை!" என்ற மருத்துவரை, மதி ஆச்சரியத்துடன் நோக்கினான்.

"உங்கள் உடல் நலத்தைப் பொறுத்தவரை, இனிமேல் எந்தப் பிரச்சனையும் இல்லை! ஆனால், இந்த விபத்தில் உங்கள் மூளைக்கும் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதால், உங்களுக்கு அம்னீசியா ஏற்பட்டு இருக்கிறது!"

'அம்னீசியாவா?'

மருத்துவர் சொன்னது தன் காதில் சரியாகத்தான் விழுந்ததா?

"எனக்கு... எனக்கு எல்லாமே நினைவு இருக்கே டாக்டர்... விபத்து நடந்த நாள் வரைக்கும், எனக்கு

எல்லாமே நினைவு இருக்கே!'' என்று அவன் திரும்பத் திரும்ப சொல்ல, மருத்துவர் மென்மையான குரலில் பேச ஆரம்பித்தார்.

''நீங்கள் விபத்து நடந்ததா சொல்ற அன்றைக்கு, உங்களுக்கு எதுவுமே ஆகலை மதி. அன்று, எந்த அசம்பா விதமும் நடக்கலை! அத்தோட, விபத்து நடந்ததா நீங்க சொல்ற நாள், நான்கு மாதத்துக்கு முந்தையது! அதன் பிறகு, மூன்று மாசம் கழித்துதான் உங்களுக்கு இந்த விபத்து ஏற்பட்டிருக்கு! இந்த விபத்து நடந்த நாளுக்கு முந்தைய மூன்று மாத நினைவுகளைத்தான் நீங்க இழந்து இருக்கீங்க!''

மருத்துவர் சொன்னது தனக்குத் தெரிந்த மொழியில் தான் என்றாலுமே, மதிக்கு அவர் சொன்னது புரிய வில்லை!

நடந்தது எதையும் அவனால் நம்ப இயலவில்லை! தன்னுடைய வாழ்வில ஒரு மூன்று மாதங்களில் நடந்த நிகழ்வுகள் தனக்கு நினைவில் இல்லை என்பது அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

மருத்துவருக்கு அவனது அதிர்ச்சி புரிந்தது.

''நீங்க அதைப் பற்றி ரொம்ப கவலைப் பட வேண்டிய தில்லை, மதி. அந்த நினைவுகள் திரும்பவும் தானாகவே வந்து விடும்!''

நம்பிக்கை அளிக்கும் விதமாக மருத்துவர் சொல்ல, ''எப்போ வரும் டாக்டர்?'' மெல்லியக் குரலில் கேட்டவனுக்கு, மருத்துவரால் உடனே பதில் சொல்ல இயல வில்லை.

''இந்த மாதிரி விஷயங்களில் ஸ்பாண்டேனியஸ் ரெகவரி (Spontaneous Recovery) மட்டும்தான்



சாத்தியம், மதி. காலப் போக்கில் உங்களுக்கே அது நினைவுக்கு வரும்! ஆனால், எப்போது வரும் என்று சரியாகச் சொல்ல முடியாது!''

தன் குடும்பத்தினர் தன்னிடம் இயல்பாகப் பேசத் தயங்கியது ஏன், என்று மதிக்கு இப்போது தெளிவாகப் புரிந்தது. இன்னமும், அவனால் அதிர்ச்சியில் இருந்து மீள முடியவில்லை.

அவனது அதிர்ச்சியை உணர்ந்த மருத்துவர், ''பயப் பட வேண்டிய அவசியம் இல்லை மிஸ்டர் மதி, இந்த மாதிரி அறுவை சிகிச்சைக்குப் பிறகு, சில பேருக்கு சில வருட நினைவுகள் கூட போனதுண்டு. ஆனால், உங் களுக்கு ரொம்பவே குறைந்த கால நினைவுகள்தான் போயிருக்கு... விரைவில் அவை நினைவுக்கு வருவ தற்கான வாய்ப்புகள் இருக்கு!'' என்று நம்பிக்கை அளித்து விட்டு,

''உங்களுக்கு ரொம்பவே சிக்கலான அறுவை சிகிச்சை நடந்திருக்கு. அதனால், அம்னீசியா வந்ததைப் பற்றி நீங்க அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருப்பது தான் நல்லது. அந்த மூன்று மாதத்தில் நடந்த நிகழ்வு களை நீங்க ரொம்ப எளிதாக, உங்க குடும்பத்தினர் கிட்ட இருந்து தெரிந்து கொள்ள முடியும்! மறந்த நினைவுகள், இயல்பாக நினைவுக்கு வரணுமே தவிர, அதை வரவைக்க நீங்க டென்ஷன் எடுத்துக்காதீங்க, அதுதான் உங்கள் உடல்நிலைக்கு நல்லது!'' என்று அறிவுரை கூறினார்.

அந்த மூன்று மாதங்களில் என்ன நடந்திருக்கும்?

அதிகம் அதைப் பற்றி நினைத்து, மன அழுத்தம் ஏற்பட வாய்ப்பு கொடுக்கக் கூடாது என்ற மருத்துவரின்

அறிவுரைப்படி, இருக்க முயன்றாலும், அந்த மூன்று மாதத்தில் தன் வாழ்க்கையில் என்ன நடந்திருக்கும் என்று தெரிந்து கொள்ளும் ஆவல் குறையவில்லை!

வீட்டுக்கு வந்த முதல் வேலையாக, மதியழகன் தேடியது அவனது டயரியைத்தான்.

தனக்கு நினைவில்லை என்று சொல்லப்படும், அந்த மூன்று மாதத்தில் தான் எழுதி இருந்ததைப் படித்தபோது, அவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை!

எவ்வளவு விஷயங்கள் நடந்திருக்கிறது!

ஒரு மனிதனின் வாழ்வில் மாற்றம் ஏற்பட ஒரு நாளே போதும் எனும்போது, மூன்று நெடிய மாதங்கள், எவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்தும்?

அவனது ஒரு பேட்டி, அவனைப் பற்றிய தவறான அபிப்ராயத்தை மாற்றி இருக்கிறது!

அவனது உதவியாளன் ஒருவனைத் தவறான நடத்தைக்காக வெளியேற்றி இருக்கிறான்!

புதுப் படம் எடுக்க ஏற்பாடுகள் தொடங்கி இருந்தன!

டயரியில் எழுதி இருந்ததைப் படிக்கும்போது, அவன் தொழில் சம்மந்தப்பட்ட விஷயங்களை அவனால் எளிதாக உணர முடிந்தது.

கதையைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை! அதன் முழு வடிவம் எப்படியும் கணிப்பொறியில் இருக்கும்!

வீட்டுக்கு வந்த இரண்டு நாட்களாக, டயரியும் கையுமாக இருந்தவன், கணிப்பொறியில் தன்னுடைய கதையைப் பற்றின முழு விவரங்களையும் தெரிந்து கொண்டான்.



ஒருவாறாக, அவன் இழந்து போன நினைவுகளைப் பற்றி கவலைப்படாமல் இருக்க பயிற்சி செய்து, இயல்பு நிலைக்கு வந்தபோது, அவனுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது.

மதிக்கு விபத்து நேர்ந்த அன்றிலிருந்தே காஞ்சனா வின் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்து இருந்தது.

திருமண நிச்சயம் நடக்க வேண்டிய நாள், மதிக்கு அறுவை சிகிச்சை நடந்தது. அதன் பிறகான அவனது நினைவிழப்பு, ஜோசியர் கல்யாண யோகம் வந்து இரண்டு மாதத்துக்குள் திருமணம் செய்து ஆக வேண் டும் என்று சொல்லி இருந்தது எல்லாமாக சேர்ந்து, மதியழ னுக்கு உடனே திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று அவரைத் தீர்மானம் செய்ய வைத்தது.

காஞ்சனா, தன் எண்ணத்தை கணவரிடமும், மாமனா ரிடமும் பகிர்ந்து கொண்டார்.

"இப்போ இவன் இருக்கிற நிலையில், உடனே கல்யாணம் என்றால் எப்படிம்மா?" என்று அறிவழகன் தயங்கினார்.

"இவர் எப்பவும் இப்படித்தான்! நீங்களே சொல்லுங்க மாமா, அந்த ஜோசியர் சொல்ற மாதிரிதானே திருமணத் துக்கு முன்னாடி தடங்கல் ஏற்பட்டிருக்கு. அவர் சொன்ன நேரம் முடிய இன்னும் ஒரு மாசம்தான் இருக்கு. அதுக் குள்ளே மதிக்கு கல்யாணம் செஞ்சுடணும் என்றுதான் நான் தவிக்கிறேன்! அது புரியாமல், இவர் பேசிட்டு இருக்கார்!" என்று காஞ்சனா படபடக்க, அன்பழகன் அவரைச் சமாதானப்படுத்தினார்.

"பொறு காஞ்சனா! மதிக்கு பெரிய ஆபரேஷன் நடந் திருக்கு! பத்தாதுக்கு மூன்று மாச நினைவுகள் வேற

இல்லை! இந்த சமயத்தில், அவனை ரொம்பவும் குழப்பக் கூடாது!'' என்று பொறுமையாக அன்பழகன் எடுத்துக் கூற,

''எனக்குப் புரியுது மாமா! ஆனால், அவனுக்கு நினைவு எப்போ வரும் என்று எத்தனை நாள் காத்திருக்க முடியும்?'' என்று காஞ்சனா சொல்வது சரியெனப் பட தான் மதியிடம் பேசுவதாக அன்பழகன் அவருக்கு வாக்கு கொடுத்தார்.

அன்று மாலை, அன்பழகனும் மதியும் தோட்டத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''இப்போ வலி இல்லைதானே கண்ணா?''

''இல்லை தாத்தா! நான் நல்லாத்தான் இருக்கேன்! ஆனால், நீங்க எல்லாரும்தான் எதையோ இழந்த மாதிரி இருக்கீங்க? அதிலும் அம்மா முகத்தில இன்னும் பழைய களை வரவே இல்லை!'' என்று மதியழகன் வருத்தத் துடன் சொன்னதும்,

''என்ன இருந்தாலும் பெற்றவள் இல்லையா? ரொம்பவே பயந்துட்டாள்! அது இருக்கட்டும், உனக்கு இந்த மூன்று மாச நினைவுகள் இல்லாததால் எந்த பிரச்னையும் இல்லையே?'' என்று அன்பழகன் விசாரிக்க,

''பிரச்சனை என்று எதுவும் இல்லை, தாத்தா! வேலை பற்றின விவரங்கள், கம்ப்யூட்டரில் இருக்கு. நடந்த முக்கியமான விஷயங்கள் டயரியில் இருக்கு! இருந் தாலும், சில சமயம் ஏதோ ஒன்றை இழந்த மாதிரி உணர்வு வருவதைத் தவிர்க்க முடியலை!'' என்று மதி தன் நிலையை எடுத்துச் சொன்னதும், அன்பழகன் குழம் பினார்.



டயரியில் சம்யுக்தாவைப் பற்றி எதுவும் எழுதி இருந்தால், அதைப் பற்றி தங்களிடம் விசாரித்திருப்பானே என்ற எண்ணம் தோன்ற, ''ரொம்ப முக்கியமா எதுவும் நடந்திருக்கா, மதி?'' என்று சாதாரணமாக விசாரித்தார்.

''ம்ம்... நடந்திருக்கு!'' என்றவன், பேட்டி, புது படம், தாமு பற்றி எல்லாம் சொல்ல, அன்பழகன் மேலும் குழம்பினார்.

பேட்டி பற்றி சொல்லுகிறவன், சம்யுவைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே?

சம்யுவைப் பற்றி எதுவுமே எழுதி வைக்கவில்லையா என்ன? என்று யோசித்தவருக்கு தலை வலிதான் மிஞ்சியது.

அவரது யோசனையைக் கண்ட மதி, ''என்ன தாத்தா, என்ன யோசிச்சிட்டு இருக்கீங்க?'' என்று வினவினான்.

''வாழ்க்கை ரொம்ப விசித்திரமானது இல்லையா, மதி? நம் கற்பனையை விட ஆச்சரியமான விஷயத்தில், நிஜத்தில் நடக்கிறது!'' என்ற தாத்தாவை நோக்கியவன்,

''உண்மைதான் தாத்தா! Truth is always stranger than fiction! என் வாழ்க்கையே அதற்கு உதாரணம் தான்!'' என்று இயம்பினான்.

''ஒருவேளை, உனக்கு டயரி எழுதற பழக்கம் இல் லாமல் இருந்திருந்தால் எப்படி ஃபீல் செஞ்சிருப்பே?'' என்று தாத்தா கேட்டதும்,

''நடுவுல கொஞ்சம் பக்கத்தை காணோம் என்ற கதையாதான் ஆகி இருக்கும்!'' என்று சிரித்தவன், உடனே சீரியஸ் ஆகி,

''நினைக்கவே கொஞ்சம் பயமாத்தான் இருக்கு தாத்தா, எல்லா விஷயங்களையும் எழுதி வைத்திருந்துமே,

இன்னும் ஏதோ இருக்கு என்ற எண்ணம் தோன்றிக் கொண்டே தான் இருக்கு!'' என்றவன்,

''டயரி எழுதற பழக்கம் இல்லாமல் இருந்திருந்தால், என்ன நடந்தது, என்ன நடந்தது என்று உங்க மூன்று பேரையும் போட்டு படுத்தி எடுத்திருப்பேன் என்று நினைக்கிறேன்!'' என்று சொல்லி புன்னகைத்தான்.

''உன் டயரியில் எழுதாத விஷயங்களும் இந்த மூன்று மாதத்தில் நடந்திருக்கலாம்தானே மதி?'' என்று வினவிய அன்பழகன், மதியின் முகத்தையே கூர்ந்து நோக்க,

''ம்ம்... கண்டிப்பா! ஆனால், என்னைப் பாதித்த விஷயங்களை நான் கண்டிப்பா எழுதி இருப்பேன் தாத்தா!'' என்று உறுதியாக சொன்னவனுக்கு, எதையோ சொல்ல வந்து தாத்தா தயங்குகிறாரோ என்று தோன்ற,

''என்ன விஷயம் தாத்தா? ஏதோ சொல்ல வரீங்க என்று புரியுது! என்கிட்டே என்ன தயக்கம்? சொல்லுங்க!'' என்று ஊக்கினான்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த அன்பழகன், ''உன் வாழ்க்கையில் நடந்த ஆச்சரியங்கள் இன்னும் முடியவில்லை, கண்ணா!'' என்று பீடிகை போட,

''ப்ளீஸ் தாத்தா! இந்த பீடிகை எல்லாம் வேண்டாம்! அவுட் வித் இட்!'' என்று சொன்னவனின் மனதில், தாத்தா மிகவும் முக்கியமான விஷயத்தைச் சொல்லப் போகிறார் என்ற எண்ணம் தோன்றி, மனம் படபடத்தது.

''இந்த மூன்று மாதத்தில் ரொம்பவே முக்கியமான ஒரு விஷயம் உன் வாழ்வில் நடந்திருக்கு மதி!'' என்றவர்,



''நீ ஒரு பெண்ணை நேசித்தாய்!'' என்றதும், மதியழகன் தன் காதுகளையே நம்ப முடியாமல், அதிர்ச்சியுடன் தன் தாத்தாவை நோக்கினான்.

ஒரு கணம் அதிர்ச்சியில் உறைந்த மதி, அடுத்த கணம் சிரிக்கத் துவங்கினான்.

அவனது அதிர்ச்சி எதிர்பார்த்ததுதான்! ஆனால், திடீரென்று அவன் சிரிக்க ஆரம்பிக்கவும், அன்பழகன் குழம்பினார்.

''தாத்தா! இன்னைக்கு ஏப்ரல் முதல் தேதி கூட இல்லையே? அப்புறம் எதுக்கு இந்தப் பொய்?'' என்று கேலியாகக் கேட்டவன்,

அவர் முகத்தில் இருந்த குழப்பத்தைக் கண்டதும், தானும் குழம்பி,

''தாத்தா!'' என்று கேள்வியாக நோக்கினான்.

''இது பொய் இல்லை மதி! நூற்றுக்கு நூறு உண்மை!''

உறுதியான குரலில் தாத்தாவிடம் இருந்து பதில் வர, ''எப்படி தாத்தா? ப்ளீஸ் தாத்தா, போதும் விளையாட்டு!'' என்று எரிச்சலுடன் மொழிந்தான்.

''உன் அதிர்ச்சி எனக்குப் புரியுது மதி, ஆனால் நான் சொன்னது, பொய்யில்லை! நீ ஒரு பெண்ணை விரும்பினாய்! அவளோடு திருமண நிச்சயம் நடக்க இருந்த நாளுக்கு, முதல் நாள்தான் உனக்கு விபத்து ஏற்பட்டது!'' என்று சொன்ன தாத்தாவின் குரலில் இருந்த நம்பகத்தன்மை, மதியைக் குழப்பியது.

''இப்போ இது உனக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும்! ஆனால், இதைப் பற்றி பேசியே ஆக வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கேன்!'' என்றவர், மதியைப்

பற்றிய திருமண விஷயத்தில் காஞ்சனாவின் பயத்தை எடுத்துக் கூற, மதிக்கு தலை சுற்றியது.

தாய் நான்கு மாதத்துக்கு முன் திருமணம் பற்றிப் பேசியது நினைவுக்கு வந்தது.

ஒருவேளை, தன்னைத் திருமணத்துக்கு சம்மதிக்க வைக்க வேண்டி அப்படிச் சொல்கிறார்களோ என்ற எண்ணம் தோன்ற, அடுத்த கணமே, தன் மனதுக்கேற்ற பெண் அமையா விட்டால், தாய் சொல்லும் பெண்ணையேத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று தான் சொன்னதும் நினைவுக்கு வர, அவனது குழப்பம் கூடியதே தவிர குறையவில்லை.

மதியின் யோசனையைக் கண்ட அன்பழகன், "கண்ணா! உன்னைக் குழப்பக் கூடாது என்றுதான் நாங்களும் நினைக்கிறோம்! ஆனால், அம்மாவின் கவலையும் நியாயமாகத் தோணுது! அதோடு, அந்தப் பெண் வீட்டிலும், தவித்துக் கொண்டு இருக்கிறார்கள்!" என்று கூறினார்.

"அப்படி எதாவது நடந்திருந்தால், நான் எப்படி அதை டயரியில் எழுதாமல் இருந்திருப்பேன், தாத்தா?" என்று புலம்பியவனிடம்,

"அதைப் பற்றி எனக்கும் தெரியவில்லை மதி. ஆனால், நான் சொல்வது உண்மை! என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை இல்லையா?"

ஆதங்கத்துடன் வினவிய, தாத்தாவை இயலாமையோடு நோக்கியவன், "உங்களை நம்பாமல் என்ன தாத்தா?" என்றான்.

தாத்தா உண்மைதான் சொல்கிறான் என்று புரிந்தாலும், மதியழகனுக்கு அவர் சொன்ன விஷயம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.



கொஞ்ச நேரம் அமைதியாக இருந்து விட்டு, "அந்தப் பெண் பெயர் என்ன தாத்தா?" என்றவன் குரல் மெலிந்து வந்தாலும், தான் சொன்னதை ஏற்றுக் கொண்டான் என்றெண்ணி மகிழ்ந்த அன்பழகன், "சம்யுக்தா!" என்றதும், மதி தனக்குத் தெரிந்தவர் பட்டியலில் அவள் பெயர் இருக்கிறதா என்று யோசிக்க ஆரம்பித்தான்.

வித்தகன் பத்திரிகை நிருபர்! அவளுடைய கருத்தாழம் மிகுந்த கட்டுரைகள், அவனுக்கும் பிடிக்கும்!

அவள்தான், அவனைப் பேட்டி காண வித்தகன் பத்திரிகையில் இருந்து வந்தாள் என்று எழுதி வைத்திருக்கிறானே!

அவள் எப்படி இருப்பாள்? என்று யோசித்தவனுக்கு, நிழலாகக் கூட ஒரு உருவம் புலப்படவில்லை.

தாத்தாவிடம் பேசி விட்டு தன் அறைக்கு வந்த மதியழகனுக்கு, தன் காதலைப் பற்றி ஏன் டயரியில் எழுதி வைக்கவில்லை என்ற கேள்வி மண்டையைக் குடைந்தது.

தன்னைப் பாதிக்கும் விஷயங்களை அவன் எழுதாமல் விட்டதில்லை! அப்படி இருக்கும்போது, தன் வாழ்வில் நடந்த மிக மிக முக்கியமான விஷயத்தை எப்படி விட்டான் என்று யோசித்து யோசித்து தலை வலிப்பது போலிருந்தது.

சட்டென்று நினைவு வந்தவனாக, தன் ஓவியப் புத்தகத்தை எடுத்தவன், வேகமாகப் பக்கங்களைத் திருப்ப, ஒரு பக்கத்தில் இருந்த ஓவியத்தில், அவனது பார்வை நிலைகுத்தி நின்றது.

மாலையோடு நின்று கொண்டிருந்த பெண்ணை நோக்கி, கை நீட்டிக் கொண்டிருந்த உருவம், அவனே அவனே அல்லவா?

அந்தப் பெண்ணின் முகத்தை உற்று நோக்கியவனுக்கு, அவளை எங்கேயோ பார்த்த நினைவு தோன்றியதே தவிர, எங்கே என்று நினைவு வரவில்லை.

அதன், பின் மெதுவாக பக்கங்களைத் திருப்பியவனுக்கு, அவளையும், தன்னையும் வயதானவர்களாக வரைந்திருந்த ஓவியம் கண்ணில் பட, அவளைத் தான் எந்தளவு நேசித்திருக்கிறோம் என்பது புரிய, கண்கள் பனித்தது.

காதலித்த பெண்ணே நினைவில் இல்லை! என்ன மாதிரியான நிலை இது? என்று விரக்தியாக நினைத்தவனுக்கு, தன் நிலையே இப்படி என்றால், காதலித்தவனுக்குத் தன்னை நினைவில்லை என்ற விஷயம், அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு கொடுமையாக இருக்கும்?

தன்னைக் காதலித்த பாவத்துக்கு, அந்தப் பெண்ணுக்கு ஏன் தண்டனை? என்ற எண்ணம் தோன்ற, இதில் தன் தவறென்று எதுவும் இல்லை என்றாலும், முகம் கூட நினைவில்லாத அவளிடம், உடனே மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததை மதியழகன் ஆச்சரியத்துடன் உணர்ந்தான்.

## 15

முந்தைய நாள் இரவு, தாத்தாவுடன் பேசி விட்டு மதியழகன், தன் அறைக்குள் சென்று விட்டு முடங்கி விட, அவனது அதிர்ச்சி புரிந்து யாரும் அவனை எதுவும் கேட்கவில்லை.



அடுத்த நாள் மதியழகன் உணவருந்த வந்தபோது, காஞ்சனா மெதுவாக திருமணப் பேச்சை ஆரம்பித்தார்.

''உன்கிட்ட தாத்தா எல்லாம் சொல்லி இருப்பார் என்று நினைக்கிறேன்!'' என்று காஞ்சனா ஆரம்பித்ததும், தலை நிமிர்த்தி அன்னையைப் பார்த்து விட்டு, அமைதியாக இருந்தான்.

''மதி, இன்னும் இரண்டு வாரத்தில் கல்யாணம் வைத்து விடலாமா?''

மகன் இருக்கும் நிலையில், திருமணத்தைப் பற்றி பேசத் தயக்கமாக இருந்தாலும், பேசித்தானே ஆக வேண்டும் என்ற எண்ணத்தோடு காஞ்சனா கேள்வி கேட்க, மதி திகைத்தான்.

தாத்தா முன்னே சொல்லி இருந்தார்தான், ஆனாலும், இரண்டு வாரத்தில் திருமணம் என்பது, அவனைக் கலக்கத்தில் ஆழ்த்தியது.

மதி யோசனையில் ஆழ, காஞ்சனா அவன் அருகில் வந்து அமர்ந்தார்.

நிமிர்ந்து அன்னையை நோக்கியவன், ''எதுக்கும்மா அவ்வளவு அவசரம்? எனக்கு அந்தப் பெண்ணைப் பற்றி எதுவும் நினைவில்லாத போது... எப்படிம்மா?'' தவிப்புடன் வினவினான்.

மகனின் தவிப்பு புரிந்தாலும், அவனுக்கு சாதகமாகப் பேசினால், தான் நினைப்பது நடக்காது என்று உணர்ந்தவர், ''மதி! எனக்கு உன் நிலை புரியுது! ஆனால், நான்கு மாசத்துக்கு முன்னாடி நான் கல்யாணம் பற்றி பேசும் போது, உன் மனதுக்கேற்ற பெண் கிடைக்கவில்லை என்றால், நான் பார்க்கும் பெண்ணைத் திருமணம்

செய்து கொள்வதாக, நீ எனக்கு ஒரு வாக்குக் கொடுத்திருந்தாய். இப்போ, அப்படியே நினைத்துக் கொண்டு கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லு!''

மென்மையாகவே என்றாலும், அன்னையின் குரலில் இருந்த அழுத்தம் மதிக்குப் புரியத்தான் செய்தது.

அவனுக்கு விருப்பம் இல்லை என்று ஒரே அடியாக மறுத்து விட்டால், யாராலும் எதுவும் சொல்ல முடியாது தான்.

ஆனால், அப்படி மறுக்கவும் அவனுக்கு விருப்ப மில்லை. முழு மனதாக திருமணத்தை ஏற்கவும் முடிய வில்லை.

அன்னையின் முகத்தில் இருந்த பிடிவாதத்தைக் கண்டவனுக்கு, திருமணத்துக்கு மறுப்பு சொல்ல முடிய வில்லை என்றாலும்; சம்மதம் என்று சொல்லும் முன் சில விஷயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தான்.

உணவருந்தி விட்டு, ''கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறேன்!'' என்று கிளம்பினான்.

''நான் கேட்டதுக்கு பதிலே சொல்லவில்லையே?'' என்ற அன்னையிடம், ''வந்து சொல்கிறேன்!'' என்றான்.

அடுத்து அவன் வந்தது, அவனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரைத் தேடி!

''எப்போ டாக்டர், எனக்கு மறந்து போன மூன்று மாத நினைவுகள் திரும்ப வரும்?''

கேள்வி கேட்ட மதியழகனை ஆச்சரியத்துடன் நோக்கிய, மருத்துவர், ''ஏற்கனவே சொன்னதுதானே மதி?'' என்றார்.



மதி ஒரு பெருமூச்சுடன் அமைதியாக இருக்க, ''எதாவது பிரச்சனையா?'' என்று விசாரித்தார் மருத்துவர்.

''என்னை எங்க அம்மா திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்துகிறார்கள்!''

மதியழகனுக்கு நிச்சயம் நடக்க இருந்தது ஊரறிந்த விஷயம்தானே? அதுவும் அவனது திருமணம் காதல் திருமணம் என்பது அனைவரும் அறிந்ததுதான்!

''அது ஏற்கனவே முடிவு செய்திருந்த விஷயம்தானே மதி? அதில் என்ன பிரச்சனை?'' என்ற மருத்துவருக்கு, சம்யுக்தாவை அவனுக்கு நினைவில் இல்லை என்பது நினைவுக்கு வர, அமைதியானார்.

மூன்று மாத நினைவுகளைத்தானே இழந்திருக்கிறான் என்று நினைத்தவருக்கு, அவனது இன்றைய நிலை தெளிவாகப் புரிய, பரிதாபம் எழுந்தது.

''கொஞ்ச நாள் காத்திருக்கலாமே மதி? என்ன அவசரம்?'' என்றவரிடம், தன் அன்னையின் பயத்தைப் பகிர்ந்தவன்,

''எனக்கு இன்னொரு விஷயம் தெரிய வேண்டி இருக்கு, டாக்டர். அதற்காகத்தான் உங்களைத் தேடி வந்தேன்!'' என்றான்.

''சொல்லுங்க மதி, என்ன தெரியணும்?''

''எனக்கு பழைய நினைவுகள் திரும்ப வரும்போது, இப்போ நடக்கிற விஷயங்கள் மறந்து போக வாய்ப்பு இருக்கா?''

இயல்பான குரலில் வினவினாலும், மருத்துவர் பதில் சொல்ல எடுத்துக் கொண்ட, அந்த சில நொடிகள் மதிக்கு படபடப்பைத் தந்தது.

''இல்லை மதி! உங்க கேசில் அந்த மாதிரி நடக்க வாய்ப்பே இல்லை! சில விஷயங்களை நாம் மறந்து போகிற மாதிரி, உங்களுக்கு அந்த விபத்தின் எதிர்விளைவாய், அந்த மூன்று மாத நினைவிழப்பு ஏற்பட்டிருக்கே தவிர, வேற எந்த பாதிப்பும் இல்லை! அதனால், நீங்கள் பயப்படத் தேவையில்லை!''

நம்பிக்கையுடன், மருத்துவர் உறுதியாகச் சொன்னதும், மதி நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

மருத்துவரிடம் பேசிவிட்டு வந்ததில் இருந்து மனம் கொஞ்சம் லேசாகி இருந்தது.

ஏற்கனவே, காதலித்த பெண்ணை நினைவில்லை!

திருமணம் நடந்து, ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், பழைய நினைவுகள் வரும்போது, இடைப்பட்ட காலத்தில் நடந்தது மறந்து போனால், மனைவியை அல்லவா மறக்க நேரிடும்? அது அந்தப் பெண்ணுக்குத் தான் செய்யும் பெரிய கொடுமையாக அல்லவா இருக்கும், என்று எண்ணித்தான் அவன் மருத்துவரிடம் தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளப் போனான்.

வீட்டுக்கு வந்த மதியழகனை, ஆவலோடு காஞ்சனா நோக்க, மதியழகன் முகத்தில் அவனையும் அறியாமல் புன்னகை மலர்ந்தது.

''மதி!?''

ஆச்சரியத்துடன் அழைத்த அன்னையிடம், ''எனக்கு திருமணத்தில் ஆட்சேபணை இல்லை! ஆனால், அதற்கு முன் நான் சம்யுக்தாவிடம் பேச வேண்டும்!'' என்று மதி உறுதியாக சொல்ல, காஞ்சனா மகிழ்ச்சியுடன் புன்னகைத்தார்.

* * *



சம்யுக்தா யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

தன் மனம் கவர்ந்தவனோடு திருமணம் என்று ஆவலோடு காத்திருந்த நேரத்தில் மதிக்கு நேர்ந்த விபத்து, அவளது வாழ்க்கையையே திசை மாற்றி இருந்தது. இனி என்ன? என்ற கேள்வி தினமும் அவளை மருட்டிக் கொண்டிருந்தது.

மதிக்கு தன்னைப் பற்றிய நினைவுகள் திரும்ப வரும் என்ற நம்பிக்கை இருந்த போதும், எப்போது வரும்? என்ற கேள்வி பூதாகாரமாகத் தெரிந்தது.

அவன், அவளை வெறுத்துப் பேசிய போது உண்டான வேதனையை விட, அவன் அவளை மறந்து போனதுதான் அவளுக்கு அதிக வேதனையைத் தந்தது.

மதி மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குச் சென்ற இரண்டு நாட்களாக, அவனைப் பார்க்கவில்லை என்பதும், அவளைச் சோர்வுக்கு உள்ளாக்கி இருந்தது.

காஞ்சனாவை அழைத்துப் பேசலாம் என்று தோன்றினாலும், ஒரு தயக்கமும் இருந்தது.

யோசனையில் ஆழ்ந்திருந்த சம்யுக்தாவைக் கண்ட அகிலன் ஒரு பெருமூச்சோடு ''அக்கா!'' என்று அழைத்தபடி உள்ளே நுழைந்தான்.

''வா அகில்! நீ இன்னைக்கு காலேஜ் போகலை?'' என்று விசாரித்தாள் தமக்கை.

''இல்லை! இன்னைக்கு லீவ்!'' என்ற அகிலன், ''ஏன் இப்படி எப்பவும் தனியா உட்கார்ந்து யோசிச்சிட்டே இருக்கே?'' என்று பரிவுடன் வினவ, சம்யுவுக்கு கண்ணீர் துளிர்த்தது.

''அக்கா! நீ எவ்வளவு தைரியமான பொண்ணு! ஏன் இப்படி கண் கலங்குகிறாய்?'' என்று அகிலன் தவிப்புடன் அவளது கையைப் பற்ற,

''மதிக்கு விபத்து நடந்ததில் இருந்து என்கிட்டே இருந்த தைரியமும் நம்பிக்கையும் எங்கே போச்சு என்று எனக்கே தெரியலை! பயமா இருக்கு அகில்! இனிமேல் என்ன? என்ற கேள்வி என்னை ரொம்பவே பயமுறுத்துது!''

கலங்கிய குரலில் தமக்கை சொன்னதும், அகிலனுக்கும் மனம் கலங்கியது.

இப்போது அவளைத் தேற்றுவதுதான் முக்கியம் என்று உணர்ந்தவன், ''அக்கா! மதி அத்தானுக்கு சீக்கிரமே எல்லாம் நினைவுக்கு வந்துடும்! நீ இப்படி நம்பிக்கை இல்லாமல் இருக்காதே!'' என்று உறுதியான குரலில் சொன்னவன்,

''வீட்டில் உட்கார்ந்துட்டு இருந்தால், இப்படித்தான் இருக்கும், நீ திரும்பவும் வேலைக்குப் போயேன்!'' என்றான்.

தன் வருத்தம் மற்றவரையும் வருந்த வைக்கிறது என்று உணர்ந்த சம்யுக்தா, ''நானும் அதேதான் நினைச்சிட்டு இருக்கேன் அகில்!'' என்று சொன்ன நேரம், ராஜேஸ்வரி உள்ளே நுழைந்தார், ''சம்மு! மதியோட தாத்தா வந்திருக்கார்!'' என்ற அறிவிப்புடன்.

''இதோ வரேன்மா!'' என்றபடி சம்யு எழ. அகிலனும் அவளுடன் எழுந்து வந்தான்.

வந்தவரை வரவேற்று சம்பிரதாயமாக ராஜசேகர் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்க, ''சம்யுவோட கொஞ்சம் பேசணும்!'' என்றபடி சம்யு நோக்கினார் அன்பழகன்.

இருவரும், அவளது அறைக்கு வந்தனர்.

''உனக்கும் மதிக்கும் இன்னும் இரண்டு வாரத்தில் கல்யாணம் செய்யலாம் என்று நாங்க நினைக்கிறோம்!



உனக்கு எதுவும் ஆட்சேபணை இல்லையே?'' என்று அன்பழகன் வினவ, சம்யு, ஆச்சரியத்துடன் தாத்தாவை நோக்கினாள்.

''இப்போ எதுக்கு அவசரம் அவசரமா கல்யாணம் தாத்தா? மதிக்கு பழைய நினைவுகள் வரட்டுமே?''

''எல்லாருக்கும் அப்படி நடந்தால் சந்தோஷம்தான்! ஆனால், நினைவு எப்போ வரும் என்று யாருக்குமே தெரியாதபோது, எவ்வளவு நாள் காத்திருக்க முடியும்? காஞ்சனா ஏற்கனவே பயத்தில் இருக்காள்! அவளுக்கு உடனே மகன் கல்யாணம் நடக்கணும் என்று ஆசை!''

காஞ்சனா சொல்லி இருந்த விவரம் சம்யுவுக்கும் தெரியும்தான்! ஆனால்...

''மதி என்ன சொன்னார் தாத்தா?''

''அவன் முதலில் தயங்கினான்! அப்புறம், டாக்டரைப் பார்த்து விட்டு வந்தான்!'' என்றவர், முழு விவரத்தையும் கூறினார்.

அவள் அமைதியாக அமர்ந்திருக்க, ''என்னம்மா சம்யு? உனக்கு என்ன பிரச்சனை?'' என்று அன்பழகன் மென்மையாக விசாரிக்க, சம்யு தலை குனிந்தபடி அமர்ந்திருந்தாள்.

''என்னம்மா?'' என்று ஆதுரத்துடன் அன்பழகன் வினவினார்.

நிமிர்ந்தவள் கண்கள் கலங்கி இருந்தது.

''விபத்து நடந்த அன்று எனக்கும், மதிக்கும் ஒரு சண்டை என்று சொன்னேன் இல்லை, தாத்தா?'' என்று விட்டு சம்யு, அவரை நோக்க,

''ஆமாம்!'' என்பதாய்த் தலையாட்டினார், பெரியவர்.

''அன்னைக்கு... அன்னைக்கு 'இனிமேல் என் முகத்தில் விழிக்காதே!' என்று மதி சொல்லிட்டார், தாத்தா!'' என்றபோது, அன்றைய நினைவில் சம்யுவுக்கு கண்ணீர் துளிர்த்தது.

சம்யுவைத் திகைப்புடன் நோக்கிய அன்பழகன் எதுவும் கேட்கும் முன்னர், ''அப்படி இருக்கும்போது, அவருக்கு அந்த நினைவுகள் இல்லாத நிலையில், அதை மறைத்து கல்யாணம் செய்யறது சரியா, தாத்தா?''

குழம்பிய நிலையில் தன்னைக் கேள்வி கேட்ட சம்யுவைக் கண்டு, அன்பழகனுக்கு பாவமாக இருந்தது.

''சரிம்மா! அவன் உன்கிட்ட 'என் முகத்தில் விழிக்காதே!' என்று சொல்லிட்டான். ஆனால், அவனுக்கு ஆபத்து என்றதும், நீ ஏன் ஓடி வந்தாய்?''

'என்ன கேள்வி இது?' என்பது போல, சம்யு பெரியவரை நோக்கினாள்.

''சரி! நான் ஒண்ணு கேட்கிறேன்!'' என்றவர், சம்யுவின் முகம் மாறியதைக் கண்டு,

''இல்லைம்மா! அன்றைக்கு என்ன நடந்தது என்று நான் கேட்கப் போவதில்லை! அது உங்க ரெண்டு பேருக்குமான விஷயம்! சண்டையில் யார் பக்கம் தப்பு என்றுதான் நான் கேட்க நினைத்தேன்!'' என்று விளக்கினார்.

''ரெண்டு பேர் மேலயும் தப்பில்லை, தாத்தா! அது முழுக்க முழுக்க ஒரு மிஸ் - அண்டர்ஸ்டேண்டிங்! அவ்வளவுதான்!'' என்று சம்யுக்தா வேகமாகச் சொன்னதும், மதியை விட்டுக் கொடுக்காமல் அவள் பேசியது அன்பழகனுக்கு முறுவலை வரவழைத்தது.



''சரிம்மா! அவன் அப்படி சொன்னதற்கு நீயும் கோபித்துக் கொண்டு வந்து விட்டாய்! இந்த விபத்து நடக்காமல் இருந்திருந்தால், உன்னால் அப்படியே இருந்திருக்க முடியுமா?''

அன்பழகனின் கேள்விக்கு பதில் சம்யுவுக்குத் தெரிந்தே இருந்தது.

என்னதான் அவன் பேசியதில் கோபமும் வருத்தமும் இருந்தாலும், வீட்டுக்கு வந்து அமைதியாக யோசித்த பின், அவளுக்குக் கோபம் குறையத்தானே செய்தது?''

''அதெப்படி தாத்தா, அப்படி விட முடியும்? கொஞ்ச நாள் கோபித்துக் கொண்டு இருந்தாலும், அவரே உண்மை புரிந்து வந்திருப்பார்! அவர் வராமல் இருந்திருந்தால், நானே அவரைத் தேடிப் போய் என் நிலையை விளக்கி இருப்பேன்!''

உறுதியுடன் சொன்னவளைப் பெருமையோடு நோக்கினார் பெரியவர்.

''எப்படியும் நீங்க ரெண்டு பேரும் சமாதானம் ஆகி இருப்பீங்க என்று நம்புகிறாய்தானே? என்றவரிடம், சம்யு உறுதியுடன் தலையசைத்தாள்.

''அப்புறம் எதுக்கும்மா இப்போ குழம்புகிறாய்?'' என்று வினவியவர்,

''அவனுக்கு உன் நினைவு இல்லை என்பதால், தயங்குகிறாயாம்மா?'' என்று பரிவுடன் விசாரித்தார்.

''அது... அது கஷ்டமாதான் இருக்கு தாத்தா! அவர் என்னை மறந்திருக்கலாம்! ஆனால், என் நேசம் இன்னும் அப்படித்தானே இருக்கு, தாத்தா?'' என்றவள் குரல் தழுதழுத்தது.

பரிவுடன் அவளது கையைப் பற்றியவர், ''அப்புறம் என்னம்மா?'' என,

''யோசித்து பார்த்திருந்தால், அவருக்கும் அன்று என் மேல் தப்பில்லை என்று புரிந்திருக்கும்தான், தாத்தா! ஆனால், அதுக்கான வாய்ப்பே அவருக்கு கிடைக்கலையே! இப்போ, அவருக்கு அதெல்லாம் நினைவில் இல்லை என்பதால், அதை மறைக்கிறது தப்பில்லையா?''

குழந்தையாய்க் கேட்டவளைக் கண்டவர், ''பேரனுக்கு ஏற்ற நேர்மை சிங்கம்தான்!'' என்று மனதுக்குள் மெச்சிக் கொண்டு,

''நீ கேட்கிறது தப்பில்லை! ஆனால், நான் ஒன்னு சொல்லட்டா?'' என, சம்யு தலையாட்டினாள்.

''அவனுக்கு உன்னைப் பற்றி எதுவுமே நினைவில் இல்லை! எல்லாம், நினைவில் இருந்தால், அன்று நடந்ததற்கு, நீ சொல்லும் விளக்கத்தையும் அவனால் புரிந்து கொள்ள முடியும்! ஆனால், இப்போ இருக்கிற நிலையில், அந்த சண்டையைப் பற்றி சொன்னால் அவனுக்கு இன்னும் குழப்பம்தானே மிஞ்சும்? ஏன், அவனைப் போட்டு குழப்பணும்? நீயே யோசிச்சு பாரும்மா!'' என்று விட்டு அன்பழகன் அமைதியாக இருந்தார்.

சம்யுக்தாவுக்கும் அவர் சொல்வது சரி என்றே தோன்றியது.

தன் காதலையே அறியாதவனிடம், மனக்கசப்பை மட்டும் சொல்லி ஏன் குழப்ப வேண்டும்?

நினைவு வரும்போது, தன்னிடம் உண்மையை மறைத்தாள் என்று கோபம் கொள்ளுவான்தான்! இல்லை என்று சொல்வதற்கில்லை!

ஆனால், அவளிடம் விளக்கம் இருக்கிறதே!



இந்தத் திருமணம் நடந்தால், இரு குடும்பத்தினருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்க இயலும் எனும்போது, ஏன் மறுக்க வேண்டும் என்று தோன்ற, இறுகி இருந்த முகம் தளர்ந்து, லேசாக மலர்ந்தது.

அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அன்பழகனுக்கு அவளது எண்ணம் புரிய, அவரும் புன்னகைத்தார்.

''என்னம்மா, கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பிக்கலாம்தானே?''

அன்பழகனின் கேள்விக்குப் பதிலாக, புன்னகையுடன் தலை ஆட்டியவள், ''மதி... மதிக்கு முழு சம்மதம்தானே தாத்தா?'' என்று ஆர்வத்துடன் வினவினாள்.

''நேற்று நான் சொன்னபோது, அவனுக்கு அதிர்ச்சிதான்! இன்னைக்கு காலையில் அவனே டாக்டர்கிட்ட பேசினான்! அப்புறம்தான், சரி என்று சொன்னான்! உனக்கே தெரியுமே, மதியை அவனுக்குப் பிடிக்காத எந்த விஷயத்தையும் செய்ய வைக்க முடியாது என்று!''

அவன் மருத்துவரிடம் எதற்காக விசாரித்திருப்பான் என்றும் அவளுக்குப் புரிந்தது.

காதலியை மறந்ததே கொடுமை! திருமணத்துக்குப் பிறகு, பழைய நினைவுகள் வரும்போது, தற்போதைய நினைவுகள் மறந்து விட்டால், மனைவியை அல்லவா மறந்து விடுவான்! அதற்காகத்தான், தன் சந்தேகத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள நினைத்திருக்கிறான் என்பது புரிய, தன் மனம் கவர்ந்தவனைப் பற்றிய பெருமிதம் எழுந்தது அவளுள்!

''அப்புறம் ஒரு விஷயம், சம்யும்மா! அவன் உன்னைப் பற்றி எதுவுமே டயரியில் எழுதி வைக்கவில்லை,

போல! அதுவும் அவனுக்கு அதிர்ச்சி! அதைப் பற்றி உன்னிடம் கேட்டாலும், கேட்பான்! அதுக்குதான் முன்னாடியே உன்கிட்ட சொல்றேன்!'' என்றவர்,

''சரிம்மா! நான் கிளம்பறேன்! இன்னைக்கு நீங்க எல்லாரும் நம்ம வீட்டுக்கு வாீங்க! காஞ்சனா போனில் சொல்லி விட்டாள் என்றாலும், நேரில் வந்து சொல்லணும், அத்தோடு உன்கிட்ட பேசணும் என்றுதான் நான் வந்தேன்!'' என்றவர் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார்.

இரண்டு நாட்களுக்கு முன் மருத்துவமனையில் மறைந்திருந்து மதியைப் பார்த்ததோடு சரி!

மதியைப் பார்க்கப் போகிறோம், என்ற நினைப்பே மகிழ்ச்சியைத் தர, மனதில் இருந்த சஞ்சலங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, சந்தோஷமாகவே சம்யுக்தா, மதியின் வீட்டுக்குச் சென்றாள்.

நினைவில் இல்லாத காதலியை, இன்று காணப் போகிறோம் என்ற எண்ணம், மதியிடமும் ஒரு படபடப்பை ஏற்படுத்தி இருந்தது.

அவன் வரைந்திருந்த ஓவியத்தில் அவள் இருந்தால் என்றாலும், நேரில் காணப் போவது இப்போதுதானே?

குடும்பத்தினருடன் வந்த சம்யுக்தா, இவனை நிமிர்ந்து பார்த்தபோது, ஒரு கணம் இருவரது விழிகளும் கலந்து நின்றன.

இவள்தான் சம்யுக்தாவா?

'மருத்துவமனையில் அன்று தண்ணீர் எடுத்துக் கொடுத்த பெண்!'

அன்று பார்த்தபோதே, எங்கேயோ பார்த்திருக்கிறேன் என்று தான் யோசித்தது நினைவுக்கு வந்தது.



அவளை முதலில் எங்கே பார்த்தான் என்பது இப்போது நினைவுக்கு வந்தது.

'அவன், முதல் நாள் கண் விழித்த பொது, 'இவர்களைத் தெரிகிறதா?' என்று தாத்தா காட்டிய பெண்!'

கடவுளே! யார் என்று தெரியவில்லை என்று சொன்னானே!?

அடுத்த முறை பார்த்த போதும், 'நீங்க யார்?' என்று அவளிடமே கேட்டானே?

அப்போதெல்லாம், அவளுக்கு எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும்!

அவளைக் காயப் படுத்தி விட்டேனே! என்ற எண்ணம் தோன்றி, மனதில் ஒரு வலி எழ, அகம் உணர்ந்ததை முகமும் காட்டியது.

அவனது எண்ணத்தை உணர்ந்தவளாக, 'வருத்தப்பட வேண்டாம்! பரவாயில்லை!' என்பதாய் கண்களாலேயே சம்யுக்தா ஆறுதல் சொல்ல, மதிக்கு ஆச்சரியத்தோடு, மனதில் ஒரு இதமும் படர்ந்தது.

அனைவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்க, உணவும் பேச்சுக்கிடையில் முடிந்தது.

மதி, சம்யுக்தா இருவருக்கும், ஒருவரிடம் ஒருவர் பேச வேண்டி இருந்தது. எப்படி சொல்வது என்று இருவரும் யோசித்துக் கொண்டிருக்க, அன்பழகன், ''மதி, சம்யு கிட்ட எதோ பேசணும் என்று சொன்னாயே?'' என்று சொல்லி, இருவரும் பேச வகை செய்தார்.

சம்யுக்தாவை தன் அறைக்கு அழைத்து வந்த மதியழகன், அமைதியாக இருக்க, ''இப்போ வலி எதுவும் இல்லையே?'' என்று கேட்டு சம்யுதான் பேச்சை ஆரம்பித்தாள்.

''இல்லை!'' என்றவன், திரும்பவும் அமைதியாகி விட்டான்.

அவளிடம் பேச வேண்டும் என்று நினைத்தான் தான்! ஆனால், ஏதாவது பேசி அவளை வருத்தப்படுத்தி விடக்கூடாது என்பதால், பேசத் தயக்கமாக இருந்தது.

சம்யுவுக்கும், மதியின் நிலை புரிந்தே இருந்தது. எப்போது சந்தித்தாலும், இருவரும் வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தது நினைவுக்கு வர, பெருமூச்சு எழுந்தது.

ஒரு முடிவுடன் அவனை நோக்கியவள், ''வந்து... உங்களுக்கு இந்தக் கல்யாணத்தில் முழு சம்மதம் தானே?'' என்றாள் இயல்பான குரலில், தன் படபடப்பை அடக்கிக் கொண்டு!

அந்தக் கேள்வியில் நிமிர்ந்து அவளை நோக்கிய மதிக்கு, அவளது குரல் இயல்பாக இருந்தாலும், அவளது கண்களில் இருந்த தவிப்பை உணர முடிந்தது.

அவளிடம் தன் மனதில் இருக்கும் குழப்பத்தை எடுத்துச் சொல்லி, அவளுக்கு சம்மதம் என்றால் மட்டுமே, திருமணத்துக்கு ஒப்ப வேண்டும் என்று எண்ணி இருந்தவன், அவளது கண்களில் இருந்த தவிப்பை பொறுக்க முடியாதவனாக, ''முழு சம்மதம்தான்!'' என்றான் வேகமாக!

சம்யுவின் மனதில் நிம்மதி படர்ந்து முகமும் தானாக மலர்ந்தது.

அவசரப்பட்டு சம்மதம் என்று சொல்லி விட்டோமோ என்று எண்ணிய மதிக்கு, சம்யுக்தாவின் மலர்ந்த முகத்தைக் கண்டதும், தான் சொன்னது சரிதான் என்று தோன்றியது.



அவளது மலர்ந்த முகம், தன் மனதில் இனம் புரியாத இதம் பரப்புவதை ஆச்சரியத்துடன் உணர்ந்தவன், ''நீங்க தப்பா எடுத்துக் கொள்ளவில்லை என்றால், நான் உங்ககிட்ட ஒண்ணு கேட்கட்டுமா?'' என்று தயக்கத்துடன் வினவ,

''என்னைப் பற்றி உங்க டயரியில் ஏன் எதுவும் எழுதவில்லை; என்று கேட்க நினைத்தீங்க இல்லையா?'' என்று அவனை ஆச்சரியப்படுத்தியவள், ''உங்க கட்டிலில் இணைந்திருக்கும் லாக்கரை கொஞ்சம் திறந்து பார்க்கறீங்களா?'' என்றாள்.

''எதற்கு?'' என்பதாக, அவளைப் பார்த்தவன், அடுத்த கணமே, வேகமாகச் சென்று, அவள் சொன்னதைச் செய்தான்.

அங்கே, இதய வடிவில், இளம் சிவப்பு நிற டயரி இருந்ததைக் கண்டவன், திகைப்புடன் அவளை நோக்கி விட்டு, அதைத் திறந்து பார்த்தான். முதல் பக்கத்தில் ஒட்டி இருந்த, மதியழகனும், சம்யுக்தாவும் இணைந்து நிற்கும், புகைப்படம் கண்ணில் பட்டது.

''என் அழகனுக்கு,

உங்கள் சக்கரைக் கட்டியின் பரிசு!''

என்று எழுதி இருக்க, மதி அதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், தான் மதியிடம் தன்னைப் பற்றி டயரியில் எழுதாதற்கு இட்ட செல்லச் சண்டையும், பிறகு இந்த டயரியை அவனுக்குப் பரிசளித்ததும், சம்யுவுக்கு நினைவு வர, கண்களில் நீர் துளிர்த்தது.

அவன் நிமிர்ந்து பார்க்கும் முன் அதைத் துடைத்தவள், புன்னகையோடு அவனை நோக்க, ''சாரி!'' என்றான் மதியழகன்.

''ஹே! எதுக்கு சாரி எல்லாம்! உங்களுக்கு ஏன் எழுதவில்லை என்று தோன்றியது. இயல்புதானே?'' என்று இலகுவான குரலில் சொன்னவளிடம்,

''உங்களுக்கு ரொம்ப கஷ்டமா இருந்ததுதானே?'' என்று தயக்கத்துடன் வினவினான்.

''மதி... நீங்க என்னை இப்படி நீங்க, வாங்க என்று சொல்றதுதான் எனக்கு கஷ்டமா இருக்கு! ரொம்ப அந்நியமா தோணுது!''

என்றவளின் குரலில் தவிர்க்க முயன்றும், ஏக்கம் எட்டிப் பார்க்க, மதி மீண்டும் மௌனமானான்.

அவனே பேசட்டும் என்று அவளும் அமைதியாக இருக்க, ''இனிமேல் மாத்திக்கறேன்! அம்மா ரொம்ப அவசரப்படறாங்க கல்யாணத்துக்கு!'' என்று அவன் ஆரம்பிக்க, 'இப்போதுதானே எனக்கு சம்மதம் என்று சொன்னாய்?' என்பதாய் சம்யு, அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

அவளது கேள்வியை உணர்ந்தவனாக, ''இல்லை! எனக்கு சம்மதம்தான்! ஆனால், அந்த நினைவுகளை மறந்த நிலையில், என்னால் இந்தக் கல்யாணத்தை இயல்பா ஏற்றுக் கொள்ள முடியலை! அம்மாவுக்காக உடனே இந்தக் கல்யாணம் நடந்தாலும், எனக்கு இயல்பா அந்த வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள கொஞ்சம் அவகாசம் வேணும்! உங்களுக்கு... சாரி... உனக்குப் புரியுது தானே?'' என்று வினவிய மதி, அவளையே ஆவலுடன் நோக்கினான்.

இது அவள் எதிர்பார்த்த விஷயம்தான் என்பதால், ''நல்லாவே புரிகிறது!'' என்றாள் சம்யு.

''தேங்க்ஸ்!'' என்றவன் மனதிலும் சஞ்சலம் குறைவதைப் போலிருந்தது.



''கீழே போகலாமா? எல்லாரும் நமக்காக காத்திட்டு இருப்பாங்க!''

''ம்!'' என்று அவன் புன்னகைக்க, அவனது புன்னகையைக் கண்டதும், அவளது முறுவலும் விரிந்தது.

இருவரும் புன்னகையுடன் கீழே இறங்கி வந்ததைக் கண்ட குடும்பத்தினருக்கும் மனம் நிறைந்தது.

## 16

மதியழகன் திருமணத்துக்கு சம்மதம் என்று சொன்னதும், திருமண ஏற்பாடுகள் வேகமாக நடந்தன!

தாமுவால் இனிமேல் பிரச்சனை ஏற்படக் கூடாது என்று எண்ணிய சம்யுக்தா, தனக்குத் தெரிந்த காவலர் மூலம், இனிமேல் மதிக்கு ஏதாவது பிரச்சனை செய்தால், விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்று அவனுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தாள்.

அவன் செய்த சதியால்தான் இவ்வளவு பிரச்சனை என்று தெரிந்தாலும், நேரிடையாக அவனைக் குற்றம் சாட்டத் தகுந்த ஆதாரங்கள் இல்லை என்பதோடு, மேலும் இந்தப் பிரச்னையை இதற்கு மேல் பெரிது படுத்த வேண்டாம் என்று எண்ணினாள்.

மதியழகனுக்கு அம்னீசியா என்பது வெளியே தெரிந்தால், பத்திரிகைக்காரர்கள் அதைப் பெரிது படுதி விடுவார்கள் என்பதால், அதை ரகசியமாகவே வைத்திருந்தனர்.

வேலை சம்பந்தப்பட்ட விஷயங்கள், சம்மந்தப்பட்ட கோப்புகளில் தெளிவாக இருந்ததால், வேலையில் பெரிதாக எந்தப் பிரச்சனையும் எழவில்லை.

தன் திருப்திக்காக புதுப் படத்தில் நடிக்க இருந்த புதுமுக நடிகர்களுக்கு, மீண்டும் ஒரு முறை மதியழகன் ஆடிஷன் நடத்த, ராகினியும் அதில் நல்லபடியாக திறமையை வெளிப்படுத்தி, கதாநாயகி வாய்ப்பைப் பெற்றாள்.

ராகினி நெகிழ்ச்சியுடன் நன்றி சொன்னபோது, இந்தப் பெண் எதற்கு இவ்வளவு உணர்ச்சி வசப்படுகிறாள் என்று மதியழகனுக்குத் தோன்றியது.

விபத்துக்கு முந்தைய நாள் விவரங்களை டயரியில் எழுத வாய்ப்பு இல்லாததால், அவளுடைய நன்றியுணர்வு அவனுக்குப் புரிய வாய்ப்பிருக்கவில்லை தானே?

திருமணத்துக்காக என்று பத்து நாட்களாவது வேலை, வேலை என்று அலையாமல் வீட்டில் இருக்க வேண்டும் என்று காஞ்சனா வேண்டுகோள் விடுத்த போதும், அவனது விபத்தின் காரணமாக ஏற்கனவே வேலை நின்று விட்டதால், அதைக் கவனிக்க வேண்டும் என்று சொல்லி வேலையை அதிகம் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான், மதியழகன்.

அதற்கு காரணமும் இருந்தது. வேலையில் முழு கவனமும் இருக்கும்போது, தேவையற்ற எண்ணங்கள் தோன்றுவதில்லை! இல்லையெனில், அவனது மறந்து போன நினைவுகள் எப்போது வரும் என்ற கேள்வியே அவனது அமைதியைக் குலைக்கப் போதுமானதாக இருந்தது.

வேலையில் கவனம் செலுத்தியது ஒரு புறம் நிம்மதியை அளித்தது என்றால், மற்றொரு புறம் அதுவே நிம்மதியைப் பறிக்கவும் செய்தது.



டயரியில் முக்கியமான விஷயங்களை எழுதி வைத்திருந்தாலும், அந்த மூன்று மாதங்களில், அன்றாட நிகழ்வுகளில் நடந்த சில சின்ன விஷயங்களை மறந்திருந்தால், சில சமயம் தடுமாற்றம் ஏற்பட்டபோது, அவனுக்குக் கவலை அதிகமானது.

இதே போல, நடந்த விஷயங்களை மறந்து விட்டு அவன் சம்யுக்தாவிடம் ஏதாவது பேசினால், அது அவளுக்கு எவ்வளவு வருத்தத்தைக் கொடுக்கும் என்று எண்ணியவன், முடிந்த வரையில் அவளிடம் பேசுவதைத் தவிர்த்தான்.

எவ்வளவு நாள் தவிர்க்க முடியும்? திருமணத்துக்குப் பிறகு, ஒரே வீட்டில் வசிக்கும்போது, அவளிடம் பேசித்தானே ஆக வேண்டும் என்று கேள்வி கேட்ட மனசாட்சியை அடக்க அவன் பெரும்பாடு பட வேண்டி இருந்தது.

அவர்களுக்கேயான அந்தப் பிரத்யேக டயரியைப் படித்தால், சில விஷயங்களையாவது தெரிந்து கொள்ளலாம் என்று தோன்றிய போதும், அதைப் படிக்கும் தைரியம் அவனுக்கு வரவில்லை.

வேலை சம்பந்தப்பட்ட விஷயங்களைப் படித்து தெரிந்து கொள்ளும்போது, இல்லாத தயக்கம் அவனுக்கு அந்த டயரியைப் படிக்க நினைக்கும்போது எழுந்தது.

காதல் என்ற உணர்வை மனதால் அல்லவா உணர வேண்டும்?

எழுதி வைத்ததைப் படித்தால், அந்த உணர்வை அடைய இயலுமா என்ன?

அடிக்கடி எடுத்து, அதைப் பார்ப்பதை மட்டும் வழக்கமாகக் கொண்டிருந்தவன், மறந்தும் அதைப் படிக்க முயலவில்லை.

இங்கே, அவன் இப்படி குழம்பிக் கொண்டிருக்க, சம்யுக்தாவுக்கு மதியழகன் நிலையைப் பற்றி முழுவதும் அறிந்திருந்தாலும், அவன் தன்னோடு பேச முயற்சிக்காதது வருத்தத்தைத் தந்தது.

அவளாக அவனிடம் பேச விரும்பினாலும், அவனை சங்கடத்தில் ஆழ்த்த விரும்பாத காரணத்தால், அவள் தன் மனதை அடக்கிக் கொண்டிருந்தாள்.

இடையில் அந்த விபத்து நேராமல் இருந்திருந்தால், திருமண ஏற்பாடுகளில் இருவருடைய பங்களிப்பும் இப்படியா இருந்திருக்கும் என்ற ஏக்கத்தையும் தடுக்க இயலவில்லை!

இந்த மாதிரி ஏக்கங்கள், இனி தொடரும் என்ற எண்ணம், மனதைச் சோர்வாக்கியது!

இப்படியே யோசித்துக் கொண்டிருந்தால், தன் முகம் அகத்தைக் காட்டி, குடும்பத்தினரை வருத்தப் படுத்தும் என்று உணர்ந்தவள், முயன்று இயல்பாக இருக்க முயற்சி செய்தாள்.

ஆர்வமும், ஆனந்தமுமாக எதிர்கொள்ள வேண்டிய திருமணத்தை, இருவரும் தயக்கமும், சஞ்சலமுமாக எதிர்கொண்டனர்.

மற்றவருக்கு, இயல்பாக இருக்க முயற்சி செய்த இருவருக்குமே, தாங்கள் இயல்பாக இல்லை என்று புரிந்து தான் இருந்தது.

இருவரும் இந்த மனநிலையிலேயே இருக்க, திருமண நாளும் வந்தது.



காஞ்சனாவின் வேண்டுதலின் படி, அவர்களது குல தெய்வமான திருப்போரூர் முருகன் சந்நதியில் திருமணம் நடைபெற்றது.

மதியழகன், 'எங்கள் திருமண வாழ்க்கை நல்லபடியாக அமைய வேண்டும்!' என்ற வேண்டுதலோடு, சம்யுக்தாவின் கழுத்தில் மங்கல நாணைப் பூட்ட, அதே வேண்டுதலோடு அவளும், அதை ஏற்றாள்.

மங்கல நாணைப் பூட்டியவன், தன் மனைவியை நிமிர்ந்து நோக்க, அவளது கண்கள் கண்ணீரால் பளபளத்தது. மதி, தன்னையும் அறியாமல், அவளது கையைப் பற்றி மென்மையாக அழுத்த, ஆச்சரியத்துடன் நிமிர்ந்து அவனை நோக்கிய, சம்யுக்தா மகிழ்ச்சியுடன் புன்னகைத்தாள்.

மனைவியின் புன்னகைத்த முகம், மதியின் மனதிலும் இதத்தைப் பரப்ப, அவன் முகத்திலும் முறுவல் மலர்ந்தது.

அந்த முறுவல், மாலை பிரபலமான ஹோட்டலில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியிலும் தொடர்ந்தது.

திரைப்படத் துறையினர் அனைவரும் வந்து வாழ்த்த, சம்யுக்தாவின் பத்திரிகை நண்பர்களும் உற்சாகத்துடன் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

காலையில் இருந்து, இருவர் முகத்திலும், வாடாமல் இருந்த முறுவல், இரவு தனி அறைக்கு வந்தபோது சற்றே வாடியது.

பெரியவர்கள் இருவரையும் வாழ்த்தி அனுப்ப, தங்கள் அறைக்கு வந்தவர்கள், என்ன பேசுவது என்று புரியாமல் தயங்கி நின்றனர்.

"இன்னைக்கு முழுக்க ஒரே அலைச்சல்! எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு! உங்களுக்கும்... சாரி... உனக்கும் அப்படித்தான் இருக்கு இல்லை?'' என்று பார்வையை எங்கோ பதித்தபடி மதியழகன் வினவ, சம்யுக்தாவும் தலை ஆட்டினாள்.

ஒரு கணம் மனைவியை நோக்கியவன், ''நான் படுக்கப் போறேன்! நீ படுக்கும்போது லைட்டை அணைத்து விடு!'' என்று போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கத் துவங்க, சம்யுக்தா திகைத்து நின்றாள்.

'அவகாசம் வேண்டும் என்று சொன்னான்தான்! அதற்காக, கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு கூடவா இருக்கக் கூடாது?' என்று மனம் முரண்டியது.

திருமணத்துக்கு சம்மதம் என்று சொன்ன நாளுக்குப் பிறகு, இன்றுதான் இருவரும் சந்தித்து இருக்கிறார்கள். மீதி இருக்கும் வாழ்வை இருவருமாகப் பகிர்ந்து கொள்ளப் போகிறார்கள். இவன் என்னடாவென்றால், பேசுவதற்கு கூடத் தயங்குகிறானே!

எல்லாம் சரியாக இருந்து, இந்தத் திருமணம் நடந்திருந்தால், இன்றைய நாள் இப்படியா இருந்திருக்கும் என்ற ஏக்கம் தோன்ற, கண்களில் நீர் வழிவதை, தடுக்க இயலாமல் சிறிது நேரம் நின்று கொண்டிருந்தவள், 'இந்தத் தன்னிரக்கத்தால் எந்தப் பயனும் இல்லை!' என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டு, கட்டிலின் மறுமுனையில் வந்து படுத்தாள்.

மனமும், உடலும் களைத்திருந்தாலும், உறக்கம் வரவில்லை!

சிறிது நேரத்தில், மதி படுத்திருந்த இடத்தில் அசைவை உணர்ந்தவள், அசையாமல் படுத்தாள்.



மதி கட்டிலில் இருந்து எழுவதை அவளால் உணர முடிந்தது.

குளியலறைக்கு செல்கிறான் போல என்றெண்ணிக் கொண்டு கண் மூடிப் படுத்திருந்தவள், வெகு நேரமாகியும் அவன் மீண்டும் வந்து படுக்கவில்லை என்றதும், எழுந்து அமர்ந்தாள்.

பார்வை சுற்றும் முற்றும் அலைய, மதியழகன் பால்கனியில் நின்று கொண்டிருப்பது பார்வையில் பட்டது.

'தூங்கப் போகிறேன்!' என்று இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கியவனுக்கு என்னவாயிற்று? என்று என்றெண்ணிக் கொண்டு மெதுவாக நடந்து வந்தவளுக்கு, வான்வெளியை வெறித்துக் கொண்டு நின்று கொண்டிருந்த கணவனின் முகத்தைக் கண்டதும் உருகிப் போயிற்று.

''தூக்கம் வரலையா?''

மெல்லியக் குரலில்தான் வினவினாள்! ஆனால், அதற்கே, அவன் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்ப, சம்யுக்தாவுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

''சாரி!'' என்றவள் குரல் உள்ளே போய் விட, ''இல்லை! உங்க தப்பு எதுவும் இல்லை!'' என்றவனை, அவள் குற்றம் சாட்டும் பாவனையோடு நோக்க, அவன் குழம்பினான்.

அவனது முகத்தில் குழப்பம் இருப்பதைக் கண்டவள், "நீங்க, வாங்க என்று பேசாதீங்க என்று சொல்லி இருந்தேனே!'' என்றாள்.

''சாரி! இனிமேல் மாத்திக்கிறேன்!'' என்றான் அவன்.

இருவரும் மாற்றி மாற்றி சாரி சொல்லிக் கொள்வதை உணர்ந்து இருவருக்கும் முறுவல் மலர்ந்தது.

''நீ தூங்கலையா?''

''இல்லை! தூக்கம் வரலை! உங்களுக்கும் தூக்கம் வரலை என்றால் நாம ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாமா?''

ஆர்வத்துடன் வினவிய மனைவியின் ஆவலைத் தட்ட முடியாமல், மதியழகன் தலையாட்டினான்.

அவன் வேகமாகத் தலையாட்டிய விதம் புன்னகையை வரவழைக்க, ''வாங்க!'' என்றபடி சம்யுக்தா முன்னே நடந்தாள்.

கட்டிலில் அவள் அமர்ந்ததும், கொஞ்சம் இடைவெளி விட்டு அவன் அமர்ந்தான்.

''ஏன்? என்கிட்டே பேசவே பயப்படறீங்க?''

திடீர் என்று வந்த அவளது கேள்வியில், மதியழகன் அவளைத் திகைப்புடன் நோக்கினான்.

கண நேர அமைதிக்குப் பிறகு, ''இல்லையே! அப்படி எதுவும் இல்லை!'' என்று மொழிந்தவன், 'இதை என்னை நம்பச் சொல்கிறாயா?' என்ற கேள்வியைத் தாங்கி நின்ற மனைவியின் விழிகளைக் கண்டதும் அமைதியானான்.

''உங்க மனசில என்ன இருக்குன்னும் வெளிப்படையா சொல்லுங்க, மதி, ப்ளீஸ்!'' என்று மனைவி துருவியதும், மதி வாயைத் திறந்தான்.

''எனக்கு... எனக்கு உன்னோடு பழகின எதுவும் நினைவில் இல்லை!'' என்று மதி தயக்கத்துடன் சொல்ல, 'இது தெரிந்ததுதானே?' என்ற கேள்வியைக் கண்களில் நோக்கியபடி கணவனை நோக்கினாள்.



மனைவியின் பார்வையை உணர்ந்தவன், ''இல்லை! நான் ஏதாவது பேசி, அது உனக்கு பழைய நினைவை உண்டு செஞ்சு... வருத்தமா இருக்குமோன்னு?'' என்று தயங்கி தயங்கி மதியழகன் சொன்னதும், சம்யுக்தாவின் மனதில் ஒரு இதம் படர்ந்தது.

ஆக, தனக்காகத்தான் பார்த்திருக்கிறான்!

மனதிற்கு சரியென்று பட்டதைப் பளிச்சென்று சொல்லி விடும் பழக்கம் உள்ளவன், இதைச் சொல்வதற்கு இப்படித் தயங்குகிறானே?

அந்த டயரியைப் படித்திருந்தால், சில விஷயங்களாவது தெரிந்திருக்குமே? என்ற யோசனை எழுந்த போதும், இப்போதைக்கு அதைப் பற்றி கேட்டு அவனை சங்கடப்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்து, நிமிர்ந்து அமர்ந்தவள், அவனை நேராக நோக்கினாள்.

''சில விஷயங்கள் எனக்கு வருத்தமாகத்தான் இருக்கும்! இல்லை என்று பொய் சொல்ல விரும்பலை! ஆனால், அதுக்காக நீங்க எப்படி என்னை அவாய்ட் செய்யறது, இன்னுமே எனக்கு வருத்தமா இருக்கும்!''

மனைவியை நோக்கியவனுக்கு, இதை தான் எண்ணவே இல்லையே என்ற குற்ற உணர்வு தோன்ற, ''சாரி!'' என்றவன் குரலில் இருந்த வருத்தம் புரிந்தது.

''சாரி எல்லாம் வேண்டாம், மதி! நீங்க என்கிட்டே இயல்பா இருக்க முயற்சி செய்யுங்க, அது போதும்! மனைவி என்று நினைக்க வேண்டாம்! ஒரு பிரண்ட் கிட்ட நடந்துக்கிற மாதிரியாவது நடந்துக்கோங்க, ப்ளீஸ்!''

தெளிவான குரலில் மனைவி வேண்டியதும், மதிக்கும் முகம் தெளிந்தது.

''சரி!'' என்றபடி அவன் புன்னகைக்க, கணவனது புன்னகையில் எப்போதும் போல மயங்கி நின்றாள், மனைவி.

அவளது பார்வையில் இருந்த மாற்றத்தை உணர்ந்தவன், ''என்ன?'' என்று வினவ, ''ஒண்ணுமில்லை!'' என்று அவசரமாகத் தலையாட்டியவள், ''உங்க புதுப் படத்தைப் பற்றி சொல்லுங்கள்!'' என்று பேச்சை ஆரம்பித்தாள்.

மனைவி ஆர்வமாகக் கேட்டதும், மதியழகனுக்கும் அந்த ஆர்வம் தொற்றிக் கொண்டது.

அவன் உற்சாகத்துடன் சொல்ல ஆரம்பிக்க, அவன் தன்னிடம் பேச வேண்டும் என்று ஏக்கம் கொண்டிருந்த சம்யுக்தா, அவனது முகத்தையே பார்த்த வண்ணம், அவன் சொல்வதைக் கேட்டிருந்தாள்.

அவள் அமைதியாகக் கேட்டிருக்க, மதி சட்டென்று நிறுத்தி, ''இதெல்லாம் ஏற்கனவே உன்கிட்ட சொல்லி இருக்கேனா?'' என்று சந்தேகமாக வினவினான்.

''ப்ளீஸ் மதி! முன்னாடியே சொல்லி இருக்கேனா, இல்லையா என்ற சந்தேகமெல்லாம் வேண்டாம்! என் கிட்டே இந்த மாதிரி குழப்பம் எல்லாம் இல்லாமல் இயல்பா இருங்க... ப்ளீஸ்!'' என்று அழகாக தலை சரித்து வேண்டிய மனைவியை ஒருமுறை ஆழப் பார்த்தவன், 'சரி' என்பதாய்த் தலையாட்டினான்.

அவன், அவளது வேலையைப் பற்றி விசாரிக்க, அவளும் சொல்லத் தொடங்கினாள்.

தயக்கத்துடன் ஆரம்பித்த பேச்சு, சிறிது நேரத்தில் சுவாரசியமாக மாறிவிட, இருவர் முகமும் மீண்டும் புன்னகைக்கு மாறி இருந்தது.



''எனக்கு பசிக்கிற மாதிரி இருக்கு! பழம் சாப்பிடப் போறேன், உங்களுக்கு வேண்டுமா?'' என்றபடி எழுந்த சம்யு, ஆப்பிளை எடுத்து வெட்ட ஆரம்பித்தாள்.

''ம்ம்... எனக்கும் தா!'' என்றவனிடம், அவன் சிறு தட்டில் ஆப்பிளை வைத்து நீட்ட, கணவனின் பார்வை மனைவியின் உள்ளங்கையில் அவள் வைத்திருந்த மருதாணியில் பதிந்தது.

''சம்யு! இதென்ன இப்போ எல்லாரும் மாடர்னா மருதாணி வைத்துக்கிறாங்க. நீ இப்படி பழைய மாடலில் வைத்திருக்கிறாய்!?'' என்றபடி மனைவியின் கையில் இருந்த தட்டை வாங்கி வைத்துவிட்டு, அவளது கையைப் பற்றினான்.

அவனுக்காக என்றுதானே சம்யு, அதை அணிந்திருந்தாள். ஒரு வழியாக, அவனது பார்வை மருதாணியில் பட்டதில் மனம் நெகிழ்ந்து நின்ற மனையாள்,

அவன், ''அரைத்த மருதாணியா?'' என்று ஆர்வத்துடன் வினவியதும்,

''ம்ம்ம்...'' என்றபடி அவனருகில் வந்து அமர்ந்தாள்.

மெல்ல அவளது உள்ளங்கையைத் தன் நாசி அருகில் வைத்து முகர்ந்த மதியழகனின் உதடுகள், அவளது உள்ளங்கையை வருட, சம்யுக்தாவுக்கு உடல் சிலிர்த்தது.

அதை உணராமல், ''உனக்கும் அரைத்த மருதாணி என்றால் பிடிக்குமா?'' என்று அவன் குதூகலத்துடன் வினவ, 'ஆமாம்!' என்று தலை அசைத்த சம்யுக்தாவுக்கு, முன்பு அவன் ஆசைப்பட்டான் என்று தான் அரைத்த மருதாணியை அணிந்ததும், அதற்கு அவன் கொடுத்த பரிசும் நினைவுக்கு வர, அவள் முகம் சிவந்தது.

மனைவியின் சிவந்த முகத்தைக் கண்ட, மதிக்கு மனதில் இனம் புரியாத உணர்வு எழுந்தது.

தன் மனைவி அழகி என்பது அவன் அறிந்ததுதான்!

இளம் தாமரையாய் சிவந்திருந்த கன்னங்கள் அவளைப் பேரழகியாகக் காட்ட, இமைக்கவும் மறந்து மனைவியை நோக்கியவனுக்கு, அவளை முத்தமிட வேண்டும் என்று கட்டுக்கடங்காத ஆவல் தோன்ற, அந்த எண்ணத்தில் திகைத்துப் போனான்.

தன் மனதை அடக்க, மதி வெகுவாக பிரயத்தனப் பட வேண்டி இருந்தது.

தாலி கட்டிய மனைவிதான்! முத்தமிட்டால் எதுவும் சொல்ல மாட்டாள்தான்! ஆனாலும்... எதோ ஒன்று தடுக்க, தன் பிடியில் இருந்த அவளது கையை மெல்ல விடுவித்தான்.

தன் கையைப் பற்றி இருந்தவனின் கரம் விலகியதும், சம்யுக்தாவுக்கும் ஏமாற்றம் பரவியது!

அவன் அவகாசம் கேட்டிருந்ததை ஒத்துக் கொண்டு விட்டு, இப்போது சிறு பிள்ளை போல இதென்ன இப்படி ஒரு ஏக்கம் என்று தன்னையே கடிந்து கொண்டவள், 'இவ்வளவு நேரம் அவன் இயல்பாகப் பேசியதை எண்ணி சந்தோஷப்படு' என்று அறிவுறுத்திக் கொண்டு, புன்னகையுடனே ''குட் நைட்!'' சொல்லிவிட்டு கட்டிலில் சாய்ந்தாள்.

அவளது புன்னகை, மனதில் இருந்த சஞ்சலத்தை அகற்றுவதை ஆச்சரியத்துடன் உணர்ந்தவனின் முகத்திலும், மென்னகை தோன்ற, ''குட் நைட்!'' என்று விட்டு அவனும் படுத்தான்.



## 17

முன் தினம், வெகு நேரம் கழித்து உறங்கியதால், மதியழகன் காலையில் தாமதமாகத்தான் எழுந்தான். படுக்கையில் மனைவியைக் காணவில்லை!

ஜன்னல் திரையையும் மீறி அறையில் வெளிச்சம் பரவி இருக்க, அவசரமாக கடிகாரத்தைப் பார்த்தவன், மணி எட்டாகி இருக்கவும், வேகமாக எழுந்தான்.

மலர்கள் இல்லத்துக்கு, காலை ஒன்பது மணிக்கு வருவதாகச் சொல்லி இருந்தது நினைவுக்கு வர, அவசரம் அவசரமாக குளித்து விட்டு வெளியே வந்தவனை, மனைவியின் ''குட் மார்னிங்!'' என்ற குதூகலக் குரல் வரவேற்றது.

லாவண்டர் நிறத்தில் அணிந்திருந்த அந்தப் புடவையில், மனைவி அழகான மலராக காட்சி அளிக்க, புன்னகையுடன், ''குட் மார்னிங்!'' என்றவன்,

''நீ கிளம்பி விட்டாயா? என்னையும் எழுப்பி இருக்கலாம் இல்லை?'' என்றான்.

''ரொம்ப அசந்து தூங்கிட்டு இருந்தீங்க. எழுப்ப மனம் வரலை! நான் கிளம்பிட்டு உங்களை எழுப்பலாம்னு நினைத்தேன்! நீங்களே அதுக்குள்ளே எழுந்துட்டீங்க! டிபன் சாப்பிடறீங்களா? இல்லை, அங்கே போய் குழந்தைகளோடு சாப்பிடலாமா?''

''சீக்கிரம் போகலாம்! அவங்க நமக்காக காத்திட்டு இருப்பாங்க!'' என்றவன் அவசரமாகக் கிளம்பியதும், ''சரி! இதையாவது குடிங்க!'' என்றபடி குடிக்க பால் தந்து விட்டுச் சென்றாள்.

குடும்பத்தோடு அவர்கள், மலர்கள் இல்லத்துக்குச் சென்றனர்.

''வாங்க மதி, வாம்மா சம்யு! உங்கள் திருமண வாழ்க்கை சிறப்பாக அமைய எங்கள் இல்லத்தின் சார்பில் வாழ்த்துக்கள்!'' என்று சுவாமிநாதன் வாழ்த்த, குழந்தைகளுக்கு என்று ஏற்பாடு செய்திருந்த உணவை, இருவருமாகப் பரிமாறினார்கள்.

சம்யுவிடம் சுவாமிநாதன் இயல்பாகப் பேச ஆரம்பிக்க, மதியழகனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

குழந்தைகளும் உற்சாகத்துடன் சம்யுவிடம் பேச, அவர்களது பேச்சில் இருந்தே, சம்யுக்தா இங்கே குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுக்க அடிக்கடி வருவது புரிய, மனைவியைப் பார்த்த மதியின் பார்வையில் பெருமிதம் தோன்றியது.

உள்ளுணர்வு உந்த கணவனைத் திரும்பிப் பார்த்த சம்யு, அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்ததும், 'என்ன?' என்று கண்களாலேயே வினவ, தான் பார்ப்பதை அவள் பார்த்து விட்டாள் என்றதும், 'ஒண்ணுமில்லை!' என்று தலை அசைத்தவன், பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

அவன் வேகமாக முகத்தைத் திருப்பிக் கொண்டதும், சம்யுவுக்கு புன்னகை மலர்ந்தது. கணவனின் பார்வை தன்னையே சுற்றி வருவது எந்த மனைவிக்குத் தான் பிடிக்காது?

''குழந்தைகளுக்காக சிறப்பு பூங்கா அமைப்பதற்கான வேலைகள், எல்லாம் முடிந்து விட்டது, மதி! உங்க பங்களிப்புக்கு மிகவும் நன்றி!'' என்று சுவாமிநாதன்



மதியழகனுக்கு நன்றி கூற, அன்றைய நாள் அனைவருக்கும் நிறைவாக இருந்தது.

* * *

அடுத்த நாள் உணவருந்தும்போது, காஞ்சனா, ''மதி! நீயும் சம்யுவும் ஹனிமூனுக்கு எங்கே போகப் போறீங்க?'' என்று விசாரிக்க, மதி திகைப்புடன் அன்னையை நோக்கினான்.

''இல்லைம்மா... நாளையில் இருந்து ஷூட்டிங் ஆரம்பிக்கணும்...'' என்று ஆரம்பித்தவனை, ''வேலை எப்பவும்தான் இருக்கும்! ஒரு வாரமாவது சம்யுவை எங்கேயாவது கூட்டிட்டுப் போ!'' என்ற காஞ்சனாவின் குரல் தடுத்து நிறுத்த, மதியின் பார்வை, மனைவியின் மீது படிந்தது.

''இப்போ என்ன அத்தை அவசரம்? அவரோட பட வேலை எல்லாம் முடியட்டும்... அப்புறம் நிதானமாக போய்க் கொள்ளலாம்!'' என்று பதிலளித்த மனைவியை நன்றியுடன் நோக்கினான், மதி.

அடுத்த நாளில் இருந்தே மதியழகன் தன் புதுப் பட வேலைகளில் இறங்கி விட, சம்யுக்தா தன் வேலையோடு, மலர்கள் இல்லத்துக்கு அடிக்கடி செல்வதையும் வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

தன் வற்புறுத்தலுக்காக திருமணம் செய்து கொண்டாலும், சம்யுவிடம் அவன் நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டும் என்பது காஞ்சனாவின் வேண்டுதலாக இருந்தது. இருவருக்குமான தனிமை, அவர்களிடத்தில் நெருக்கத்தை உண்டு செய்யும் என்றுதான், அவர் தேனிலவு பற்றி மதியிடம் பேசியதே. சம்யுவே இப்போதைக்கு எங்கேயும் போக வேண்டாம் என்று

சொன்ன பிறகு, அவரால் எதுவும் பேச இயல வில்லை.

''சம்யு, மதி உன்கிட்ட நல்லபடியா நடந்துக்கிறானா?'' என்று திருமணம் முடிந்து ஒரு வாரம் கழித்து, தயங்கித் தயங்கி விசாரித்தவரை, ஆச்சரியத்துடன் சம்யு நோக்க, ''இல்லை... நான் என் திருப்திக்காக அவசரமா கல்யாணம் முடிச்சிட்டேன்! அதான்...'' மேலே என்ன கேட்பது என்று அவர் தயங்கி நின்றதும், தன் மேல் மாமியார் கொண்டிருந்த அக்கறை சம்யுவின் மனதை நெகிழ்த்தியது.

''நீங்க கவலைப்பட வேண்டிய தேவையே இல்லை, அத்தை! அவர் என்கிட்டே நல்லபடியாதான் நடந்துக் கிறார்'' என்று அவள் ஆறுதலாகச் சொல்ல, காஞ்சனா முகத்தில் தெளிவு பிறக்கவில்லை.

''பின்னே! உன்னை ஹனிமூன் கூட்டிட்டுப் போகக் கூட யோசிக்கிறான்?'' என்று கேள்வி கேட்டவரிடம், ''ஏற்கனவே, விபத்து காரணமாக வேலை லேட் ஆகி விட்டது. அதனால், சீக்கிரமா எல்லாத்தையும் முடிக் கணும் இல்லை, அத்தை? வேலை எல்லாம் முடிந்த பிறகு, ஒரு வருஷத்துக்கு ஹனி மூன் போகப் போகி றோம், கவலையே படாதீங்க!'' என்று சிரிப்புடன் சொன்ன வளைப் பார்த்து, காஞ்சனா புன்னகை செய்தார்.

அன்னையும், மனைவியும் பேசியதை எதேச்சை யாகக் கேட்ட மதிக்கு, 'எப்படி இவளால் மட்டும், தன் வருத் தத்தை மறைத்துக் கொண்டு, யார் மனமும் கோணாமல் நடக்க முடிகிறது?' என்று ஆச்சரியமாக இருந்தது.

வீட்டினரிடம் அவள் சகஜமாக பழகுவதையும், அன்னை, தாத்தா மட்டுமல்லாது, யாரிடமும் அதிகம்



பேசாத தந்தையும், சம்யுக்தாவிடம் தன் இயல்புக்கு அதிகமாகவே சகஜமாகப் பேசுவதையும் கண்ட மதி, அனைவரையும் வசீகரிக்கும் தன்மை மனைவியிடம் இருப்பதை உணர்ந்தான்.

அவனையும்தான் அவள் பல விதங்களில் வசீகரிக் கிறாள். சில சமயங்களில், அவள் பளீரென்ற புன்னகை யுடன் அவனுடன் பேசும்போது, தன் இழந்து போன நினைவுகளை எண்ணி அவனுக்கு அதிகமாகவே வருத்தம் தோன்றுவதுண்டு!

அவள், இயல்பாக இரு என்று சொன்னாலும், சில சமயங்களில் அவளையும் மீறி அவளது கண்களில் ஏற்படும் வலியும் வேதனையும், அவனை அவளிடம் இயல்பாக நடந்து கொள்ள முடியாமல் தடுத்தது.

மனதில் வேதனை இருந்தாலும், அதனை மறைத்துக் கொண்டு, கலகலப்பாக இருக்கும் மனைவி, தன்னைச் சுற்றி இருப்பவர்களையும் சந்தோஷமாக வைத்துக் கொள்ள எடுக்கும் முயற்சிகள், மதியழகனைக் கவர்ந் தன.

நினைவுகளை இழக்காமல் இருந்திருந்தால், மனைவி யோடு தன் இல்லற வாழ்க்கை இனிமையாக இருந்திருக் கும் என்று அவன் எண்ணுவதுண்டு.

இனிமையான வாழ்வுக்கு இப்போதும் தடை இல்லை என்றாலும், அவளிடம் கணவன் என்ற உரிமையை எடுத்துக் கொள்ள, எதோ ஒரு தயக்கம் இருந்து கொண்டே இருந்தது.

அவனுக்கே, அவன் மனம் என்னதான் எதிர்பார்க்கிறது என்று புரியவில்லை!

மனைவி என்ற ஏற்பு மட்டுமல்லாமல், மனதளவில் அவளிடம் முழுமையான நேசம் தோன்றும் வரை காத்திருக்க எண்ணினான்.

அவன் இப்படி எண்ணி இருக்க, சம்யுவோ மிகுந்த சந்தோஷத்துடன் இருந்தாள்.

முன்பிருந்த சஞ்சலம் எல்லாம் நீங்கி, மனம் கவர்ந்தவன் தன் கணவனாகி விட்டான் என்ற நினைப்பே, அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது.

சில சந்தர்ப்பங்களில், மதியழகனுக்கு பழைய நினைவுகள் இருந்தால், நன்றாக இருக்குமே என்ற ஏக்கம் தோன்றினாலும், விரைவில் மதியழகனுக்கும் தன் மேல் நேசம் தோன்றும் என்ற நம்பிக்கை அவளுக்குத் தோன்றி இருந்தது. சில நேரங்களில், தன் மேல் படியும், கணவனின் பார்வையில் இருந்த மாற்றமும், அந்த நம்பிக்கையை உறுதி செய்தது.

சகஜமாக பழக அவன் யோசிக்கும் தருணங்களில், இவளாகவே அவனைப் பேச்சில் இழுப்பதுண்டு.

இரண்டு மாதங்கள் இப்படியே செல்ல, இருவருக்குமிடையே இருந்த கண்ணுக்குப் புலப்படாத திரை, இருவரையும் நெருங்க விடாமல் தடுத்தது.

சம்யுக்தா ப்ரீ லான்சராக வேலை செய்தாலும், புதுத் தொடர் கட்டுரை எழுதுவது தொடர்பாக, பொறுப்பாசிரியரிடம் சில விஷயங்களை நேரில் பேச வேண்டும் என்று அலுவலகத்துக்குச் சென்றிருந்தாள்.

அவள், அலுவலகம் சென்று எடிட்டரிடம் பேசி முடித்து விட்டு, சக தோழர்களைப் பார்க்கச் சென்ற நேரம், உணவு இடைவேளையாக இருக்க, அனைவரும் அவளைச் சூழ்ந்து கொண்டு கேலியும், கேள்வியுமாக துளைத்து எடுத்தனர்.



"சம்யு! கல்யாணத்துக்கு அப்புறம் நீ ரொம்ப அழகாயிட்டே!" என்று ஒரு தோழி சொல்ல,

"பின்னே! விரும்பினவரையே கல்யாணம் செஞ்சுகிட்ட பூரிப்பு இருக்காதா?" என்றாள் இன்னொரு தோழி.

"ஆமாமாம்! சம்யு, கல்யாணத்துக்கு பிறகு, உங்க ஹப்பி என்ன கிப்ட் வாங்கி கொடுத்தார்?" என்ற கேள்விக்கு, சம்யு என்ன பதில் சொல்வது என்று விழிக்க,

"என்னப்பா? கேட்கக் கூடாதா கேள்வி கேட்ட மாதிரி முழிக்கிறே?" என்று ஒருத்தி கேலி செய்தாள்.

"ஹே! அதெல்லாம் க்ரியடிவ் டைரக்டர், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிப்ட் கொடுத்திருப்பார். அதான், மேடம் எதைச் சொல்றது எதை விடறது என்று யோசிக்கிறாங்க!" என்று அலுவலக நண்பன் பதில் சொன்னதும், சம்யுக்தா, ஒரு புன்னகையோடு நிறுத்திக் கொண்டாள்.

"ஹே! சம்யு! கல்யாணத்துக்கு முன்னாடிதான், உங்க லவ்வை பற்றி கேட்டால், சிரிச்சே மழுப்பி விடுவாய். இப்போதான், கல்யாணம் முடிந்து விட்டதே, இப்பவாவது உங்க லவ் ஸ்டோரியைப் பற்றிக் கொஞ்சம் சொல்லேன்!" என்று ஒரு தோழி கேட்ட கேள்விக்கு, சம்யு புன்னகையையே பதிலாகக் கொடுத்தாள்.

"இப்பவும் சிரிச்சே மழுப்பினால், எப்படி? இன்னைக்கு, அதைப் பற்றி சொல்லலை என்றால், இங்கே இருந்து உன்னை அனுப்பவே மாட்டோம்! அப்புறம் டைரக்டர் சார் உன்னைத் தேடி வந்துடுவார், அவர்கிட்டே, கேட்டுக்கறோம்!" என்று அனைவரும் சூழ்ந்து கொண்டு அவளைத் துருவ, வேறு வழி இன்றி, சம்யு தங்கள் கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

வேறு வழி இன்றி சொல்லத் தொடங்கிய சம்யுவுக்கு, தங்கள் இனிய நினைவுகளை நினைவு கூர்ந்தது மனதுக்கு சந்தோசம் தர, உற்சாகத்துடனே தங்கள் கதையைப் பகிர்ந்து கொண்டாள். இடை இடையே, அவள் முகச் சிவப்பைக் கண்டு நண்பர்கள் கேலி செய்வதைக் கூட புன்னகையுடன் ஒதுக்கினாள்.

''வாவ்! நான் அப்பவே சந்தேகப்பட்டேன்! ஆபீஸ் நேரத்தில் போனை அதிகம் பயன்படுத்தாத சம்யு, எப்ப பாரு போனும் கையுமா இருக்காளே என்று? இப்போ தான் தெரியுது, மேடம், அவங்க ஆளோடு இருக்கிற போட்டோவைப் பார்த்து சைட் அடிச்சிட்டு இருந்த விஷயம்!'' என்று அவளைக் கேலி செய்தனர்.

''சம்யு, இவ்வளவு உருகி உருகி லவ் செஞ்சு கல்யாணம் செஞ்சிட்டு, ஏன் ஹனிமூனுக்கு போகலை?'' என்ற கேள்வி வர, சம்யுவின் முகம் வாடியது. நொடியில், சமாளித்துக் கொண்டவள், ''இல்லை! அவருக்கு ஷூட்டிங் ஸ்டார்ட் ஆகி விட்டது. அது முடிந்த பிறகு போகலாம் என்று இருக்கோம்!'' என்று சொல்லி முடித்து, அவர்களிடம் இருந்து தப்பித்து வந்த சம்யுக்கு, மனம் முழுக்க ஏக்கம் நிரம்பி இருந்தது.

தங்கள் பழைய நினைவுகளில் ஆழ்ந்தவளுக்கு, இப்போது தனக்கும் மதிக்கும் இருக்கும் இடைவெளி குறித்து பெருமூச்சு எழுந்தது.

அவள் சோர்வுடன் வீடு வந்த நேரம், மதியழகனும் வீட்டில் இருந்தான். டாக்டர். சாரங்கன் தன் மனைவியோடு தன் பேரனின் திருமண அழைப்பிதழோடு வருகை தந்திருந்தார்.

சாரங்கன் மதியின் தாத்தா அன்பழகனின் நெருங்கிய நண்பர் என்பது சம்யுக்தா அறிந்ததே! அத்தோடு, தன்



தந்தை பணிபுரியும் மருத்துவமனையின் டீன் என்பதால், சம்யுவுக்கு அவருடன் ஏற்கனவே பழக்கம் இருந்தது என்பதால், அவள் உற்சாகத்தோடு அவரை வரவேற்று உபசரிக்க, மதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவர் சென்றதும், ''சம்யு, உனக்கு சாரங்கன் தாத்தாவைத் தெரியுமா?'' என்று மதி ஆச்சரியத்துடன் விசாரிக்க, சம்யுவுக்கு ஆயாசமாக இருந்தது.

சாரங்கனின் பேரனைப் பார்க்க என்று தந்தை, மருத்துவமனை விழாவுக்குத் தன்னை அழைத்ததும், வேண்டா வெறுப்பாக இவள் சென்றதும், அங்கே எதிர் பாராமல் மதியழகனைச் சந்தித்தது சந்தோசம் அடைந்ததும், நினைவுக்கு வந்தது.

தன் முயற்சி இன்றி, ஒரு வாரத்துக்குள் மதியை சந்திக்க நேர்ந்தால், அவனும் அவளை விரும்புவான், என்று குருட்டாம்போக்கில் தான் வைத்துக் கொண்ட சோதனையில் வெற்றி பெற்ற நாள் அல்லவா அது?

இதைப் பற்றி எத்தனை முறை, மதியிடம் சொல்லி சந்தோஷப்பட்டிருக்கிறாள்?

அவன் பழைய நினைவுகளை மறந்து, சில நேரம் இப்படி கேள்வி எழுப்பும்போது, வருத்தமாக இருந்தாலும், சமாளித்துக் கொள்ளும் சம்யுவுக்கு, இன்று ஏனோ அப்படி இருக்க இயலவில்லை!

ஏற்கனவே பழைய நினைவுகளில் சோர்ந்து இருந்தவளை, கணவனுக்குத் தன்னைப் பற்றி, தன் நேசத்தைப் பற்றி எதுவுமே நினைவு இல்லை என்ற நிதர்சனம், எப்போதையும் விட அதிகமாகத் தாக்கியது.

கணவன், 'பதிலுக்காகக் காத்திருக்கிறான் என்பதை உணர்ந்தவள், ''அப்பா சாரங்கன் அங்கிள் மருத்துவ

மனையில்தானே வேலை பார்க்கிறார்! அதனால் நல்ல பழக்கம்'' என்று மரத்த குரலில் சொன்னாலும், கண்கள் கலங்கியதைத் தடுக்க இயலவில்லை.

மனைவியின் கலங்கிய விழிகளைக் கண்டு மதி, மேலே எதுவும் பேசுமுன், ''கீழே கொஞ்சம் வேலை இருக்கு... நான்... நான் போறேன்!'' என்று சம்யு வேக மாகச் சென்று விட, மதி திகைத்துப் போனான்.

தான் எதையோ சொல்லி அவளை வருத்தி விட் டோம் என்று புரிந்து, இயலாமையோடு அவன் நின்ற போது, மதியிடம் எதோ கேட்பதற்காக வந்த அன்பழகன் சம்யு கலங்கிய முகத்தோடு, அவரைப் பார்க்கக் கூட இல்லாமல் செல்வதைக் கண்டார்.

''மதி? என்ன ஆச்சு? ஏன் சம்யு முகம் வாடி இருக்கு? ஏதாவது சொன்னாயா அவளை?'' என்று பேரனை அதட்டியவர், பேரனின் முகமும் வாடி இருப்பதைக் கண்டு, ''என்ன கண்ணா? என்ன ஆச்சு?'' என்று அக்கறையுடன் விசாரித்தார்.

''தெரியலை, தாத்தா! சாரங்கன் தாத்தாவோடு சம்யு நல்லா பேசினதைப் பார்த்து விசாரித்தேன்!'' என்று குழப்பத்துடன் மதி சொன்னதும், அன்பழகனுக்கு விஷயம் புரிந்தது.

சாரங்கன் பேரனுக்கு சம்யுவைப் பெண் கேட்கிறார்கள் என்று சொல்லி தான் மதியை வம்பிழுத்ததும், அவன் காதலை சம்யுவிடம் சொல்லத் தூண்டியதும் நினை வுக்கு வர, மதிக்கு அதெல்லாம் கொஞ்சம் கூட நினைவில் இல்லாதது, அவருக்கு வருத்தமாக இருந்தது.

தனக்கே இப்படி இருக்கிறது என்றால், சம்யுவுக்கு எப்படி இருந்திருக்கும்? என்று எண்ணியவர், இந்த



மாதிரி சில விஷயங்களை நினைவு படுத்தினால், மதிக்கு பழைய நினைவுகள் திரும்பி வருமோ என்ற நப் பாசையில், விஷயத்தைப் பகிர, மதிக்கு வேதனையாக இருந்தது.

வேதனையில் இருக்கும் மனைவியைத் தேற்ற வேண்டும், என்று எண்ணிக் கொண்டு மனைவியைத் தேடிப் போனவன், தோட்டத்தில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்து, எங்கேயோ வெறித்துக் கொண்டிருந்ததைக் கண்டதும், அவளருகில் வந்து நின்றான்.

அவன் வந்ததைக் கூட உணராமல், அமர்ந்திருந்த சம்யுவின் கண்களில் கண்ணீர் நட்சத்திரங்களெனப் பளபளத்தது.

மெலிதாகப் பரவி இருந்த இருளில், நிலவொளியின் வெளிச்சத்தில், சோகச் சித்திரமாய், வேதனையுடன் மனைவி அமர்ந்திருந்த நிலை, மதிக்கு மனதில் வலியை ஏற்படுத்தியது.

தன்னை விரும்பியதால், இவளுக்குத் தான் எவ்வளவு வேதனை? என்று வருத்தத்துடன் எண்ணியவன், "சம்யு!'' என்று மென்மையாக அழைத்தான்.

கணவன் குரலில் தன்னிலைக்கு மீண்ட சம்யு, அவசரமாக கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

"சாரி!''

மென்மையான குரலில் கணவன் சொன்னதும், எப் பொழுதும் போல், ''எதுக்கு சாரி எல்லாம்? ஒன்றும் இல்லை!'' என்று சொல்ல இயலவில்லை.

பார்வையை மறைத்தபடி கண்ணீர் மீண்டும் பொங்க நின்று கொண்டிருந்தவளை, ஆறுதலாக அணைத்துத்

தேற்ற வேண்டும் என்ற எண்ணம் முழுமையடையும் முன்பாகவே, மதியின் கரங்கள் அவளை அணைத்திருந்தன.

கணவனின் தோளில் சாய்ந்ததை மட்டும்தான் சம்யு உணர்ந்தாள்.

இரண்டு மாதங்களாக, தன் வேதனை, வருத்தம் எல்லாவற்றையும் மறைத்து இயல்பாக இருக்க போராடிக் கொண்டிருந்தவளின் உணர்வுகள், முட்டி மோதிக் கொண்டு வர, கணவனின் அணைப்பிலேயே விம்மி அழ ஆரம்பித்தாள்.

அவளது கண்ணீர் வேதனையைத் தந்த போதும், அவளது இரண்டு மாத மனப் போராட்டத்துக்கு வடிகாலாக இருக்கும் கண்ணீரை, வர விடுவதே மேல் என்று எண்ணிய மதி, ஆதுரத்துடன், மனைவியின் முதுகை வருடிய வண்ணம் இருந்தான்.

வெகு நேரம் அழுது தீர்த்த சம்யு, ''சாரி!'' என்று தயக்கத்துடன் மொழிந்தபடி நிமிர, மனைவியின் தற்போதைய சோர்வை உடனே போக்க வேண்டும் என்ற உந்துதலோடு, அவளைப் புன்னகையுடன் நோக்கிய மதி, வேறு எந்தக் கேள்வியும் இல்லாமல், ''வெளியே எங்கேயாவது போகலாமா?'' என்றான்.

தன் மனநிலையை மாற்ற முயலும், கணவனை நன்றியுடன் நோக்கிய சம்யு, ''எங்கே?'' என்று சந்தோஷமாக வினவ,

''உனக்கு எங்கே போகப் பிடிக்குதோ, அங்கே போகலாம்!'' என்று பதில் வந்தது கணவனிடமிருந்து!

மனைவியின் விருப்பப்படி கடற்கரைக்குச் சென்றவர்கள், பௌர்ணமி நிலவு கடலில் காட்டிய வர்ண



ஜாலத்தை ரசித்து விட்டு, வெளியே உணவை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்த போது, இருவருக்குமே மனம் லேசாகி இருந்தது.

அன்று முதல், முதலில் மனைவியிடம் இயல்பாக பேசத் தயங்கிய மதியழகன், கேலி, கிண்டல் என்று பேசத் தொடங்கினான்.

அவர்களிடையே இருந்த கனத்த திரை மெல்லிய திரையாக உருமாறி, நல்ல தோழமை உருவானது.

## 18

படப்பிடிப்புக்கு இடையில், அதிகமாக ஒரு நாள் ஓய்வு கிடைத்திருந்தது. மதியழகனும், அன்பழகனும் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்க, சம்யுக்தா, தாத்தாவின் அருகில் அமர்ந்து அவ்வப்போது டிப்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''சம்யு! நீ விளையாடறதுன்னா விளையாடு! டிப்ஸ் கொடுக்கிறதெல்லாம் சீட்டிங்!'' என்று மதியழகன் சொல்ல,

''எங்க தாத்தாவுக்கு நான் டிப்ஸ் கொடுக்கிறேன்! உங்களுக்கு என்னவாம்?'' என்று கணவனிடம் பழிப்பு காட்டி விட்டு, அவளது வேலையைத் தொடர, முடிவில் அன்பழகனே அந்த விளையாட்டில் வென்றார்.

''சூப்பர் தாத்தா!'' என்றபடி அவரது கையைப் பற்றி சம்யுக்தா இதழ் பதிக்க, மதியின் பார்வை அவள் மீது படிந்து மீண்டது.

கணவனின் பார்வையைச் சந்தித்தவளுக்கு மனம் படபடத்தது.

''அவள் கொடுத்த டிப்ஸ் வைத்து ஜெயிச்சிட்டீங்க இல்லை? வாங்க, இன்னொரு கேம் விளையாடலாம்!'' என்று மதியழகன், ''சம்யு! நோ டிப்ஸ்!'' என்று எச்சரித்து விட்டு விளையாடினான்.

தீவிரமாக விளையாடி மதியே, அந்த விளையாட்டில் வெற்றி பெற்றான்.

''ஹே! சூப்பர்!'' என்றபடி, சம்யு, கணவனின் கையைப் பிடித்து குலுக்க, அவளை ஒரு கணம் ஆழ்ந்து நோக்கியவன், வேகமாக அவனது அறைக்குள் சென்று மறைந்தான்.

''என்ன ஆச்சு?'' என்று குழம்பிய வண்ணம், பின்னோடு தங்கள் அறைக்கள் வந்தவள்,

''என்ன மதி? என்ன ஆச்சு?'' என்று வினவ, ''தாத்தா வின் செஞ்சா ஒரு மாதிரி வாழ்த்தறது! நான் வின் செஞ்சா ஒரு மாதிரி வாழ்த்தறது! ஆளுக்கு ஒரு நியாயம்!'' என்று எரிச்சலுடன் கணவன் சொல்ல, சம்யுக்தா மேலும் குழம்பினாள்.

''ஹய்யோ! மதி! என்ன ஆச்சு?'' என்று மீண்டும் வினவ, ''நீ டிப்ஸ் கொடுத்து அவரை ஜெயிக்க வைத்த தால் ஸ்பெஷல் வாழ்த்தா?'' என்றதும்தான், தாத்தாவின் கையில் முத்தமிட்டதைச் சொல்கிறான் என்பதை உணர்த்த, சம்யுவுக்கு முகம் சிவந்தது.

அவளது சிவந்த முகத்தில், ஒரு விரலால் கோடிழுத்த படி, ''எனக்கு மட்டும் ஸ்பெஷல் வாழ்த்து கிடையாதா?'' கிசுகிசுப்பான குரலில் கணவன் வினவ, அந்த சின்ன ஸ்பரிசமும், அந்தக் குரலும் மயக்கம் தந்தாலும், அவனது கேள்வியில் ஆச்சரியமே மிஞ்சி நிற்க, விழி விரித்த கணவனை ஆச்சரியத்துடன் நோக்கினாள், மனைவி!



சமீப காலமாக அவன் சகஜமாகப் பேசுவது வழமை தான் என்றாலும், இந்தப் பார்வையும், குரலும் புதிது தான்!

''ஒரு கேள்வி கேட்டால், பதில் சொல்ல மாட்டாயா?'' என்ற கணவன், மேலும் அவள் அருகில் நெருங்கி நிற்க, அவளது நெஞ்சம் படபடத்தது.

விழிகளோடு தலையும் தாமாக தழைய, சம்யுக்தா மௌனமாக நின்றாள்.

''சம்யு!?'' என்றபடி அவளது முகத்தை நிமிர்த்தியவன், அவளது விழிகள் கண்ணீரால் பளபளப்பதைக் கண்டதும் திகைத்து நின்றான்.

''என்னடா?'' என்று பதறியவன், ''ஹே! நான் அப்படி கேட்டதுக்கு சாரி! அதுக்கு போய், நீ ஏன் கண் கலங்கு கிறாய்?'' என்ற கணவனின் கேள்வியில், சம்யுவுக்குப் புன்னகை மலர்ந்தது.

கணவன், தோழமை என்ற நிலையைத் தாண்டி, தன்னிடம் நெருங்குகிறான், என்ற ஆனந்தத்தில் கண்ணீர் துளிர்த்ததைக் கூட புரிந்து கொள்ளாத ட்யூப் லைட், என்று மனதுக்குள் கணவனுக்கு அர்ச்சனை செய்தவள்,

''நான் அதுக்கொண்ணும் கண்ணீர் விடலை!'' என்று விட்டு, ''இப்போ என்ன ஸ்பெஷல் வாழ்த்து வேணும், அவ்வளவுதானே?'' என்றவள், கண்ணிமைக்கும் நேரத்தில் அவனது கன்னத்தில் முத்தமிட்டு விட்டு, அதே வேகத்தில் அங்கிருந்து ஓடியும் விட்டாள்.

மனைவி இதழ் பதித்த இடத்தை, மென்மையாக வருடிக் கொண்ட மதியழகனுக்குள், ஒரு சிலிர்ப்பு ஓடி மறைந்தது.

அவளிடம் தான் பேசியதும், அவள் முத்தமிட்டதும், கனவோ என்று எண்ணியவன், அன்றைய நாள் முழுவதும், அதே மயக்கத்தில் இருக்க, சம்யுக்தாவோ அவன் கண்ணில் படாமல் கண்ணாமூச்சி விளையாடினாள்.

கணவன் தன்னிடம் காட்டிய நெருக்கத்தில், தலை கால் புரியாமல், முத்தமிட்டவளுக்கு, அதன் பிறகே, அவளது செய்கை உரைத்தது. அந்த நேர மயக்கத்தில், செய்துவிட்டு, இப்போது அவன் முகம் பார்க்கவே வெட்கம் கொண்டு, அவன் எதிரில் வராமலே அன்றைய நாளைக் கழித்தாள்.

இரவும், அவன் உறங்கிய பிறகே அறைக்கு வந்தவள், அவன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும், நிம்மதியாக மூச்செடுத்து, சத்தம் போடாமல் வந்து படுத்தவளுக்கு உறக்கம் வர மறுத்தது.

சம்யுவைப் பொறுத்தவரை, மதியழகனை அவள் உயிராக நேசிக்கிறாள். அவன் இன்றி ஒரு வாழ்வு இல்லை என்பது, அவனுக்கு நேர்ந்த விபத்தின் போது அவளுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது.

பழைய நினைவுகள் இல்லா விட்டாலும், கணவனின் மனம் தன் பால் சாய்ந்து கொண்டிருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

முழுமையாக அவன் அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ளும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கையோடு, புன்னகைத்தவளை, உறக்கம் மெல்லத் தழுவியது.

* * *



கணவனின் மனம் முழுதாக தன்னை ஏற்றுக் கொள்ளும் வரை, காத்திருக்கத் தயாராக இருந்த சம்யுவுக்கு, நேற்றைய நிகழ்வுக்குப் பிறகு, எதிர்பார்ப்பு உண்டாகி இருந்தது.

அவர்களது இனிமையான வாழ்வுக்கு, நேற்றைய அவனது நெருக்கம், முதல் படி என்றே அவள் நம்பி இருந்தாள்.

அதனால், கணவன் தன்னிடம் இனிமேல் இன்னுமே இயல்பாக இருப்பான் என்று அவள் எண்ணி இருக்க, அவனோ பாரா முகம் காட்டினான்.

மதியின் குழப்பம் வேறாக இருந்தது.

நேற்று, மனைவி முத்தமிட்டதில் இருந்து மதியழகன் தன் வசம் இழந்திருந்தான். ஆனால், ஆசையாக முத்தமிட்டவள், நாள் முழுதும், தன் அருகில் வராமல் இருந்தது அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

மனைவியை நெருங்க வேண்டும் என்ற ஆசை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை உணர்ந்தவனுக்கு, இது அவளைத் தன் மனம் விரும்புவதாலா? இல்லை, மனைவி என்று அழகான பெண் அருகில் இருந்தால், இந்த உணர்வு இயல்பாகவே இருக்குமா என்ற குழப்பம், இருந்து கொண்டே இருந்தது.

மனதில் இருக்கும் தயக்கம் விலகிய பிறகே, அவளை நெருங்க வேண்டும் என்று முடிவெடுத்தவன், அடுத்த இரண்டு நாட்கள் காலையில் சீக்கிரமே கிளம்பி, இரவு தாமதமாக வரத் துவங்கினான்.

இரண்டு நாட்கள், அவனது விலகலைப் பொறுத்த சம்யுவுக்கு, மூன்றாவது நாள் கோபம் வந்தது.

"இப்போ என்ன ஆச்சு?" என்று குழம்பியவள், அன்று இரவு கணவனின் வரவுக்காக உறங்காமல் காத்திருந்தாள்.

நள்ளிரவு நேரம் வந்தவன், மனைவி இன்னும் உறங்காமல் காத்திருப்பதைக் கண்டதும் ஆச்சரியமடைந்தான்.

"என்ன சம்யு? தூங்கலை? நான்தான் லேட்டாகும் என்று போன் செஞ்சு சொன்னேனே? எதுக்கு இவ்வளவு நேரம் தூங்காமல் இருக்கே?" என்று அக்கறையாக கேள்விகளை அடுக்க, அவனது அக்கறையில் மனம் நெகிழாமல், சம்யுவுக்கு எரிச்சல் வந்தது.

"உங்க கிட்ட பேசணும் என்றுதான் காத்திட்டு இருக்கேன்!" என்றவள், "சாப்பிட்டு விட்டீர்களா?" என்று மனைவியாய் விசாரித்தாள்.

"ம்ம்ம்! ஆச்சு!" என்றவன், "காலையில் பேசிக்கலாமே சம்யு! எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு!" என்று சொன்னதும், அவனை உறுத்து நோக்கினாள்.

"என்னம்மா?" என்று அவன் கேட்டதும், 'இதுக்கொண்ணும் குறைச்சல் இல்லை!' என்று மனதுக்குள் நொடித்தவள்,

"காலையில நான் விழிக்கிறதுக்கு முன்னாடியே நீங்க ஓடிடுவீங்க! அப்புறம் நான் இந்த குட்டிச் சுவர் கிட்டதான் பேசிட்டு இருக்கணும்!" என்று கடுப்புடன் மொழிந்தாள்.

அவளது கடுப்பும், பாவனையும் மதிக்கு ஏனோ புன்னகையை வரவழைத்தது.

"சரி சொல்லு! என்ன விஷயம்?" என்று கட்டிலில் அமர்ந்தபடி விசாரிக்க,



"ஏன் திரும்பவும் என்னைத் தவிர்க்க ஆரம்பிச்சிட்டீங்க?" என்றவளின் குரல் இருந்த ஏக்கம் மனதைத் தொட,

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்லைடா!" என்று அவசரமாக பதில் அளித்தவனை, அவளது பார்வை குற்றம் சாட்டியது.

"பின்னே! இப்படி ஒரே வீட்டில் இருந்தும் நேருக்கு நேராக பார்க்கக் கூட இல்லன்னா எனக்கு எப்படி இருக்கும்?" என்று எரிச்சலுடன் மொழிந்தவள்,

"அன்னைக்கு... அன்னைக்கு நான்... உங்களுக்கு... உங்களுக்குப் பிடிக்கலையா?" என்று திக்கித் தடுமாறி வினவியவளின் விழிகள் கலங்கி, உதடுகள் நடுங்கின.

அன்று தன்னை முத்தமிட்டதைச் சொல்கிறாள் என்று மதிப்புக்குப் புரிந்தது.

மனைவி கண் கலங்கி நின்ற நிலை மனதை உருக்க, வேகமாக அருகில் வந்த மதியழகன், மனைவியை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்லைடா! எனக்கு உன்னை ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு! ஆனால், எதோ ஒரு தயக்கம் இருந்துகிட்டே இருக்கு! உன்னை முழு மனசோடு நெருங்க முடியாத நிலையில், உன் உணர்வுகளோடு விளையாட வேண்டாம்னுதான் விலகி இருக்கேன்!"

மென்மையாக ஒலித்த கணவனின் குரல், ஆறுதலைத் தர, அவன் தோளில் இருந்த தன் தலையை மெதுவாகத் தூக்கி "நிஜம்மா!?" என்று விழி விரித்து, ஏக்கமும் ஆவலுமாகக் கேட்டவளின் பாவனை மனத்தைக் கொள்ளை கொள்ள,

''நிஜம்மா, குட்டிம்மா!'' என்றவனின் இதழ்கள் தாமாக, மனைவியின் நெற்றியில் மென்மையாகப் பதிந்தன.

கணவனின் இதழ் ஒற்றுதல் தந்த ஆச்சரியத்தைவிட அவனது குட்டிம்மா என்ற அழைப்பு தந்த ஆச்சரியம் மிக, சம்யுவின் விழிகள் மேலும் விரிந்தது.

''என்னடா இவ்வளவு ஆச்சரியம்?'' என்ற கணவ னிடம்,

''எங்க அப்பா ரொம்ப சந்தோஷ மூடில் இருக்கும் போது, குட்டிம்மா என்றுதான் என்னைக் கூப்பிடு வாங்க!'' என்றாள் மனைவி.

''ஓ! என் மாமனார் அந்தப் பெயரை ஏற்கனவே ரிசர்வ் செஞ்சிட்டாரா? அப்ப என் பொண்டாட்டியை, நான் எப்படி செல்லமா கூப்பிடறது?'' என்று யோசித்த கண வனை நோக்கிய சம்யுவுக்கு, கணவன் அந்த டயரியைப் படிக்கவே இல்லையோ என்று அவ்வப்போது தோன்றும் சந்தேகம், வலுவடைந்தது.

அதைப் பற்றி கேட்பதற்கு இது தகுந்த சமயமில்லை என்று எண்ணியவள், ''நீங்க எந்த செல்லப் பெயர் வைத்து வேணுமானாலும் கூப்பிடலாம்'' என்று சாதா ரண குரலில் அறிவித்தாலும், அவன் ஸ்வீட்டி என்ற பெயரைச் சொல்ல வேண்டும் என்று மனம் பிரார்த் தித்தது.

''என்ன பெயர் சொல்லிக் கூப்பிடலாம்?'' என்று வெகுவாக யோசித்த மதியழகன், ''உங்க அம்மா உன்னை சம்மு என்று கூப்பிடுவாங்க இல்லை?'' என்று விட்டு,



''நான் உன்னை அம்முக்குட்டி என்று கூப்பிடவா?'' என்று ஆசையுடன், மனைவியின் தாடையைப் பிடித்துக் கொஞ்ச, மனதில் படர்ந்த ஏமாற்றத்தை மறைத்தபடி, ''ம்ம்ம்... நல்லா இருக்கு!'' என்றாள், மனைவி, புன்னகை யுடன்!

அன்றிலிருந்து, கணவன் மனைவி இருவருக்குள் ளும், நெருக்கம் கூடியது.

மனைவியை வருத்தப் படுத்தக்கூடாது என்ற கவனத் தோடு, மதியழகன் அவளிடம் அன்பாகவே நடந்து கொண்டான்.

சம்யுக்தாவுக்கும் அவனது கவனம் கருத்தில் பதியவே செய்தது.

காதல் கொண்ட அவள் மனதுக்கு, கணவனது அன்பும், அருகாமையும் இனிக்கவே செய்தது. தன்னை வருத்தப்பட விடக்கூடாது என்று அவன் நினைப்பதே, தன் மேல் இருக்கும் அன்பின் காரணமாகத்தானே என்று ஆறுதல் கொண்டாள். அவன், தன் நேசத்தை உணரும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கையும் பிறந்தது.

கணவனது மெல்ல அழைப்புகளும், நாளுக்கு நாள் ஒவ்வொரு விதமாக இருந்தது.

மென்மையான அணைப்பும், இதழ் ஒற்றுதல்களும், அவர்களுக்குள் சகஜமாகிப் போயின.

அம்முக்குட்டி, செல்லக்குட்டி, பட்டுக்குட்டி, கன்னுக் குட்டி என்று விதம் விதமாக அழைக்கும் கணவன், ஸ்வீட்டி என்று காதலுடன் அழைக்கும் நாளுக்காக சம்யுக்தா நம்பிக்கையுடன் காத்திருக்க ஆரம்பித்தாள்.

# 19

வெளிநாட்டுப் பயணத்துக்காக பெட்டியை அடுக்கிக் கொண்டிருந்த கணவனுக்கு உதவி செய்து கொண்டிருந்த சம்யுக்தாவின் பார்வை, நொடிக்கொரு தரம் ஏக்கத்துடன் கணவன் மீது படிந்து கொண்டிருந்தது.

மனைவியின் பார்வை புரிந்தாலும், அமைதியாகத் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்த மதியழகன், ஒரு கட்டத்துக்கு மேல் பொறுக்க இயலாமல், மனைவியைத் தன் புறம் இழுத்தான்.

''ஹே! செல்லக் குட்டி! நான் கிளம்பும்போது நீ இப்படி பார்த்துக் கொண்டிருந்தால், நான் எப்படி நிம்மதியா கிளம்பறது? ம்?''

''உங்களை யார் போக வேண்டாம்னு சொன்னாங்க? என்னையும் கூட்டிட்டுப் போங்கன்னுதானே சொல்றேன்?''

இரண்டு நாட்களாகச் சொல்லிக் கொண்டிருப்பதையே, திருப்பிப் படித்த மனைவியின் காதைச் செல்லமாகத் திருகிய மதி, ''ரெண்டு நாளா உனக்கு விளக்கம் சொல்லியே எனக்கு வாய் வலிச்சிடுச்சு!'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டான்.

தன் படத்தின் இறுதி கட்ட படப்பிடிப்புக்காக, மதியழகன் நார்வே நாட்டுக்கு செல்ல வேண்டி இருந்தது.

கதாநாயகிக்கு விசா கிடைப்பதில், ஏதோ பிரச்சனை இருக்கவே, பயணம் தள்ளிக்கொண்டே போக, போன வாரமே சென்றிருக்க வேண்டியவன், இன்று இரவுதான் கிளம்புகிறான்.



ஏற்கனவே தாமதம் ஆனதால், அங்கே முடிக்க வேண்டிய காட்சிகளை குறுகிய காலத்தில் எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருந்தது. அடுத்த மாதம் வெளியீடு என்று அறிவித்து இருந்ததால், வேகமாக எல்லா வேலைகளும் நடந்து கொண்டிருந்தன.

நேரம் காலம் பார்க்காமல் படப்பிடிப்பு நடத்த வேண்டிய சூழலில், மனைவியை ஹோட்டலில் தனியாக தங்க வைத்து விட்டு தன் வேலையைப் பார்க்க மதியழகனுக்கு விருப்பமில்லை! அதனால், மனைவியைத் தன்னோடு அழைத்துச் செல்ல அவன் தயங்க, சம்யுக்தாவுக்கோ, கணவனைப் பிரிந்து பத்து நாட்கள் இருக்க வேண்டுமே என்று இருந்தது.

''உன்னை கூட்டிட்டுப் போனாலும், உன்னோடு என்னால் டைம் ஸ்பெண்ட் செய்ய முடியாது கண்ணுக்குட்டி! இந்தப் பத்து நாள்! அப்புறம் ஒரு பத்து நாள், எல்லா வேலையும் முடிந்து விடும்! அப்புறம், நானும் நீயும் மட்டும் எங்காவது போகலாம்! ஹனிமூன்!! சரியாடா, ஹனிக்குட்டி?''

கிறக்கமான குரலில் சொல்லி விட்டு மனைவியை அணைத்துக் கொண்ட, மதியின் மனதில் கொஞ்சநாளாகவே, இயல்பான கணவன் மனைவியாக வாழத் துவங்க வேண்டும் என்ற எண்ணம் வேரூன்றி இருந்தது.

என்ன பெரிய தயக்கம்? மனைவியோடு இல்லறம் தொடங்கி விட்டால், மனதில் இருக்கும் தயக்கமெல்லாம் ஓடிப் போய்விடும் என்று புதிதாக நம்பிக்கை முளைத்திருந்தது.

கணவனின் மனமாற்றத்தை சம்யுவும் உணர்ந்தே இருந்தாள் என்றாலும், அவன் திடீரென்று தேன்நிலவைப்

பற்றிப் பேசியதும், ஆச்சரியமும், வெட்கமும் மிக, கணவன் மார்பில் புதைந்தாள்.

''ஹேே! செல்லக் குட்டி? என்ன எதுவும் சொல்ல மாட்டேன் என்கிறாய்?'' என்று கிசுகிசுப்பாக வின வியவன், அவள் செவிமடலைத் தன் இதழ்களால் வருடி னான்.

அந்த வருடலில், உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடி மறைய, மேலும் அவனுள் புதைத்தாள் மனைவி.

மதியும், அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

''சமத்துப் பொண்ணா இருக்கணும்! சரியா?'' என்றபடி, மனைவியை மெல்லத் தன் பிடியில் இருந்து விலக்கிய மதி, அவள் முகம் செவ்வானமாய்ச் சிவந் திருப்பதை, ரசனையுடன் நோக்கி, அவள் கன்னங்களில் அழுந்த முத்தமிட்டான்.

மனைவியைச் சமாதானப்படுத்தி விட்டு, கிளம்பிய மதியழகனுக்கு, விமானத்தில் ஏறி அமர்ந்ததுமே, மனைவியையும அழைத்து வந்திருக்கலாமோ என்று தோன்ற ஆரம்பித்து விட்டது.

அவளை அழைத்துக் கொண்டு போனாலும், அவ ளோடு நேரம் செலவழிக்க முடியாது என்ற நிலையை, நினைவு படுத்திக் கொண்டு, அவன் தன்னையே சமா தானப்படுத்திக் கொண்டாலும், நார்வே சென்ற இரண்டு நாட்களிலேயே மனம் மனைவியைத் தேடத் தொடங் கியது.

பொதுவாக, வேலை என்று இறங்கி விட்டால், மற்ற எதைப் பற்றியும் நினைக்காமல் இருப்பது மதியழகனின் வழக்கம்.



அந்த வழக்கத்துக்கு மாறாக, வேலை நடுவிலும் மனைவியின் மலர் முகமே அடிக்கடி மனக் கண்ணில் தோன்றிக் கொண்டிருந்தது. அது, தொந்தரவாக இல்லா மல், மனதுக்கு இதமாகவும் இருந்தது.

காலை, இரவு என்று இரு நேரமும் மனைவியிடம் பேசினாலும், மனம் நிறைவடையவில்லை!

அன்று இரவு, படப்பிடிப்பை முடித்துவிட்டு, பத்து மணிக்கு தான் தங்கி இருந்த ஹோட்டலுக்கு வந்த மதியழகன் மனம் முழுதும், மனைவியின் நினைவே ஆக்கிரமித்து இருந்தது.

பெட்டியில் தான் வைத்திருந்த மனைவியின் புகைப் படத்தை எடுத்துப் பார்த்தான்.

ஒரு வாரமாக மனைவியின் நிழற் படத்தைப் பார்த்து இதம் கொண்டிருந்தவனின் மனம், நிஜத்துக்கு வெகு வாக ஏங்கியது.

மனதில் இருந்த சஞ்சலம், தயக்கம் எல்லாம் விலகி, முழுமையாக மனம் மனைவியை நாட, மனைவி மேல் தனக்கிருக்கும் நேசத்தை மதியழகன் முழுமையாக உணர்ந்தான்.

இதற்காகத்தானே அவன் காத்திருந்தான்?

மனைவியைப் பற்றிய எண்ணங்கள், இனிமையாக நெஞ்சில் மணம் பரப்பியது. உடனே மனைவியைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும், அவளைத் தன் கை வளைவில் வைத்திருக்க வேண்டும் என்ற ஆவல் தோன்ற, மனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறி னான்.

குறைந்த பட்சம் மனைவியோடு பேசவாவது செய்யலாம் என்று கைப்பேசியை எடுத்தவன், இப்போது

அங்கே நள்ளிரவு ஆகி இருக்கும். இந்த நேரத்தில் அவளைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று எண்ணி அரை மனதாக கைப்பேசியை வைத்துவிட்டு கட்டிலில் சாய்ந்தான்.

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தவன், கைப்பேசி அழைக்கவும், 'இந்த நேரத்தில் யார்?' என்று அசிரத்தையாக கைப்பேசியை எடுக்க, மனைவியின் எண் ஒளிர்ந்ததைக் கண்டது, அவசரமாக அழைப்பை எடுத்தான்.

"ஹே! பட்டுக்குட்டி, என்னடா? இந்த நேரத்தில?" என்று பதட்டமாக விசாரிக்க,

"ஒண்ணும் இல்லை மதி! இன்னைக்கு நைட் நீங்க பேசலை என்றதும் எனக்கு தூக்கமே வரலை! வேலை அதிகமாக இருக்கோ என்று தொந்தரவு செய்ய வேண்டாம் என்று இருந்தேன்... ஆனால் முடியலை! சாரி!"

மெல்லியக் குரலில் மனைவி சொன்னதும், மதியின் முகம் மலர்ந்தது. தான் அவளிடம் பேச வேண்டும் என்று நினைத்த நேரம், மனைவியும் அவனைப் பற்றி நினைத்திருக்கிறாள் என்ற எண்ணம் சந்தோஷத்தைத் தர,

"கன்னுக்குட்டி! எதுக்கு சாரி எல்லாம் சொல்றே? நான் இப்போதான் வந்தேன்... ரொம்ப லேட் ஆகிடுச் சேன்னுதான் போன் செய்யலை!" என்றவன் குரலில் எப்போதையும் விட அதிகமாக இருந்த உற்சாகம், சம்யுக்தாவுக்கு ஆவலைத் தூண்டியது.

"ஐயா இன்னைக்கு ரொம்ப குஷியா இருக்கார் போல? ஷூட்டிங் எல்லாம் நீங்க எதிர்பார்த்த மாதிரியே



நல்லபடியா நடந்துகிட்டு இருக்கா?" என்று மனைவி வினவியதும்,

சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்! ஆனால், அதற்கு காரணம் வேறு என்று நினைத்தவனுக்கு, தன் நேசத்தை இப்போது சொல்லி விடலாமா என்று தோன்றியது.

'இல்லை! நேரில்தான் சொல்ல வேண்டும்! தான் சொல்லும்போது, அவள் முகம் மலர்வதைக் கண்டு ரசிக்க வேண்டும்!' என்று எண்ணியவன்,

"ஆமாண்டா ஸ்வீட்டி! இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன்!" என்று அதீத சந்தோஷத்துடன் மொழிய, அவனது ஸ்வீட்டி என்ற அழைப்பைக் கேட்டதும், சம்யுக்தாவுக்கு மூச்சடைத்தது.

ஸ்வீட்டி என்றா அழைத்தான்?

தன் காதில் சரியாகத்தான் விழுந்ததா? என்று அவள் யோசித்துக் கொண்டிருக்க,

"ஹே! என்ன ஆச்சு? சைலெண்ட் ஆகி விட்டாய்?" என்று கணவன் விசாரிக்க, சம்யு முயன்று இயல்புக்கு வந்தாள்.

"என்ன? சந்தோஷத்தில் எனக்கு புது செல்லப் பெயர் வைத்துட்டீங்க போலவே?"

சாதாரணமாகக் கேட்பதைப் போல விசாரித்தாலும், மனம் படபடத்தது.

"ம்ம்ம்! உன்னைப் பற்றி நினைத்தாலே, மனசு முழுக்க ஒரு இனிமை பரவுதுடா, என் சக்கரைக்கட்டி! அதான், புது பேர் வைத்து விட்டேன்! ஸ்வீட்டி! எப்படி இருக்கு? உனக்கு பிடிச்சிருக்கா?"

ஆர்வத்துடன் கணவன் கேட்க, சம்யுவுக்கு தங்கள் நேசத்தைப் பகிர்ந்த முதல் நாள், மதியழகன் இதே

வார்த்தைகளைச் சொன்னது நினைவுக்கு வந்து, ஆனந்தத்தில் கண்ணில் நீர் கோர்த்தது.

கணவனின் ஸ்வீட்டி என்ற அழைப்பு மட்டும் அல்லாது, அவனது குரலில் இருந்தே, அவனது நேசத்தையும் உணர முடிந்தவளுக்கு, உடனே கணவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் தோன்றியது.

இதற்கு முன்னும், கணவன் கொஞ்சி இருக்கிறான்! ஆனால், அப்போதெல்லாம், மனைவியை வருத்தப்பட வைக்கக் கூடாது என்ற கவனம் அதில் மறைந்திருக்கும்! இப்போது, இயல்பாக அவன் கொஞ்சிப் பேசியது, அவளது ஆனந்தத்தை அதிகரித்து, வார்த்தைகளைத் தடை செய்ய, அந்தப் பக்கம் மதியழகன் குழம்பிப் போனான்.

''என்னடா? பிடிக்கலையா?''

கவலையுடன் கணவன் வினவியதும், கண்களைத் துடைத்துக் கொண்ட சம்யு, ''ரொம்ப ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு!'' என்று உற்சாகத்துடன் சொல்ல, மதி நிம்மதியோடு புன்னகைத்தான்.

இதற்கு மேல் பேசினால், தன் மனதை உளறி விடுவோம் என்றெண்ணிய மதியழகன், ''சரிடா! ரொம்ப நேரம் ஆகிடுச்சு! நீ போய் படு!'' என்று விட்டு, அழைப்பைத் துண்டித்தான்.

அவன் போனை வைத்ததும், தன் கைப்பேசியையே பார்த்துக் கொண்டிருந்த சம்யுவுக்கு, புன்னகை மலர்ந்தது.

கணவனின் மனம் முழுமையாக தன்னை நேசிப்பதை உணர்ந்தவளுக்கு, அவன் அதை நேரில் சொல்ல ஆசைப்படுகிறான் என்பது புரிந்தது.



பழைய நினைவுகளை மறந்திருந்தாலும், தன் கணவன் தன்னை நேசிக்க ஆரம்பித்து விட்டதில் அகம் மகிழ்ந்தவள், கணவனின் வரவுக்காக ஆவலுடன் காத்திருக்க ஆரம்பித்தாள்.

இருவரும் சந்தோஷமான மனநிலையில் அடுத்த இரண்டு நாட்களைக் கழித்தனர்.

ஆனால், திட்டமிட்ட நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே, மனம் முழுக்க இனிய கற்பனைகளோடு, வீடு வந்த மதியழகனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

## 20

மதியழகன் மிகுந்த உற்சாகத்தில் இருந்தான்.

பத்து நாள் கழித்து மனைவியைப் பார்க்கப் போவது ஒரு புறம், மனைவி மேல் தனக்கிருக்கும் நேசத்தை ஐயம் திரிபற உணர்ந்து கொண்டது ஒரு புறம் என்று, அவன் மனம் மகிழ்ச்சியில் திளைத்திருந்தது.

கணவன், தன்னிடம் கொஞ்சம் நெருக்கமாகப் பேசினாலே, மகிழ்ந்து விடும் மனைவி, தன் நேசம் தெரிந்தால் எவ்வளவு சந்தோஷப் படுவாள் என்று கற்பனையில் கண்டு மகிழ்ந்தவன், அதை நிஜத்தில் காண ஆவலோடு வந்திருந்தான்.

நேற்று பேசும்போதுகூட, அவன் ஊருக்கு வருவதைப் பற்றி அவன் சொல்லவில்லை!

எதிர்பாராமல் தான் போய் நிற்கும்போது, மனைவியின் முகம் மலர்வதைக் காணும் ஆவலில் வீட்டுக்கு வந்தவன், வீட்டில் மனைவி இல்லை என்றதும், மனம் சோர்ந்தான்.

''மதி... வா... வா! நாளைக்குதானே வருவதா இருந்தாய்?'' என்று ஆச்சரியத்துடன் அன்னை வினவ,

''வேலை முடிந்து விட்டதும்மா... அதான் டிக்கெட் கிடைத்தவுடன் வந்து விட்டேன்... சம்யு எங்கேம்மா?'' என்றவனின் கண்கள், மனைவியைத் தேடின.

''அவள் மலர்கள் இல்லத்துக்கு போய் இருக்காள்... வருகிற நேரம்தான்! நீ முன்னாடியே சொல்லி இருந் தால், இந்நேரம் வீட்டில் இருந்திருப்பாள்! சரி... நீ போய் குளிச்சிட்டு வந்து சாப்பிடு!'' என்று சொல்லி விட்டு நகர, மதியழகன் தங்கள் அறைக்கு வந்தான்.

மனைவியைக் காண வேண்டும் என்ற ஆவலோடு வந்தவனுக்கு, அவள் இல்லை என்றதும், மனம் வாடி னாலும், அவள் வருவதற்குள் தான் வாங்கி வந்த பரிசை எடுத்து மறைவாக வைத்துவிட வேண்டும் என்று எண்ணி பெட்டியைத் திறந்தவன் கண்களில், அருகில் இருந்த சினிமா சம்மந்தப்பட்ட பத்திரிகையில் தன் புகைப்படம் இருந்தது பட்டது.

திரைப்படத் துறையில் இருப்பதால், சினிமா சம்பந் தப்பட்ட எல்லா பத்திரிகைகளும் மதியின் வீட்டில் வாங்குவது வழக்கம். அதிலும், மதியழகன் பற்றி வெளி வரும் ஒவ்வொரு செய்தியையும், ஆல்பத்தில் ஒட்டு வது சம்யுக்தாவின் பொழுதுபோக்கு!

ஒரு சின்ன பெட்டிச் செய்தியையும் விடாமல் அவள் ஒட்டி வைப்பதைக் கண்டு, ''என் பெயர் மட்டும் வந் தாலும், அதையும் ஒட்டி வைப்பாயா?'' என்று மதி யழகன் அவளைக் கேலி செய்வதுண்டு.

''எனக்கு என் கணவர் பற்றி வருவது பெரிதா இருந் தாலும், சின்னதா இருந்தாலும் முக்கியம்தான்.



உங்களுக்கு என்ன வந்தது?'' என்று சம்யுக்தா பதில் கொடுப்பாள்.

மனைவி பற்றிய நினைவில் முகம் மலர, அந்தப் பத்திரிகையை எடுத்தவன், பக்கங்களைப் புரட்ட, இந்த வாரக் கிசுகிசு என்ற தலைப்போடு வந்திருந்த ஒரு செய்தி அவனை ஆத்திரத்துக்குள்ளாக்கியது.

''அழகும் அறிவும் சேர்ந்த ஒரு இயக்குனர், தன் புதிய படத்தின் படப்பிடிப்புக்காக வெளிநாடு செல்லும்போது, தனது புது மனைவியை அழைத்துச் செல்லவில்லை யாம்! எப்போதுமே, படத்தின் தயாரிப்புச் செலவை முடிந்த வரை குறைப்பது அவரது வழக்கம்! வெளி நாட்டுப் படப்பிடிப்பில் கதாநாயகிக்கென தனி அறை கூட ஏற்பாடு செய்யாமல், சிக்கனம் செய்திருக்கிறா ராம்!''

செய்தியைப் படித்த மதியழகனுக்கு, அந்த கிசுகிசு அவனைப் பற்றித்தான் என்று தெளிவாகப் புரிந்தது.

நேரில் பார்த்த மாதிரி எழுத, இந்த மாதிரி சில பத் திரிகைக்காரர்களால் மட்டுமே முடியும் என்று ஆத்திரத் துடன் நினைத்தவனுக்கு, சம்யுக்தா இந்தச் செய்தியைப் பார்த்திருப்பாளா? பார்த்திருந்தால் என்ன நினைத் திருப்பாள் என்ற எண்ணம் தோன்றி படபடத்தது.

பொதுவாக, மதியழகனைப் பற்றி நிறைய வதந்திகள் வந்ததில்லை. அப்படி வந்தாலுமே, அதைப் பற்றி அவன் வருத்தப்பட்டதுமில்லை. தவறான வதந்தியைப் பற்றி கவலைப் பட்டு தன் நேரத்தை விரயம் செய்யக் கூடாது என்று நினைப்பவன் அவன்.

ஆனால், இன்று அப்படி நினைக்க முடியவில்லை!

மனைவி கெஞ்சிக் கேட்டும் அவளை அழைத்துச் செல்லாதது. எவ்வளவு பெரிய தவறு என்று நொந்து கொண்டான்.

மனதின் சஞ்சலம் எல்லாம் நீங்கி, தன் நேசத்தை மனைவியோடு பகிர்ந்து கொள்ள வந்தவனின் மனம் மீண்டும் சஞ்சலத்தில் ஆழ்ந்தது.

சம்யு இந்தச் செய்தியைப் பெரிதுபடுத்த மாட்டாள் என்று உள்மனம் நம்பினாலும், மனைவியின் எதிரொலி எப்படி இருக்கும் என்று படபடப்போடு காத்திருந்தான்.

சம்யுக்தா உள்ளே நுழையும்போதே, காஞ்சனா மதியின் வருகையைப் பற்றிச் சொல்ல, சம்யுவின் முகம் மலர்ந்தது.

''நாளைக்குதானே வரேன் என்று சொன்னார், அத்தை?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டு விட்டு, மாடிப் படிகளை வேகமாக கடந்து தங்கள் அறைக்கு வந்தாள்.

பால்கனியில் நின்று கொண்டிருந்த கணவனைக் கண்டதும், வேகமாக அவளருகில் செல்ல, அரவம் கேட்டு திரும்பிய கணவனின் முகத்தில் இருந்த வாட்டம், அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

'என்னவாயிற்று! நேற்று பேசும்போதுகூட சந்தோஷமாகத்தானே பேசினான்? தன்னை ஆச்சரியப்படுத்தவென்று ஒரு நாள் முன்னதாகவே வந்தவன், முகம் ஏன் கலங்கி இருக்கிறது?''

''மதி? என்ன ஆச்சு? உடம்பு எதுவும் சரி இல்லையா?'' என்று அவனது நெற்றியில் கை வைத்துப் பார்த்தவள், அப்படி எதுவும் இல்லை என்றதும், குழம்பிப் போனாள்.



''ஏதாவது சாப்பிட்டீங்களா?'' என்று விசாரித்தவள், அவன் அமைதியாக இருக்கவும், ''என்னப்பா? என்ன ஆச்சு?'' என்று கவலையுடன் விசாரிக்க, மதி அவள் இயல்பாக இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான்.

அவள், அந்தச் செய்தியைப் பார்க்கவில்லையா என்ன?

''ஒண்ணுமில்லை, சம்யு! கொஞ்சம் டயர்டா இருக்கு, அவ்வளவுதான்!'' என்ற மதியழகன் குரலில் இருந்த களைப்பு, மனதை வருத்தியதோடு, இரண்டு நாட்களாக ஸ்வீட்டி என்று கொஞ்சலாக அழைத்துக் கொண்டிருந்தவன், சம்யு என்று அழைக்கவும் சம்யுக்தாவின் முகம் வாடியது.

கணவன், வந்ததும், தன் நேசத்தைச் சொல்லப் போகிறான் என்று ஆவலோடு காத்திருந்தவளுக்கு கணவனின் சோர்வு, வருத்தத்தைத் தந்தாலும், எப்போதும் போல் மனதைத் தேற்றிக் கொண்டவள், ''சரி, சாப்பிட்டு விட்டு ரெஸ்ட் எடுங்க!'' என்று சொல்லி விட்டு நகர, மனைவியின் கைப்பற்றி நிறுத்தினான் மதி.

''என்ன மதி?'' என்ற கேள்வியோடு மனைவி திரும்ப, ''ஏதாவது முக்கியமா இந்த பத்து நாள்ல நடந்ததா சம்யு?'' என்றான் கணவன்.

''ஸ்பெஷலா எதுவும் நடக்கலை! உங்களைப் பார்க்காமல் எனக்குதான் ரொம்ப கஷ்டமா இருந்தது'' என்றவளின் குரலில், மெல்லிய ஏக்கம் இழையோடி இருந்ததை மதியால் உணர முடிந்தது.

அவள், அந்தச் செய்தியைப் பார்த்தாளா இல்லையா என்று உடனே தெரிந்து கொள்ள வேண்டும் போலத் தோன்ற, ''என்ன? என்னைப் பற்றி வந்த செய்தியெல்

லாம் ஒட்டி வைத்து விட்டாயா?'' சாதாரணம் போல
வினவினான்.

''இல்லை! அதைச் செய்ய உட்கார்ந்த போதுதான்,
நாதன் அங்கிள் இன்னைக்கு வர முடியுமா என்று
கேட்டார், வரேன் என்று கிளம்பிப் போய் விட்டேன்!''

மனைவியின் பதில், அவள் அதை இன்னும் பார்க்க
வில்லை என்பதை உணர்த்த, அதைப் பார்த்த பிறகு
மனைவியின் எதிரொலி எப்படி இருக்கும் என்று
தெரிந்து கொள்ளும் ஆர்வம் உந்த, வேகமாக வந்து
அந்தப் பத்திரிகையை எடுத்தவன், அந்தச் செய்தி
இருந்த பக்கத்தை எடுத்து, மனைவியிடம் நீட்டினான்.

''என்ன மதி? ரொம்ப முக்கியமான செய்தி ஏதாவது
வந்திருக்கா, என்ன?'' என்ற கேள்வியோடு, புத்தகத்தை
வாங்கியவளின் முகம், அதில் இருந்த செய்தியைப்
படித்ததும் ஆத்திரத்தில் சிவந்தது.

''நான்சென்ஸ்!'' என்று ஆத்திரமாக சொன்னபடி,
பத்திரிகையைத் தூக்கி எறிந்தவளுக்கு, கணவனின் முக
வாட்டதுக்கான காரணம் புரிந்து, மனம் லேசானது.

''ஹய்யோ! இதைப் படிச்சிட்டுதான், என் புன்னகை
மன்னனோட முகம் வாடி இருந்ததா?'' என்று கேலி
யுடன் கேட்டபடி, கணவனின் தோளைப் பற்றியவள்,
''இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் நீங்க அலட்டிக்க
மாட்டீங்களே மதி? இப்போ என்ன ஆச்சு?'' என்று
ஆச்சரியத்துடன் வினவினாள்.

மனைவியின் எதிரொலிக்காக படபடப்புடன் காத்
திருந்த மதிக்கு, அவளது செய்கை ஆச்சரியத்தைத்
தந்தது.



அதை, அவள் ஒரு பொருட்டாகக் கூட நினைக்க
வில்லை!

மனதில் இதம் பரவினாலும், ''உனக்கு அதைப் பார்த்து
எதுவும் தோன்றவில்லையா?'' என்று ஆச்சரியத்துடன்
வினவினான்.

''என்ன தோணணும்? படிக்கும்போது இப்படி அபத்த
மாக எழுதி இருக்காங்களேன்னு, ஆத்திரம் வருதுதான்!
பட், அதுக்கு மேல், அதுக்கு மதிப்பு கொடுக்க என்ன
இருக்கு?'' என்ற சம்யுவுக்கு அப்போதுதான் அவனது
ஆச்சரியத்துக்கான காரணம் புரிந்து, முகம் மாறியது.

''ஓ! நான் அதைப் படிச்சதும் உங்களைப் பற்றி தவறா
நினைப்பேன் என்று நீங்க நினைத்தீர்களா? அந்த
அளவுக்கு என்னைப் பற்றி தவறா எடை போட்டு வைத்து
இருக்கீங்க... இல்லையா?'' என்றபோது, சம்யுவின்
குரலில் கோபம் இருந்தது.

''அப்படி இல்லைடா சம்யு! எனக்கு...'' என்றவன்
மேலே பேசும் முன், சம்யு கை நீட்டி அவன் பேச்சை
நிறுத்தினாள்.

''நான் உங்கள் மேல் முழு நம்பிக்கை வைத்திருக்
கிறேன் என்று எப்போ உங்களுக்கு புரியும், மதி?''
என்றவளின் குரலில் கோபத்தை விட ஆதங்கமே விஞ்சி
நின்றது.

தனக்கு மனைவியாக வருபவள், தன் மேல் முழு
நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணி
இருந்த மதியழகனுக்கு, மனைவியின் பேச்சும் செயலி
லும், மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

தன் மனைவி, தன் மேல் முழு நம்பிக்கை வைத்
திருக்கிறாள் என்று மகிழ்ச்சி அடைந்தவனுக்கு, அவளது

கோபத்தை விட, அவளது குரலில் இருந்த ஆதங்கம் மன்னைத் தொட, "ஸ்வீட்டி!" என்றழைத்தபடி, மனைவியை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"சாரிடா! ஏதோ ஒரு குழப்பத்தில் அப்படி கேட்டுட் டேன்! சாரி ரியலி வெரி சாரி!" என்று ஆத்மார்த்தமாக மன்னிப்பு வேண்ட, அவன், மன்னிப்பு கேட்டதை விட, அவனது ஸ்வீட்டி என்ற அழைப்பு, சம்யுவை சமா தானப்படுத்தியது.

"பரவாயில்லை! ஆனால், உங்களை நான் எப்படி நம்பறேனோ, அதே போல, நீங்களும் உங்கள் மேல் எனக்கு சந்தேகம் வராது என்று நம்பணும், மதி!" என்று விட்டு, கணவனிடம் இருந்து மெல்ல விலகியவள், "டிபன் கொண்டு வரட்டுமா?" என்று சாதாரணமாகக் கேட்க, அவளைப் புண்படுத்தி விட்டோம் என்று மதிக்குப் புரிந்தது.

"இன்னும் கோபமாடா?" என்று கேட்டவனை, நிமிர்ந்து நோக்கியவள், "அதெல்லாம் ஒண்ணுமில்லை!" என்று சொல்லிவிட்டு, "உங்களுக்கு ஏதாவது சாப்பிட எடுத்துட்டு வரேன்!" என்று நகர, மதி அவளது கையைப் பற்றி நிறுத்தினான்.

"இப்போ எதுவும் வேண்டாம்! கொஞ்ச நேரத்தில் டின்னரே சாப்பிடுகிறேன்!" என்றவன், "உன்கிட்ட ஒண்ணு சொல்லணும், சம்யு!" என்றான்.

சம்யு கேள்வியை அவனை நோக்க, அவளது கைப்பற்றி அழைத்து வந்து கட்டிலில் அமர்த்தியவன், தானும் அமர்ந்து, அவளது கையைத் தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டு, அவளையே தயக்கத்துடன்



நோக்க, "என்ன மதி? சொல்லுங்க!" என்று ஊக்கினாள், மனைவி.

"ஊருக்குப் போய் இருந்தபோது, நான் உன்னை ரொம்பவே மிஸ் செஞ்சேன் சம்யு! அப்போதான் என் மனம் முழுக்க நீ நிறைஞ்சு இருக்கிறாய் என்று எனக்குத் தெளிவா புரிஞ்சது! உன்னைப் பிரிந்து ஒரு நாள் கூட, இனிமேல் இருக்க முடியாது என்று எனக்குப் புரிந்து விட்டது. இனிமேல் எந்தச் சூழ்நிலையிலும், உன்னைப் பிரியாத வரத்தை எனக்குத் தருவாயா, ஸ்வீட்டி?" ஆத்மார்த்தமாக தன் காதலைச் சொன்னவனை, கண்கள் மின்னப் பார்த்தபடி சந்தோஷத்துடன் அவனது தோளில் சாய்ந்தாள், அவனது மனம் கவர்ந்தவன்.

மனைவியின் செயல், அவள் தன்னை உணர்ந்து கொண்டாள் என்பதை உணர்த்த, மதியழகனும் அவளை சந்தோஷத்துடன் அணைத்துக் கொண்டான்.

இத்தனை நாள் காத்திருந்தது வீணாகாமல், கணவன் தன் நேசத்தைப் பகர்ந்ததும், சம்யுவுக்கு, ஆனந்தத்தில் கண்ணீர் வந்தது.

தன் மார்பில் மனைவியின் கண்ணீரை உணர்ந்தவன், "ஹே! என்னடா?" பதறியபடி அவளை மெல்ல விலக்கி, முகம் பார்க்க, விழிகளில் நீர் இருந்தாலும், அவளது முகம் மலர்ந்தே இருப்பதைக் கண்டவனுக்கு, அவளது மனம் புரிந்தது.

மென்மையாக அவளது கண்ணீரைத் துடைத்தவன், "உன்னைப் பற்றின நினைவுகளை மறந்து, உன்னைத் தவிக்க வைத்தது போதாது என்று, என் மனதைப் புரிந்து கொள்ளாமலே இவ்வளவு நாள் உன்னை வருத்தப்பட வைத்ததுக்கு நான் ரொம்பவே வருத்தப்படறேன், சம்யு!

மூன்று நாளுக்கு முன்னாடியே, என் மனம் புரிந்தாலும், நேரில் வந்து சொல்லணும் என்றுதான் காத்திருந்தேன்! நீ என் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பார்த்து நான் இதைச் சொல்லவில்லை, ஸ்வீட்டி! உனக்குப் புரிகிறதா?''

ஆழமான குரலில், தவிப்புடன் கணவன் வினவ, ''புரியுது மதி! எப்போ நீங்க என்னை ஸ்வீட்டி என்று அழைத்தீர்களோ, அப்பவே உங்க மனசு எனக்குப் புரிந்து விட்டது!'' என்றபடி, அவனது தோளில் சாய்ந்தாள், மனைவி.

''தேங்க்ஸ்டா ஸ்வீட்டி!'' என்றவன், ''ஹே! அதென்ன ஸ்வீட்டி என்று கூப்பிட்டதாலேயே என் மனசு புரிந்து விட்டது என்று சொல்கிறாய்?'' என்று ஆச்சரியமாக வினவினான்.

எப்போதும் தன்னுள் உறுத்திக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்டாள் அவள்.

''நீங்க அந்த ஹார்டின் ஷேட் டயரியைப் படிக்கவே இல்லையா?''

''இல்லை!'' என்ற அவன் பதில் எதிர்பார்த்ததுதான் என்றாலும், ஏன் என்று தெரிந்து கொள்ளும் ஆவல் தோன்ற, ''ஏன்?'' என்று வினவினாள்.

''வேலையைப் பற்றின விஷயங்கள் படிக்கும்போது, என்னால் அந்த விஷயங்களோடு ஈசியா ரிலேட் செய்ய முடிஞ்சது! ஏன்னா, அதெல்லாம் எனக்கு பழக்கப்பட்ட விஷயங்கள்! ஆனால், நம்ம விஷயம்... காதலை உணரத்தான் முடியும், இல்லையா சம்யு? படிச்சால் அது மனசுக்கு நெருக்கமா வரும் என்று எனக்கு தோணலை! உன் மேல் இருக்கிற காதலை, நான் இயல்பா உணரணும்



என்று ஆசைப்பட்டேன்! அதனால்தான் படிக்கவில்லை! இப்போ பாரு, நான் நினைத்த மாதிரியே, எந்தத் தூண்டுதலும் இல்லாமலே, என் நேசத்தை உணர்ந்து கொண்டேன்!''

சந்தோஷமாகச் சொன்ன கணவனைப் பார்த்த சம்யுக்தாவின் மனமும் பெருமிதத்தில் ஆழ்ந்த. கண்களும் அதை வெளிப்படுத்தியது.

''ஹே! இப்பவே இப்படி எல்லாம் பார்க்காதே! அப்புறம் என்னால் நைட் வரை காத்திருக்க முடியாது!'' சரசமாக சொன்னக் கணவனின், மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்ட சம்யுக்தா.

''நேற்று பேசும்போது, வீட்டுக்கு வந்ததும், எனக்கு ஏதோ சர்ப்ரைஸ் தரப் போறேன் என்று சொல்லி இருந்தீங்களே, என்ன மதி, அது?'' என்று குழைவுடன் கேட்டு பேச்சை மாற்றினாள்.

''அதை இப்பவே தரணுமா, ஸ்வீட்டி?'' என்றவன் குரலும் குழைய, மெல்ல தலையை நிமிர்த்தி, ''பின்னே, எப்போ தரப் போறீங்க?'' என்று ஆர்வமாகக் கேட்டவளின் குரல் கிசுகிசுப்பாக வெளிவந்தது.

''அதைத் தந்த பிறகு, ப்ரேக் விடாமல் நிறைய வேலைகள் செய்யணும். அதனால் அப்புறம் சொல்றேன்!'' என்று கணவன் பூடகமாகச் சொன்னது முதலில் புரியா விட்டாலும், அவனது கண்களில் தெரிந்த குறும்பில் புரிந்துவிட, மீண்டும் அவன் மார்பிலேயே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள், அவனது அன்பு மனைவி!

கொஞ்ச நேரம் முன்பு இருந்த சஞ்சலம் நீங்கி விட, சந்தோஷத்துடன் மனைவியை அணைத்துக் கொண்டான் மதியழகன்.

சிறிது நேரத்தில், உணவு உண்ண வருமாறு, காஞ்சனா அழைக்க, இருவரும் கீழே இறங்கி வந்தனர்.

இருவரின் முகங்களும் மலர்ந்திருப்பதைக் கண்ட, குடும்பத்தினருக்கும் சந்தோஷமாக இருந்தது.

இருவரும், உணவோடு, பார்வையால் ஒருவரை ஒருவர் விழுங்கியபடி இருந்தனர்.

உணவுக்குப் பிறகு, மதியழகன் தன் அலுவலக அறைக்குள் சென்று விட, தங்கள் அறைக்கு வந்த சம்யுக்தா, படபடப்போடு கணவனின் வருகைக்காக காத்திருந்தாள்.

பத்து மணியாகியும், அவன் வராமல் இருக்க, வந்ததும் அவ்வளவு ஆசையாகப் பேசி விட்டு, இப்போது என்ன வேலை செய்து கொண்டிருக்கிறான் என்று எரிச்சலாக வந்தது.

பால்கனியில் நின்றபடி, மனதில் கணவனுக்கு அர்ச்சனை செய்து கொண்டிருந்தபோது, கழுத்தில் கணவனின் ஸ்பரிசத்தை உணர்ந்து திரும்பியவள், அவன் அணிவித்து இருந்த மெல்லிய சங்கிலியைக் கண்டதும், இனிமையாய் அதிர்ந்தாள்.

"ஹே! மதி, இதை எப்போ வாங்கினீங்க?" ஆச்சரியத்துடன் கேட்டவளிடம், "உனக்குப் பிடிச்சிருக்கா?" என்று ஆவலுடன் கேட்டான், கணவன்.

மெல்லியப் பிளாட்டின சங்கிலியில், இதய வடிவில் இருந்த டாலரில், எம்.எஸ். என்ற எழுத்துக்கள் குட்டி குட்டி வைரங்களாய் மின்னின.

"சோ க்யூட்! ரொம்ப பிடிச்சிருக்கு!" என்றபடி, அதையே பார்த்துக் கொண்டிருந்தவள் கண்களும், வைரத்துக்குப் போட்டியாய் மின்னியதைக் கண்டதும், மயக்கம் மிக, மதியழகன் மனைவியைத் தன் கைகளில் ஏந்தினான்.



"ஹே! என்ன செய்யறீங்க?" என்று திகைப்புடன் வினவியவளின் கரங்களும், தன் மன்னவனின் கழுத்தில் மாலையாய்க் கோர்த்தன.

"சர்ப்ரைசைத் தந்த பிறகு, நிறைய வேலை இருக்குன்னு சொன்னேனே, அதைச் செய்யப் போகிறேன்!" என்று கிறக்கத்துடன் மொழிந்தவன், அவளை மஞ்சத்தில் கிடத்தி விட்டு, மோகனப் பார்வையோடு அவளை நோக்கினான்.

அவனது பார்வையில் இருந்து தப்பிக்க எண்ணிய மனைவி, அவனிடமே தஞ்சம் புக, அங்கே மௌன மொழியில் ஒரு காதல் காவியம் அரங்கேறத் துவங்கியது.

## 21

புன்னகை உறைந்த முகத்தோடு, உறங்கிக் கொண்டிருந்த மனைவியை ரசித்துக் கொண்டிருந்த, மதியழகனுக்கு அவளை எழுப்ப மனம் வரவில்லை.

எப்போதும், புன்னகையோடு வளைய வருபவள்தான் என்றாலும், இப்போதிருக்கும் புன்னகையில் தெரிந்த மாற்றம் எதனால் என்பதை உணர்ந்தவன் முகமும் மலர்ந்தது.

மனைவியின் அருகில் வந்து படுத்தவன், மென்மையாக மனைவியின் செவியில் இதழ் பதிக்க, "ம்ம்ம்..." என்று முனகியபடி புரண்டு படுத்தாள், சம்யு.

"ஹே! கன்னுக்குட்டி, எழுந்திரு!" என்று மென்மையாக உரைத்தவனின் இதழ்கள், இப்போது மனைவியின்

கன்னத்தில் இடம் பெயர்ந்திருக்க, ''இன்னும் கொஞ்சம் நேரம்டா அழகா, ப்ளீஸ்!'' என்று தூக்கக் கலக்கத்தில் சொன்னபடி, கணவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, சம்யு உறக்கத்தைத் தொடர்ந்தாள்.

''பட்டுக்குட்டி, இப்பவே மணி ஏழு, இன்னும் ஒரு மணி நேரத்தில் நாம கிளம்பணும்! எழுந்திருடா!'' என்றவனின் கரம், மனையாளின் கூந்தலைக் கோதியது.

''ஏழு மணியா?'' என்று அவசரமாக வினவியபடி, எழுந்து கொண்ட சம்யு, ''எங்கே கிளம்பணும்?'' என்று ஆச்சரியத்துடன் வினவினாள்.

''சொன்னால்தான் வருவாயா?''

''அப்படி இல்லை! உங்களுக்கு வேலை இருக்குமே?'' என்றவளிடம், ''அது எப்பவும்தான் இருக்கு! நாம ரெண்டு பேரும் இப்போ, ஒரு இடத்துக்குப் போறோம்... ஹனிமூனுக்கு!''

கண் சிமிட்டியபடி சொன்ன கணவனின் பதிலில் ஆச்சரியமடைந்து, ''பத்து நாள் கழிச்சு வேலை முடிந்தவுடன் போகலாம் என்று சொல்லி இருந்தீங்களே, மதி?'' என்றவளை நெருங்கி அமர்ந்தவன், ''இது குட்டி ஹனிமூன்! ரெண்டு நாளைக்கு! அப்புறம் பெரிய்ய்ய ஹனிமூன்!'' என்று கிறக்கத்துடன் மொழிய, சம்யுக்தாவின் முகம் மலர்ந்தது.

நேற்றைக்குப் பிறகு, சம்யுக்தாவுக்கும், கணவன் நாளையில் இருந்து வேலை, வேலை என்று ஓடி விடுவானே என்றுதான் இருந்தது.

அவளுக்குமே கணவனுடனான தனிமை வேண்டி இருந்தாலும், அவனுக்கிருக்கும் வேலையை மனதில் கொண்டு ''வேலை இருக்கே, மதி?'' என்றாள்.



''அதெல்லாம் பார்த்துக்கலாம்! நேற்றே, சில வேலைகளைப் பிரித்துக் கொடுத்துட்டேன்! ரெண்டு நாளைக்கு என்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று தெளிவாச் சொல்லிட்டேன்!''

அதுதான் நேற்று இரவு தாமதமாக வந்தானா?

''குட்டி ஹனிமூன் இரண்டு நாளைக்கு என்றால், பெரிய்ய ஹனிமூன் எத்தனை நாளைக்கு மதி?'' குறும்புடன் வினவியவளிடம், ''நீயே சொல்லேன்!'' என்றான் கணவன்.

''ஒரு வாரம்?''

''ம்ஹூம்!''

''இரண்டு வாரம்?''

''ம்ஹூம்!''

''பின்னே, ஒரு மாசம்?''

அதற்கும் மறுப்பாகவே தலை அசைத்தான்.

''பின்னே? நீங்களே சொல்லுங்க!'' என்று அலுத்துக் கொண்டவளை அணைத்தவன், ''ஒரு வருஷம்!'' எனவும், அவன் கேலி செய்கிறானோ என்று எண்ணியவள், ''ரொம்பத்தான்!'' என்று உதட்டைச் சுழித்தாள்.

''என் மனைவியோட ஆசை அது!'' என்று சொல்ல, சம்யுவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

''நான் எப்போ சொன்னேன்?''

''ஒரு நாள், அம்மாகிட்ட சொல்லிட்டு இருந்தாயே!'' என்று அவன் நினைவுப் படுத்த, ஒரு கணம் யோசித்தவளுக்கு எப்போது சொன்னாள் என்பது நினைவுக்கு வந்தது.

''ஹய்யோ! அது அத்தையை சமாதானப்படுத்த சொன்னது!'' என்று புன்னகையுடன் சொல்ல,

''எப்படி இருந்தாலும், பொண்டாட்டியோட ஆசையை நிறைவேற்றுவது கணவனின் கடமை, இல்லையா?'' என்றவன்,

மனைவியின் உதடுகளை மென்மையாக வருடி, ''உண்மையாத்தான் சொல்றேன் ஸ்வீட்டி! ஏற்கனவே வீணாகிப் போன ஆறு மாசத்தை ஈடு கட்டணும், இல்லை?'' என்றபோது அவனது குரல் கிசுகிசுப்பாக வெளிவந்தது.

அவன் விரலின் வருடலும், வார்த்தைகளும் சம்யுவின் முகத்தைச் சிவக்கச் செய்தன.

''போதுமே!'' என்றபடி அவனிடம் இருந்து விலகியவள், ''இப்போ எங்கே போறோம்?'' என்று விசாரித்தாள்.

''சொல்றேன்! நீ சீக்கிரம் போய் ரெடியாகு!'' என்று அவளைக் கைகொடுத்து எழுப்பியவனிடம், ''வீட்டில் சொல்லி விட்டீர்களா?'' என்று வினவினாள்.

''சொல்லி ஆச்சுங்க மேடம்! வேற எதாவது கேள்விகள் இருந்தால், போகும்போது பதில் சொல்றேன் மேடம்!'' என்று பணிவுடன் சொன்னவனைப் புன்னகையுடன் நோக்கி விட்டு, குளியல் அறைக்குள் சென்றாள்.

சென்னைப் புறநகரைத் தாண்டி இருந்த, தங்கள் கெஸ்ட் ஹவுசுக்கு மனைவியை அழைத்து வந்திருந்தான், மதியழகன்.

அவர்கள் மட்டுமே இருந்த, அந்தத் தனிமை, இருவருக்குமே பிடித்திருந்தது.



இருவருமாக சேர்ந்து சமைத்தனர். ஒருவருக்கு ஒருவர் ஊட்டி விட்டுக் கொண்டு உணவை உண்டனர்.

''ஹே, இதெல்லாம் சீட்டிங்! ஹனி மூன் கூட்டிட்டு போறேன் என்று சொல்லிட்டு, நம்ம கெஸ்ட் ஹவுசுக்கே கூட்டிட்டு வந்திருக்கீங்க!'' என்று இங்கே வந்தபோது சிணுங்கிய மனைவியிடம்,

''ஸ்வீட்டி! இதுதான் இப்போதைக்கு நம்ம ஹனி மூனுக்கு ஏற்ற இடம்!'' என்று கண்சிமிட்டி சொன்ன மதியழகன், இரண்டு நாட்களாக, கடந்த ஆறு மாதத்து ஏக்கம், வேதனை எல்லாவற்றையும் கனவோ என்று எண்ணும்படி, தன் காதலால் மறக்கடித்து இருந்தான்.

கணவனின் நேசம் எப்போது முழுமையாக கிடைக்கும் என்று ஆவலும், ஏக்கமுமாகக் காத்திருந்த சம்யுக்தாவுக்கு, இந்த இரண்டு நாட்கள், சொர்க்கத்தில் இருப்பதைப் போலிருந்தது.

இன்று மாலை கிளம்ப வேண்டும் என்ற வருத்தத்தோடு, சமையல் அறையில் காபி தயாரித்துக் கொண்டிருந்தவளை மதி, பின்னிருந்து அணைத்தான்.

''ஸ்வீட்டி? எப்போ எழுந்தே? இங்கே இருக்கிற வரைக்கும், நான் இருக்கிற இடத்தை விட்டு நகரக் கூடாது என்று சொல்லி இருந்தேன் இல்லை?'' என்றவன் விரல்கள், மனைவியின் இடையில் தாளமிட, கூச்சத்துடன் நெளிந்தாள் சம்யு.

''கையை வைத்துக்கிட்டு கொஞ்ச நேரம் சும்மா இருங்களேன்!'' என்று போலியாக சலித்துக் கொண்டவளிடம், ''ஹனிமூன்ல வந்து சொல்ற வார்த்தையா இது?'' என்று செல்லமாக அதட்டினாலும், அவனது

விரல்களும், இதழ்களும் அவளைக் கொஞ்சிக் கொண் டிருந்தன.

அவனது கொஞ்சலில் மயங்கி, தன்னை மறந்து பதில் கொடுத்த மனைவி, "இன்னைக்கே கிளம்பணுமா?" என்றாள், ஏக்கத்துடன்!

"எனக்கும், இன்னைக்கு கிளம்ப மனசே இல்லை தான்! பட், வேலை இருக்கே! அதான் இங்கே இருக்கிற வரை என் பக்கத்திலேயே இருக்கச் சொல்றேன்!" என்றவனின் இதழ்கள் மனைவியின் கழுத்தில் புதைந் தன.

கணவனின் ஸ்பரிசம், உடலைச் சிலிர்க்கச் செய்ய, மெய் மறந்து நின்று, அவனது தேடல்களுக்கு விடை கொடுத்தவள், "ஹய்யோ! பால் பொங்குதே!" என்றபடி அவனிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, அடுப்பை அணைத்தாள்.

"அதுக்கு எதுக்கு என்கிட்டே இருந்து விலகிப் போறே!" என்றபடி மனைவியை மீண்டும் தன் அணைப் புக்குள் கொண்டு வந்தவன், "இப்போ காபி போடறது ரொம்ப முக்கியமா?" என்று முறைத்தான்.

"இன்னும் ரெண்டு மணி நேரத்தில் கிளம்பணும், மதி! அப்போதான் நைட் வீட்டுக்குப் போய்ச் சேர முடி யும்! நான் போய் நம்ம திங்க்ஸ் எல்லாம் எடுத்து வைக் கிறேன்!" என்று விலக முயன்றவளை,

"இரு! இங்கே இருக்கிற வரை, எது செஞ்சாலும் இங்கே சேர்ந்தே செய்யணும் என்று படித்துப் படித்து சொல்லி இருந்தும், நீ எங்கே தனியா போறே? ஏற் கனவே ஒரு விஷயத்தில் நீ சொன்ன பேச்சைக் கேட்க



மாட்டேங்கிறாய்!" என்று சலித்துக் கொண்ட கணவன் எதைப் பற்றிப் பேசுகிறான் என்று புரிந்ததும், முகம் சிவக்க, "போடா!" என்று அவன் மார்பிலேயே முகத்தைப் புதைத்துக் கொண்டாள் மனைவி.

மனைவி தன்னை உரிமையுடன் அழைப்பதை வெகுவாக ரசித்தாலும், "இங்கே வந்த ரெண்டு நாளாய் வாடா போடா என்று மரியாதையே இல்லாமல் பேசிட்டு இருக்கே?" என்று வம்பிழுத்தான்.

"நீங்க டி போட்டு பேசும்போது நான் டா போட்டு பேசக் கூடாதா?" என்று சம்யு எதிர்கேள்வி கேட்டதும், ஆச்சரியத்துடன் நோக்கியவன், "ஹே! நான் உன்னை எப்போ டி போட்டுக் கூப்பிட்டேன்!?" என்று வினவி னான்.

"ஒரு முறை இல்லை ரெண்டு முறை இல்லை! ஒரு நாளுக்கு குறைந்த பட்சம் பத்து முறையாவது டி போட்டுக் கூப்பிடறீங்க!" என்று அழுத்தம் திருத்தமாக சம்யு சொன்னதும், மதி குழம்பினான்.

"எப்போ? எப்போ? எப்போ கூப்பிட்டேன் சொல்லு?" என்று கணவன் படபடப்பதைக் கண்டு, சிரிப்பை அடக்கியபடி,

"செல்லக் குட்டி, அம்முக் குட்டி, கன்னுக்குட்டி, பட்டுக் குட்டி, சக்கரைக் கட்டி, ஸ்வீட்டி என்று எத்தனை முறை டி போட்டுக் கூப்பிடறீங்க?" என்ற மனைவியின், காதைப் பற்றிச் செல்லமாகத் திருகினான்.

"எல்லாத்திலும் விவரமா இருக்கிற என் பொண் டாட்டிக்கு 'T'க்கும் 'D'க்கும் வித்தியாசம் தெரியாதா? என்று கணவன் வம்பிழுக்க, "என்ன மதி சொல்றீங்க? என் காதில் விழவே இல்லையே?" என்று பாவனை செய்தாள் மனைவி.

அவளைத் தன் புறம் இழுத்த மதி, ''வாயாடி!'' என்று சொன்னதும், ''பாருங்க... இப்போ கூட, வாயாடின்னு டி சொன்னீங்களா இல்லையா?'' குறும்புடன் சொன்ன வளின் இதழ்கள் மீது, கணவனின் பார்வை சுவாரசியத் துடன் படிந்தது.

''ஆனாலும் உன் வாய் ரொம்பவே வேலை செய்யுது! பேச்சுக்குக் கொஞ்சம் பிரேக் கொடுத்துட்டு, வேற வேலை கொடுக்கலாமா அதுக்கு?'' என்று சரசமாக மொழிந்தவன், அவளது இதழ்களைத் தன் வசப்படுத் தினான்.

சிறிது நேரம் கழித்து, மனமின்றி மனைவியை விடுவித்து விட்டு, ''காபி எல்லாம் அப்புறம் போட்டுக் கலாம்! இப்போ கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாம்!'' என்றபடி, மனைவியை கைப்பற்றி அழைத்து வந்து சோபாவில் அமர்ந்தவன், மனைவியை மடியில் அமர்த்திக் கொண்டான்.

''நேற்றே கேட்கணும் என்று இருந்தேன்! அதென்ன நான் ஸ்வீட்டி என்று அழைத்தபோதே, என் மனம் புரிந்து விட்டது என்று சொன்னாய்? எப்படி?'' என்று கேட்ட வனை, ''இன்னுமா உனக்குப் புரியவில்லை?' என்ற கேள்வியைக் கண்களில் தேக்கியபடி மனைவி நோக்க, ''ஹே! நான் உன்னை முன்னாடி அப்படித்தான் கூப்பிடு வேனா?'' என்று மகிழ்ச்சியுடன் கூவினான்.

''நான் உனக்கு என்ன செல்லப் பெயர் வைக்கலாம், என்று கேட்ட போதே சொல்லி இருக்கலாமேடா?'' என்று ஆதங்கத்துடன் வினவ,

''நீங்க எப்படி இயல்பா உங்க காதலை உணரணும் என்று நினைத்தீர்களோ, அதே மாதிரி அந்த அழைப்பும்



இயல்பா வரணும் என்று நான் நினைத்தேன்!'' என்று கண்கள் பனிக்கச் சொன்ன மனைவியின் கன்னத்தோடு கன்னம் வைத்தவன்,

''என் காதலை உணர்ந்த பிறகு, உன்னை ரெண்டு நாள் பார்க்காமல் இருந்ததே எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? பக்கத்திலேயே இருந்தும், நான் ஆறு மாசம் விலகி இருந்த போது உனக்கு ரொம்ப கஷ்டமா இருந் திருக்கும் இல்லை? சாரிடா, ஸ்வீட்டி!'' என்ற கண வனின் கண்களும் கலங்க,

''ஹே! எதுக்கு சாரி எல்லாம் சொல்றீங்க மதி, அதுல உங்க தப்பு எதுவும் இல்லையே?'' என்று அவன் கண்களைத் துடைத்த மனைவி, ''என் அழகனுக்கு, எப்படியும் அவரோடு ஸ்வீட்டி மேல் காதல் வந்தே தீரும், என்ற நம்பிக்கை எனக்கு இருந்துட்டே இருந்தது. அதனால், நான் ரொம்பவெல்லாம் கஷ்டப்படவில்லை!'' என்று சமாதானப் படுத்திய மனைவியை நோக்கிய வனின் முகம் கனிந்தது.

அவனுக்கு வருத்தமாக இருக்கக் கூடாது என்று, தான் அனுபவித்த வேதனையைக் கூட குறைத்துச் சொல்லும், மனைவியின் மீது மரியாதை அதிகரித்தது. சம்யுக்தாவை மனைவியாக அடைந்ததை எண்ணி பெருமிதம் கொண் டது அவனது உள்ளம்!

''என்ன திடீர் என்று என் அழகன் சைலெண்ட் ஆகி விட்டார்?'' என்று தன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சிய மனைவியைக் காதலுடன் நோக்கியவன், ''நான் ஸ்வீட்டி என்று கூப்பிட்ட பிறகுதான், மேடமுககு இந்த அழகன் என்ற பெயரே நினைவுக்கு வந்ததாக்கும்!'' என்று மனைவியை வம்பிழுத்து சிரித்து விட்டு,

''தெரிந்தோ தெரியாமலோ, உன்னை ரொம்பவே வேதனைப்படுத்தி இருக்கிறேன் ஸ்வீட்டி! இனிமேல், வேதனையின் நிழலைக் கூட உன் மேல் பட விட மாட்டேன்!'' என்று உறுதியாக உரைத்தான், அன்றே அந்த வாக்குறுதியை மீறப் போவதை அறியாமல்!

## 22

இரண்டு நாட்களாக, மனம் திறந்து பேசி, இல்லற வாழ்க்கையை இனிமையாகத் தொடங்கி இருந்த கணவன் மனைவி இருவருக்கும், அங்கிருந்து கிளம்பவே மனம் இல்லை என்றாலும், இன்னும் பத்து பதினைந்து நாட்களில் வேலை முடிந்து விட்டால், எந்த வித இடையூறும் இன்றி, வெளியூர் போகலாம் என்ற எண்ணம் தந்த உற்சாகத்தோடு, கிளம்பினர்.

காரை ஓட்டிய கணவனின் பார்வை, அவ்வப்போது தன் மேல் பதிந்ததை உணர்ந்த சம்யு, ''ஒழுங்கா ரோடைப் பார்த்து ஓட்டுங்க, அழகன் சார்!'' என்று கேலி செய்தாள்.

''நடுவில் யாரோ உட்கார்ந்துட்டு இருக்கிற மாதிரி, ஏன் அவ்வளவு இடம் விட்டு உட்கார்ந்திருக்கிறாய் ஸ்வீட்டி! கொஞ்சம் கிட்டத்தான் வந்து உட்காரேன்?'' என்ற கணவனிடம்,

''இப்பவே ஒரு சென்டிமீட்டர் இடைவெளிதான் இருக்கு! என்னமோ இரண்டு அடி தள்ளி உட்கார்ந்திருக்கிற மாதிரி சொல்றீங்க?'' என்று பதில் சொன்னாலும், அவன் சொன்னபடி மேலும் கணவனை நெருங்கி அமர்ந்தவள், கணவன் தோளில் தன் தலையை சாய்த்துக் கொண்டாள்.



மனைவியின் அருகாமையை ரசித்தபடி, மெதுவாக காரை ஓட்டிக் கொண்டிருந்தான் மதியழகன்.

சிறிது நேரம் கழித்து, அவன் தோளில் இருந்து தலையை நிமிர்த்திய சம்யு, அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் பார்வையைச் சுழற்றினாள்.

''என்னடா?'' என்று புரியாமல் மதி வினவ,

''இல்லை... அரை மணி நேரமோ, இதே இடத்தில் இருக்கிற மாதிரியே இருக்கு! காரை ஓட்டுகிற மாதிரி உங்க கை பாவனை மட்டும் செய்யுது என்று நினைக்கிறேன்!'' என்று சிரிக்காமல் சொல்லிய மனைவியின் கன்னத்தைத் தன் இடது கையை நீட்டி வலிக்காமல் கிள்ளியவன்,

''உன் கூட காரில் போற நேரத்தை நீட்டிக்கலாமே என்று நான் மெதுவாக ஓட்டினால், என்னையே கிண்டல் செய்யறியா? இப்ப பாரு என் வேகத்தை!'' என்று விட்டு வேகத்தை அதிகப் படுத்தியவன், சம்யு ''ஹே! மதி போதும்! போதும்!'' என்று சொல்ல சொல்ல வேண்டும் என்றே வேகத்தைக் கூட்டினான்.

அதிக வாகனப் போக்குவரத்து இல்லாத இடம் என்பதால், வேகத்தைக் கூட்டியவன், தங்கள் எதிரே அதே வேகத்துடன் வந்து கொண்டிருந்த வண்டியைக் கவனிக்கவில்லை!

முதலில் அந்த வண்டியைப் பார்த்தவள், சம்யுக்தா தான்.

''மதி! எதிரே கார் வருது, பார்த்து வேகத்தைக் குறைங்க!'' என்று அவள் சொல்லி முடிப்பதற்குள், அந்த கார் நெருங்கி விட, கடைசி நிமிடத்தில், அந்த வண்டி

கைகள் தானாக தண்ணீரை வாங்கிப் பருகினாலும், அவனது முகத்தில் குழப்பம் குறைந்தபாடில்லை.

"தலை வலிக்குது! மயக்கம் வருகிற மாதிரி இருக்கு!" என்று சொன்னவன், கார் சீட்டில் தலை சாய்த்து கண்களை மூட, உடனே அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று சம்யுக்குப் புரிந்தது.

வேகமாக காரில் இருந்து இறங்கியவள், அவன் பக்கம் வந்து, ''மதி, பின்னாடி சீட்டில் படுத்துக் கொள்கிறீர்களா?'' என்றாள்.

''ம்ம்...'' என்றவன் மெதுவாக இறங்க, அவனைக் கைத்தாங்கலாகப் பற்றி பின்னால் இருந்த இருக்கையில் படுக்க வைத்தவள், படபடக்கும் நெஞ்சோடு காரை மருத்துவமனைக்குச் செலுத்தினாள்.

மருத்துவமனையை வந்தடைந்தபோது, மதியழகன் மயக்கத்தில் இருந்தான்.

முன்பே விவரம் தெரிவித்து இருந்ததால், அன்பழகன் மருத்துவமனைக்கு வந்திருந்தார். அறிவழகனும் காவ்யாவும் ஒரு திருமண விழாவுக்கு சென்றிருந்தனர். விவரம் அறிந்து அவர்களும் உடனே கிளம்பி வருவதாகத் தெரிவித்திருந்தனர்.

யின் மேல் மோதாமல் வண்டியைப் பக்கவாட்டில் திருப்பி நிறுத்தினான்.

கணவனை எச்சரித்த சம்யுவின் கண்கள் பயத்தில் மூடி இருந்தன.

கார் சட்டென்று நின்றதும், கண்களைத் திறந்து, "எதுவும் ஆகலை இல்லை?" என்று பதட்டத்துடன் வினவியபடி, கணவனை ஆராய்ந்தவளின் கண்கள் கலங்கி இருந்தது.

"ஒண்ணும் ஆகலைடா ஸ்வீட்டி!" என்று மனைவியை இழுத்து அணைத்துக் கொண்ட மதி, அவள் உடல் இன்னும் நடுங்கிக் கொண்டிருக்கவும், "சாரிடா! விளையாட்டுக்குத்தான் அப்படி செய்தேன்! ஒண்ணும் ஆகலைடா!" என்று முதுகை வருடியபடி, தேற்றிவிட்டு,

"அன்னைக்கும் இதே மாதிரிதான் ஆச்சு! அப்போது ஆத்திரத்தில் இருந்ததால், இப்போ மாதிரி சமாளிக்க முடியாமல் போச்சு!" என்றான்.

கணவனின் வருடலில் தன்னை சமாளித்துக் கொண்ட சம்யு, அடுத்து கணவனிடம் இருந்து வந்த வார்த்தைகளில் திகைத்துப் போனாள்.

'எந்த விபத்தைப் பற்றிப் பேசுகிறான்?'

சட்டென்று அவனிடம் இருந்து விலகியவள், கணவனது முகத்தை நோக்க, அவன் முகத்திலும் திகைப்பும் குழப்பமும் சேர்ந்திருந்தது.

ஒரு கணம், தான் எங்கே இருக்கிறோம் என்ற குழப்பத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தவன் கண்களில் குழப்பம் மிக, சம்யுவுக்கு அவனது பழைய நினைவுகள் மீண்டு விட்டதோ என்ற சந்தேகம் தோன்றியது.



"மதி?" என்றழைத்து அவனது கரம் பற்றியவள், "என்னப்பா?" என்று வினவ, அவளிடம் இருந்து கரத்தை விலக்கிக் கொண்டவன், தன் தலையை இரு கைகளிலும் ஏந்தினான்.

காரில் இருந்த தண்ணீர் பாட்டிலைத் திறந்து அவனிடம் நீட்டியவள், "மதி? என்ன செய்யுது? என்று கவலையுடன் வினவினாள்.

கைகள் தானாக தண்ணீரை வாங்கிப் பருகினாலும், அவனது முகத்தில் குழப்பம் குறைந்தபாடில்லை.

"தலை வலிக்குது! மயக்கம் வருகிற மாதிரி இருக்கு!" என்று சொன்னவன், கார் சீட்டில் தலை சாய்த்து கண்களை மூட, உடனே அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று சம்யுக்குப் புரிந்தது.

வேகமாக காரில் இருந்து இறங்கியவள், அவன் பக்கம் வந்து, "மதி, பின்னாடி சீட்டில் படுத்துக் கொள்கிறீர்களா?" என்றாள்.

"ம்ம்..." என்றவன் மெதுவாக இறங்க, அவனைக் கைத்தாங்கலாகப் பற்றி பின்னால் இருந்த இருக்கையில் படுக்க வைத்தவள், படபடக்கும் நெஞ்சோடு காரை மருத்துவமனைக்குச் செலுத்தினாள்.

மருத்துவமனையை வந்தடைந்தபோது, மதியழகன் மயக்கத்தில் இருந்தான்.

முன்பே விவரம் தெரிவித்து இருந்ததால், அன்பழகன் மருத்துவமனைக்கு வந்திருந்தார். அறிவழகனும் காஞ்சனாவும் ஒரு திருமண விழாவுக்கு சென்றிருந்தனர். விவரம் அறிந்து அவர்களும் உடனே கிளம்பி வருவதாகத் தெரிவித்திருந்தனர்.

''யாருக்கும் எதுவும் அடிபடலையே?'' என்று அன்பழகன் பதட்டத்துடன் விசாரிக்க, ''இல்லை தாத்தா மதி, அந்த விபத்து நடந்த நாளைப் பற்றி பேசினார்!'' என்று சொன்ன சம்யு, ''டாக்டர்! அவர் இன்னும் மயக் கத்திலே இருக்காரே?'' என்று கலக்கத்துடன் விசாரித் தாள்.

''ஒண்ணும் பயப்பட வேண்டாம்!'' என்றபடி மருத் துவர், மதியை சிகிச்சை அறைக்குள் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

இருவரும் பதட்டத்துடன் வெளியே காத்திருக்க, அடுத்த ஒரு மணி நேரத்தில், மருத்துவர் வெளியே வந்தார்.

''அவருக்குப் பழைய நினைவுகள் திரும்பி விட்டது!'' என்று புன்னகையுடன் மருத்துவர் சொன்னதும், அன்பழ கனும் சம்யாவுடன் சந்தோஷமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அடுத்த கணமே, சம்யுக்தாவின் முகத்தில் ஒரு வித கலக்கம் சூழ, அன்பழகன் அவளது கையை ஆறுதலாகப் பற்றிக் கொண்டார்.

''ஆபரேஷனுக்குப் பிறகு நடந்த விஷயங்கள் மதிக்கு நினைவு இருக்குதானே டாக்டர்?''

''இருக்கு! ஆனால், அவரிடம் பேசியதில், அவர் ரொம்பவே அதிர்ந்து போய் இருப்பது போலத் தெரி கிறது.''

மருத்துவரின் வார்த்தைகள், இருவரையும் கலங்கச் செய்ய, ''கவலைப்படாதீங்க! அது இயல்புதான்! இப் போதைக்கு பழைய நினைவுகளின ஆதிக்கம்தான்



அதிகமாக இருக்கும்! அவரை ரொம்ப உணர்ச்சி வசப்பட வைக்காதீங்க! அது அவரோட மனநிலைக்கு நல்ல தில்லை! இடைப்பட்ட காலத்தில் நடந்ததை, அவர் இயல்பா ஏற்றுக் கொள்ள கொஞ்சம் அவகாசம் கொடுங்க!'' என்று அறிவுறுத்தி விட்டு, மருத்துவர் சென்று விட, சம்யுக்தா தயக்கத்துடன் நின்றிருந்தாள்.

''பயப்படாமல் உள்ளே போ, சம்யும்மா!'' என்று கனிவுடன் அன்பழகன் சொன்னதும், மெதுவாக மதி இருந்த அறைக்குள் நுழைந்த சம்யுவின் மனம் படபடத் துக் கொண்டிருந்தது.

கண்ணை மூடிப் படுத்திருந்த மதியின் முகத்தில் இருந்த வேதனை, சம்யுவின் நெஞ்சைக் கலங்கச் செய்தது.

அரவம் உணர்ந்து கண்களைத் திறந்த மதியின் கண்களில், சம்யுவைப் பார்த்ததும் தோன்றிய கோபத் தையும் வெறுப்பையும் கண்ட சம்யுவின் மனம் துணுக் குற்றது.

கோபம்... அவள் எதிர்பார்த்ததுதான்!

ஆனால்... இந்த வெறுப்பு?

''மதி?'' என்று அழைத்தவளின் குரல் வெளியே வரவே இல்லை!

ஒரு கணம் குற்றம் சாட்டும் பார்வையோடு மனை வியை வெறித்த மதி, முகத்தைத் திருப்பிக் கொள் ளவும், சட்டென்று சம்யுவின் கண்களில் கண்ணீர் சுரந்தது.

முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், அடைத்த தொண்டையைச் சரி செய்து கொண்டு,

"இப்போ எப்படி இருக்கு? தலைவலி எதுவும் இல்லையே?" என்று மென்மையாக வினவ,

சட்டென்று அவள் புறம் திரும்பியவன் கண்களில் தெரிந்தது விரக்தியா? வெறுப்பா? என்று அவளால் வரையறுக்க இயலவில்லை.

கணவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், "தலை வலி இல்லை! ஆனால்... மனசு? அதில் இனிமேல் வலி வாழ்க்கை பூரா இருக்கும்!" என்ற கணவனின் வெறுத்த குரலில் திகைத்து நின்றாள்.

"மதி!?"

"பின்னே! என்னை சந்தேகப்பட்ட பெண், என் சூழ் நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு என்னையே கல் யாணம் செஞ்சிருக்காளே! அந்த வேதனை வலியைத் தரத்தானே செய்யும்?"

தன் ஆத்திரத்தை வார்த்தைகளாய் வடித்து அவளைக் காயப்படுத்தியவன், எரிச்சலுடன் மீண்டும் முகத்தைத் திருப்பிக் கொள்ள, வேதனையோடு அவன் அருகில் வந்தவள், "மதி! அன்றைக்கு என்ன நடந்தது என்று என்னால் விளக்கம் சொல்ல முடியும்! இப்போதைக்கு நீங்க எதைப் பற்றியும் நினைக்காமல் அமைதியாக ரெஸ்ட் எடுங்க!" என்று அமைதியாகச் சொன்னாள்.

"என் அமைதியைக் குலைக்கிற மாதிரி எல்லாத் தையும் செஞ்சிட்டு, உன்னால் எப்படி எதுவுமே நடக் காத மாதிரி இருக்க முடியுது?" என்று வெறுப்புடன் வினவியவன், "விளக்கம்! அது கொலை செய்கிறவர் களுக்கு கூட இருக்கும்!" என்றான்.

'என்ன வார்த்தை சொல்கிறான்?' என்று சம்யுவின் மனம் தவித்தது.



அவன், தன்னைக் குற்றம் சாடுவதைவிட, அவனையே வருத்திக் கொள்கிறானே, என்று பரிதவித்தவள், "ப்ளீஸ்! மதி! நீங்கள் உணர்ச்சிவசப் படக்கூடாது என்று டாக்டர் சொல்லி இருக்கார்! எதுவா இருந்தாலும், அப்புறம் பேசிக்கலாம்!" என்று அவனை அடக்க முயன்றாள்.

தான் உணர்ச்சிகளால் தவித்துக் கொண்டிருக்கும் போது, இவளால் எப்படி இவ்வளவு அமைதியாக இருக்க முடிகிறது என்று எரிச்சல் அடைந்தவன், "திருமணத் துக்கு முன்பு நமக்குள் நடந்த பிரச்சினையைப் பற்றி என்னிடம் சொல்ல வேண்டும் என்று உனக்குத் தோன்ற வில்லையா?" என்ற கேள்வியோடு அவளை நோக்கி னான்.

நியாயமான கேள்விதான்! ஆனால், அவனுக்கு எதுவுமே நினைவில் இல்லாதபோது, பிரச்சனையைப் பற்றி மட்டும் சொல்லி ஏன் குழப்ப வேண்டும் என்று தாத்தா கேட்டது, அப்போது அவளுக்குமே சரியாகத் தானே பட்டது.

ஆனால், இன்று மதி கேட்கும்போது, தவறு செய்து விட்டோமோ என்று தோன்றியது.

அவனது மனநிலையை முன்னிறுத்தித் தான் மறைந்த விஷயம், தனக்கே எதிராகிப் போனதை மீண்டும் ஒரு முறை, வேதனையுடன் உணர்ந்தவளுக்கு, கணவனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரிய வில்லை.

"இவனுக்கு எங்கே நினைவு வரப் போகுது என்று நினைத்திருப்பாய், இல்லையா?" என்று வெறுப்புடன் அடுத்த கேள்வி வர, கலங்கிய முகத்துடன் கணவனை நோக்கியவளுக்கு, அவனுக்கு எப்போது பழைய நினை

வுகள் வரும் என்று தான் ஏங்கிக் கொண்டிருந்தது.
அவனுக்குத் தெரியாததா என்ற கேள்வி எழுந்தது.
'இல்லை! பழைய நினைவுகளின் ஆதிக்கத்தில்
இருப்பவனுக்கு, இப்போது தெளிவாக யோசிக்க முடி
யாது!' என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டு
அமைதியாக இருந்தாள்.

அவளது எண்ணம் இப்படி இருக்க, மதிக்கோ,
தன்னை சந்தேகப்பட்டவளைத் திருமணம் செய்து
கொண்டு அவளோடு குடும்பம் நடத்தி இருக்கும் தன்
மீதே வெறுப்பு தோன்றியது.

மனைவியின் கலங்கிய தோற்றம் மனதை உருக்க,
அதற்கும் சேர்த்து அவள் மீதே கோபம் கொண்டவன்,
''சந்தேகப்பட்டது மட்டுமில்லாமல், என்கிட்டே இருந்து
எல்லாத்தையும் மறைத்து திருமணம் செய்தது ஏமாற்று
என்று கூட உனக்கு தோன்றவில்லையா?'' என்று
மேலும் வெறுப்பை உமிழ்ந்தான்.

கணவனின் வார்த்தைகள் மனதை வலியை ஏற்படுத்
தினாலும், அவனது மன நிலையை மனதில் நிறுத்தி,
தன் வேதனையை அடக்கியவள், ''மதி... ப்ளீஸ்!
இப்போதைக்கு கொஞ்சம் அமைதியாக இருக்க முயற்சி
செய்யுங்க! அதுதான் உங்கள் உடல்நிலைக்கு நல்லது!''
என்று பொறுமையுடன் அவனுக்கு விளக்க முயன்றாள்.

''அமைதி! அது இனிமேல் என் வாழ்க்கையில்
இருக்கும் என்று தோன்றவில்லை!'' என்று விரக்தியான
குரலில் சொன்னவன்,

அவளது அதிர்ந்த முகத்தை அலட்சியம் செய்து,
''ஒரு வேளை, நீ என் வாழ்வில் இருந்து நிரந்தரமாக
போய் விட்டால், கொஞ்சமாவது அமைதி கிடைக்கும்



என்று நினைக்கிறேன்!'' என்று ஆத்திரத்துடன் மொழிந்
தான்.

முன்பே சொன்ன வார்த்தைகள்தான்!

ஆனால், அந்த வார்த்தைகள் இன்றும் அதே தீவிரத்
துடன் மனதைத் தாக்க, அடக்க முயன்றும் கண்களில்
கண்ணீர் நிறைந்தது.

மகனைப் பார்க்க அவசரமாக உள்ளே நுழைந்த
காஞ்சனாவின் செவிகளில், மகனின் வார்த்தைகள் விழ,
அதிர்ந்து நின்றார் அவர்.

குழப்பத்துடன் இருவரையும் மாற்றி மாற்றி பார்த்தவர்
கண்களில், சம்யுவின் வேதனை தென்பட, தன்னை
சமாளித்துக் கொண்டவர், ''மதி, என்ன பேச்சு பேசுகி
றாய்?'' என்று மகனை அதட்ட, சம்யு வேகமாக அவரரு
கில் வந்து அவரது கையைப் பற்றி வெளியே அழைத்
துப் போனாள்.

''ப்ளீஸ் அத்தை! அவர்கிட்ட இப்போ எதுவும்
பேசாதீங்க!'' என்று மருத்துவர் சொன்னதைச் சொன்
னவள்,

''அமைதியா உட்கார்ந்து யோசித்துப் பார்த்தால்,
அவருக்கே புரியும்! நான் இங்கே இருந்தால், அவரது
கோபம் இன்னும் அதிகமாகும்... இப்போ நான் அம்மா
வீட்டுக்குப் போகிறேன்! அவரே வந்து என்னைக்
கூட்டிட்டு வருவார், கவலைப் படாதீங்க!'' என்று சொல்லி
விட்டுக் கிளம்பினாள்.

இப்போதைய குழம்பிய நிலையில் வந்த அவனது
வார்த்தைகளை, பொருட்டாக நினைக்கக் கூடாது என்று
நினைத்தாலும், அவனது பேச்சு மனதில் ஏற்படுத்தி
இருந்த வலி குறைவேனா என்றது!

இரண்டு நாட்கள் சொர்க்கத்தில் இருந்தவளைத் திடீர் என்று நரகத்தில் தள்ளியதைப் போன்ற வேதனையில் மனம் கதறிக் கொண்டிருந்தது.

பழைய நினைவுகள் வந்ததும், கோபப்படுவான் என்பது தெரிந்ததுதான்.

இடைப்பட்ட காலத்தில் நடந்தது மறந்து விட்டதோ என்று நினைக்கும் வண்ணம், அன்று சொன்ன அதே வார்த்தைகளை, இன்றும் சொல்கிறான் என்பதை அவளால் தாங்க இயலவில்லை.

இரவு பன்னிரண்டு மணிக்கு தனியாக கலங்கிய முகத்தோடு வீட்டுக்கு வந்த மகளைக் கண்டதும், பெற்றவர்கள் பதறினார்கள்.

''சம்மு! என்னடா?'' என்று அன்னை.

''என்னமா?'' என்று தந்தை.

''என்ன அக்கா?'' என்று அகிலன்.

மூவரும் பதட்டத்துடன் விசாரிக்க, என்னவென்று பதில் சொல்லுவாள் அவள்?

மதியை விட்டுக் கொடுக்க மனமில்லை!

''ப்ளீஸ்மா... இப்போ எதுவும் கேட்காதீங்க, என்னைக் கொஞ்சம் தனியா விடுங்க!'' என்று பதிலில், மூவரும் குழம்பி நின்றனர்.

தன்னுடைய பதில் அனைவரையும் குழப்பும் என்று உணர்ந்தவளாக, ''எந்தப் பிரச்னையும் இல்லைப்பா... ரெண்டு மூணு நாளில் மதி வந்து என்னை அழைத்து போவார்! உண்மையா எந்தப் பிரச்னையும் இல்லை!'' என்று அழுத்திச் சொல்லி விட்டு தன் அறைக்குள் சென்று மறைந்தாள்.



''என்னங்க, இப்படி சொல்லிட்டுப் போகிறாள்? நேரம் கெட்ட நேரத்தில், தனியா வந்திருக்கா. நான் இப்பவே சம்மந்தி அம்மாவுக்கு போன் செய்யறேன்!'' என்று படபடத்த ராஜேஸ்வரியை, ராஜசேகர்தான் தடுத்தார்.

''எந்தப் பிரச்னையும் இல்லை என்று அவள்தான் சொல்கிறாளே, ராஜி. இப்போ அவங்களை எதுக்கு சங்கடப் படுத்தணும்? விடு! நாளைக்கு காலையில் பேசிக்கலாம்!''

தந்தை சொன்னதும், அகிலனுக்கும் அதுவே சரி என்று தோன்றியது.

தங்கள் பெண், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எதையும் செய்பவள் இல்லை என்பதால், அவள் வேண்டிய தனிமையை இப்போது தருவதே சரி என்று அவருக்குத் தோன்றியது.

அதே எண்ணத்தில் அகிலனும், அன்னையை சமாதானப்படுத்தி, படுக்க வைத்தான்.

சம்யுக்தா வேதனையோடு அமர்ந்திருந்தாள்.

பழைய நினைவுகள் மட்டுமே ஆக்கிரமித்திருந்த நிலையில்தான் கணவன் அப்படிப் பேசினான் என்பது தெளிவாகப் புரிந்தே இருந்தாலும், அவன் வார்த்தைகளால் மனம் வேதனை அடைவதைத் தடுக்க இயலாமல், அமர்ந்திருந்தவளுக்கு, இன்னும் நம்பிக்கை இருந்தது.

அமைதியாக உட்கார்ந்து யோசிக்கும்போது, மனைவி மேல் தவறில்லை என்பது அவனுக்குப் புரியும், கட்டாயம் புரியும் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டவள், நம்பிக்கையுடன் உறங்கப் போனாள்.

## 23

மதியழகன் தன் உணர்ச்சிகளோடு போராடிக் கொண்டிருந்தான்.

வேறு எந்த சிந்தனையும் இல்லாமல், விபத்து நடந்த அன்று நடந்தது மட்டுமே, திரும்ப திரும்ப மனக் கண்ணில் ஓடிக் கொண்டிருக்க, உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது.

மருத்துவர் அமைதியாக இருக்க வேண்டும் என்று சொன்னதையும் மீறி, தன் மேல் சந்தேகம் கொண்டவளையா மணந்து கொண்டேன்? என்று தனக்குள் தவித்துக் கொண்டிருந்தான், அவன்.

மருத்துவமனையில் இருந்து வந்த ஒரு நாள் முழுதும், எதையும் யோசிக்கக் கூடத் தோன்றாமல், தனக்குள் பொருமிக் கொண்டிருந்தவன், அடுத்த நாள் வேலையைப் பார்த்தாலாவது, மனம் அமைதி அடையும் என்று எண்ணி வேலைக்குக் கிளம்பினான்.

ஆனால், வேலையில் கவனம் செலுத்த முடியாமல், மருத்துவமனையில் மனைவி கலங்கி நின்ற நிலையே நொடிக்கொரு தரம் மனதில் தோன்றி, அவனை வதைத்தது.

போன இரண்டு மணி நேரத்திலேயே, வீட்டுக்குத் திரும்பி வந்தவன் செவிகளில், அன்னை பேசிக் கொண்டிருந்தது விழுந்தது.

''என்ன வார்த்தை சொல்லிட்டான், மாமா! என்னாலேயே தாங்க முடியவில்லை எனும்போது, சம்யுவுக்கு எப்படி இருந்திருக்கும்? அந்த நேரத்திலும், அவனுக்கு சாதகமாகத்தான் என்கிட்டே பேசினாள். என்ன கோபம் இருந்தாலும், அவன் அந்த வார்த்தையை சொல்லி இருக்கக் கூடாது!''



இதையே, ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்த, மருமகளைக் கண்டு அன்பழகனுக்கு மனம் கனிந்தது.

''எல்லாம் சரி ஆகிடும் காஞ்சனா!'' என்று மருமகளைத் தேற்ற,

''நீங்கதான் உங்க அருமை பேரனுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா, அப்பா?'' என்று சம்யுவுக்கு ஆதரவாக மதியின் தந்தையும், பேச, என்னை விட இவர்கள், எல்லாருக்கும் அவள்தான் முக்கியமாகப் போய் விட்டாளா? என்று எரிச்சலுடன் எண்ணியவன், யாரையும் ஏறெடுத்தும் பாராமல் அவனது அறைக்கு வந்தான்.

சம்யு, தன் மேல் சந்தேகப்பட்டாள், தான் பழைய நினைவுகளை மறந்து போன நிலையில், பழைய விஷயங்களை மறைத்து தன்னைத் திருமணம் செய்து கொண்டாள் என்று ஆத்திரத்துடன் நினைத்துக் கொண்டிருந்தவனின் மனம், இப்போது ஆதங்கத்துக்கு மாறி இருந்தது.

''ஏன், ஸ்வீட்டி? என்னைச் சந்தேகப்பட்டாய்?'' என்று மனதுக்குள் புலம்பியவனுக்குப் பொறி தட்டியது.

அவள் சந்தேகப்பட்டாள் என்று தான் நினைப்பது சரி... ஆனால், ஒழுக்கம் தவறியவன் என்று நினைத்தவனை எப்படி அவள் திருமணம் செய்து கொண்டாள்? என்ற கேள்வி எழ, மதியின் மூளை வேகமாக யோசிக்க ஆரம்பித்தது.

பணம், புகழ் இருப்பதால் மட்டும், அவள் தன்னை திருமணம் செய்து கொண்டாள் என்று அவன் மனம் ஒப்புக் கொள்ள மறுத்தது.

சம்யு, அப்படிப்பட்ட பெண்ணில்லை என்பதில் அவனுக்கு மாற்றுக் கருத்தே இல்லை!

அப்படியானால்? அன்று ஹோட்டலுக்கு வந்தது ஏன் என்று அவள் சொன்ன காரணம் உண்மையாக இருக்குமோ? என்று யோசித்தவனுக்கு மனம் பரபரத்தது.

அவன் குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில், தாத்தா அவனது அறைக்கு வந்தார்.

மருத்துவரின் அறிவுரைப்படி, அவனை உணர்ச்சி வசப்பட வைக்கக்கூடாது என்றெண்ணியே, அன்பழகனும் அமைதியாக இருந்தார்.

ஆனால்; அவன் புரிந்து கொள்ள முயற்சி செய்யாமல் இருந்தால், அவனது ஆத்திரமே அவனது உடல் மற்றும் மன நிலையைப் பாதிக்கக் கூடும் என்று உணர்ந்தவர், தன்னால் ஆனதைச் செய்ய வேண்டும் என்று எண்ணினார்.

தாத்தா உள்ளே நுழைந்ததுமே, அவர் சம்யுக்தாவைப் பற்றித்தான் பேசப் போகிறார் என்று மதிக்குப் புரிந்தது.

''மதி! நீ இப்போ இருக்கிற நிலையில் நான் சொல்லப் போவது உனக்குப் பிடிக்காமல் போகலாம்! ஆனால், அதற்காக நான் அமைதியாக இருக்க முடியாது. உனக்கும் சம்யுவுக்கும் உள்ள பிரச்சனையைப் பற்றி நான் பேச விரும்பவில்லை! ஆனால், அன்று நடந்ததை உன் நிலையில் இருந்தே பார்க்காமல், அவளுடைய நிலையில் இருந்தும் யோசி என்றுதான் சொல்கிறேன்!''

தங்களுக்குள் நடந்த பிரச்சனைப் பற்றி சம்யு சொல்லி இருக்க மாட்டாள் என்ற நம்பிக்கை இருந்தாலுமே, தாத்தாவுக்கு எப்படித் தெரியும் என்ற எண்ணத்தில், அவனது முகம் கருத்தது.



பேரனையே பார்த்துக் கொண்டிருந்த அன்பழகன், அவன் முகம் மாறியதும், ''கண்ணா! சம்யு அன்றைக்கு நடந்ததைப் பற்றி என்கிட்டே எதுவும் சொல்லலை! கல்யாணத்துக்கு சம்மதம் கேட்டபோது, நீ சொன்ன வார்த்தைகளைச் சொல்லி சம்மதம் சொல்லத் தயங்கினாளே தவிர, உன் மேல் அவள் எந்த தப்பும் சொல்லவில்லை!'' என்று அன்று அவருக்கும் சம்யுவுக்கும் நடந்த பேச்சு வார்த்தையை விளக்கமாகப் பகிர, மதி திகைத்துப் போனான்.

உண்மையை மறைக்க வேண்டும் என்று எண்ணி இருந்தால், அவள், இதைத் தாத்தாவிடம் சொல்லியே இருக்க வேண்டாமே? என்றெண்ணியவன், யோசிக்க வாய்ப்பு கிடைத்திருந்தால், மதிக்குப் புரிந்திருக்கும் என்று சம்யு நம்பிக்கையுடன் சொல்லி இருந்ததை எண்ணி வியந்தான்.

அவன், அவளைக் குற்றம் சாட்டியபோதும், தன் மீது கோபம் கொள்ளாமல், அவன் புரிந்து கொள்வான் எனறு அவள் நம்பிக்கை வைத்திருக்கிறாள்! ஆனால், இவனோ, அவள் சொன்னதில் உண்மை இருக்கும் என்று யோசிக்கவே இல்லையே? என்ற எண்ணம், அவனது மனதைச் சுட்டது.

அவன் யோசிக்க ஆரம்பிப்பதைக் கண்ட அன்பழகன், எழுந்து அவன் தோளில் மெதுவாகத் தட்டி விட்டு, அங்கிருந்து கிளம்பினார்.

முயன்று மனதை அமைதிப் படுத்திக் கொண்டு, மதியழகன் யோசிக்க ஆரம்பித்தான்.

திருமணம் ஆனதில் இருந்து, மனைவி தன்னிடம் நடந்து கொண்ட முறை, மனதில் ஓடியது.

தன் வேதனையைக் காட்டிக் கொள்ளாமல், அவன் மன நிலையை முன்னிலைப் படுத்தியே எப்போதும் நடந்து கொண்டது நினைவுக்கு வந்தது.

வதந்தியே என்றாலும், தன்னைப் பற்றி வந்த அவதூறான செய்தியைக் கொஞ்சம் கூட சந்தேகம் இல்லாமல், அவள் அலட்சியப் படுத்தியதை நினைவு கூர்ந்தவனுக்கு, தான் தவறு செய்து விட்டோம் என்று புரிந்தது.

விபத்து நடந்த அன்று நடந்ததைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான்.

தாமுதான், எல்லாவற்றையும் திட்டம் போட்டு செயல்படுத்தி இருக்கிறான்.

மதியின் அறைக்கு ஒரு பெண் வந்தாளா என்று ஒரு பெண் விசாரித்தாள், சொன்னதும், சம்யுவின் எண்ணில் இருந்து அழைப்பு வந்தது என்று சொன்னதும், தாமுவின் திட்டமாகத்தான் இருக்கும் என்று தோன்றியது.

என்னை சந்தேகப் பட ஒரு போன் கால் போதுமா? என்று சம்யுவை வருத்தெடுத்தவனுக்கு, தான் மட்டும், ஒரு பணியாள் சொன்னதை நம்பி, சம்யுவைச் சந் தேகப்பட்டது பெரும் பிழை என்று புரிய, மனம் கலங் கியது.

தன் மேல் தவறில்லை என்றாலும், தான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, அமைதியாக விளக்க முயன்ற வளுக்கு சந்தர்ப்பம் கொடுக்காததை எண்ணி எண்ணி மாய்ந்து போனான்.

முன்பு ஆத்திரத்தில் யோசிக்காமல் வார்த்தைகளை விட்டு அவளைக் காயப்படுத்தியது போதாதென்று, இப்போதும், அதே வார்த்தைகளைச் சொல்லிக் காயப்



படுத்தி விட்டேனே, என்றெண்ணியவன், 'சாரிடா ஸ்வீட்டி! வெரி வெரி சாரி!' என்று மனதுக்குள் மன்னிப்பு வேண்டினான்.

அன்றும், இன்றும் எப்போதும், தன் மனநிலையைப் பற்றி மட்டுமே நினைக்கும், மனைவிக்கு தான் வேதனை மட்டுமே தந்திருப்பதை உணர்ந்தவன், இனிமேல் அவளைப் பொக்கிஷமாகப் பாதுகாக்க வேண்டும் என்று உறுதியாக முடிவு செய்தான்.

உடனே போய் மனைவியிடம் மன்னிப்பு கேட்டு, அழைத்து வர வேண்டும் என்று மனம் துடித்தது.

கைக்கு கிடைத்த சட்டையை மாற்றிக் கொண்டு அவன் கிளம்பிய போது, காஞ்சனா உள்ளே நுழைந்தார்.

கையில் இருந்த பழச்சாற்றை மேஜையில் வைத்த காஞ்சனா, ''டாக்டர், உன்னை உணர்ச்சி வசப்பட வைக் கக் கூடாது என்று சொல்லி இருந்தார். இருந்தாலும், எனக்கு மனம் தாங்கவில்லை! சம்யு மாதிரி ஒரு பெண் மனைவியாய் கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்! உங்க ரெண்டு பேருக்கும் என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியாது! ஆனால், எதுவா இருந் தாலும், நிச்சயம் சம்யு மேல் தப்பு இருக்காது என்று மட்டும் எனக்கு நல்லாத் தெரியும்!'' என்று உறுதியாக உரைத்தார்.

தன் அன்னைக்கு சம்யு மேல் இருக்கும் நம்பிக்கை, தனக்கில்லாமல் போனதை எண்ணி மதிக்கு வெட்கமாக இருக்க, அவன் அமைதியாக இருந்தான்.

மகன் ஏதாவது பேசுவான் என்று நினைத்த காஞ்சனா, அவன் அமைதியாக இருக்கவும், எரிச்சல் அடைந்து, ''நீ அடிபட்டு ஹாஸ்பிடல்ல கிடந்த போது, சாப்பாடு,

தூக்கம், எதுவும் இல்லாமல், ஹாஸ்பிட்டலே கதின்னு கிடந்த பொண்ணுப்பா அது! தன் வேதனையை மறைத்துக் கொண்டு, எனக்கு ஆறுதல் சொல்லிட்டு இருந்தாள். அந்த நல்ல மனசைக் கஷ்டப்படுத்தறது சரி இல்லை மதி, அவ்வளவுதான் நான் சொல்லுவேன்!'' என்று ஆதங்கத்துடன் சொல்லிவிட்டுச் சென்றார்.

சம்யுவை அழைத்து வர வேண்டும் என்று கிளம்பிய மதிக்கு, அன்னை சொன்னதை எல்லாம் கேட்டவுடன், தயக்கம் பிறந்தது.

அவளைப் பார்த்து பேசக்கூடத் தனக்கு தகுதி இல் லையோ என்ற எண்ணம் தோன்ற, கட்டிலில் தொய்ந்து அமர்ந்தான்.

இப்போதும், மனைவி தான் போய் அன்று நடந்ததை எடுத்துச் சொல்லி மன்னிப்பு கேட்டால், வந்து விடு வாள் என்பதில், அவனுக்கு சந்தேகம் இல்லை!

ஆனால், எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவ ளிடம் போய் பேசுவது என்ற யோசனையில் ஆழ்ந் தான்.

சிறிது நேரம் கழித்து, 'இல்லை... இப்படி யோசித்துக் கொண்டே இருந்தால், பிரச்சனை சரி ஆகாது!' என்று எண்ணிக் கொண்டே, வேகமாகத் தன் அறையில் இருந்து வெளியே வந்தவன், திகைத்து நின்றான்.

## 24

சம்யுக்தா, நேற்று முன் தினம் இரவு, வீட்டுக்கு வந்ததில் இருந்து தன் அறையிலேயே அடைந்து கிடந்தாள். அவளது வீட்டில் எல்லாரும், அவளது வேண்டுகோளுக்கிணங்க, என்ன



பிரச்சனை என்று தூண்டித் துருவாமல் இருப்பது மனதுக்கு இதமாக இருந்தாலும், அன்னையின் முகம் கலங்கி இருந்ததைக் கண்டவளுக்கு, அவர்களிடம் ஆறுதலாகப் பேச வேண்டியது தன் கடமை என்று புரிய, தன் அன்னையைத் தேடி வந்தாள்.

நேற்று காலை, ராஜேஸ்வரி காஞ்சனாவுக்கு போன் செய்ய வேண்டும் என்று நினைத்திருக்க, அதற்கு முன்பே காஞ்சனாவிடம் இருந்து அழைப்பு வந்தது.

காஞ்சனாவுக்கு, ராஜேஸ்வரியிடம் என்ன சொல்வது என்று குழப்பம்!

சம்யுக்தா, மதியை விட்டுக் கொடுத்துப் பேசி இருக்க மாட்டாள் என்பது அவருக்கு நிச்சயம்!

இருந்தாலும், பெற்றவர்களுக்கு, மகள் கலங்கிய முகத்துடன் வந்தாள் எப்படி இருந்திருக்கும்? என்று எண்ணியவர், ராஜேஸ்வரியிடம் எதுவும் பிரச்சனை இல்லை, இன்னும் இரண்டு நாட்களில் மகன் வந்து சம்யுவைக் கூட்டிச் செல்வான் என்று, சம்யு சொன்ன மாதிரியே சொல்லி சமாளித்தார்.

மதிக்குப் பழைய நினைவுகள் திரும்பி விட்டது என் பதை காஞ்சனா மூலம் அறிந்த ராஜேஸ்வரிக்கு குழப்ப மாக இருந்தது.

பழைய நினைவுகள் திரும்ப வந்து விட்டால், பெண் சந்தோஷம்தானே பட வேண்டும், ஏன் இப்படி வாடிப் போய் இருக்கிறாள்? இந்த நேரத்தில் கணவனுடன் இல்லாமல், இங்கே ஏன் வந்தாள் என்று கவலையுடன் யோசிக்க ஆரம்பித்தார்.

அவருக்குத் தெரிந்த வரை, சம்யுவுக்கும் மதிக்கும் திருமணத்துக்குப் பிறகு எந்தப் பிரச்சனையும் இல்லை!

மகள், தன் வேதனையை வெளியில் சொல்லுகிறவள் இல்லை என்றாலுமே, தினமும் மகளிடம் பேசுபவருக்கு, எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன், அந்த சந்தோஷத்துடன் பேசியவளுக்கு, இப்போது என்னவாகிற்று? என்று யோசித்துக் கொண்டவருக்கு, நிச்சயம் நடக்கவிருந்த நாளுக்கு முன் தினம் நடந்தது என் நினைவுக்கு வந்தது என்று தெரியாமல், ஞாபகம் வந்தது.

மதிக்கு விபத்து நடந்த அன்று, பெண் வெளியே சென்றதும், வரும்பொழுது அழுது கொண்டே வந்ததும், தோழிக்கு விபத்து என்று சொன்னதும், இப்போது தெளிவாக நினைவுக்கு வந்தது.

அன்று, இயல்பா இருவருக்குள்ளும் ஏதோ பிரச்சனை நடந்திருக்க வேண்டும்!

பழைய நினைவுகள் வந்த பிறகு, அந்தப் பிரச்சனை மீண்டும் கிளம்பி இருக்கிறது போல, என்று எண்ணியவர், மகளிடம் பேச விரும்பி அவளது அறைக்குச் செல்ல எழுந்தபோது, சப்புவே அவளது அறைக்கு வந்தான்.

"வாடா, சப்பு!" என்று அன்னை சொன்னதும், உள்ளே வந்தவன், "சாரிம்மா!" என்றான்.

"எதுக்குடா?"

"இல்லை... நான் அன்றைக்கு நடு இரவில் வந்த போது, நீங்க ரொம்ப பயந்து இருப்பீங்க இல்லை? என் பேச்சைக் கேட்டு, என்னை எந்தக் கேள்வியும் கேட்கலை! ஆனாலும், உள்ளுக்குள் பயந்துதானே இருப்பீங்க? அதைப் போக்க வேண்டிய கடமை எனக்கிருந்தும் நான் என் போக்கிலேயே இருந்துட்டேன்!"



"நமக்குள்ள என்னடா? நேற்று எந்தப் பிரச்சனையும் இல்லை என்று அன்றே சொல்லி விட்டியே!" என்று மகனைத் தேற்றிய ராஜேஸ்வரி, "நீ எது செய்தாலும், அது தப்பா இருக்காது என்று எனக்குத் தெரியும்! ஆனால், நீ சொன்ன மாதிரி அன்றைக்கு எனக்கு கொஞ்சம் கவலையாதான் இருந்தது!" என்று ஒப்புக் கொண்டவர்,

"அன்றைக்கு சொன்னதேதான் அம்மா! எனக்குள்ள எந்தப் பிரச்சனையும் இல்லை! இன்னும் ஒன்று ரெண்டு நாள், மதியே வருவாள்!" என்று உறுதியாக சொன்ன மகனின் வார்த்தைகள், ராஜேஸ்வரியின் மனதுக்கு நிம்மதியைத் தந்தது.

இரண்டு நாளைய வருத்தம் மறைந்து அவர் புன்னகைக்க, "நான் உங்க மடியில் படுத்துக்கட்டுமாம்மா?" என்றான் சப்பு.

"இதைக் கேட்கணுமா குட்டிம்மா?" என்றபடி, மகனைத் தன் மடியில் படுக்க வைத்த ராஜேஸ்வரியின் கரம், மகனின் தலையைக் கோதியது.

அன்னையின் அரவணைப்பு, சப்புவுக்கு உண்மையிலேயே அந்த நேரத்தில் ஆறுதலாக இருந்தது.

"நீ வந்த போது எதுவும் கேட்காதீங்க என்று சொன்னதை மதித்து நானும் எதுவும் கேட்கலை சப்பு! ஆனால், ஒன்று மட்டும் சொல்ல நினைக்கிறேன்!" என்ற அன்னையின் இடுப்பைக் கட்டிக் கொண்ட சப்பு, "சொல்லுங்கம்மா!" என்றான்.

"எந்தப் பிரச்சனையும், அதில் சம்பந்தப்பட்டவர்கள், மனம் திறந்து பேசாத வரைக்கும் பெரிசாத்தான் தெரியும்டா... உனக்கும் மதிக்கும் என்ன பிரச்சனை என்று

நான் கேட்கலை! ஆனால், எந்தப் பிரச்சனையாய் இருந்தாலும், அதை வளர விடக் கூடாது குட்டிம்மா... உன் மேல் தப்பா? தயங்காமல் மன்னிப்பு கேளு! அவர் மேல் தப்பா? சட்டையைப் பிடித்து நியாயம் கேளு! ஆனால், ரெண்டையும் செய்யாமல், சும்மா இருக்கக் கூடாது!''

மென்மையான குரலில் அன்னை சொன்னதும், எழுந்து அமர்ந்த சம்யு, அன்னையைப் பார்த்து முறுவலித்தபடி, ''நீங்களும் அப்படிதானா அம்மா? அப்பாவோட சட்டையைப் பிடித்து கேள்வி கேட்டு இருக்கீங்களா?'' என்று வினவினாள்.

இரண்டு நாட்களாக சோர்வுடன் இருந்த மகளின் முறுவல், மனதை நெகிழ்த்த, ''ம்ம்... எங்களுக்குள்ளும் நிறைய சண்டைகள் நடந்திருக்கு சம்மு! ஆனால், ஒரு நாளும் எந்தப் பிரச்சனையையும் நாங்க வளர விட்டதே இல்லை! அப்போதைக்கு அப்போ அதை தீர்த்து விடுவோம்! அதே போல, முடிந்து போன பிரச்சனையைப் பற்றி எப்பவும் பேசவும் மாட்டோம்! அந்த புரிதல்தான், இப்போது நான் நினைக்கிறதை உங்க அப்பாவும், அவர் நினைக்கிறதை நானும் சொல்லாமலே புரிந்து கொள்ளுகிற அளவுக்கு நாங்க இருப்பதற்கு அடிப்படை!'' என்று புன்னகையுடன் சொன்னவர்,

''எனக்கு என் பெண் மேல் நம்பிக்கை இருக்கு! அவள், எந்த விஷயத்திலும் சரியான முடிவுதான் எடுப்பாள் என்பது தெரிந்திருந்தாலும், தேவையான நேரத்தில் அறிவுரை சொல்ல வேண்டியது என் கடமை இல்லையா?'' என்று சொல்ல,

''தேங்க்ஸ்மா!'' என்று அன்னையை அணைத்துக் கொண்டாள், சம்யு.



அன்னை சொல்வது சரிதான்!

சம்யுவிடம் வெறுப்பாக தான் நடந்து கொண்டது, மதிக்குமே உவப்பாக இருந்திருக்காது என்றுதான் அவனுக்குத் தோன்றியது.

அங்கே அவனும், இங்கே அவளும், வேதனைப் பட்டுக் கொண்டிருப்பதைவிட, பிரச்சனையை முடிந்த வரை, விரைவில் பேசித் தீர்த்து விடுவது மேல் என்று தோன்றியது.

''நான்... இன்னைக்கு எங்க வீட்டுக்குக் கிளம்பறேன்!'' என்று மகள் புன்னகையுடன் அறிவிக்க, ''அதானே, அத்தானைப் பார்க்காமல், எப்படி இரண்டு நாள் இருந்தாய் என்று, நானே ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன்!'' என்றபடி அகிலன் உள்ளே நுழைந்தான்.

''எதுக்குடா இப்போ என்னை கிண்டல் செய்யறே?'' என்று சம்யு தம்பியிடம் மல்லுக்கு நிற்க,

''நான் எங்கே கிண்டல் செய்தேன்? கல்யாணம் ஆன நாள்ல இருந்து தனியா இங்கே வந்து தங்கி இருக்கிறாயா? எதோ இப்படி சண்டை போட்டால்தான், மேடம்க்கு எங்களை எல்லாம் நினைவே வருதே!'' என்று தம்பி மேலும் வம்புக்கிழுத்தான்.

''பாருங்கம்மா, இவனை!'' என்று சம்யு, சிணுங்க ஆரம்பிக்க, புன்னகையுடன் இருவரின் செல்லச் சண்டையையும் ரசித்துக் கொண்டிருந்த ராஜேஸ்வரி, ''போ, சம்யு! சீக்கிரம் கிளம்பு, அகிலனை கொண்டு வந்து விடச் சொல்றேன்!'' என்று விட்டு நகர்ந்தார்.

''ஹப்பா! அத்தானைப் பார்க்கப் போகிறாய் என்றதும் தான், உன் முகத்தில் சிரிப்பே வருது!''

தம்பி சொன்னதும், சம்யுவுக்கு முறுவல் விரிந்தது.

''சும்மா கிண்டல் செய்தேன் சம்ஸ்! நீ எப்பவும் இப்படி சிரிச்சிட்டே இருந்தால்தான் நல்லா இருக்கு!'' என்று நெகிழ்ச்சியாகச் சொல்ல, சம்யுவுக்கும் மனம் நெகிழ்ந்தது.

அன்னை அறிவுரை சொல்லாமல் இருந்திருந் தாலுமே, இன்னும் இரண்டு நாட்களில் தங்கள் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்றுதான் சம்யு எண்ணி இருந்தாள்.

மதி, நடந்ததை உணர்ந்து தானே வரவேண்டும் என்பது அவளது எதிர்பார்ப்பாக இருந்தாலும், அவன் தான் வரவேண்டும் என்று வீம்புடன் அவள் நினைக்க வில்லை. மேலும், இரண்டு நாட்கள் கணவனுக்கு அவகாசம் தர வேண்டும் என்று எண்ணி இருந்தாள்.

அன்னையின் அறிவுரையைக் கேட்டதும், உடனே கணவனைப் பார்க்க வேண்டும் என்று தோன்றி விட, தம்பியோடு கிளம்பி விட்டாள்.

காரில் தமக்கையை அழைத்து வந்த அகிலன், வாச லோடு கிளம்ப எத்தனிக்க, ''உள்ளே வாடா!'' என்றழைத் தாள் தமக்கை.

''இப்போ வேண்டாம் யுக்! பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? என்று நீங்க ரெண்டு பேரும் பிசி ஆகிடு வீங்க. நான் அப்புறம் வரேன்!'' என்று கிளம்பி விட்டான்.

* * *

மனைவியை அழைத்து வர வேண்டும் என்று முடிவு செய்து, வேகமாக தன் அறையில் இருந்து வெளியே வந்த மதியழகன், படியில் ஏறி வந்து கொண்டிருந்த சம்யுக்தாவை கண்டதும் திகைத்து நின்றான்.



நெஞ்சில் பாறாங்கல்லாய் அழுத்திக் கொண்டிருந்த பாரம் நொடியில் இறங்கி, மனம் இலவம் பஞ்சாய் லேசா கியதைப் போலிருந்தது.

தானே போய் அவளை சமாதானப்படுத்த வேண்டும் என்று எண்ணி இருக்க, அவளே வந்தது அவனது குற்ற உணர்வைத் தூண்ட, ஒன்றும் பேசாமல் தங்கள் அறைக்கு வந்தவன், கட்டிலில் அமர்ந்தான்.

தன்னைப் பார்த்தும் ஒன்றும் பேசாமல், வா என்று கூட அழைக்காமல் இருந்த கணவனிடம் இருந்து பார்வையை எடுக்காமல் இருந்த சம்யுவுக்கு, சமா தானமாக பேச வேண்டும் என்று எண்ணி இருந்தது மறந்தது.

''மிஸ்டர். மதி! நான் சம்யுக்தா, உங்கள் மனைவி வந்திருக்கிறேன்!'' என்று 'மனைவி' என்பதில் அழுத்தம் கொடுத்துச் சொன்னவளை மதி ஆச்சரியத்துடன் நோக்க, அவளது எரிச்சல் கூடியது.

''அப்படி என்ன ஆச்சரியம?'' என்று அதட்டியவளைப் பார்க்க சிரிப்பு வந்தது மதிக்கு. இப்போதிருக்கும் நிலையில் சிரித்தால் அதற்கும் திட்டு விழுமோ என்று எண்ணியவனாக அவன் அமைதி காக்க, அவள் அவன் அருகில் வந்து நின்றாள்.

''நான் உங்க மனைவி என்று நினைவு, இருக்கு தானே?''

மனைவி தன் மேல் கோபமாய் இருக்கிறாள் என்பதை உணர்ந்த மதிக்கு, அவள் இப்போது அவனை என்ன திட்டினாலும் தகும் என்ற எண்ணம் தோன்ற அமைதி யாகவே இருந்தான்.

"என் முகத்தில் விழிக்காதே என்று நீங்கள் சொன்ன பிறகு நான் ஏன் இங்கே வந்தேன் தெரியுமா? உங்கள் இஷ்டப்படி உங்களுக்கு கோபம் வரும்போதெல்லாம் 'கெட் அவுட் ஒப் மை ஃலைப்' என்று நீங்கள் சொல்ல, நான் ஒண்ணும் உங்களுக்கு மூணாவது மனுஷியில்லை! நீங்கள் சுய நினைவோடு தாலி கட்டி, ஊர் அறிய இவள் என் மனைவி என்று அறிவிக்கப்பட்டவள்!"

மூச்சு விடாமல், ஆவேசமாக சொல்லிக் கொண்டு வந்த சம்யு, ஒரு நொடி தன் பேச்சை நிறுத்தி கணவனது முகத்தை ஆராய்ந்தாள்.

ஏற்கனவே குற்ற உணர்வில் தவித்துக் கொண்டிருந்த மதியின் மனதில், மனைவியின் வார்த்தைகள் ஈட்டியாய்ப் பாய, அவனால் ஏதும் பேச இயலவில்லை.

அவன் அமைதியே, அவளது எரிச்சலைக் கூட்ட, "இன்னொரு தரம் அந்த மாதிரி சொல்லிப் பாருங்க! பல்லைத் தட்டிக் கையில் கொடுக்கிறேன்!" என்று அதீத எரிச்சலுடன் மொழிந்தவள், அடுத்த கணம் தன் வார்த்தைகளின் தீவிரம் புரிந்தவளாய், வாய் அடைத்து நின்றாள்.

'அடக் கடவுளே! ஏற்கனவே, அவன் கோபமாக இருக்கிறான்! சமாதானமாக பேச வந்தவள் இப்படி பேசிக் கொண்டிருக்கிறானே!' என்று எண்ணிய சம்யுக்தா, சிறிது தயக்கத்துடனே, கணவனை நோக்க, அங்கே அவள் எதிர்பார்த்த கோபத்துக்கு பதிலாக, புன்னகை இருக்கவே குழம்பிப் போனாள்.

இவன் என்ன திரும்ப புன்னகை மன்னன் ஆகி விட்டான் என்று நினைக்கும்போதே, உள்ளூர அவனது புன்னகையை ரசிக்கத் தொடங்கி இருந்தது அவளது உள்ளம்.



மனைவியின் தயக்கத்தையும், தன் புன்னகையைக் கண்டதும் அவளது ஆச்சரியத்தையும், ரசனையையும் உணர்ந்த மதி, எழுந்து அவளது அருகில் வந்தான்.

"ஸ்வீட்டி! எனக்கு ஒரு சந்தேகம்!" என்று கணவன் பேச ஆரம்பிக்க, அவனது ஸ்வீட்டி என்ற அழைப்பு உள்ளத்தை இனிமையாகத் தீண்டினாலும், கொஞ்சம் கூட கோபம் இல்லாமல் பேசுகிறானே என்ற எண்ணம் அதைவிட அதிகமாக மனதை ஆக்கிரமிக்க, கணவனது முகத்தை ஆழ்ந்து நோக்கினாள்.

கோபத்தின் சாயல் கூட இல்லை!

மனைவியின் பார்வை, தன்னை ஆராய்ந்து கொண்டிருப்பதைக் கண்ட மதிக்கு, புன்னகை மேலும் விரிந்தது.

கணவனுக்கு கோபம் தீர்ந்து விட்டது என்பதை அந்தப் புன்னகையில் உணர்ந்த சம்யு, மலர்ந்த முகத்துடன் அவனது புன்னகையை ரசிக்க,

"பல்லைத் தட்டிக் கையில் கொடுத்திட்டால், இப்படி பொண்டாட்டி ரசிச்சு பார்க்கிற மாதிரி சிரிக்க முடியுமா? நீயே சொல்லு!" என்று அப்பாவியாய் கணவன் கண்ணை விரித்தான்.

"மதி!" என்ற அழைப்புடன் கணவனின் தோளில் சாய்ந்தாள் சம்யு.

மதியழகனும் மனைவியை இறுக அணைத்துக் கொண்டான்.

தங்கள் மன பாரங்கள் இறங்கியவர்களாக, அவர்கள் அந்த அணைப்பில் இதம் கண்டு கொண்டிருக்க, கதவைத் தட்டும் ஒலி கேட்டு, இருவரும் விலகினர்.

சம்யு போய் கதவைத் திறக்க, காஞ்சனாதான் தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தார்.

''இல்லை! அவன் கோபமா இருந்தான்... நீ வந்து இவ்வளவு நேரமாகியும்...'' மேலே என்ன கேட்பது என்று தெரியாமல் அவர் நிறுத்த,

''உங்க மருமகளை நான் ஒண்ணும் செஞ்சிட மாட்டேன்! அவங்கதான் என்னை பயங்கரமா மிரட்டறாங்க தெரியுமா?'' என்று முந்திக் கொண்டு பதில் சொல்ல,

''ஷ்... மதி!'' என்று கணவனை அடக்கிய சம்யு, ''சாரி அத்தை... நானே இப்போ வரலாம் என்று நினைச்சேன்!'' என்று அவரது அக்கறையை எண்ணி மனதுக்குள் நெகிழ்ந்தபடி சொல்ல,

''சந்தோசம் சம்யு! எதுவா இருந்தாலும் இந்த மடையனுக்கு மண்டையில் புரியற மாதிரி எடுத்து சொல்லு! ரொம்ப ரூல்ஸ் பேசிட்டு இருப்பான்!'' என்றபடி அவர் சந்தோஷ முகத்துடன் திரும்பிச் சென்றார்.

அன்னை சென்றதும் வேகமாக கதவை அடைத்த மதி, ''ஸ்வீட்டி! நீ போட்ட போட்டில நான் உண்மையிலேயே பயந்து போயிட்டேன் தெரியுமா?'' என்று சொல்ல,

''சாரி மதி! நான் அப்படி சொல்லி இருக்கக் கூடாது!'' என்று சம்யு மன்னிப்பு வேண்டினாள்.

''இல்லை சம்யு! இன்னைக்கு நீ சொன்னதை அன்னைக்கே நீ செஞ்சிருக்கணும்! அப்போதான் அம்மா சொல்ற மாதிரி இந்த மடையனுக்கு புரிஞ்சிருக்கும்!''

கணவனது வார்த்தைகளை நம்ப முடியாமல், சம்யு அவனை ஆச்சரியத்துடன் நோக்கினாள்.



''கல்யாணத்துக்கு முன்னாடி நான் உன்னை வாட்டியதற்கும், இப்போ இரண்டு நாள் முன்னாடி பேசியதற்கும், நான் உன்கிட்ட மனசார மன்னிப்புக் கேட்டுக்கறேன் சம்யு! என்னை மன்னிச்சிடு! அத்தோட இனி மேல் இந்த மாதிரி முட்டாள்தனமா ஏதும் செய்ய மாட்டேன்னு உனக்கு வாக்கு கொடுக்கிறேன்டா!''

உணர்ச்சியுடன் மதியழகன் சொல்ல, சம்யுவின் ஆச்சரியம் கூடியதே தவிர குறையவில்லை.

''என்னடா ஸ்வீட்டி? நம்ப முடியலையா?'' என்று கேள்வி கேட்டவனிடம் பதில் சொல்ல முடியாமல் அவள் அமைதியாக இருக்க,

''இங்கே வா! உட்கார்ந்து பேசலாம்! இரண்டு நாட்களில் இரண்டு மாசம் பெட்ல கிடந்தவள் மாதிரி இருக்கிறாய்!'' என்று அவள் தோள் பற்றி அழைத்துச் சென்றவன், அவளைக் கட்டிலில் அமர வைத்து விட்டு, அன்னை தனக்கென்று எடுத்து வந்த பழச்சாறைப் பருக வைத்தான்.

கொடுத்த பழச்சாற்றை அவள் நொடியில் காலி செய்ததைப் பார்த்தவன், ''உண்மையிலேயே சாப்பிடவே இல்லையா? சரி வா... கீழே போய் சாப்பிட்டு விட்டு வந்திடலாம்!'' என்றபடி எழ, அவன் கையைப் பிடித்து நிறுத்திய சம்யு.

''வேண்டாம் மதி! இப்போதான் ஜூஸ் குடிச்சேன்! கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாம்!'' என்று மொழிய அவள் குரலில் இருந்த ஏக்கம் அவனையும் நெகிழ்த்த, சட்டென்று மனைவியின் அருகில் அமர்ந்தவன், 'சாரிடா பட்டுக்குட்டி! உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன்!'' என்று கம்மிய குரலில் மொழிந்தான்.

கணவன் வாடுவதைப் பொறுக்க முடியாமல், "என்
மேலயும் தான் தப்பு இருக்கு மதி! அன்னைக்கு நானும்
அப்படி முறுக்கிக் கொண்டு கிளம்பி இருக்கக் கூடாது!
சாரிடா!" என்றபடி அவன் தோளில் சாய, மனைவியின்
தோளைப் பரிவுடன் வருடியது கணவனின் கரம்.

"அன்னைக்கு நடந்ததுக்கு நான் இன்னும் விளக்கம்
சொல்லவே இல்லையே சம்யு?" என்று வினவ,

"நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்!"

அழுத்தமாக மொழிந்த மனைவியைக் குனிந்து
பார்த்த, மதியின் முகம் பெருமிதத்தில் மிளிர, அழுத்த
மாக அவளது கன்னத்தில் முத்தமிட்டவன்,

"இல்லைடா செல்லகுட்டி! நான் அன்னைக்கு என்ன
நடந்தது என்று சொல்லிடறேன்!" என்று ஆரம்பிக்க,

"வேண்டாம்!" என்று மறுத்தபடியே அவனிடம்
இருந்து விலகி அமர்ந்தாள்.

"இல்லைடா..." என்று பேச ஆரம்பித்த கணவனின்
கரம் பற்றி தடுத்தவள், "அந்த தாமுதான் எல்லாத்துக்கும்
காரணம்! என்னையும், ராகினியையும் அங்கே வர
வைத்துவிட்டு, உங்களுக்கும், நான் சந்தேகப்பட்டு
வந்தேன் என்று நினைக்கிற மாதிரி எதோ சொல்ல
வைத்திருக்கான்!"

மெல்லியக் குரலில் சொல்லிக் கொண்டு வந்த மனை
வியை, அதற்கு மேல் பேச விடாமல், மதியழகன் ஆரத்
தழுவி இருந்தான்.

அன்று, நேரம் கெட்ட நேரத்தில் தன் அறையில் ஒரு
பெண் இருந்ததைக் கண்ட பிறகு, அவள் தன்னைச்



சந்தேகப்பட்டு இருந்தால் கூட தப்பு சொல்ல முடியாது
என்று அவனுக்குத் தோன்றியது.

அப்போதும், அவள் தன்னைத் தவறாக நினைக்கவில்
லையே? அவளைப் போய்... கடவுளே, என்ன என்ன
வார்த்தை சொல்லி விட்டான்? அதைக் கேட்ட பிறகும்,
தன்னைக் குற்றம் சாட்டாமல் இருக்கும் மனைவியின்
அன்பு அவனை நெகிழ்த்தியதோடு, கூச்சம் கொள்ளவும்
வைத்தது.

நம்பிக்கை என்பது பரஸ்பரம் இருக்க வேண்டியது
அல்லவா? தன்னை நம்பவில்லை என்று குற்றம்
சாட்டத் தெரிந்த தனக்கு, அவள் வார்த்தைகளை நம்ப
வேண்டும் என்ற புத்தி இல்லாமல் போயிற்றே!

தன் மேல் எல்லை இல்லாத அன்பையும், நம்பிக்
கையும் வைத்திருந்தவளுக்குத் தான் செய்தது பெரிய
கொடுமை என்பது புரிய, மதியின் கண்கள் கலங்கின.

நொடிக்கு நொடி அவனது அணைப்பின் இறுக்கம்
அதிகரிக்க, அவனது முதுகை வருடிக் கொண்டிருந்த
மனைவியின் விரல்களுக்கு, அவனது முதுகு அழுகை
யின் குலுங்குவதை உணர முடிந்தது.

"மதி! என்ன மதி இது?" என்று அவனைத் தன்னிடம்
இருந்து விலக்க முயல, அவனது அணைப்பு இறுகியதே
தவிர, அவன் அவளிடம் இருந்து விலகவில்லை.

கணவனின் கண்ணீர் சம்யுக்கும் கண்ணீரை வர
வழைக்க, தானும் கண்ணீர் விட்டால் நிலைமை சீராகாது
என்று எண்ணியவளாக, அவனது முதுகை மென்மை
யாக வருடியவள், "ப்ளீஸ்டா! எனக்கு என் அழகன்,
புன்னகை மன்னனாக இருந்தால்தான் பிடிக்கும்! இப்படி

அழுதா பிடிக்காது!'' என்று கொஞ்சம் கண்டிப்புடன் சொல்ல, மெல்ல அவளிடம் இருந்து விலகினாலும், அவளைத் தன் மேல் சாய்த்தபடியே வைத்திருந்தான்.

கொஞ்சம் நேரம் மௌனத்தில் கழிய, ''நீ என் மேல் இத்தனை நம்பிக்கை வைத்திருக்கிறாய்... நான்தான் புரியாமல் மடையன் மாதிரி...'' என்று தலையை தட்டிக் கொண்டவன், ''என் மேல் நம்பிக்கை வைக்கவில்லையே என்று ஆத்திரப்பட்டேனே தவிர, நானும் உன் வார்த்தையை நம்பவில்லைதானே?'' என்று வருத்தத்துடன் சொன்னான்.

''அந்த ஆக்சிடெண்ட் மட்டும் நடந்து எனக்கு அந்த விஷயங்கள் மறக்காமல் இருந்திருந்தால்... நினைக்கவே முடியலை சம்யு! என் முட்டாள்தனமான ஆத்திரத்தால், உன்னை மாதிரி ஒரு பொக்கிஷத்தை நான் இழந்திருப்பேன் இல்லை? அந்த விபத்துக்காக நான் கடவுளுக்குத்தான் நன்றி சொல்லணும்!'' என்று உணர்ந்து சொன்ன கணவனின் வாயைத் தன் கரத்தால் பொத்தினாள் மனைவி.

''அப்படி எல்லாம் சொல்லாதீங்க மதி! அது, அந்த நேரத்து கோபத்தில பேசினது! கோபம் குறைந்த பிறகு, நீங்களே உண்மை புரிந்து வந்து இருப்பீங்க, மதி! நம்ம உறவு, உணர்ச்சி வசப்பட்டு கோபத்தில் பேசற வார்த்தைகளால் பிரிகிற உறவில்லை!''

மனைவி உறுதியாகச் சொன்னாலும், மதிக்கு மனம் சமாதானம் ஆகவில்லை.

அவன் முகம் வாடியே இருக்க, ''அதுவும் இல்லாமல், உங்களுக்கு என் மேல் அளவு கடந்த அன்பு, மதி!



அதனால்தான், நான் உங்களைச் சந்தேகப்பட்டேன் என்ற நினைப்பைக் கூட, உங்களால் தாங்க முடியவில்லை!'' என்று அவனது கரம் பற்றி மென்மையாகச் சொன்னதும், சற்றே மறைந்திருந்த குற்ற உணர்வு மீண்டும் தலை தூக்கியது.

அவனது தவறான செயலுக்குக் கூட, இப்படி விளக்கம் சொல்லும் மனைவியை, எப்படி எல்லாம் வேதனைப்படுத்தி இருக்கிறான்?

இப்போதும், அவளேதான் அவனைத் தேடி வந்திருக்கிறாள்.

''ஸ்வீட்டி! நானே உன்னைத் தேடி வர இருந்தேன்! அதுக்குள்ளே நீயே வந்து விட்டாய்! அந்த கில்டில்தான் நீ வந்த உடனே, என்னால் எதுவும் பேச முடியவில்லை! சாரிடா!'' என்று கணவன் கூறியதும், கணவன் உண்மை புரிந்து, தன்னை அழைக்க வந்தான் என்பது சம்யுவுக்கு சந்தோஷமாக இருந்தது.

தன் இதழ்களைக் கணவனின் கன்னத்தில் அழுத்தமாகப் பதித்து, தன் சந்தோஷத்தை அவள் வெளிப்படுத்த, முதலில் திகைத்த கணவனும், தனது பதில் முத்தங்களால் மனைவியைத் திணறடித்தான்.

கணவன் கொடுத்த பரிசில் முகம் சிவந்த சமயு, ''மதி, அந்த டயரியைப் படிக்க எனக்குக் கொடுக்கணும் என்று கேட்டேனே?'' என்று நினைவுபடுத்த, மதியின் கண்கள் குறும்புடன் சிரித்தன.

''ஹே! என்ன அப்படிச் சிரிக்கறீங்க?'' என்றவள், வேகமாகச் சென்று அந்த டயரியை எடுத்துப் புரட்ட, வெற்றுத் தாள்கள் அவளைப் பார்த்துச் சிரித்தன.

"திருடா! அப்படிச் சொல்லிச் சொல்லிக் கொடுத்ததும், எதுவுமே எழுதலையா? உன்னை..."

கணவனின் அருகில் வந்து முதுகில் சரமாரியாக அடிக்கத் துவங்கினவளை, இழுத்து தன்னோடு சேர்த்து அணைத்தபடியே, கட்டிலில் விழுந்தவன், "ஸ்வீட்டி! நான் ஏற்கனவே சொன்னதுதான்! உன்னைப் பற்றி இங்கே எழுதி வைத்திருக்கிறேன்!" என்று தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டியவன், "அதனால்தான், நினைவை மறந்த பிறகும், உன் மேல் மீண்டும் எனக்கு நேசம் வந்தது!" என்று ஆத்மார்த்தமாகச் சொல்ல, சம்யுவுக்கும் மனம் நெகிழ்ந்தது.

"அதெல்லாம் சரி! ஏன்டா, எதுவுமே எழுதலை?" என்று அவள் விசாரிக்க,

"இல்லைடா கன்னுக்குட்டி! தினமும் ஏதாவது எழுதணும் என்றுதான் உட்காருவேன்! உன்னைப் பற்றி நினைக்க ஆரம்பித்ததுமே, மனசு ஜிவ்வுன்னு பறக்க ஆரம்பித்துடுமா... அப்புறம் எங்கே எழுதறது?" என்று கேலியாகச் சொன்னாலும், கணவன் சொன்னது உண்மை தான் என்பதை அவன் கண்கள் உணர்த்த, சந்தோஷத்துடன் அவனது மார்பில் சாய்ந்தாள் சம்யு.

"சாரிடா! நீ சொல்லியும் எழுதாதற்கு சாரி!"

"பரவாயில்லை மதி! அதுதான் மனசை மயக்குகிற மாதிரி காரணமும் சொல்லிட்டீங்களே? நான் இங்கேயே படிச்சிக்கிறேன்!" என்று அவன் நெஞ்சைச் சுட்டிக் காட்டினாள்.

அவள் ஆசைப்பட்டு கேட்டிருந்தும், தான் செய்யாமல் விட்டதைக் கூடப் பொருட்படுத்தாமல், தன் காரணத்



துக்கு மதிப்பு கொடுத்து, ஏற்றுக் கொள்ளும் மனைவியை வேதனைப் படுத்தியதை எண்ணி, மதிக்கு வருத்தம் மிகுந்தது.

"சாரிடா அம்முகுட்டி! என்ன இருந்தாலும் நான் உன்கிட்ட பேசின வார்த்தைகள் அதிகப்படிதான்! தேவை இல்லாமல் உன் மேல் ஆத்திரப்பட்டுதான் அந்த விபத்தும் நடந்தது. அந்த விபத்துக்கு கூட நீதான் காரணம் என்று வருத்தப்பட்டாய் என்று தாத்தா சொன்னார்... அந்த நேரத்தில் உனக்கு எப்படி இருந்திருக்கும்? எல்லாம் என்னால் வந்தது... தேவையே இல்லாமல் உன்னை எவ்வளவு வேதனைப் படுத்தி இருக்கிறேன்! சாரிடா... வெரி வெரி சாரிடா ஸ்வீட்டி!" என்று மன்னிப்பு வேண்டினான்.

கணவன் வருத்துவது பொறுக்காமல், "நான் போன் செஞ்சு உங்க ரூமுக்கு யாராவது வந்தார்களா என்று விசாரித்தேன் என்று ஹோட்டலில் அன்று சொன்னார்களா?" என்று பேச்சை மாற்ற, அவள் எதிர்பார்ப்பதற்கு மாறாக, மதியின் முகம் மேலும் வாடியது.

"ஆமாம், சம்யு, காலர் ஐடியில் உள்ள நம்பர் வந்ததாக அந்தப் பணியாள் சொன்னான். அப்போதுகூட எனக்கு அதிர்ச்சியாக இருந்ததே தவிர, சந்தேகம் வரலை. ஆனால், உடனேயே நீ வந்து நின்றதும்தான்..." என்று குற்ற உணர்வுடன் கணவன் சொல்ல, தான் ஏன் இந்தப் பேச்சை ஆரம்பித்தோம் என்று மனம் நொந்தாலும், அவன் அன்று கண் மூடித்தனமாகத் தன்னைக் குற்றம் சாட்டவில்லை என்ற எண்ணம் மகிழ்ச்சியைத் தந்தது.

''விடுங்க மதி! ஹோட்டல் பணியாள் அப்படி சொல்லி இருக்கும்போது, நீங்க வேறு என்ன நினைத் திருக்க முடியும்?'' என்று ஆறுதல் சொன்னவள், ''அவன், முதல் நாள் போன் செய்தபோதே, உங்களிடம் நான் சொல்லி இருக்கணும்!'' என்றாள்.

''அப்போ, என்ன சொன்னான் ஸ்வீட்டி? நீ, அன்று சொன்னதை, கோபத்தில் நான் சரியாகக் கூட கேட்க வில்லை!'' என்ற கணவனிடம், விஷயத்தைப் பகர்ந்தாள், சம்யு.

''நான் அவன் சொன்னதை நம்பவில்லை என்றதும், அடுத்த நாள் வேற குரலில், உங்களுக்கு ஆபத்து விளை விக்க தாமு போகிறான் என்று சொன்னதால்தான், நான் பயந்து போய் வந்தேன், மதி! அப்போ, இருந்த பதட் டத்தில், நான் சரியாக யோசிக்கக் கூட இல்லை! அப் பவே, ஹோட்டலுக்கு போன் செய்து நான் உங்களுடன் பேசி இருந்தால், நிறைய பிரச்சனைகளைத் தவிர்த் திருக்கலாம் என்று தோன்றுகிறது!'' என்று மனைவி தன்னையே நொந்து கொள்ளவும், மதி அவளைத் தேற்றி னான்.

''நீ போன் செஞ்சிருந்தாலும், எனக்குக் கொடுத் திருக்க மாட்டார்கள், சம்யு! அந்த அளவுக்கு அவன் ப்ளான் போட்டுதான் செய்திருக்கிறான். எல்லாம் நன்மைக்கே என்கிற மாதிரி, அந்த சம்பவத்தால், இனிமேல் உன்னை எந்தச் சூழ்நிலையிலும் நம்ப வேண்டும் என்ற பாடம் எனக்குக் கிடைத்திருக்கிறது!'' என்று மனமுணர்ந்து சொன்னவனுக்கு, தான் செய்தது தவறு என்ற எண்ணம் மீண்டும் தலை தூக்க,



''ஸ்வீட்டி! அந்த நேரத்தில், என் அறையில் ஒரு பெண்ணைப் பார்த்தும்கூட, நீ என்னைச் சந்தேகப்பட வில்லை! ஆனால்... நான்...'' என்ற கணவன், ''சாரிடா! நான் இவ்வளவு தூரம் உன் மனத்தைக் காயப்படுத்தியும், எப்போதும் எனக்காகவே யோசித்திருக்கிறாய், உன்னைப் போய்.. சாரிடா!'' என்ற போது அவன் கண்கள் கலங்கின.

கணவன் மீண்டும் மீண்டும் மன்னிப்பு வேண்டுவது, வருத்தத்தைத் தர, ''அச்சோ! சும்மா சும்மா சாரி சொல்லி போர் அடிக்காதேடா, அழகா!'' என்று மனைவி போலி யாக அலுத்துக் கொண்டாள்.

மனைவியின் மனம் புரிந்தவனாக, அவளை மேலும் இறுக அணைத்துக் கொண்ட மதி, அவளது செவி மடல்களைத் தன் இதழ்களால் வருடியபடி, ''போர் அடிக்காமல் சாரி கேட்க ஒரு வழி சொல்லட்டுமா, ஸ்வீட்டி?'' என்றபோது, அவனது குரல் கிசுகிசுப்பாக வெளிவந்தது.

கணவனது இதழ் ஸ்பரிசமும், குரலில் இருந்த குழைவும் மனைவியை மயங்கச் செய்ய, ''ம்ம்...'' என்று அவள் முனகியது அவளுக்கே கேட்கவில்லை.

''இனிமேல் நமக்குள்ள யார் சாரி கேட்கிறதா இருந்தாலும் ஒரு முத்தம் வைத்துதான் கேட்கணும், அதுக்கு ரெண்டு மடங்கா திருப்பிக் கொடுத்து அடுத்தவங்க மன்னிச்சிடணும்! எப்படி அய்யாவோட டீல்?''

மயக்கும் புன்னகையோடு கிறக்கமான குரலில் கணவன் வினவ, ''அழகன்டா நீ!'' என்று அவன் கன் னத்தைக் கிள்ளி முத்தமிட்ட சம்யு, ''பட், இந்த டீலும்

கொஞ்சம் போர்தான்!'' என்று மூக்கைச் சுருக்கியபடி சொல்ல,

மனைவியின் மூக்கில், இதழ்களால் கோலமிட்டபடி, ''சரி, எனக்குதான் க்ரியடிவிட்டி இல்லை! மேடம் நீங்கதான் சுவாரசியமா எதாவது சொல்லுங்களேன்!'' என்றான், கணவன்.

''நீங்க சொன்னதிலேயே சின்ன கரெக்ஷன் செஞ்சுட்டால், டீல் ஓகே ஆயிடும்டா, அழகா!'' என்று கணவனின் மார்பில் தன் இதழ்களைப் பதித்தபடி சம்யு சொல்ல,

''வாவ்! என் சக்கரைக் கட்டி செம மூடில் இருக்கா போலவே!'' என்று உற்சாகமாக விசிலடித்த மதி, ''சொல்லு... சீக்கிரம் சொல்லு!'' என்று அவசரப் பட்டான்.

''சாரி கேட்கிறவங்க நாலு முத்தம் கொடுத்து சாரி கேட்கணுமாம்!'' நிதானமாக சம்யு சொல்ல,

''ம்ம்ம்... இண்ட்ரஸ்டிங்!'' என்று சொன்ன கணவன், ''அப்புறம்?'' என்றபோது, அவனது குரலில் துள்ளல் நிறைந்திருந்தது.

''அதுக்கு நாலு மடங்கா திருப்பிக் கொடுத்து மன்னிக்கிறவங்க மன்னிச்சிடணுமாம்! எப்படி என்னோட டீல்?''

புருவம் உயர்த்தி, கண்களில் மையலுடன் மனைவி கேட்ட பிறகு, டீல் நன்றாக இல்லை என்று கணவன் சொல்லி விடுவானா என்ன?

''சூப்பர்டா ஸ்வீட்டி!'' என்ற கணவன் மனைவியின் முகம் நோக்கி குனிய,

''ம்ஹூம்! நீங்க நிறைய தரம் சாரி கேட்டாச்சு! இப்போ என் முறை! நீங்க என்னதான் கோபமா இருந்திருந்



தாலும், நான் பொறுமையா இருந்து விளக்கம் சொல்லி இருந்தால், அந்த விபத்து நடந்தே இருக்காது! சோ, என் மேலும் தப்பு இருக்கு! அதுக்கு நானும் மன்னிப்பு கேட்கணும் இல்லை?'' என்றவள் தன் மன்னவனின் முகத்தில் இதழ் பதித்து, தங்கள் ஒப்பந்தப்படி மன்னிப்பை வேண்ட, அவள் மீது தவறே இல்லாவிட்டாலும், அவனை மட்டுமே குறை சொல்லாமல், தன் மீதும் தவறு இருக்கிறது என்று சொல்லும் மனைவியின் அன்பில் நெகிழ்ந்து போனான் மதி.

இப்போதாவது, அவளது அருமை புரிந்ததே, என்ற நிம்மதியில் அவனது முகம் மலர்ந்தது.

அவனது முகத்தில் இருந்த நிம்மதி கலந்த புன்னகை, அவன் மனதைப் பறைசாற்ற, சம்யுக்தாவுக்கும் உள்ளம் நெகிழ்ந்தது.

தன் நெகிழ்வைக் காட்டி, சூழ்நிலையை கனமாக்க விரும்பாமல், கேலிப் பார்வையுடன் கணவனை நோக்கியவள், ''என்ன ஆச்சு? என் அழகனுக்கு கணக்கு மறந்து போச்சா?'' என்று குறும்புடன் வினவ,

மனைவியின் முயற்சி புரிந்த கணவனும், ''வாயாடி! எனக்கா கணக்கு மறந்து போச்சு? உனக்கு எல்லாத்தையும் மறக்க வைக்கிறேன் பார்!'' என்று சவால் விட்டு விட்டு, மனைவியின் முகம் நோக்கி குனிந்தான்.

''கரெக்டா எண்ணிக்கோடா ஸ்வீட்டி! நடுவுல கவுண்டிங் விட்டுப் போயிடுச்சுன்னா சொல்லு! முதல்ல இருந்து ஆரம்பிக்கறேன்!''

சரசமான குரலில் சொன்ன கணவனும், எண்ணிக்கையில் கவனம் வைக்கவில்லை!

குழப்பம் எல்லாம் அகன்று ஒருமித்த மனதுடன் கணவனுடன் இணைந்திருந்த மனைவியும், அதை கவனத்தில் கொள்ளவில்லை!

எண்ணிக்கையற்ற முத்தப் பரிமாறலைத் துவக்கிய இருவரும், தங்களை மறந்து, பிரியாத வரம் கிடைத்த, எல்லை இல்லாத சந்தோஷத்தில், கட்டுண்டு கிடந்தனர்.

கணவன் மனைவி இருவருக்கும், இடையில் இருக்கும் பரஸ்பர நம்பிக்கையும், புரிதலுமே வெற்றிகரமான இல்லற வாழ்க்கைக்கு அடிப்படை! அதை முழுமையாய் உணர்ந்த இவ்விருவருக்கும், இனி வாழ்வில் எல்லாமே சுகமே!